

# வரலாற்றுப் பொருள்முதல்வாதம் என்றால் என்ன?

ஸி. பெர்பேஷ்கினா
டி. ஸேர்கின்
எல். யாக்கவ்லெவா

சமூக அரசியல் ஆரம்ப நூல் வரிசை

ஸி. பெர்பேஷ்கினா
டி. ஸேர்கின்
எல். யாக்கவ்லெவா

# வரலாற்றுப் பொருள்முதல்வாதம் என்றால் என்ன?

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: நா. தர்மராஜன் எம்.ஏ.

ABC СОЦИАЛЬНО-ПОЛИТИЧЕСКИХ ЗНАНИЙ

**З. Бербешкина, Д. Зеркин, Л. Яковлева**
ЧТО ТАКОЕ ИСТОРИЧЕСКИЙ МАТЕРИАЛИЗМ?

*на тамильском языке*

ABC OF SOCIAL AND POLITICAL KNOWLEDGE

**Berbeshkina Z., Zerkin D., Yakovleva L.**
WHAT IS HISTORICAL MATERIALISM?

*in Tamil*

© Progress Publishers, 1985

© தமிழ் மொழிபெயர்ப்பு,
முன்னேற்றப் பதிப்பகம், 1987

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

$Б \frac{0302020200-426}{014(01)-87} 320-87$

# பொருளடக்கம்

முன்னுரை . . . . . . . . . . . . . . . . 9

அத்தியாயம் ஒன்று

வரலாற்றுப் பொருள்முதல்வாதம் என்னும் விஞ்ஞானம். வரலாற்றுப் பொருள்முதல் வாதத்தின் சாராம்சம் . . . . . . . . . 12

வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் பொருள் . . . . . . . . . . . . . . 12

சமூகக் கருத்துக்களில் புரட்சி என்ற முறையில் வரலாற்றுப் பொருள்முதல் வாதத்தின் தோற்றம். வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் படைப்பாற்றல் 16

சமூகமும் இயற்கையும் . . . . . . . . 26

மக்கள் தொகையும் சமூக வளர்ச்சியில் அதன் பாத்திரமும் . . . . . . . . 41

சமூக வாழ்நிலையும் சமூக உணர்வும் . . 51

சமூக வாழ்க்கையின் பொருளாயத அடிப்படை என்ற முறையில் உற்பத்தி முறை . . . . . . . . . . . . . . 56

அத்தியாயம் இரண்டு

சமூகமும் சமூக-பொருளாதார அமைப்புக் களும் . . . . . . . . . . . . . . . . 65

சமூகம் என்றால் என்ன? . . . . . . . 65

சமூக-பொருளாதார அமைப்பு. சமூகத் தின் அடித்தளமும் மேற்கட்டுமானமும் 67

சமுதாயத்தின் வரலாறு — சமூக-பொரு ளாதார அமைப்புகளின் தொடர்ச்சி யான மாற்றம் . . . . . . . . . . 71

வரலாற்று நிகழ்வுப் போக்கைப் புரிந்து கொள்வதில் ‘‘சமூக-பொருளாதார அமைப்பு’’ என்னும் கருத்தின் முக்கியத் துவம் . . . . . . . . . . . . . . 88

அத்தியாயம் மூன்று

சமூகக் கட்டமைப்பும் சமூக உறவுகளும் . . 93

சமூகக் கட்டமைப்பைப் பற்றிய கருத்து . . 93

குடிமரபுக் குழு, குலம், மக்கள் இனம், தேசிய இனம் . . . . . . . . . . . . 94

வர்க்கங்களும் வர்க்க உறவுகளும் . . . . 104

சோஷலிசமும் வர்க்கங்களும் . . . . . . 119

அத்தியாயம் நான்கு

சமூகத்தின் அரசியல் அமைப்பு . . . . . . 130

அரசியலும் போரும் . . . . . . . . 130

சமூகத்தின் அரசியல் அமைப்பு . . . . . 135

அரசு . . . . . . . . . . . . . 137

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஏன் அவசியம்? . . . . . . . . . . . . . 144

அத்தியாயம் ஐந்து

சமூகத்தின் ஆன்மீக வாழ்க்கை. சமூக உணர்வின் வடிவங்கள் . . . . . . . . 153

ஆன்மீக வாழ்க்கையும் சமூக உணர்வும் . . . . . . . . . . . . . . 153

சமூக உணர்வின் கட்டமைப்பு . . . . . 164

சமூக உளவியலும் சித்தாந்தமும் . . . 164

சமூக உணர்வுக்கும் தனிப்பட்ட உணர்வுக்கும் இடையில் உறவுப் பொருத்தம் . . 170

சமூக உணர்வின் வடிவங்கள் . . . . . 173

அரசியல் உணர்வு . . . . . . . . 173

சட்ட உணர்வு . . . . . . . . . 177

அற உணர்வும் அறவியலும் . . . . . . 180

அழகியல் உணர்வும் கலைகளும் . . . . . 187

தத்துவஞானம் . . . . . . . . . 191

மத உணர்வும் மதமும் . . . . . . . 194

அத்தியாயம் ஆறு

கலாசாரம் ஒரு சமூக நிகழ்வு . . . . . . 197

கலாசாரம் என்னும் கருத்தமைப்பு . . . 197

பொருளாயத மற்றும் ஆன்மீக கலாசாரம் . . . . . . . . . . . . . . 200

பூர்ஷ்வா கலாசாரம்: வளர்ச்சியின் கட்டங்கள் . . . . . . . . . . . . . 204

சோஷலிஸ்ட் கலாசாரம் . . . . . . . 209

அத்தியாயம் ஏழு

மனிதன் மற்றும் சோஷலிச மனித நேயத்தைப் பற்றி மார்க்சிய-லெனினியக் கருதுகோள் . . . . . . . . . . . . . . 216

தனிநபரைப் பற்றிய மார்க்சிய-லெனினியக் கருதுகோள் . . . . . . . . . 216

ஆளுமை குறித்த கருத்து . . . . . . . 220

ஆளுமையின் வரலாற்று ரீதியான ரகங்கள் . . . . . . . . . . . . . . 222

சோஷலிஸ்ட் ரக ஆளுமை . . . . . . 224

அத்தியாயம் எட்டு

சமூகத்தில் மனித நடவடிக்கை என்ற முறையில் மனிதகுலத்தின் வரலாறு. வரலாற்றின் புறநிலை விதிகள் . . . . 230

வரலாற்றின் புறநிலைத் தர்க்கவியலும் மக்களுடைய நடவடிக்கையும் . . . . 230
வரலாற்றின் புறநிலை விதிகள் . . . . 233
புறநிலையான விதிகளும் மனிதனுடைய உணர்வு பூர்வமான நடவடிக்கையும். அவசியம், சுதந்திரம் மற்றும் வரலாற்றுப் பொறுப்பு . . . . . . . . . . . . 237
வரலாற்றில் புறவய நிலைமைகளும் அகவயக் காரணியும் . . . . . . . 243

அத்தியாயம் ஒன்பது
வரலாற்று வளர்ச்சியின் இயக்கு சக்திகள் 248
வரலாற்று வளர்ச்சியை இயக்குகின்ற சக்திகள் எவை? . . . . . . . . . . 248
பெருந்திரளான மக்கள் வரலாற்றில் வகிக்கின்ற தீர்மானகரமான பாத்திரம் 256
தலைசிறந்த நபர்களின் பாத்திரம் . . . 264

அத்தியாயம் பத்து
வரலாற்று வளர்ச்சியின் வடிவம் என்னும் முறையில் சமூகப் புரட்சி . . . . . . . 269
சமூகப் புரட்சிகளின் சாராம்சமும் வரலாற்று அவசியமும் . . . . . . . 270
புரட்சியின் வரலாற்று ரீதியான ரகங்கள். சோஷலிஸ்ட் புரட்சியும் அதன் பிரத்யேகமான கூறுகளும் . . . . . . . 277

புரட்சிக்குரிய புறவய மற்றும் அகவய நிபந்தனைகளின் உறவுப் பொருத்தம் . . 281

சமூகப் புரட்சியில் பொது மற்றும் தனித் தன்மை . . . . . . . . . 287

சமூகப் புரட்சியைப் பற்றி பூர்ஷ்வா மற்றும் திருத்தல்வாதக் கருத்துக்கள் குறித்த விமர்சனம் . . . . . . . . 293

அத்தியாயம் பதினொன்று

சமூக முன்னேற்றம் . . . . . . . . . 298

சமூக முன்னேற்றம் என்னும் கருத்து . . 298

முன்னேற்றத்தின் புறநிலை அளவு கோல் . . . . . . . . . . . . 308

சமூக முன்னேற்றத்தின் வரலாற்று ரகங்கள் . . . . . . . . . . . 313

நம் காலத்திய சமூக முன்னேற்றத்தைப் பற்றி முதலாளித்துவத் தத்துவாசிரியர் களின் கருத்துக்கள் . . . . . . . . 318

சொற்றொடர் விளக்கம் . . . . . . . . 326

# முன்னுரை

உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் வாழ்கின்ற இலட்சக்கணக்கான மக்கள் இன்று மார்க்சிய-லெனினியத்தில் மாபெரும் அக்கறை கொண்டிருக்கிறார்கள்.

மார்க்சிய-லெனினியத் தத்துவம் கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் எங்கெல்ஸ் காலத்தில் விஞ்ஞான ரீதியான முன்னறிவிப்பாக இருந்த நிலை மாறிவிட்டது. அது பல இலட்சக் கணக்கான மக்களின் செய்முறை நடவடிக்கைகளின் அடிப்படையாக இன்று இருக்கிறது.

மார்க்சிய-லெனினியப் பதாகையின் கீழ் நடைபெற்றிருக்கின்ற மாற்றங்கள் உலகத்தைப் பெரிதும் மாற்றியமைத்திருக்கின்றன. மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சி, சோவியத் யூனியனில் வளர்ச்சியடைந்த சோஷலிசத்தை நிர் மாணித்தல், உலக சோஷலிஸ்ட் அமைப்பின் உரு வாக்கமும் வளர்ச்சியும், சமூக மற்றும் தேசிய விடுதலைப் போராட்டங்கள், உலகத் தொழி

லாளி வர்க்கமும் உழைக்கும் மக்களும் அடைந்துள்ள வெற்றிகள் ஆகியவற்றைப் போன்ற வரலாற்று நிகழ்ச்சிகள், மார்க்சிய-லெனினியத் தத்துவம் மனிதகுலத்தின் எதிர் காலத்தின் மீது மேன்மேலும் அதிகரிக்கின்ற தாக்கத்தைச் செலுத்துவதை மெய்ப்பிக்கின்றன.

''மார்க்சின் போதனை மெய்யானது, அதனால்தான் அது எல்லாம் வல்ல தன்மை பெற்றிருக்கிறது''* என்று லெனின் கூறினார். அது சமூகத்தின் முற்போக்கு சக்திகளின் நலன்களை எடுத்துரைக்கிறது, வரலாற்று ரீதியான வளர்ச்சியின் ஜீவாதாரமான தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்கிறது.

கார்ல் மார்க்சும் பிரெடெரிக் எங்கெல்சும் ஒரு நூற்றாண்டுக்கும் அதிகமான காலத்துக்கு முன்பு உருவாக்கிய தத்துவம் லெனினுடைய நூல்களில் மேலும் வளர்த்துக் கூறப்பட்டிருக்கிறது. மார்க்ஸ், லெனின் என்னும் இரண்டு பெயர்களும் பிரிக்க முடியாதவை. லெனினியம் ஏகாதிபத்தியம் மற்றும் பாட்டாளி வர்க்கப் புரட்சிகளின் சகாப்தத்தின், காலனியாதிக்க அமைப்பின் தகர்வின், முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு சமூக மாற்றத்தின் மார்க்சியமாகும். லெனினியத்திற்கு வெளியே, லெனினியம் இன்றி நம் காலத்தில் மார்க்சியம் என்பது இருக்க முடியாது.

மார்க்சிய-லெனினியம் ஒற்றை சர்வதேசியவாதத் தத்துவமாகும். சோஷலிசத்துக்காகப் போராடுகின்ற எல்லா மக்களினங்களுக்கும் அது தத்துவ ஆயுதமாகப் பயன்படுகிறது, அவர்களுடைய புரட்சிகர அனுபவத்தைப் பொதுமைப்படுத்துகிறது.

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 1, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1979, பக்கம் 102.

மார்க்சிய-லெனினியம் தத்துவஞானம், அரசியல் பொருளாதாரம் மற்றும் விஞ்ஞான கம்யூனிசத் தத்துவத்தின் பிரிக்க முடியாத ஒற்றுமையைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது. மார்க்சிய-லெனினிய விஞ்ஞானத்தின் உறுதியான அடிப்படையாக அதன் தத்துவஞான போதனையாகிய இயக்கவியல் பொருள்முதல்வாதம் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதம் இருக்கின்றன.

மார்க்சிய-லெனினியத் தத்துவஞானத்தின் பிரிக்க முடியாத பகுதியாக இருக்கின்ற வரலாற்றுப் பொருள் முதல்வாதத்தின் முக்கியமான பிரச்சினைகளை எளிமையான முறையில் விளக்குவது இப்புத்தகத்தின் நோக்கமாகும்.

அத்தியாயம் ஒன்று

# வரலாற்றுப் பொருள்முதல்வாதம் என்னும் விஞ்ஞானம். வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் சாராம்சம்

## வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் பொருள்

இயக்கவியல் பொருள்முதல்வாதமும் வரலாற்றுப் பொருள்முதல்வாதமும் மார்க்சிய-லெனினியத் தத்துவஞானத்தின் பிரிக்க முடியாத பகுதிகள். சமூகத்தின் வாழ்க்கையை ஆராய்கின்ற பகுதி வரலாற்றுப் பொருள்முதல்வாதமாகும். மற்ற விஞ்ஞானங்களும் சமூக வாழ்க்கையை ஆராய்வதில் ஈடுபட்டிருக்கின்றன (உதாரணமாக, அரசியல் பொருளாதாரம், கல்வியியல், சட்டவியல் இதரவை). அப்படியானால் இதர சமூக விஞ்ஞானங்கள் அனைத்திலிருந்தும் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தைத் தனியே பிரித்துக் காட்டுவது எது? இந்த விஞ்ஞானங்களில் ஒவ்வொன்றும் சமூக வாழ்க்கையின் ஏதாவதொரு அம்சத்தை எடுத்துக் கொள்கின்றது, அதன் பிரத்யேக விதிகள் மற்றும் கூறுகள் அனைத்தையும் நுணுக்கமாக ஆராய்கின்றது. உதாரணமாக, அரசியல் பொருளாதாரம் மக்கள் மத்தியில்

இருக்கின்ற பொருளாதார உறவுகளையும் பொருளாயத வசதிகளின் உற்பத்தி மற்றும் வினியோக விதி களையும் ஆராய்கிறது. கல்வியியல் மக்களின் கல்வி மற்றும் பயிற்சியை ஆராய்கிறது. வரலாற்றுப் பொருள் முதல்வாதம் இந்த விஞ்ஞானங்களிலிருந்து வேறுபட்ட முறையில் மொத்தமாகச் சமூக வளர்ச்சியின் பொது விதிகளை — சமூகக் கட்டமைப்பு, சமூக வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களுக்கு இடையில் இடைச்செயல், சமூக வளர்ச்சியின் பொது விதிகள் மற்றும் இயக்கு சக்திகள் — ஆராய்கிறது.

சமூக வாழ்க்கையைத் தத்துவஞான நோக்கிலிருந்து ஆராய்வது வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் முக் கியமான கூறாக இருக்கிறது. அது சமூக வாழ்க்கையின் பொருளாயத மற்றும் கருத்தியலான அம்சங்களுக்கு இடையில் பொருத்தத்தை, வரலாற்று நிகழ்வுப் போக் கில் தன்னியல்பானவற்றுக்கும் உணர்வு பூர்வமான வற்றுக்கும் இடையில், புறநிலையானவற்றுக்கும் அகநிலை யானவற்றுக்கும் இடையில் பொருத்தத்தை, சமூகப் பரிணாமத்தின் இயக்கு சக்திகளை, மனிதனுடைய சாரப் பொருள் மற்றும் உலகத்தில் அவனுடைய இடத்தைப் பற்றிய தத்துவஞான பிரச்சினைகளை, இதரவற்றை ஆராய்கிறது. எனவே வரலாற்றுப் பொருள்முதல்வாதம் சமூகத்தைப் பற்றிய தத்துவஞானம், மார்க்சிய-லெனி னியத் தத்துவஞானத்தில் ஒரு பகுதி.

பிரிக்க முடியாத அமைப்பு என்ற முறையில் சமூகம், அதன் செயல்முறை மற்றும் வளர்ச்சியின் விதிகளைப் பற்றிய தத்துவம் **சமூகவியல்** என்று சொல்லப்படுகிறது. உண்மையில் வரலாற்றுப் பொருள்முதல்வாதம் மார்க்சிய-லெனினியத்தின் அடிச்சரடாகவுள்ள சமூகவியல் தத்து வமாகும்; ஏனென்றால் அது பிரிக்க முடியாத அமைப்பு

என்ற முறையில் சமூகத்தின் செயல்முறை மற்றும் வளர்ச்சியின் பொது விதிகளை ஆராய்கிறது. எனினும் வரலாற்றுப் பொருள்முதல்வாதம் மட்டும் மார்க்சிய-லெனினிய சமூகவியல் என்று கூறவியலாது.

மார்க்சிய-லெனினிய சமூகவியலின் அமைப்புக்குள் ஒன்றுக்கொன்று இணைப்புடைய மூன்று மட்டங்கள் இருக்கின்றன:

1. தனிப்பட்ட செயல்முறை (குறிப்பிட்ட சமூகவியல் ரீதியான) ஆராய்ச்சிகள்: விவரங்களையும் புள்ளிவிவரங்களையும் சேகரித்தல், சில பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் மத்தியில் பேட்டிகள் மற்றும் கேள்வித்தாள்களின் மூலம் விவரங்களைத் தொகுத்தல், இதரவை. சமூக நிகழ்வுகளையும் நிகழ்வுப் போக்குகளையும் ஆராய்கின்ற இத்தகைய முறைகளுக்கு மார்க்சிய-லெனினியம் எப்பொழுதுமே பெரும் முக்கியத்துவமளித்திருக்கிறது. பி. எங்கெல்ஸ் இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை என்ற புத்தகத்தையும் வி. இ. லெனின் ருஷ்யாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி என்ற புத்தகத்தையும் எழுதிய பொழுது இம்முறையைப் பின்பற்றினார்கள். தற்பொழுது எல்லா சோஷலிஸ்ட் நாடுகளிலும் குறிப்பிட்ட சமூகவியல் ஆராய்ச்சிகள் பரந்த அளவில் செய்யப்படுகின்றன. உதாரணமாக, சோவியத் யூனியனில் வேலையைப் பற்றி மக்களுடைய அணுகுமுறையில் மாற்றங்கள், உழைப்புக் கூட்டுக்களிலுள்ள உறவுகள், வர்க்கங்கள் மற்றும் சமூகக் குழுக்களில் ஏற்படுகின்ற மாற்றங்கள், இதரவை கவனத்தோடு ஆராயப்படுகின்றன.

2. தனிப்பட்ட செயல்முறை ஆராய்ச்சிகளின் அடிப்படையில் முடிவுகள், விஞ்ஞானப் பொதுமைப்படுத்தல்கள் மற்றும் விசேஷத் தத்துவங்கள் தயாரிக்கப்படுகின்றன.

உதாரணமாக, சோவியத் ஆட்சியதிகாரத்தின் கீழ் சோவியத் யூனியன் கூட்டுப் பண்ணைகளைச் சேர்ந்த விவசாயிகளிடம் ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்களை ஆராய்கின்ற பொழுது, இந்த வர்க்கத்தின் பொதுவான கல்வித் தரங்கள், திறமை மற்றும் அறிவு கணிசமாக வளர்ச்சியடைந்திருக்கின்றன, அவர்களுடைய உளவியலில் அடிப்படையான மாற்றம் ஏற்பட்டிருக்கிறது, அவர்கள் பற்பல வழிகளில் தொழிலாளி வர்க்கத்துக்கும் உழைக்கின்ற அறிவுப் பகுதியினருக்கும் நெருக்கமாக வந்து கொண்டிருக்கிறார்கள் என்று மார்க்சிய சமூகவியலாளர்கள் முடிவு செய்திருக்கிறார்கள்.

3. செயல்முறை ஆராய்ச்சியின் போது மார்க்சிய சமூகவியலாளர்கள் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தை, அதாவது வர்க்கங்களைப் பற்றி, சமூகக் கட்டமைப்பைப் பற்றி, சமூக விதிகள் மற்றும் இதரவற்றைப் பற்றி அது திரட்டியுள்ள, பொதுமைப்படுத்திய அறிவை ஆதாரமாகக் கொள்கிறார்கள். குறிப்பிட்ட சமூகவியல் ஆராய்ச்சிகளின் விளைவாகத் திரட்டப்பட்ட பொதுமைப் படுத்தப்பட்ட அறிவு புதிய தத்துவக் கருதுகோள்களின் மூலம் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தை வளப்படுத்துவதற்குரிய தோற்றுவாயாக இருக்கிறது, அதைப் படைப்பாற்றலுடன் வளர்ப்பதற்கு அடிப்படையைத் தருகிறது. ஆகவே மார்க்சிய-லெனினிய சமூகவியல் அமைப்பில் வரலாற்றுப் பொருள்முதல்வாதம் பொதுத் தத்துவம், குறிப்பிட்ட சமூக ஆராய்ச்சிகளின் முறையியல் ஆகிய இரண்டையும் பிரதிநிதித்துவம் செய்கிறது.

மொத்தத்தில், **வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தை சமூக வளர்ச்சியின் மிகப் பொதுப்படையான விதிகளையும் இயக்கு சக்திகளையும் பற்றிய சமூகவியல் தத்துவஞானம் என்று வரையறுக்கலாம்.**

**சமூகக் கருத்துக்களில்**
**புரட்சி என்ற முறையில்**
**வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் தோற்றம்.**
**வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின்**
**படைப்பாற்றல்**

வரலாற்றுப் பொருள்முதல்வாதம் (மொத்தத்தில் மார்க்சியம்) 1840க்களில் தோன்றியது. அது அச்சமயத்தில் தோன்றியது சிறிதும் தற்செயலான நிகழ்வு அல்ல. ஏற்கெனவே சுயேச்சையான புரட்சிகரப் போராட்டத்தைத் தொடங்கியிருந்த தொழிலாளி வர்க்கத்துக்கு சமூக வளர்ச்சியின் விதிகள் மற்றும் வாய்ப்புக்களைப் பற்றிய தெளிவு, சமூகத்தைப் பற்றிய உண்மையான விஞ்ஞானம் தேவைப்பட்டது. கார்ல் மார்க்சும் பிரெடெரிக் எங்கெல்சும் தொழிலாளி வர்க்கத்துக்கும் உலகெங்கிலுமுள்ள உழைக்கும் மக்களுக்கும் அத்தகைய விஞ்ஞானத்தைப் படைத்தளித்தார்கள். அவர்கள் மாபெரும் புரட்சிவீரர்களாகவும் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் தலைவர்களாகவும் மட்டும் இருக்கவில்லை; தம் காலத்தின் தலைசிறந்த அறிஞர்களாகவும் இருந்தார்கள்.

மார்க்சும் எங்கெல்சும் முற்போக்கான சமூகச் சிந்தனையில் உள்ள மிகச் சிறப்புடைய அனைத்தையும் பயன்படுத்தி ஒரு புதிய தத்துவத்தை வளர்த்துக் கூறினார்கள்.

மார்க்சுக்கு முன்பிருந்த தத்துவஞானிகள் சமூக வளர்ச்சியைப் பற்றிச் சிறப்பான பல முடிவுகளைக் கூறியதுண்டு. எனினும் மார்க்சுக்கு முன்னர் சமூகத்தைப் பற்றிக் கூறப்பட்ட தத்துவங்கள் அனைத்தும் கருத்து முதல்வாதத் தன்மையைக் கொண்டிருந்தன. இது அவற்றிலிருந்த குறையாகும்.

கருத்துமுதல்வாதம் என்பது உலகத்தில் முதன்மையானது ஆன்மீகம், கருத்து என்று கூறுகின்ற தத்துவ ஞான உலகக் கண்ணோட்டமாகும். கருத்துமுதல்வாதத் தத்துவஞானிகள் ஒவ்வொருவரும் இதை ஒவ்வொரு விதத்தில் விளக்குகிறார்கள்: கடவுள் சித்தம் என்றும், தனிமுதலான கருத்து என்றும், தனிப்பட்ட அகப்பொருளின் உணர்வு என்றும், இதரவையாகவும் விளக்குகிறார்கள். அவர்கள் இந்த உலகத்தையும் இயற்கையையும் மூலத்திலிருந்து பெறப்பட்ட, கருத்தைச் சார்ந்திருக்கின்ற ஒன்றாகக் கருதுகிறார்கள். பொருள்முதல்வாதம் கருத்துமுதல்வாதத்துக்கு நேர் எதிரான உலகக் கண்ணோட்டமாகும்.

இயற்கையைப் பற்றிய பொருள்முதல்வாதப் பார்வை பண்டைக்கால இந்தியா, சீனா, கிரீஸ், மற்றும் சில நாடுகளில் இருந்தது. பொருள்முதல்வாதத் தத்துவங்கள் 18ம் நூற்றாண்டிலும் 19ம் நூற்றாண்டிலும் மிகப் பரவலாக இருந்தன. இயற்கை நம்முடைய உணர்விலிருந்து சுயேச்சையான முறையில் இருக்கிறது, அது அழிவில்லாதது, அது யாருடைய முயற்சியின் விளைவாகவும் ஏற்படவில்லை என்று பொருள்முதல்வாதத் தத்துவஞானிகள் கருதினார்கள். பகுத்தறிவு மற்றும் மனித உணர்வு இயற்கையின் பரிணாமத்தின் விளைவு என்று அவர்கள் கருதினார்கள்; இயற்கையைப் பற்றிய கருத்துமுதல்வாதக் கருத்துக்களை எதிர்த்து வெற்றிகரமாகப் போராடினார்கள்.

எனினும் மார்க்சுக்கு முன்பாக இருந்த சிறந்த பொருள்முதல்வாதிகளான லுட்விக் ஃபாயர்பாஹ் (ஜெர்மனி), அலெக்சாந்தர் ஹெர்ஸென், நிக்கலாய் செர்னிஷேவ்ஸ்கி (ருஷ்யா) ஆகியவர்கள் கூட சமூகத்தைப் பற்றிக் கருத்துமுதல்வாதக் கருத்துக்களைக் கொண்



2–791

டிருந்தார்கள்.

மனித சமூகத்தின் வாழ்க்கை மிகவும் பல்தொகுதியானது. நாம் நேரடியாகப் பார்க்கின்ற இயற்கை நிகழ்வுகள் அநேகமாக முறைப்படியாகத் திரும்பத் திரும்ப நடைபெறுகின்றன, அவற்றின் சாராம்சத்தைப் புரிந்துகொள்வதற்கு இவை நமக்கு உதவுகின்றன. ஆனால் சமூக வளர்ச்சியில் அப்படித் திரும்பத் திரும்ப நடைபெறுகின்ற நிகழ்வுகளைப் பார்த்துப் புரிந்துகொள்வது அதைக் காட்டிலும் மிகக் கடினம். இது சமூக வளர்ச்சி விதிகளின் புறவய நியதியை நாம் அறிந்து கொள்ள இயலாதபடி தடுக்கிறது.

மேலும், சமூகத்தில் மக்கள் உணர்வும் சித்தமும் கொண்ட நபர்களாகச் செயலாற்றுகிறார்கள். அவர்கள் தம்முடைய நடவடிக்கைகளில் முன்னரே முடிவுசெய்யப் பட்ட சிற்சில நோக்கங்களுக்காகப் பாடுபடுகிறார்கள், சிற்சில கருத்துக்களை வழிகாட்டியாகக் கொள்கிறார்கள். மக்களின் உணர்வு பூர்வமான இலட்சியங்கள், கருத்துக் கள், கண்ணோட்டங்கள் சமூகத்தில் நடைபெறுகின்ற எல்லா மாற்றங்களுக்கும் அடிப்படையான காரணங்கள், அதாவது சமூக வளர்ச்சிப் போக்கை நிர்ணயிக்கின்ற முக்கியமான காரணி என்று மார்க்சுக்கு முன்பாக இருந்த தத்துவஞானிகள் அனைவரும் கருதினார்கள்.

சமூகத்தைப் பற்றிய கருத்துமுதல்வாதக் கருத்து வரலாற்றை உருவாக்குவதில் பெருந்திரளான மக்களின் பாத்திரத்தை மறுத்தது. வரலாறு முழுவதுமே தனிப் பட்ட நபர்களின் — அரசர்கள், இராணுவத் தளபதிகள், மாவீரர்கள் — நடவடிக்கைகளின் தொகுப்பாகக் குறுக்கப் பட்டது. இத்தத்துவத்தைப் பின்பற்றிய ருஷ்ய நரோத் னிக்குகள் (அல்லது பாப்புலிஸ்டுகள் — மார்க்சியத்தை அறியாத 19ம் நூற்றாண்டுப் புரட்சிக்காரர்கள்) ஜார்

மன்னரையும் மக்களால் வெறுக்கப்பட்ட அதிகாரிகளையும் கொலை செய்வதன் மூலம் அன்றைய ருஷ்யாவிலிருந்த பிற்போக்கான அமைப்பை மாற்றுவதற்கு விரும்பினார்கள். எனினும் மெய்யான வாழ்க்கை நரோத்னிக்குகளின் நடைமுறையையும் பெருந்திரளான மக்களை செயல்புரியாத பார்வையாளர்களாகவும் மாவீரர்களை வரலாற்றின் உண்மையான படைப்பாளிகளாகவும் கருதிய ''மாவீரனும் மக்கள் கூட்டமும்'' என்னும் விஞ்ஞானத்துக்கு விரோதமான தத்துவத்தையும் நிராகரித்தது.

மக்களின் வரலாற்று விதிகளை நிர்ணயிப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தாங்களே என்று நிரூபிப்பது ஆளும் வர்க்கங்களுக்கு எப்பொழுதும் லாபகரமானது என்பது புரிந்து கொள்ளப்படக் கூடியதே. சமூகத்தில் நடைபெறுகின்ற முற்போக்கான மாற்றங்களின் தர்க்க ரீதியான தன்மை மற்றும் உண்மையான காரணங்களை மறுப்பதும் அவர்களுக்குச் சாதகமாக இருந்தது. சுரண்டல் முறைச் சமூகங்களில் கருத்துக்கள் உற்பத்தி (ஆன்மீகப் படைப்புகள்) எப்பொழுதும் ஆளும் வர்க்கத்தினருடைய ஏகபோகமாக இருந்தபடியால் கருத்துக்கள் உலகத்தை ஆட்சி செய்கின்றன என்று வலியுறுத்துவதும் அவர்களுக்குச் சாதகமாக இருந்தது. 17ம் நூற்றாண்டிலும் 18ம் நூற்றாண்டிலும் முதலாளி வர்க்க சமூகவியலாளர்கள் பிரதானமாக தம்முடைய குறுகிய வர்க்க நோக்கில் சமூகத்தைக் கருத்துமுதல்வாத முறையில் விளக்கினார்கள் என்றால் பிற்காலத்தில் இந்தத் திரிபான வரலாற்று விளக்கம் திட்டவட்டமான சமூகத் தெரிந்தெடுப்பாக மாறியது. இன்றும் கூட முதலாளித்துவ நாடுகளில் சமூகத்தைப் பற்றி கருத்துமுதல்வாதக் கருத்துக்கள் மிகவும் பரவியிருப்பதற்கு இது காரணமாகும்.

கருத்துக்களும் மனித அறிவும் சமூக வரலாற்றில் வகிக்கின்ற முக்கியமான பாத்திரத்தை மார்க்சியமும் அங்கீகரிக்கிறது. ஆனால் மக்களின் செய்முறை நடவடிக்கைகளுக்கு வழிகாட்டுகின்ற இக்கருத்துக்களும் தத்துவங்களும் பொருளாயத உறவுகளில், இறுதி நிலையில் பொருளாதார உறவுகளில் வேரூன்றியிருக்கின்றன. சமூக வாழ்க்கையின் பொருளாயத அம்சம் வரலாற்று நிகழ்வுப் போக்கின் ஆரம்பம், தொடக்க நிலை என்பதை அங்கீகரிப்பது வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் சாராம்சமாகும்.

பொருள்முதல்வாதத்தை சமூகத்துக்கு விஸ்தரித்து வரலாற்றைப் பற்றிய பொருள்முதல்வாதத் தத்துவத்தை உருவாக்கிய முதல்வர்கள் மார்க்சும் எங்கெல்சும் எனக் கூற முடியும். சமூகத்தைப் பற்றிய தத்துவஞான விளக்கத்தில் மார்க்சியம் ஏற்படுத்திய தீவிரமான புரட்சிக்கு இதுவே — மற்ற எல்லாவற்றையும் காட்டிலும் — அடிப்படையாக இருந்தது. இது மனிதகுலத்துக்குச் செய்த மாபெரும் சேவை என்று வற்புறுத்திய லெனின் பின்வருமாறு எழுதினார்: ''தத்துவஞானப் பொருள்முதல்வாதத்தை மார்க்ஸ் ஆழமாக்கி வளர்த்து நிறைவு பெறச் செய்தார். இயற்கை பற்றிய அறிதலை மனித சமுதாயம் பற்றிய அறிதலாகவும் விரிவாக்கினார். மார்க்சின் வரலாற்றுத் துறைப் பொருள்முதல்வாதம் விஞ்ஞானச் சிந்தனைக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாக அமைந்தது. முன்பெல்லாம் வரலாற்றையும் அரசியலையும் பற்றிய கருத்துக்களில் குழப்பமும் தான்தோன்றித்தனமும் ஆதிக்கம் செலுத்தி வந்தன. இப்போது அவை போய், வியப்பூட்டும் அளவுக்கு ஒருமித்த முழுமையும் உள்ளிணக்கமும் கொண்ட ஒரு விஞ்ஞானத் தத்துவம் வந்துவிட்டது. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியின் விளைவாக ஒரு சமுதாய

அமைப்பு முறையிலிருந்து அதைவிட உயர்தரமான இன்னொரு சமுதாய அமைப்பு முறை எப்படி வளர்கிறது என்பதை... அது காட்டுகிறது.''*

பொருளாயத உற்பத்தியை தேசிய அளவில் மத்தியப் படுத்திய முதலாளித்துவத்தின் தோற்றத்துக்குப் பிறகு தான் சமூகத்தைப் பற்றிய பொருள்முதல்வாதக் கருத்து சாத்தியமாயிற்று. சமூக வாழ்க்கையின் பல்வேறு வடி வங்கள் பொருளாயத உற்பத்தியின் வளர்ச்சியைச் சார்ந் திருப்பது நன்கு புலப்பட்டது. முதலாளித்துவ உற்பத்தி முறையிலிருக்கின்ற முரண்பாடுகள் மிகை உற்பத்தி, வேலையில்லாத திண்டாட்டம் மற்றும் இதர நெருக் கடிகளில் தெளிவாக வெளிப்பட்டன. வர்க்கங்கள் மற்றும் வர்க்கப் போராட்டத்தின் பொருளாயத மற்றும் பொருளாதார அடிப்படைகள் முதலாளித்துவத்தின் கீழ் வெளியே தெரிந்தன. ''நம்முடைய இன்றையக் காலப் பகுதி இந்தப் பரஸ்பரத் தொடர்புகளை எளிதாக்கி விட்டிருப்பதால் புதிரை விடுவிக்க முடிகிறது''** என்று எங்கெல்ஸ் எழுதினார். முதலாளித்துவத்தின் கீழ்தான் தொழிலாளி வர்க்கம் உருவாகி அரசியல் அரங்கத்தில் தோன்றியது. அதற்கு சமூக வளர்ச்சியைப் பற்றிய விஞ்ஞானக் கருத்தமைப்பும் சரியான புரட்சிகரத் தத்துவமும் தேவைப்பட்டன. முரணில்லாத புரட்சிகரத் தன்மையும் சமூக முன்னேற்றத்தின் புறநிலையான அவசியங்களுடன் அதன் வர்க்க நலன்கள் பொருந்து வதும் அதன் குணாம்சங்களாகும்.

தங்களுடைய தத்துவஞானம் தொழிலாளி வர்க்கத்தின்

---

* அதே நூல், பக்கம் *104*.

** பி. எங்கெல்ஸ், லுட்விக் ஃபாயர்பாகும் மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானத்தின் முடிவும், *மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1977, பக்கம் 76.*

தத்துவ ரீதியான ஆயுதம் என்ற முறையில் உருப்பெற்றது என்னும் உண்மையை மார்க்சியவாதிகள் ஒருபோதும் மறைக்க முயற்சித்ததில்லை. மார்க்சியப் பதாகையின் கீழ் தொழிலாளி வர்க்கம் ஏற்கெனவே எண்ணற்ற வரலாற்றுச் சாதனைகளை நிறைவேற்றியிருக்கிறது. வரலாற்றுப் போராட்டத்தின் போது மற்ற சமூகப் பிரிவுகள், வர்க்கங்கள் ஆகியவற்றிலிருந்து மேன்மேலும் அதிகமானவர்கள் மார்க்சியவாதிகளாக வளர்ந்திருக்கிறார்கள்.

மார்க்சும் எங்கெல்சும் வரலாற்றுப் பொருள்முதல் வாதத்தைத் தாங்கள் எழுதிய பல நூல்களில், குறிப்பாக **புனிதக் குடும்பம்**, **ஜெர்மன் சித்தாந்தம்** மற்றும் **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை** ஆகியவற்றில் விளக்கியிருக்கிறார்கள். சமூகத்தைப் பற்றிய பொருள்முதல்வாதக் கருத்தை மார்க்ஸ் **மூலதனம்** நூலிலும், எங்கெல்ஸ் **டூரிங்குக்கு மறுப்பு; குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** மற்றும் பல நூல்களிலும் எடுத்துக் கூறினார்கள்.

ஒரு நூற்றாண்டுக்கும் அதிகமான காலத்துக்கு முன்னர் படைக்கப்பட்ட தத்துவம் தன் முக்கியத்துவத்தை இழக்காதது மட்டுமல்ல, இன்னும் தொடர்ந்து புதிய வெற்றிகளைப் பெறுவது எப்படி? மார்க்சியம் வாழ்கின்ற, படைப்பாற்றலுடைய, தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்ற தத்துவம் என்பது இதற்கு முக்கியமான காரணமாகும். மார்க்சிய விஞ்ஞானத்தின் இதயத்தைப் போன்ற பொருள்முதல்வாத இயக்கவியல் முடிவில்லாமல் மாறிக் கொண்டிருக்கின்ற, வளர்ச்சியடைகின்ற, புத்துயிர்ப்படைகின்ற உலகத்தைப் பற்றிய புரட்சிகரமான போதனையாகும். இயற்கை இடையறா மாற்றத்தில் உள்ளது. மனித சமுதாயமோ இன்னமும் விரைவாக மாறி வருகிறது. மேலும் சமூக வாழ்க்கையில்

மாற்றங்களின் வேகம் தொடர்ச்சியாக அதிகரித்துக் கொண்டிருக்கிறது. கடந்த சில பத்தாண்டுகளில் சமூகத்தின் வாழ்க்கையில் எத்தனை மாபெரும் சம்பவங்கள் நடை பெற்றிருக்கின்றன! ஆகவே சமூக வாழ்க்கையைப் பற்றிய விஞ்ஞானத் தத்துவமும் மாற வேண்டும், வளர்ச்சி யடைய வேண்டும். சமூக வளர்ச்சியைப் பற்றிய தமது தத்துவத்தைப் பற்றி இத்தகைய படைப்பு ரீதியான அணுகுமுறையைத்தான் மார்க்சும் எங்கெல்சும் வற்புறுத்தி னார்கள் என்பது உண்மை.

இதனை அடுத்து வந்த புதிய வரலாற்று நிலைமை களில் மார்க்ஸ், எங்கெல்சின் வாரிசுகள் அவர்களுடைய தத்துவத்தை மேலும் வளர்த்தார்கள். வி. இ. லெனின் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்துக்கு மாபெரும் பங் களிப்பைச் செய்தார். உழைக்கும் மக்கள் தம்முடைய விடு தலைக்கும் புதிய வாழ்க்கையை நிர்மாணிப்பதற்கும் நடத்திய போராட்டத்தில் பெற்ற புதிய வரலாற்று அனுபவத்தை அவர் பொழித்துரைத்தார். வர்க்கங்கள், புரட்சி, அரசு, சோஷலிசத்தை நிர்மாணிக்கின்ற வழிகள் மற்றும் இதர பிரச்சினைகளைப் பற்றிய மார்க்சியத் தத்துவத்தை அவர் படைப்பாற்றலுடன் வளர்த்தார். மார்க்ஸ், எங்கெல்சை உறுதியாக, முரணில்லாமல் பின்பற்றிய சீடர் லெனின். அவர் மார்க்சியத்தைப் படைப்பாற்றலுடன் கையாண்டது மட்டுமின்றி மார்க் சியத்துக்கு துரோகம் செய்த அனைவரையும் எதிர்த்து உறுதியாகப் போராடினார். முதலாளி வர்க்க சித்தாந் தத்துடன் சமரசம் செய்து கொண்டு அல்லது ''புதிய'' கருத்துக்களை ஏற்றுக் கொள்கின்ற மோஸ்தரைப் பின்பற்றி மார்க்சியத்தின் அடிப்படையான கோட்பாடு களிலிருந்து விலகிச் சென்ற அனைவரையும் எதிர்த்து அவர் உறுதியாகப் போராடினார். இன்றும் சீர்திருத்த

வாதத்தை, அதாவது மார்க்சியத்தின் அடிப்படையான கோட்பாடுகளிலிருந்து விலகிச் சென்று மார்க்சியக் கருத்துக்களைச் சிதைப்பதை எதிர்த்துப் போராடுவது மார்க்ஸ், எங்கெல்ஸ் மற்றும் லெனினுடைய உண்மையான சீடர்களை எதிர்நோக்குகின்ற முக்கியமான கடமையாக உள்ளது.

நம் காலத்திய சமூக வளர்ச்சி புதிய முக்கியமான வரலாற்றுச் சம்பவங்களையும் நிகழ்வுப் போக்குகளையும் கொண்டிருக்கிறது. இன்றைய கட்டத்தில் மார்க்சிய-லெனினியம் சோஷலிசத்தை நிர்மாணிக்கின்ற பொழுதும் சோஷலிசத்தை மேம்படுத்துகின்ற பொழுதும் சேகரிக்கப் பட்ட அனுபவத்தைப் பொழித்துரைக்கிறது. அது உலக சோஷலிஸ்ட் குடும்பத்தின் தோற்றத்திலும் பரிணாமத் திலும் உள்ளுறையாகவுள்ள விதிகளை, சர்வதேச தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரப் போராட்டத்தின் மற்றும் எல்லா மக்களினங்களின் விடுதலைப் போராட் டத்தின் வாய்ப்புக்களை ஆராய்கிறது, நவீன முதலாளித்து வத்தைப் பகுப்பாய்வு செய்கிறது, வேறுபட்ட சமூக அமைப்புகளையுடைய அரசுகளின் சமாதான சகவாழ்வுக் கோட்பாடுகளையும் சமாதானத்தைப் பேணிக் காக்கும் கொள்கையையும் இன்ன பிறவற்றையும் நிர்ணயிக்கிறது.

மார்க்சியத் தத்துவஞானிகள் இன்றைய முக்கியமான நிகழ்வாகிய விஞ்ஞான தொழில்நுட்ப புரட்சியையும் முதலாளித்துவம் மற்றும் சோஷலிசத்தின் கீழ் அதன் சமூக விளைவுகளையும் தம்முடைய நூல்களில் ஆராய் கிறார்கள். சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியமான தத்துவ ஆவணங்களும் மார்க்சியத் தத்துவ ஞானிகளின் நூல்களும் உலகத்தில் தெர்மோ அணு யுத்தத் தைத் தடுத்து நிறுத்துவது, அவசரமான புறச் சூழல் பிரச் சினைகள், மக்கள் தொகை, உணவு, மூலப் பொருள்கள்

மற்றும் இன்றைய மனித குலத்தை எதிர்நோக்குகின்ற இவை போன்ற உலகப் பிரச்சினைகளை ஆராய்கின்றன. பூமியில் வாழ்கின்ற எல்லா மக்களும் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் என்னும் பொருளில் இவை பொதுவான மனித சமூகப் பிரச்சினைகள்; ஒரு நாடு தனியாக இவற் றைத் தீர்க்க முடியாது, அதற்கு எல்லா நாடுகளின் கூட்டு முயற்சி அவசியம். மார்க்சிய நூல்கள் உலகப் பிரச்சினை களின் சாராம்சத்தையும் காரணங்களையும், மோதிக் கொண்டிருக்கின்ற சமூக சக்திகளின் வர்க்க நலன்களுடன் அவற்றின் இணைப்பையும் ஆராய்ந்து, அவற்றின் வளர்ச்சிக் குரிய வாய்ப்புக்களையும் அவற்றைத் தீர்ப்பதற்குரிய வழிகளையும் சுட்டிக்காட்டுகின்றன.

வளர்ந்து கொண்டிருக்கின்ற எதார்த்தத்தைப் பற்றிய பகுப்பாய்வு மார்க்சிய சமூக விஞ்ஞானத்தில் ''வளர்ச்சி யடைந்த சோஷலிசம்'', ''பொதுஜன அரசு'', ''சோவியத் மக்கள்'' முதலிய புதிய கருத்தமைப்புக்களைத் தோற்று வித்திருக்கிறது. ''நாகரிகம்'', ''வாழ்க்கை முறை'' முதலிய பழைய கருத்துக்கள் புதிய உள்ளடக்கத்தையும் முக்கியத்துவத்தையும் பெற்றிருக்கின்றன. புதிய விவரங் களை ஆராய்வதன் மூலமாக மட்டும் இது ஏற்பட்டு விடவில்லை, ஏற்கெனவே அறிந்துள்ள நிகழ்வுப் போக்கு களுக்கும் நிகழ்வுகளுக்கும் புதிய விளக்கத்தின் மூல மாகவும் இது ஏற்படுகிறது.

மார்க்சிய-லெனினியம் ஒரு ஒற்றை சர்வதேசியத் தத்துவமாகும். அது எல்லா மக்களினங்களின் போராட் டத்தின் புரட்சிகர அனுபவத்தைப் பொழித்துரைக்கிறது. சர்வதேச மூலதனத்தை எதிர்த்து பல்வேறு நாடுகளின் தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேச நிலையின் பிரதிபலிப் பாகவும் அதன் போராட்டத்தின் தன்மை காரண மாகவும் அது தோன்றி வளர்ச்சியடைந்து வருகிறது.

சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கம் மற்றும் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் ஒற்றுமைக்கும் அதன் புரட்சிகரப் போர்த்திட்டம் மற்றும் செயல்தந்திரத்துக்கும் அது அடிப்படையாக இருக்கிறது. ஒரு நாட்டின் சமூக, பொருளாதார, கலாசார மரபுகளையும் அதன் பிரத்யேகமான நிலைமைகளையும் முழுதளாவிய முறையில் சிந்திக்க வேண்டும் என்று கம்யூனிஸ்டுகள் கூறுகிறார்கள்; ஒரு நாட்டின் அனுபவத்தை மற்றொரு நாட்டுக்கு யாந்திரிகமான முறையில் மாற்றுவதை அவர்கள் எதிர்க்கிறார்கள். எனினும் ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு விதமான மார்க்சியம் — ருஷ்ய, சீன, இத்தாலிய மார்க்சிய ரகங்கள் — இருக்க முடியாது. இது சமூக வளர்ச்சியின் தத்துவஞான மற்றும் சமூகவியல் தத்துவமாகிய வரலாற்றுப் பொருள்முதல்வாதத்துக்கும் பொருந்துவதே; அதன் கோட்பாடுகள் எல்லா நாடுகளுக்கும் ஒரே மாதிரியானவை.

எல்லா மார்க்சிய-லெனினியக் கட்சிகளும் புரட்சிகரப் போராட்டத்தில் தம்முடைய அனுபவத்தின் அடிப்படையில் படைப்பாற்றலுடன் மார்க்சிய-லெனினியத்தை வளர்க்கின்றன. ஒற்றை, அங்கக அமைப்பாகிய மார்க்சிய-லெனினியத் தத்துவத்தை மார்க்சிய-லெனினியவாதிகள் கூட்டாக வளர்த்து மேம்படுத்துகிறார்கள். அவர்களுடைய செய்முறை மற்றும் தத்துவ நடவடிக்கைகளுக்குப் பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதக் கோட்பாடு வழிகாட்டுகிறது.

## சமூகமும் இயற்கையும்

மனித சமூக வாழ்க்கையை இயற்கையிலிருந்து தனியாகப் பிரித்துப் புரிந்து கொள்ள முடியாது. சமூகத்துக்கும்

இயற்கைக்கும் உள்ள ஒருமையை அங்கீகரிப்பது வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் முக்கியமான, உள்ளுறையான கோட்பாடாகும்.

சமூகம் — எல்லாவற்றுக்கும் முதலாவதாக — தன்னுடைய தோற்றத்தின் மூலம் இயற்கையுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. மனிதன் மனிதக் குரங்கிலிருந்து பரிணமித்திருப்பதை விஞ்ஞானம் சந்தேகத்திற்கு இடமில்லாதபடி நிருபித்திருக்கிறது. மனிதக் குரங்கிலிருந்து மனிதன் பரிணமித்த நிகழ்வுப் போக்கு படிப்படியாகவும் மிகவும் நெடுங்கால அளவிலும் நடைபெற்றது.

மனிதன் உருவாகிய நிகழ்வுப் போக்கில் இரண்டு முக்கியமான கட்டங்கள் உள்ளன. முதல் கட்டத்தில் மனிதன் உழைப்புக் கருவிகளைச் செய்யத் தொடங்கினான். இதுதான் மனிதன் மெய்யாகவே உருவான கட்டம். சமீபத்தில், தெற்கு ஆப்பிரிக்கா மற்றும் கிழக்கு ஆப்பிரிக்காவில் 2.5 மில்லியன் வருடங்கள் தொன்மையான நில அடுக்கில் மனிதனுடைய ஆதி மூதாதையர்களின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அங்கே மனித எலும்புகளும் பூர்விக உழைப்புக் கருவிகளும் அகப்பட்டன. இரண்டாவது கட்டம் 1,00,000 — 40,000 வருடங்களுக்கு முன்னர் நவீன மனிதன் (Homo sapiens) தோன்றியதிலிருந்து தொடங்குகிறது. அக்காலத்துக்குப் பிறகு மனிதனுடைய உடலமைப்பில் முக்கியமான மாற்றங்கள் ஏற்படவில்லை என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

மனிதனும் மனித சமூகமும் தோன்றிய நிகழ்வுப் போக்கை பி. எங்கெல்ஸ் **மனிதக் குரங்கு மனிதனாக மாறிய இடைநிலைப் படியில் உழைப்பின் பாத்திரம்** என்னும் நூலில் ஆராய்ந்தார். உழைப்பு, உழைப்புக் கருவிகளை உற்பத்தி செய்தல் மற்றும் உபயோகித்தல் மனித சமூகத்

தின் தோற்றத்தில் தீர்மானகரமான பாத்திரத்தை வகித்தன என்று இந்நூலில் கூறப்பட்டிருக்கிறது. இவை மனிதனுடைய மூதாதையர்களை கால்களை ஊன்றி முதுகை நிமிர்த்தி நிற்கச் செய்தன. உழைப்பில் ஈடுபட்ட பொழுது பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டது; ஆகவே மொழி தோன்றியது. உழைப்பு மனிதனை விலங்குலகத்திலிருந்து பிரித்து மனித இனத்துக்கு மட்டுமே பிரத்யேகமான குணாம்சங்களை—உழைப்புக் கருவிகளின் உற்பத்தி, சிறப்பான முறையில் அமைக்கப்பட்ட மூளை, உணர்வும் சுய உணர்வும் மற்றும் தெளிவான பேச்சு—அவனுக்குத் தந்தது.

மனிதன் விலங்குலகத்திலிருந்து பிரிந்த பொழுது அவன் வெறும் உயிரினப் பிறவியாக மட்டும் இருப்பது முடிவடைந்து விட்டது. உயிரியல் குணாம்சங்கள் (உயிரியல் தேவைகள், இயற்கையான திறமைகள், இதரவை) நவீன மனிதனுக்கும் குறியடையாளமாக இருக்கின்றன என்பது மெய்யே; அவை மனிதனுடைய வாழ்க்கையில் முக்கியமான பாத்திரத்தை வகிக்கின்றன. ஆனால் அவை மனிதனுடைய சாராம்சத்தை நிர்ணயிப்பதில்லை, அவை அவனுடைய முக்கியமான குணாம்சங்களாக இருக்கவில்லை. மனிதன் இப்பொழுது சடப்பொருளின் இயக்கத்தின் உயர்ந்த வடிவத்துக்கு, சமூக வாழ்க்கைக்கு உரியவனாகி விட்டான். மனிதனுடைய சாராம்சம் அவனுடைய சமூக உறவுகளினால் முடிவு செய்யப்படுகிறது. அவை அவனுடைய வாழ்க்கையின் சமூக நிலைமைகளை உள்ளடக்கியிருக்கின்றன; அவற்றை அவனே படைக்கிறான். மனிதன் ஒரு குறிப்பிட்ட சகாப்தம் மற்றும் சமூக அமைப்புக்கு, குறிப்பிட்ட வர்க்கத்துக்கு, தேசிய இனத்துக்கு, இதரவற்றுக்குச் சொந்தமானவனாக இருப்பதை நாம் இங்கே குறிப்பிடுகிறோம்.

இயற்கையிலிருந்து தோன்றி ஓரளவுக்கு அதிலிருந்து தனியே இருக்கின்ற சமூகம் இயற்கையுடன் தன்னுடைய பிணைப்புக்களை முறித்துக் கொள்ளவில்லை. அதற்கு மாறாக, சமூகம் இயற்கையுடன் நெருக்கமான உறவு களைத் தொடர்ச்சியாக வைத்துக் கொண்டிருக்கிறது. சமூகத்தின் இருத்தலுக்கும் பரிணாமத்துக்கும் இது மிக அவசியமான நிபந்தனையாகும்.

மனித சமூகம் எல்லையற்ற இயற்கையுடன் மொத்த மாக இடைச் செயல் புரியவில்லை என்பது உண் மையே. மனித சமூக நடவடிக்கை நிகழ்வுப் போக்கில் சம்பந்தப்படுகின்ற இயற்கையின் அந்தப் பகுதியுடன் மட்டுமே அது இடைச் செயல் புரிகிறது. வரலாற்று நிகழ்வுப் போக்கில் மேன்மேலும் அதிகமான இயற்கை நிகழ்வுப் போக்குகளும் இயற்கைத் துறைகளும் மனித னுக்கு முக்கியத்துவம் கொள்கின்றன, அவசியமாகின்றன. உதாரணமாக, மனித சமூக வரலாற்றின் தொடக்க நிலைக் கட்டங்களில் மனிதன் தன்னுடைய வாழ்க் கைக்கு இயற்கை மூலங்களையே (காட்டுச் செடிகள் மற்றும் பிராணிகள், மண்ணின் இயற்கை வளம், இதரவை) உபயோகித்தான். எனினும், காலப் போக்கில் கனி வளங்களுக்கும் சக்தி ஆதாரங்களுக்கும் மேன் மேலும் அதிகமான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இன்று மனித குலம் விண்வெளியைத் தன்னுடைய சொந்த நோக்கங்களுக்கு அதிகமாக உபயோகிப்பதற்குத் தொடங்கியிருக்கிறது. செயற்கைக் கோள்கள் பூமியைச் சுற்றி வருகின்றன; இவை தொலைக் காட்சி நிகழ்ச்சி களை ஒளி பரப்புதல், நெடுந் தொலைவுகளுக்கு அப்பால் செய்திகளை அனுப்புதல், பருவநிலையை முன்னறிந்து கூறுதல், கனிம வளங்களைக் கண்டுபிடித்தல் மற்றும் இதரவற்றுக்குப் பயன்படுகின்றன.

சமூக வாழ்க்கைக்கு இயற்கை பல்வகையான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது.

முதலாவதாக, அது உற்பத்திக்கு மிகவும் முக்கியமாக இருக்கிறது. மனிதன் உற்பத்தி நிகழ்வுப் போக்கில் இயற்கைப் பொருள்களைத் தன்னுடைய தேவைகளுக்கும் அவசியங்களுக்கும் ஏற்றவாறு மாற்றியமைத்துக் கொள்கிறான். அவன் பூமியிலிருந்து வெட்டியெடுக்கப்படுகின்ற தாதுப்பொருளிலிருந்து உலோகத்தைத் தயாரிக்கிறான், ஆற்றுத் தண்ணீரிலிருந்து சக்தியை உற்பத்தி செய்கிறான், இதரவை. நவீன கால உற்பத்தியில் அடிக்கடி செயற்கைப் பொருள்கள் உபயோகிக்கப்படுகின்ற பொழுது கூட ஆரம்பப் பொருள் தவிர்க்க முடியாதபடி இயற்கையிலிருந்துதான் கிடைக்கிறது. உதாரணமாக, இன்று வீடுகளில் உபயோகிப்பதற்குத் தயாரிக்கப்படுகின்ற பலவிதமான கருவிகளில் பிளாஸ்டிக் அதிகமாக உபயோகிக்கப்படுகிறது. ஆனால் பிளாஸ்டிக்கைத் தயாரிப்பதற்கு எண்ணெயைப் போன்ற கனிம மூலப் பொருள்கள் தேவைப்படுகின்றன.

மனிதனுடைய உற்பத்தியில் இயற்கை மாபெரும் முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தாலும் அதற்கு வேறு வழிகளிலும் முக்கியத்துவம் இருக்கிறது. இயற்கையுடன் உறவு மனிதனுடைய உடல்நலம் மற்றும் தார்மிக மனநிலையைப் பேணிக்காத்து புதுப்பிக்க உதவுகிறது. கிராமங்களில் வசித்து இயற்கைச் சூழலில் அதிகமான நேரத்தைக் கழிப்பவர்கள் நகரங்களில் வசிப்பவர்களைக் காட்டிலும் நெடுங்காலம் வாழ்வது தற்செயலானது அல்ல.

இயற்கை மனிதனுக்கு அழகைக் காண்பதற்கும் புரிந்து கொள்வதற்கும் கற்பிக்கிறது (இயற்கையின் அழகியல் முக்கியத்துவம்).

இயற்கையின் கல்விசார்ந்த முக்கியத்துவத்தைப் பற்றிக் கூறுவதும் முறையானதே. இயற்கைச் சூழலைப் பற்றி அக்கறை எடுத்துக் கொள்வது அன்பை வளர்க்கிறது, நலிந்தவர்களிடமும் வக்கற்றவர்களிடமும் இரக்கத்தைத் தூண்டுகிறது.

இயற்கைச் சூழ்நிலை மனிதனுடைய வாழ்க்கையில் முக்கியமான பாத்திரத்தை வகிக்கிறது. அது நாடுகள் மற்றும் மக்களினங்களின் வளர்ச்சியின் வேகத்தைத் துரிதப்படுத்த முடியும் அல்லது குறைக்க முடியும்; சில சமயங்களில் தொழில்துறையின் வளர்ச்சியின் மீது அது தீர்மானகரமான தாக்கத்தைக் கொண்டிருக்கிறது. ஒரு நாட்டின் சாதகமான நிலைமையும் கனிவளங்களும் இத்தியாதி அந்த சமூகத்தின் வளர்ச்சியை ஊக்குவிக்கின்றன. அதற்கு மாறாக, பாதகமான இயற்கை நிலைமைகள் (உதாரணமாக, ஐரோப்பா மற்றும் ஆசியாவின் தூர வடக்குப் பகுதிகள்) அல்லது உலகத்தின் மற்ற பகுதிகளிலிருந்து தனித்திருப்பது (உதாரணமாக, மத்திய ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்காவின் சில பிரதேசங்கள்) அங்கே சமூக வளர்ச்சியைத் தடுத்திருக்கின்றன.

எனினும், இயற்கை நிலைமைகள் சமூக வளர்ச்சிப் போக்கை நிர்ணயிக்கின்ற முக்கியமான காரணி என்று கருதி விடக் கூடாது. சமூகங்களில் நடைபெறுகின்ற தீவிரமான மாற்றங்கள், அதாவது சமூகப் புரட்சிகளைப் போன்றவை இயற்கை நிலைமைகளில் மாற்றங்களினால் ஏற்படவில்லை; அவை சமூகத்தின் அவசியங்களினால், அதன் உள் முரண்பாடுகளினால் ஏற்படுகின்றன.

இயற்கைக்கும் சமூகத்துக்கும் இடையிலுள்ள உறவுகள் ஒரு வகையான இடைச் செயலாகும்; அதாவது இயற்கை

சமூக வளர்ச்சியின் மீது தாக்கம் செலுத்துகிறது, சமூகம் இயற்கையின் மீது தாக்கம் செலுத்துகிறது.

மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலுள்ள இடைச் செயல் சாராம்சத்தில் இயற்கைக்கும் பிராணிகளுக்கும் இடையிலுள்ள இடைச் செயலிலிருந்து வேறுபடுகிறது. பிந்தியது வழக்கமாக இயற்கைக்குத் தன்னை மாற்றிக் கொள்கிறது, அல்லது தன்னுடைய இருத்தலினால் சில சமயங்களில் குறைந்த அளவில் தாக்கத்தைச் செலுத்துகிறது. அதற்கு மாறாக, மனிதன் இயற்கையைத் — தன்னுடைய தேவைகளுக்கும் அவசியங்களுக்கும் ஏற்புடைய முறையில் — திருத்துகிறான், மாற்றியமைக்கிறான்.

இயற்கையின் மீது சமூகத்தின் தாக்கம் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி மட்டம், சமூகத்தின் சக்திவளம் மற்றும் அதன் தொழில்நுட்பவியல் சக்தி ஆகியவற்றைப் பொறுத்திருக்கிறது. இக்கூறுகள் மனித வாழ்க்கையின் ஆரம்பக் காலத்தில் அற்பமாகவே இருந்த போதிலும் இன்று அவை மாபெரும் அளவுக்கு வளர்ச்சியடைந்திருக்கின்றன. விஞ்ஞான, தொழில்நுட்ப புரட்சி இயற்கை மீது சமூகத்தின் தாக்கத்தின் அளவைப் பெரிதும் உயர்த்தி விட்டது. இன்று இயற்கை மீது மனிதனுடைய தாக்கம் பிரம்மாண்டமான இயற்கை நிகழ்வுகளுடன் ஒப்பிடக் கூடியதாக இருக்கிறது. உதாரணமாக, மக்கள் நிலத்தை உழுகின்ற பொழுது பூமியிலுள்ள எரிமலைகள் அதே காலத்தில் வெளியேற்றுகின்ற பொருளை விட மும்மடங்குப் பொருளை வருடந்தோறும் புரட்டிப் போடுகிறார்கள்.

சமூகத்துக்கும் இயற்கைக்கும் இடையிலான பரஸ்பரச் செயலாக்கத்தின் இன்றைய கட்டத்தின் குறிப்பிடத்தக்க கூறு பூமியின் மொத்தப் பரப்பும் மனிதனுடைய நடவடிக்

கைகளுக்குரிய களமாக மாற்றப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டலாம். மனிதன் பூமியில் கிடைக்கின்ற அநேகமாக எல்லாப் பொருள்களையும் உபயோகிக்கிறான், அநேக மாக எல்லா சக்தி ஆதாரங்களையும் பயன்படுத்து கிறான். மனிதன் பூமியின் எல்லைகளைக் கடந்து விண்வெளிக்குக் கூடப் போய் விட்டான்.

பல உதாரணங்களில் இயற்கையின் மீது மனிதனுடைய தாக்கம் தன்னியல்பானது, கட்டுப்பாடில்லாதது. அவன் சில குறுகிய கால, பிரத்யேக நோக்கங்களைப் பின்பற்று கின்ற பொழுது இயற்கையில் குறுக்கிடுவதன் மூலம் ஏற்படக் கூடிய பாதகமான விளைவுகளைப் பற்றி சில சமயங்களில் சிந்திப்பதில்லை.

இன்றைய கட்டத்தில் இயற்கை மீது மனிதனுடைய தாக்கம் அதிகரித்திருக்கின்ற அளவும் அதன் பாதகமான விளைவுகளும் மிகவும் சிக்கலான பல பிரச்சினைகளைத் தோற்றுவித்திருக்கின்றன.

பூமியில் இயற்கை வளங்கள் வரையறுக்கப்பட்ட அளவில் இருப்பதும் அவற்றில் பலவற்றைத் திரும்ப ஏற்படுத்த வேண்டியிருப்பதும் மனிதனுக்கு அவசியமானவற்றைச் செயற்கை முறையில் உற்பத்தி செய்ய வேண்டியிருப்பதும் இப்பிரச்சினைகளில் ஒன்றாகும். இன்று பொதுவாக கனிம வளங்களும் சக்தி (எண்ணெய், நிலக்கரி, எரிவாயு ஆகியவை) இருப்புக்களும் அநேகமாகத் தீர்ந்து கொண் டிருக்கின்றன என்று நிபுணர்கள் ஏகமனதாகக் கூறுகிறார் கள்; பூமியில் இயற்கை வளங்களின் மொத்த அளவு, அவை இன்னும் எவ்வளவு காலம் வரையிலும் கிடைக்கும் என்பதைப் பற்றி சிற்சில வேறுபாடுகள் மட்டுமே இருக் கின்றன. பல நாடுகளில் மனிதனுடைய வாழ்க்கைக்கு அத்தியாவசியமான குடிநீர், சுத்தமான காற்று, நிலம் ஆகியவற்றைப் போன்ற இயற்கை வளங்களுக்குத்

தீவிரமான பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. மத்திய கிழக்கைச் சேர்ந்த சில நாடுகள் மக்களுக்கும் தொழில் துறைக்கும் தண்ணீர் சப்ளை செய்வதற்கு அதிகமான செலவை ஏற்படுத்துகின்ற, தொழில்நுட்ப ரீதியில் மிகவும் சிக்கலான திட்டங்களைத் தயாரித்திருக்கின்றன (அன்டார்க்டிக் பிரதேசத்திலிருந்து பனிமலைகளின் நீரைக் கொண்டு வருவதற்கும் திட்டமிடப்படுகிறது). பூமியில் மக்கள் தொகை வளர்ச்சியடைந்து உலகத்தின் உற்பத்தி அதிகரிக்கின்ற பொழுது இயற்கை வளங்களை உபயோகிப்பதைக் கட்டுப்படுத்தாவிட்டால் அவை படிப் படியாகத் தீர்ந்து விடும். ஏனென்றால் பூமியின் பரப் பளவைப் போலவே இயற்கை வளங்களும் வரையறுக்கப் பட்டிருக்கின்றன.

புறச் சூழலை மேன்மேலும் அசுத்தமாக்குவது அதிகரிப் பதும் அதை அழிப்பதும் இன்று சமூகத்துக்கு முன்னே உள்ள முக்கியமான பிரச்சினைகளில் ஒன்றாகும். தொழிற் சாலைகளிலிருந்து வெளியேறுகின்ற கழிவுப் பொருள்களும் கார்கள் வெளிவிடுகின்ற நச்சு வாயுவும் காற்றில் தீங் கான இரசாயனப் பொருள்களைச் சேர்க்கின்றன; காற்றில் இருக்கின்ற கரியமிலவாயுவின் அளவு அதிகரிக் கிறது, பிராணவாயுவின் அளவு குறைகிறது. பூமியின் மேற்பரப்பும் உலகத்தின் கடல்களும் அசுத்தமாக்கப்பட்டு அழிக்கப்படுகின்றன; சில ரகங்களைச் சேர்ந்த பிராணி களும் தாவரங்களும் மொத்தமாக அழிந்து கொண்டிருக் கின்றன. பல்வேறு வகையான அசுத்தங்கள் கோடிக்கணக் கான வருடங்களாக பூமியில் ஏற்பட்டிருக்கின்ற சம நிலையைப் பாதித்து பல்வேறு இயற்கை நிகழ்வுகளுக்கு இடையிலுள்ள ஒத்திசைவை அழிக்கின்றன, மனிதன் உயிர் வாழ்வதற்கு ஆபத்தை உண்டாக்குகின்றன. இன்று புறச் சூழல் நெருக்கடி நெருங்கி வருகிறது.

இயற்கையின் மீதான மனித தாக்கத்தின் எல்லா சாத்தியமான விளைவுகளையும் முன்கண்டு ஆராய்ந்து, தீய விளைவுகளை அகற்றுவதற்கான தீவிர நடவடிக்கைகளைத் தீட்டி நிறைவேற்றும் கடமை விஞ்ஞானத்தின் முன் நிற்கிறது. இயற்கையின் புறவய விதிகளை அறிந்து பயன்படுத்துவதன் அடிப்படையில்தான் இயற்கையின் பாலான மனிதனின் நடைமுறை உறவு இருக்க வேண்டும். மனிதன் இயற்கையைக் கவனத்தோடு அணுக வேண்டும், இயற்கையின் விதிகளை இயன்றவரை சிறப்பாக அறிந்து அவற்றிற்கேற்றபடி செயல்பட வேண்டும். இந்த மனப்பாங்கில்தான் மக்களை, குறிப்பாக இளைய தலைமுறையை வளர்க்க வேண்டுமென மார்க்சிஸ்டுகள் கருதுகின்றனர்.

இயற்கையின் மீது சமுதாயம் எந்த அளவிற்குத் தாக்கம் செலுத்துகிறது என்பது உற்பத்திச் சக்திகளின் மட்டத்தைப் பொறுத்துள்ளது என்றால் இத்தாக்கத்தின் தன்மை எல்லாவற்றிற்கும் மேலாக சமூக-பொருளாதார அமைப்பைப் பொறுத்துள்ளது. நெருங்கி வரும் புறச் சூழல் நெருக்கடிக்கு முக்கியக் காரணம் முதலாளித்துவம் ஆகும். லாபத்தை நோக்கமாகக் கொண்ட உற்பத்தி, பொருளாதாரத்தை ராணுவமயப்படுத்துவது, சுயநல மனப்போக்கு, நுகர்வு மனப்பாங்கு ஆகியவற்றின் விளைவாய் முதலாளித்துவம் இயற்கைக்கு பேரிழப்பை ஏற்படுத்தியுள்ளது.

இன்று முதலாளித்துவ நாடுகளில் காணப்படும் சுற்றுப்புறச் சூழல் நெருக்கடிக்கான காரணம் பல பத்தாண்டுகளாக இயற்கை மூல ஊற்றுகளைத் தான் தோன்றித்தனமாகப் பயன்படுத்தியதாகும். அது இன்றைய முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியுடன் நெருக்கமான தொடர்புடையது. இன்றுள்ள நிதி நெருக்

கடி, சக்தி நெருக்கடி மற்றும் அவை போன்ற நிகழ்வுகளுடன் சேர்ந்து அது தொடர்ச்சியான மற்றும் மேன்மேலும் தீவிரமடைந்து வருகின்ற முதலாளித்துவத்தின் நசிவுக்குச் சான்றளிக்கிறது.

ஏகபோகங்கள் உழைப்பு வளங்களை அழிப்பது மட்டுமின்றி மொத்தமாக இயற்கை வளங்களையும் அழிக்கின்ற அணுகுமுறையைக் கடைப்பிடிக்கின்றன. மேலும் தொழில்துறையிலுள்ள தீவிரமான போட்டியின் விளைவாகப் பெரிய மூலதனம் உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கு முயல்கிறது; எனவே புறச் சூழல் காப்பு நடவடிக்கைகள் கைவிடப்படுகின்றன.

மாபெரும் தொழில் நிறுவனங்கள் வளர்முக நாடுகளில் புதிய தொழில்களைத் தொடங்குகின்றன. புறச் சூழல் பிரச்சினை அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி மற்றும் வளர்ச்சியடைந்த இதர முதலாளித்துவ நாடுகளில் இருப்பதைப் போல இந்த நாடுகளில் தீவிரமாக இருக்கவில்லை. மேலும் இந்த நாடுகளில் பலவற்றில் புறச் சூழலைப் பாதுகாக்கின்ற பயனுள்ள சட்டங்கள் இன்னும் ஏற்படவில்லை என்பது இந்த ஏகபோகக் கம்பெனிகளுக்கு முக்கியமாகும். இதன் விளைவாகப் புதிய பிரதேசங்களில் புறச் சூழல் நெருக்கடி தோற்றுவிக்கப்படுகிறது.

ஏகபோகங்கள் புறச் சூழலை அழிக்கின்ற முக்கியமான தோற்றுவாயாகவும் இப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படுத்துவதில் பிரதான தடையாகவும் இருக்கின்றபடியால் புறச் சூழலைப் பாதுகாப்பதற்கு நடைபெறுகின்ற போராட்டம் முதலாளித்துவ சமூகத்தில் மிகவும் முற்போக்குள்ள, அமைப்பு ரீதியில் ஒழுங்கமைந்த சமூக சக்தியாகிய தொழிலாளி வர்க்கம் தலைமை தாங்குகின்ற பரந்த ஏகபோக எதிர்ப்பு இயக்கத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது.

ஆயுதப் போட்டியும் ஏகாதிபத்திய யுத்தங்களும் இயற்கைச் சூழலுக்கு அதிகமான நாசத்தை ஏற்படுத்தி யிருக்கின்றன.

அமைதியாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களுக்கு நவீன ஆயுதங்கள் துன்பத்தைக் கொடுப்பதுடன் பல நூற்றாண்டுகளாக இயற்கை படைத்திருப்பவற்றையும் மனிதன் தன்னுடைய முன்னேற்றத்துக்குப் பல தலை முறைகளாக நிர்மாணித்திருப்பவற்றையும் முழுமையாக அழிக்க வல்லவை என்பதை வியட்நாமிலும் மத்திய கிழக்குப் பிரதேசத்திலும் நடைபெற்றிருக்கும் யுத்தங்கள் நிரூபித்திருக்கின்றன. அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் வியட்நாமில் நடத்திய பயங்கரமான யுத்தம் மாபெரும் காடுகளை அழித்து தண்ணீர்த் தேக்கங்களிலும் நெல் வயல்களிலும் நஞ்சைக் கலந்தது.

ஆயுதப் போட்டியும் பேரழிவு ஆயுதங்களும் இயற்கைச் சூழ்நிலையை அழிக்கின்றன. அணு ஆயுதப் பரிசோத னையின் விளைவாக ஏற்படுகின்ற கதிரியக்கம் காற்று மண்டலத்தை அசுத்தப்படுத்துகிறது; பேரழிவு ஆயுதங் களை உற்பத்தி செய்யும் பொழுது ஏற்படுகின்ற இரசா யன மற்றும் கதிரியக்கக் கழிவுப் பொருள்கள் கடலில் கொட்டப்படுவதால் கடல்நீர் விஷமாக மாற்றப் படுகிறது. இத்தகைய ஆயுதங்களை விண்வெளிக்கு எடுத்துச் செல்வதும் பூமிக்கு மேலேயுள்ள விண்வெளியில் தெர்மோ அணு யுத்தத்துக்குத் தயாரிப்புகளைச் செய்வதும் மிகவும் ஆபத்தானதாகும். இன்று தெர்மோ அணு யுத்தம் ஏற்படுமானால் அது மனித குலத்தின் மிகப் பெரும்பான்மையினரை அழிப்பதுடன் இந்த கிரகத்தை உயிருள்ள எதுவும் வசிப்பதற்குத் தகுதியில்லாபடி செய்து விடும்.

ஆயுதப் போட்டிக்கு வீணாகச் செலவழிக்கப்படுகின்ற

பல பில்லியன் டாலர்களில் சிலவற்றை இயற்கைப் பாதுகாப்புக்கு ஒதுக்கினால் பல ஜீவாதாரப் பிரச்சினை களை வெற்றிகரமாகத் தீர்க்க முடியும்.

சோஷலிச அமைப்பில் கூட புறச் சூழல் பாதுகாப்பும் இயற்கை வளங்களைப் பகுத்தறிவுக்குகந்த முறையில் செலவிடுகின்ற பிரச்சினையும் மிகவும் முக்கியமானதாக இருக்கும். ஆனால் அதன் அணுகுமுறையும் அதன் தீர்வுக்குரிய வாய்ப்புக்களும் முதலாளித்துவ அமைப்பின் கீழ் இருப்பதிலிருந்து அடிப்படையில் வேறுபடுகின்றன.

சோஷலிச அமைப்பில் உற்பத்திச் சாதனங்களின் சமூக உடைமையும் திட்டமிட்ட பொருளாதாரமும் இருக் கின்றபடியால் அது மொத்தத்தில் சமூகத்துக்கும் இயற் கைக்கும் இடையில் தேவையான இடைச் செயலை உறுதிப்படுத்துகிறது, இயற்கையைப் பாதுகாப்பதற்கு அவசியமான விஞ்ஞான ரீதியான நடவடிக்கைகளைத் திட்டமிடுவதையும் அமுலாக்குவதையும் சாத்தியமாக்கு கிறது.

கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் அரசும் இயற்கை வளங்களைக் கவனமாக உபயோகிப்பது மற்றும் அவற்றை மறுபடி ஏற்படுத்துவதைப் பற்றி எப்பொழுதும் அக்கறை காட்டுகின்றன. அவை சோவியத் சமூகத்தின் இன்றைய தலைமுறையினருக்கு மட்டுமல்லாமல் எதிர்காலத் தலை முறையினருக்கும் பயன்பட வேண்டுமென்பது அவர் களுடைய நோக்கம்.

இயற்கையைப் பாதுகாப்பதற்கும் மாற்றியமைப்பதற் கும் விரிவான அரசாங்க நடவடிக்கைகளை அமுலாக்கிய முதல் அரசு சோவியத் யூனியன். புரட்சிக்குப் பிந்திய ஆரம்ப வருடங்களில், உள்நாட்டு யுத்தம் இன்னும் நடை பெற்றுக் கொண்டிருந்த பொழுது லெனினுடைய முன் முயற்சியின் பேரில் இயற்கைச் சூழ்நிலையைப் பாது

காப்பதற்குரிய பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

சோவியத் யூனியனில் புறச் சூழலைப் பாதுகாப்பதற்கு விசேஷமான சட்டங்களைக் கொண்ட அமைப்பு பின்பற்றப்படுகிறது. பொருளாதாரமும் நகரங்களும் தொழில்துறைக் கேந்திரங்களும் வளர்ச்சியடைந்து அரசு இத்துறையில் ஒதுக்கீடுகளை அதிகப்படுத்துகிறது. இயற்கை வளங்களைப் பகுத்தறிவுடன் உபயோகித்தல், சுற்றுப் புறச் சூழலை ஆழ்ந்த அக்கறையுடன் பயன் படுத்துதல் ஆகிய நாட்டின் கொள்கை சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சிக் காங்கிரசுகளில் நிறைவேற்றப்பட்ட ஆவணங்களிலும் சோவியத் அரசியலமைப்புச் சட்டத் திலும் (18ம் மற்றும் 67ம் ஷரத்துக்கள்), கட்சி மற்றும் அரசாங்கத் தீர்மானங்களிலும் ஊர்ஜிதப்படுகிறது. சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27வது காங் கிரசில் ஏற்கப்பட்ட கட்சி வேலைத்திட்டத்தில், தன் எதிர்காலத்தை உணர்வு பூர்வமாக கட்டி வரும் சோஷ லிச சமுதாயம் இயற்கையை திட்டமிட்டு கவனமாகப் பயன்படுத்துகிறது, பூமியின் இயற்கைச் செல்வங்களைப் பேணிக்காத்து, செழுமைப்படுத்துவதற்காக மனிதகுலம் நடத்தும் போராட்டத்தில் முன்னணியில் நிற்கிறது என்று கூறப்படுகிறது.

சுற்றுப் புறம் சிறிது சிறிதாக நாசமாக்கப்பட்டு அழிக் கப்படுகின்ற பிரச்சினை தற்பொழுது உலகப் பரிமாணத்தை அடைந்து விட்டது. வளர்ச்சியடைந்த நாடுகளிலும் வளர்முக நாடுகளிலும், முதலாளித்துவ நாடுகளிலும், சோஷலிஸ்ட் நாடுகளிலும், உலக முழுவதிலும் அது ஒவ்வொரு நபரையும் எதிர்நோக்குகிறது. சுற்றுப் புறத்தை அசுத்தப் படுத்துதல் ஒவ்வொரு தனிப்பட்ட நாட்டின் உள் நாட்டுப் பிரச்சினை என்ற நிலையைக் கடந்து விட்டது; ஏனென்றால் காற்றும் நீரோட்டங்களும் விஷப் பொருள்

களை — நாடுகளின் எல்லைகளைப் பற்றிக் கவலைப் படாமல் — உலகத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் கொண்டு செல்கின்றன. உலகத்தின் தொழில்துறைக் கழிவுப் பொருளில் சுமார் அரைப் பங்கை அமெரிக்க ஐக்கிய நாடு காற்று மண்டலத்தில் வெளிவிடுகிறது என்பதை இங்கே சுட்டிக் காட்டுவது மட்டும் போதுமானது.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் பலவற்றிலும் தொழிற்சாலைகள் இருக்கின்ற பகுதிகளில் கழிவுப் பொருள் விழுவதைத் தடுப்பதற்கென்று மிகவும் அதிகமான உயரமுள்ள புகைபோக்கிகள் அமைக்கப்படுகின்றன. இதற்கு கிரேட் பிரிட்டன் தக்கதொரு உதாரணமாகும். அங்கே தொழில்துறைப் பிரதேசங்களில் காற்றில் அசுத்தம் குறைவே; ஆனால் தென்மேற்குப் பருவக் காற்றுகள் உயரமான புகைபோக்கிகளிலிருந்து வெளிவருகின்ற புகையை ஸ்கான்டிநேவியாவுக்கு அடித்துச் செல்கின்றன. நூற்றுக்கணக்கான ஏரிகளிலும் ஆறுகளிலும் மீன்கள் அழிந்து விட்டன, காடுகளின் வளர்ச்சி குறைந்து விட்டது; முன் காலத்தில் வளம் அதிகமாக ஒருபோதும் இல்லாத மண் இன்னும் வளம் குறைந்து விட்டது.

ஒரு நாட்டில் வளர்ச்சியடைந்த தொழில்துறை இல்லாவிட்டாலும் கூட அசுத்த ஆபத்திலிருந்து எந்த நாடும் விதிவிலக்குப் பெற முடியாது.

ஆகவே உலகம் முழுவதும் இயற்கையைப் பாதுகாப்பதற்கும் எதிர்காலத் தலைமுறையினருடைய வாழ்க்கையை உத்தரவாதம் செய்வதற்கும் எல்லா மக்களினங்களும் அரசாங்கங்களும் கூட்டாகப் பாடுபட வேண்டும். இந்த இலட்சியத்துக்காக ஒத்துழைக்கும்படி எல்லா நாடுகளுக்கும் அறைகூவல் விடுத்த முதல் அரசு சோவியத் அரசாங்கமே. பரஸ்பர பொருளாதார உதவிக் கவுன்சில் அமைப்புக்குள் சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடையில்

இன்று இத்தகைய ஒத்துழைப்பு இருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுவட்டத்துக்குள் புறச் சூழலைப் பாதுகாக்கின்ற அரசாங்கங்களுக்கு இடையிலான பல திட்டங்களில் சோவியத் யூனியனும் மற்ற சோஷலிஸ்ட் நாடுகளும் சுறுசுறுப்பாகப் பங்கெடுக்கின்றன. சோவியத் யூனியன் பிரான்ஸ், பின்லாந்து மற்றும் இதர நாடு களுடன் செய்து கொண்டிருக்கும் இரு தரப்பு உடன்பாடு களும் இத்துறையில் அதிகம் நிறைவேற்றியிருக்கின்றன.

**மக்கள் தொகையும்**
**சமூக வளர்ச்சியில்**
**அதன் பாத்திரமும்**

சமூகத்தின் சகஜமான செயல்முறையும் வளர்ச்சியும் மக்கள் தொகையின் அளவு, அடர்த்தி, வினியோகம் மற்றும் இதர குணாம்சங்களைப் பொறுத்திருக்கின்றன. மக்கள் தொகையியல் என்னும் விசேஷ விஞ்ஞானம் மக்கள் தொகையைப் பற்றிய ஆய்வுகளை நடத்துகிறது. மார்க்சிய-லெனினியத் தத்துவஞானமும் இப்பிரச்சினையை ஆராய்கிறது. ஏனென்றால் மக்கள் தொகை நிகழ்வுப் போக்குகளும் கூறுகளும் எல்லா சமூக அமைப்புகளிலும் முக்கியமான பாத்திரத்தை வகிக்கின்றன.

சமூகத்தின் பரிணாமத்தை நிர்ணயிக்கின்ற அடிப்படை யான காரணி மக்கள் தொகை வளர்ச்சியே என்று கூறுகின்ற தத்துவங்கள் உள்ளன. சமூக வளர்ச்சியில் மக்கள் தொகை நிகழ்வுப் போக்குகளின் பாத்திரத்தை முற்றிலும் நிராகரித்து, அது உழைப்பின் உற்பத்தித் திறன் வளர்ச்சியின் விளைவு மட்டுமே என்று வலியுறுத்து கின்ற வேறு தத்துவங்களும் உள்ளன.

எனினும் மக்கள் தொகையின் சில குணாம்சங்கள்,

உதாரணமாக, அதன் அடர்த்தி*, கட்டமைப்பு மற்றும் வளர்ச்சி வேக அளவு உற்பத்தியின் வளர்ச்சி மற்றும் சமூக வாழ்க்கையின் இதர அம்சங்களில் ஓரளவு தாக்கம் செலுத்துகின்றன.

மனித சமூகத்தினுடைய வளர்ச்சியின் மிக முந்திய கட்டங்களில் இயற்கையின் கடுமையான சக்திகளைத் தன்னுடைய சொந்த சக்தியைக் கொண்டு ஒரு மனிதனால் எதிர்க்க முடியவில்லை. உற்பத்தி முறையாக நடைபெறுவதற்குக் குறைந்த பட்ச மக்கள் தொகை இருப்பது அவசியம். இயற்கைச் செல்வம் நிறைந்த புதிய பிரதேசங்களை வளர்ப்பதற்கு மனித வளம் அவசியம். சோவியத் யூனியனில் சைபீரியா, தூர கிழக்கு மற்றும் வடக்குப் பிரதேசங்களில் கனிப் பொருள்களும் காடுகளும் நிறைந்திருக்கின்றன. ஆனால் அங்கே மிகவும் பாதகமான இயற்கை நிலைமைகள் இருக்கின்றபடியால் அங்கே மக்கள் தொகை அடர்த்தி சோவியத் யூனியனின் ஐரோப்பியப் பகுதியைக் காட்டிலும் குறைவாகவே இருக்கிறது. இது இப்பிரதேசங்களில் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிறது என்பது உண்மையே. இப்பிரதேசங்களில் வசிக்கும்படி மக்களை ஈர்ப்பதற்காக சோவியத் அரசாங்கம் உயர்ந்த ஊதியம், நல்ல வாழ்க்கை நிலைமைகள், இதர வசதிகளைச் செய்து கொடுக்கிறது.

மக்கள் தொகைக் கட்டமைப்பும் சமூக வளர்ச்சியின் மீது தாக்கம் செலுத்துகின்ற முக்கியமான காரணியாகும். ஒவ்வொரு நாட்டிலும் பொருளாதார ரீதியில் சுறுசுறுப்

---

* சோவியத் யூனியனில் ஒரு சதுர கிலோமீட்டருக்கு 12 நபர்களும், சீனாவில் 103 நபர்களும், அமெரிக்காவில் 24 நபர்களும் மங்கோலியாவில் 1 நபரும், இந்தியாவில் 202 நபர்களும் வசிக்கிறார்கள்.

பான பகுதி, அதாவது உழைக்கும் மக்களைத் தவிர, முதியவர்கள், குழந்தைகள், இளைஞர்கள், மாணவர்கள் மற்றும் குடும்பத் தலைவியர் இருக்கிறார்கள். சுரண்டு கின்ற சமூகங்களில் சுரண்டி வாழ்கின்ற வர்க்கங்கள், சமூகப் பிரிவுகள் மற்றும் குழுக்கள் ஆதிக்கம் செலுத்து கின்றன. இவை நுகர்வில் பங்கெடுக்கின்றன, ஆனால் உற்பத்தியில் வழக்கமாகப் பங்கெடுப்பதில்லை.

மக்கள் தொகைப் பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் இடையிலுள்ள விகிதம், உற்பத்தியில் ஈடுபட்டிருக்கின்ற மக்களின் சதவிகிதம் உற்பத்தி வளர்ச்சியின் மீதும் பொருளாயத மற்றும் கலாசார வசதிகளை நுகர்வு செய்வதன் மீதும் பெரிய தாக்கத்தைக் கொண்டிருக் கின்றன. உதாரணமாக, மேற்கு ஜெர்மனி, ஆஸ்திரியா மற்றும் கிரேட் பிரிட்டன் போன்ற சில ஐரோப்பிய நாடுகளில் பிறப்பு விகிதம் மிகவும் குறைவாக இருக்கிறது; இதனால் அங்கேயுள்ள குழந்தைகள் மற்றும் இளைஞர் களின் எண்ணிக்கை குறைவே. ஆகவே அங்கே மக்கள் தொகை மொத்தமாகவே வயோதிகத்தை அடைந்து கொண்டிருக்கிறது, அதாவது மக்கள் தொகையில் வயோதிகர்களின் அளவு விகிதம் புலப்படத்தக்க முறையில் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இந்த நிகழ்வுப் போக்கு எதிர்காலத்தில் இந்நாடுகளில் ஆள் பற்றாக்குறையை ஏற்படுத்தக் கூடும்.

மக்கள் தொகையின் வளர்ச்சி சமூகத்தின் மொத்தப் பரிணாமத்தையும் நிர்ணயிக்கின்ற முக்கியமான காரணி எனக் கூறுகின்ற தத்துவங்களை முதலாளி வர்க்க சித்தாந்திகள் முன்வைக்கின்றனர். ஆனால் உண்மையில், மக்கள் தொகையின் வளர்ச்சி சமூகத்தின் வளர்ச்சியின் மீது தாக்கம் செலுத்திய போதிலும் அதை நிர்ணயிப் பதில்லை. சமூக வளர்ச்சி மட்டமும் மக்கள் தொகை

அடர்த்தியைப் பொறுத்திருக்கவில்லை. ஒரு சமூக பொருளாதார அமைப்புக்குப் பிறகு மற்றொரு சமூக பொருளாதார அமைப்பு ஏற்படுவதை மக்கள் தொகை வளர்ச்சியின் மூலம் விளக்கவும் முடியாது.

மக்கள் தொகை வளர்ச்சி எல்லாவற்றுக்கும் முதலாவதாக சமூக அமைப்பின் ரகத்தைப் பொறுத்திருக்கிறது. மனித உற்பத்தி என்னும் வெறும் உயிரியல் நிகழ்வுப் போக்காக இதைக் கருத முடியாது. இயற்கை மட்டுமின்றி, சமூகமும் மக்கள் தொகை வளர்ச்சியின் மீது தாக்கம் செலுத்துகின்றது. அதனால்தான் ஒரு தாய் எவ்வளவு குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள முடியுமோ அவ்வளவு குழந்தைகளைப் பெறுவதில்லை. மேலும் பிறந்த எல்லாக் குழந்தைகளும் பெரியவர்களாக வளர்ந்து விடுவதுமில்லை. இதற்கு உயிரியல் கூறுகள் மட்டுமே காரணமல்ல. இது சமூக அமைப்பையும் இருக்கின்ற சமூக உறவுகளின் ரகத்தையும் அதிகம் பொறுத்திருக்கிறது.

எல்லா வரலாற்று சகாப்தங்களுக்கும் பொருந்துகின்ற, மாறாத சூக்குமமான மக்கள் தொகை விதி என்பது இல்லை என்று கார்ல் மார்க்ஸ் கூறினார். முதலாளித்துவத்தின் கீழ் செயல்படுகின்ற மக்கள் தொகை விதியை அவரே வகுத்தளித்தார்; முதலாளித்துவம் மக்கள் தொகை வளர்ச்சி விகிதங்களை வேகப்படுத்துகின்ற அதே பொழுதில் வேலையில்லாதவர்கள் என்னும் ஒப்பளவில் மிகையான மக்கள் தொகையைப் படைக்கிறது, ஆகவே அவர்கள் வாழ்க்கை நடத்துவதற்குரிய வசதிகள் இல்லாதிருக்கிறார்கள் என்று அவர் சுட்டிக் காட்டினார். முதலாளித்துவத்தின் கீழ் தொழில்நுட்பம் மற்றும் தானியங்கி இயந்திரங்களைப் பயன்படுத்துதல் இவ்விதியின் செயல்முறையின் பாதகமான அம்சங்களைத் தீவிரப்படுத்துகிறது.

உழைக்கும் மக்கள் முழுமையான மற்றும் பகுத் தறிவுக்குப் பொருத்தமான முறையில் வேலையில் ஈடுபடுத்தப்படுதலும் அவர்களின் முறைப்படியான வினியோ கமும் வளர்ச்சியும் சோஷலிசத்தின் கீழ் மக்கள் தொகை விதியின் குணாம்சங்களாகும்; ஏனென்றால் இங்கே உற்பத்தி மற்றும் சமூகத்தின் வளர்ச்சி மக்களுடைய நலன்களுக்குக் கீழ்ப்படுகிறது, மக்கள் நலனில் அக்கறை எடுத்துக் கொள்வது அரசாங்கக் கொள்கையின் அவசியமான அம்சமாகும்.

மக்கள் தொகையின் பல்வேறு நிகழ்வுப் போக்கு களைப் பற்றிய பிரச்சினைகள் சோஷலிசத்தின் கீழும் தோன்றுகின்றன என்பது உண்மையே. உதாரணமாக, சில சோஷலிஸ்ட் நாடுகளில் பிறப்பு விகிதம் தீவிரமாகக் குறைந்து விட்டது; மக்கள் தொகை வளர்ச்சி விகிதங் களும் குறைந்து விட்டன. நாடு முழுமையிலும் மற்றும் கிராமப் பகுதிகளிலிருந்து நகரங்களுக்கு மக்களின் இடப்பெயர்ச்சி பொருளாதாரம் மற்றும் சமூகத்தின் நலன்களுடன் எப்பொழுதும் பொருந்தியிருப்பதில்லை.

ஆனால் சோஷலிஸ்ட் சமூகம் மக்கள் தொகை நிகழ்வுப் போக்குகளைக் குறிவழிப்பட்ட முறையில் கட்டுப்படுத்த முடியும்; அதற்கென்று பல நடவடிக்கைகள் அமுலாக்கப்படுகின்றன. சோவியத் யூனியன், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, மற்றும் சில நாடுகளில் பல குழந்தைகளைக் கொண்ட குடும்பங்களுக்கு விசேஷமான பண உதவி அளிக்கப்படுகிறது, தாய்மார்களுக்குப் பிரசவத்துக்கு முன்னரும் அதன் பிறகும் ஊதியமுள்ள நீண்ட விடுமுறை கொடுக்கப்படுகிறது, இதரவை. மக்கள் தொகை குறைவாக உள்ள பிரதேசங்களில் மக்கள் வந்து குடியேறும்படி செய்வதற்காக, அங்கே உழைப்பாளர் களுக்குப் பல சலுகைகள் தரப்படுகின்றன. நாடு

முழுவதிலும் மக்கள் குடியேறுவதை நிர்ணயிக்கின்ற நிலைமைகள், குடிப்பெயர்ச்சி, பிறப்பு விகித மாற்றங்கள், வெவ்வேறு பொருளாதாரப் பிரதேசங்களில் மக்கள் தொகையின் கல்வி மற்றும் தகுதிக் கட்டமைப்பு, வேலை வாய்ப்பு, இதரவற்றைப் பன்முக முறையில் ஒழுங்குபடுத்துவதை சோஷலிஸ்ட் சமூகம் நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

இன்று மனித குலம் ஒரு புதிய கட்டத்தில் இருக்கிறது; இக்கட்டத்தில் மக்கள் தொகைப் பிரச்சினைகள் குறிப்பிடத்தக்க முறையில் முக்கியமாக இருக்கின்றன.

சமீப பத்தாண்டுகளில் உலக மக்கள் தொகை வியக்கத்தக்க முறையில் வேகமாக வளர்ச்சி அடைந் திருக்கிறது. இதை ''மக்கள் தொகையின் வெடிப்பு'' என்கிறோம். மனிதன் தோன்றிய முதல் ஒரு லட்சம் வருட காலத்தில் பூமியில் சில மில்லியன் மக்களே வசித்தார்கள். மக்கள் தொகை நெடுங்காலத்துக்கு மிகவும் மெதுவாகவே வளர்ச்சி அடைந்தது. 17ம் நூற்றாண்டில் அது 600 மில்லியனாக இருந்தது. பிறகு வளர்ச்சி விகிதம் தீவிரமாக அதிகரித்தது. கடந்த 350 ஆண்டுகளில் பூமியின் மக்கள் தொகை ஐந்து மடங்கு அதிகரித்திருக்கிறது. 1950இல் சுமார் 2,500 மில்லியன் மக்கள் உலகத்தில் வசித்தார்கள்; இன்று 4,600 மில்லியனுக்கும் அதிகமானவர்கள் வசிக் கிறார்கள். அப்படியானால் கடந்த முப்பது சொச்சம் ஆண்டுகளில் உலக மக்கள் தொகை அநேகமாக இரண்டு மடங்காக அதிகரித்திருக்கிறது. வளர்முக நாடுகளில் இறப்பு விகிதம் — குறிப்பாகக் குழந்தைகள் மத்தியில் — மொத்தத்தில் குறைந்திருக்கிறது, பிறப்பு விகிதம் குறைவதற்குப் பதிலாக அடிக்கடி உயிரியல் உச்ச அளவை எட்டியிருக்கிறது. மக்கள்

தொகை வளர்ச்சி விகிதம் வேகமடைந்ததை இது விளக்கும்.

கி. பி. 2000இல் உலக மக்கள் தொகை 6,200 மில்லியன்களை எட்டி விடும் என்று ஐ. நா. சபை நிபுணர்கள் மதிப்பிட்டிருக்கிறார்கள். சீனாவில் 1,300 மில்லியன், இந்தியாவில் 950 மில்லியன், சோவியத் யூனியனில் 350 மில்லியன், அமெரிக்க ஐக்கிய நாட்டில் 320 மில்லியன், பாகிஸ்தானில் 250 மில்லியன், நைஜீரியாவில் 160 மில்லியன் மக்கள் இருப்பார்கள் என்று சில மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

இன்று பூமியின் மொத்த மக்கள் தொகை வளர்ச்சியில் சுமார் 90% வளர்முக நாடுகளைச் சேரும். இந்த நாடுகளில் மக்கள் தொகையின் வேகமான வளர்ச்சி, ஆகவே அவற்றின் தேவைகளின் அளவுக்கும் மறுபக்கத்தில் அவற்றின் உற்பத்தி மட்டத்துக்கும் இடையில் பெரிய இடைவெளி இருக்கிறது. இவ்வளவு அதிகமான மக்களுக்குப் போதிய உணவு, சக்தி, வேலை முதலியவற்றைத் தருகின்ற பிரச்சினை மேன்மேலும் சிக்கலடைந்து வருகிறது. மாபெரும் நெருக்கடிகள் அடிக்கடி ஏற்படுகின்றன. ஆனால் பூமியில் பரவலாக இருக்கின்ற பஞ்சம் மக்கள் தொகையின் வேகமான வளர்ச்சியினால் மட்டும்தான் ஏற்படுகிறது என்று நினைப்பது தவறாகும். அது காலனியாதிக்கம் விட்டுச் சென்றிருக்கும் பாதகமான பாரம்பரியமாகும்; ஆயுதப் போட்டியில் ஏராளமான பணத்தைச் செலவழிக்கின்ற ஏகாதிபத்திய நாடுகளின் கொள்கையின் விளைவாகும். உதாரணமாக இந்தியாவை எடுத்துக் கொண்டால் அங்கே உணவுப் பற்றாக்குறைகள் ஏற்படுவதற்கு பிரிட்டிஷ் காலனியாதிக்கவாதிகள் பல்லாண்டுகளாக நாட்டில் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியை நிறுத்தி வைத்தது, விவசாய

உற்பத்தியைப் பெருக்குவதற்கு அவசியமான விவசாய இயந்திர உற்பத்தி, உரத் தொழில் மற்றும் இதர தொழில்கள் ஏற்படாமல் தடுத்தது ஆகியவை காரணங் களாகும். சில மத்திய அமெரிக்க நாடுகளில் அடிக்கடி உணவு நெருக்கடிகள் ஏற்படுவதற்கு அந்த நாடுகள் ஒரு தலைச் சார்பான முறையில் வாழை விவசாயத் துக்கு முக்கியத்துவம் அளித்திருப்பது காரணமாகும். இதன் விளைவாக அமெரிக்க ஏகபோகங்கள் மட்டும் லாபமடைகின்றன; இந்த ''வாழை மரக் குடியரசுகள்'' உணவு இறக்குமதிகளை நம்பியிருக்கின்றன.

வறுமை, கல்வியறிவின்மை, பட்டினி, பயங்கரமான குழந்தை மரணம், கோடிக்கணக்கான மக்களைப் பாதிக்கும் நோய்நொடிகள் ஆகியவற்றிற்கான குற்றம் வரலாற்று நோக்கிலிருந்து மட்டுமின்றி, இன்றைய நடைமுறையின் நோக்கிலிருந்தும் பார்க்கும் போது ஏகாதிபத்தியத்தைத்தான் சாரும். கடந்த பத்தாண்டு களில் மட்டும் வளர்முக நாடுகளிலிருந்து அமெரிக்க கார்ப்பரேஷன்கள் உறிஞ்சும் லாபம் இவற்றின் முதலீடு களை விட நான்கு மடங்கு அதிகம். லத்தீன் அமெரிக் காவிலும் கரிபியன் கடற் பிரதேசத்திலும் இதே கால கட்டத்தில் அமெரிக்க ஏகபோகங்களின் லாபம் அவற்றின் முதலீடுகளை விட 8 மடங்கும் அதிகமாயிருந்தது.

வளர்முக நாடுகளைக் கொள்ளையடித்து, இவற்றை ஈவிரக்கமின்றி சுரண்டித்தான் ஏகாதிபத்தியம் தொடர்ந்து வாழுகிறது என்று எவ்வித மிகைப்படுத்தலுமின்றி கூறலாம். இதன் வடிவங்களும் முறைகளும் மாறினாலும் சாரம் மாறவில்லை.

ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்கா விலுள்ள வளர்முக நாடுகளின் உணவு நிலைமை முன்னேற்றமடைய வேண்டுமென்றால் காலனியாதிக்

கத்தின் அனைத்து விளைவுகளும் அகற்றப்படுதல் அதற்கு முக்கியமான நிபந்தனையாகும். இந்த நாடுகளில் விரிவான பொருளாதார மற்றும் கலாசார வளர்ச்சி, உழைக்க வல்ல அனைவருக்கும் வேலை அளித்தல், கல்லாமையை அகற்றுதல் ஆகியவற்றின் மூலம் இப்பிரச் சினைகளை அடிப்படையான முறையில் தீர்க்க முடியும்.

அதே சமயத்தில் வளர்முக நாடுகளை ஏற்கெனவே எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளின் அவசரத்தைக் கணக்கிலெடுத்துக் கொண்டால், தீவிரமான மக்கள் தொகைக் கொள்கை அவசியம் என்பதை மறுக்க முடியாது. மக்கள் தொகை வளர்ச்சி வேகத்தைக் குறைப்பதையும் அதன் அளவை நிலைப்படுத்துவதையும் பற்றிப் பல நாடுகள் சிந்திக்க வேண்டும். மக்கள் தொகை வளர்ச்சி நிகழ்வுப் போக்குகளைக் கட்டுப்படுத்துவதற்கு விசேஷச் சட்டங்கள், அரசாங்க நடவடிக்கைகள் அவசியம். இந்தியா, சீனா, பாகிஸ்தான், துனிஷியா, துருக்கி மற்றும் சில நாடுகளின் அரசாங்கங்கள் இத்தகைய கொள்கையைக் கடைப்பிடிக்கின்றன.

முதலாளி வர்க்க சமூகவியல் தத்துவங்களில் பல மக்கள் தொகை நிகழ்வுப் போக்குகளின் சாராம்சத் தையும் திசையையும் திரித்துக் கூறுகின்றன. அவற்றை அம்பலப்படுத்துவதும் இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற் குரிய செயலுர மிக்க வழிகளைச் சுட்டிக் காட்டுவதும் அவசியமென்று மார்க்சியம் கருதுகிறது.

மக்கள் தொகைப் பிரச்சினைகளைத் திரிபான முறையில் பார்த்ததன் விளைவாக முதலாளி வர்க்க சமூகவியலில் மிகவும் திகைக்க வைக்கின்ற போக்கு களில் ஒன்றான மால்தூசியவாதமும் நவீன மால்தூசிய வாதமும் தோன்றின. தொழிலாளர்களின் பசி, வறுமை மற்றும் இதர துன்பங்கள் எல்லாவற்றுக்கும்

தொழிலாளர்களே காரணம், ஏனென்றால் அவர்கள் மத்தியில் பிறப்பு விகிதம் மிகவும் உயர்வாக இருக்கிறது என்னும் பிற்போக்கான கருத்தை ஆங்கில முதலாளி வர்க்கப் பொருளியலாளரான இராபர்ட் மால்தஸ் *(1766–1834)* கூறினார். இதற்கு முதலாளித்துவச் சுரண்டலையும் காலனியாதிக்கத்தையும் குறை கூற முடியாது என்று அவர் கூறினார். இந்த முரண் பாடான, பிற்போக்கான தத்துவம் பொய்யானது என்பதை மார்க்ஸ் மூலதனம் நூலில் எடுத்துரைத்தார். லெனின் **தொழிலாளி வர்க்கமும் நவீன மால்தூசியவாதமும்** என்னும் கட்டுரையில் மால்தசின் கூற்றை அம்பலப் படுத்தினார். மால்தூசியவாதம் ''வெறுக்கத்தக்க, அவக் கேடான தத்துவம்... இயற்கைக்கும் மனித குலத்துக்கும் எதிரான அருவருப்பான பழிக்கூற்று''* என்று எங்கெல்ஸ் எழுதினார்.

மால்தசின் கருத்துக்கள் சற்று நவீனப்படுத்தப்பட்ட வடிவத்தில் இன்றைய முதலாளி வர்க்க சமூகவியலில் பரவலாக இருக்கின்றன. மால்தசின் ஆதரவாளர்கள் எழுதிய பல நூல்கள் சமீபத்தில் வெளியிடப்பட்டிருக் கின்றன. வில்லியம் வோஹ்ட் எழுதிய *Road to Survival,* பால் ரால்ஃப் எர்லிஹ் எழுதிய *Population Bomb* ஆகிய நூல்களை இங்கே குறிப்பிடலாம். இன்று உலகத்தில் எல்லோருக்கும் போதிய உணவு இல்லை, பஞ்சம் எந்த சமயத்திலும் ஏற்படலாம், அதன் விளைவாகக் கோடிக்கணக்கில் மக்கள் இறக்க நேரிடும் என்று இப்புத்தகங்களின் ஆசிரியர்கள் எழுதியிருக்கிறார்கள்.

---

* Frederick Engels, «Outlines of a Critique of Political Economy», in: Karl Marx, Frederick Engels, *Collected Works,* Vol. 3, Progress Publishers, Moscow, p. 441.

பெருந்திரளான மக்களைக் கட்டாய முறையில் மலடாக்குதல், மருத்துவ வசதிகளைக் குறைத்து இறப்பு விகிதத்தை அதிகப்படுத்துதல், வளர்முக நாடுகளுக்குப் பொருளாதார உதவியை நிறுத்தல், ஏன் தெர்மோ அணு யுத்தம் ஆகியவற்றின் மூலமாகவே மனித குலத்தைப் பட்டினிச் சாவிலிருந்து காப்பாற்ற முடியும் என்று இன்றைய மால்தூசியவாதிகள் கருதுகிறார்கள். மார்க்சியவாதிகள் இத்தகைய தத்துவங்களை நிராகரித்து சமூக முன்னேற்றம், எல்லா மக்களுக்கும் அதிகமான ஆயுள் காலம், சமாதானம் மற்றும் மகிழ்ச்சிக்குப் போராட வேண்டுமென்று அறைகூவுகிறார்கள்.

மக்கள் முயற்சி எடுத்துக் கொண்டால் பிறப்பு விகிதத்தைக் கட்டுப்படுத்துவதற்கு விரைவில் கற்றுக் கொள்வார்கள். எனினும் ஆழமான சமூக-பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார மாற்றங்களின் அடிப்படையில் மட்டுமே எல்லா மக்கள் தொகைப் பிரச்சினைகளுக்கும் முடிவான தீர்வு சாத்தியம்.

## சமூக வாழ்நிலையும் சமூக உணர்வும்

மக்களின் சமூக வாழ்நிலை அவர்களுடைய சமூக உணர்வை நிர்ணயிக்கிறது என்பது வரலாற்றுப் பொருள் முதல்வாதத்தின் அடிப்படையான கோட்பாடு. இது வரலாற்றைப் பற்றிய பொருள்முதல்வாதக் கருத்தின் சாராம்சத்தைச் சுருக்கமாக எடுத்துக் கூறுகிறது. இச்சூத்திரம் சமூகத்தைப் பற்றித் தத்துவஞானத்தின் அடிப்படையான கேள்விக்குப் பதிலளிக்கிறது. எத்தகைய தத்துவஞானத்திலும் வாழ்நிலைக்கும் சிந்தனைக்கும் இடையிலுள்ள உறவுதான் பெரிய கேள்வி, அடிப்

படையான கேள்வி என்பது எல்லோரும் அறிந்ததே. முதன்மையானதாக, உலகத்துக்கு அடிப்படையாக எதைக் கருத வேண்டும்? ஆன்மாவா அல்லது பருப்பொருளா, வாழ்நிலையா அல்லது உணர்வா? இக்கேள்விக்குத் தரப்படுகின்ற பதிலைக் கொண்டு உலகத்தின் எல்லாக் காலங்களையும் சேர்ந்த தத்துவஞானிகள் பொருள் முதல்வாதிகள், கருத்துமுதல்வாதிகள் என்று இரண்டு முகாம்களாகப் பிரிக்கப்படுகின்றனர். ''வாழ்நிலையிலிருந்து உணர்வு தோன்றுகிறதேயன்றி உணர்விலிருந்து வாழ்நிலை தோன்றுவதில்லை என்று பொருள்முதல்வாதம் பொதுவாக விளக்குகிறதாகையால் மனிதகுலத்தின் சமுதாய வாழ்வு விஷயத்திலும், சமுதாய உணர்வு சமுதாய வாழ்நிலையிலிருந்தே தோன்றுகிறது என்று பொருள் முதல்வாதம் விளக்கித் தீர வேண்டியிருக்கிறது''* என்று எழுதினார் வி. இ. லெனின்.

சமூக வாழ்நிலை என்பது மக்கள் இயற்கையுடனும் தம்மில் ஒருவருக்கொருவரோடும் கொண்டிருக்கின்ற பொருளாயத உறவுகள்; அவை மனித சமூகம் நிறுவப் படுகின்ற பொழுது சேர்ந்து தோன்றுகின்ற உணர்விலிருந்து சுதந்திரமான முறையில் இருக்கின்றன. ''நீங்கள் வாழ்க்கை நடத்தி தொழில் செய்து, குழந்தைகளைப் பெற்று, பொருள்களை உற்பத்தி செய்து அவற்றைப் பரிவர்த்தனை செய்கிறீர்கள் என்கின்ற உண்மை புறநிலையில் அவசியமான சம்பவங்களின் சங்கிலித் தொடரைத் தோற்றுவிக்கிறது, அந்த சங்கிலித் தொடர் உங்களுடைய சமூக உணர்விலிருந்து சுதந்திரமானது, அதை முற்றிலும் கைப்பற்றுவதற்கு

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 1, பக்கம் 58.

சமூக உணர்வினால் ஒருபோதும் முடியாது''* என்று குறிப்பிட்டார் வி. இ. லெனின்.

**சமூக உணர்வு** என்பது வர்க்கங்கள், தேசிய இனங்கள் மற்றும் வரலாற்று ரீதியில் அமைக்கப்பட்ட மக்களின் இதர குழுக்களின் எண்ணங்கள், கருத்துக்கள், தத்துவங் கள் (அரசியல், சட்டம், தத்துவஞானம், மதம் இதரவை) மற்றும் சமூக உளவியலாகும்.

சமூக வாழ்நிலை மக்களுடைய சமூக உணர்வை நிர்ணயிக்கிறது. புதிய சமூகக் கருத்துக்கள் சமூகத்தில் தற்செயலாகத் தோன்றுவதில்லை, சமூகத்தின் பொரு ளாயத வாழ்க்கையில் ஏற்படுகின்ற மாற்றங்களின், அதாவது தீவிரப்படுத்தப்பட்ட சமூக-பொருளாதார முரண்பாடுகள், ஜீவாதாரமான பொருளாயதத் தேவை கள், இதரவற்றின் பிரதிபலிப்பு அவை என்பது இதன் பொருள். எனவே வரலாற்றைப் பற்றிய பொருள் முதல்வாதக் கண்ணோட்டம் மார்க்சும் எங்கெல்சும் பிறந்ததனால் மட்டும் தோன்றி விடவில்லை, முதலாளித் துவத்தின் முரண்பாடுகள் அதிகம் தீவிரமடைந்தபடியால், தொழிலாளி வர்க்கத்துக்குப் புரட்சிகரமான தத்துவம் அவசியமாக இருந்தபடியால் அது தோன்றியது. சமூக வாழ்நிலையில், மக்களின் பொருளாயத வாழ்க் கையில் தீவிரமான மாற்றங்கள் சமூக உணர்வில் அவற்றுக்கேற்ப மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. உதாரணமாக, சோஷலிஸ்ட் நாடுகளில் சிறு அளவிலான விவசாயம் கூட்டுறவுக் கோட்பாடுகளின் அடிப்படையில் சோஷலிஸ்ட் விவசாயமாக மாற்றியமைக்கப்படுகிறது. முன்பு ஒவ்வொரு விவசாயியும் தனிப்பட்ட நிலத்தில்

---

* V. I. Lenin, "Materialism and Empirio-criticism", *Collected Works,* Vol. 14, Progress Publishers, Moscow, p. 325.

வேலை செய்தார். இப்பொழுது உற்பத்தி இணை யத்தில் விவசாயிகளின் வாழ்க்கையும் வேலையும் அவர்களுடைய கருத்துக்களிலும் உளவியலிலும் தீவிரமான மாற்றங்களை ஏற்படுத்துகின்றன; அவர்கள் கூட்டுவாதி களாக, சர்வதேசியவாதிகளாக மற்றும் சோஷலிஸ்டு களாக மாறுகிறார்கள்.

சமூக வாழ்நிலைக்கும் சமூக உணர்வுக்கும் இடையிலுள்ள உறவு ஒரு இயற்கை விதியைப் பிரதிநிதித்துவம் செய் கிறது.

சமூக வளர்ச்சி சில விதிகளுக்கு உட்பட்டு நடை பெறுகிறது என்பதை அங்கீகரித்தல் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் முக்கியமான அம்சமாகும். புறநிலையான விதிகள் இயற்கையில் மட்டுமே இயங்க முடியும் என்று மார்க்சுக்கு முன்பிருந்த தத்துவஞானிகள் கூறினார்கள். சமூகம் எந்த விதிக்கும் உட்பட்டதல்ல, அங்கே குழப்பமும் தன்விருப்பமும் ஆட்சி செய்கின்றன என்று அவர்கள் கருதினார்கள். எல்லாம் கடவுளின் அல்லது அரசர்கள், ஜெனரல்கள் போன்றவர்களின் சித்தத்தின்படி நடைபெறும் என்று அவர்கள் கூறினார் கள். மார்க்சும் எங்கெல்சும் சமூக வளர்ச்சி என்பது இயற்கையான வரலாற்று நிகழ்வுப் போக்கு, அதாவது சில புறநிலையான விதிகளுக்கு உட்பட்டு நடைபெறுகின்ற நிகழ்வுப் போக்கு என்று நிரூபித்தார்கள்.

சமூக வளர்ச்சி விதிகள் சமூக வாழ்க்கை நிகழ்வுகளுக்கு இடையில் இருக்கின்ற, அவசியமான, நிலையான மற்றும் திரும்பத் திரும்ப ஏற்படுகின்ற இணைப்பு களாகும். சமூக உணர்வு சமூக வாழ்நிலையைப் பொறுத்திருப்பது அத்தகைய விதிகளில் ஒன்றாகும். சமூக வாழ்க்கையில் பொருளாயத வசதிகளை உற்பத்தி செய்கின்ற முறையின் நிர்ணயகரமான பாத்திரத்தைப்

பற்றிய விதி, உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி நிலைக்கும் குணாம்சத்துக்கும் உற்பத்தி உறவுகள் பொருந்தியிருப் பதைப் பற்றிய விதி, முரணியல் சமூக அமைப்புக்களில் சமூக வளர்ச்சியின் இயக்கு சக்தி வர்க்கப் போராட்டம் என்னும் விதி ஆகிய இதர சமூக விதிகளும் இருக் கின்றன.

சமூக வளர்ச்சியின் விதிகள் மக்களின் சித்தங்களுக்கும் விருப்பங்களுக்கும் சுதந்திரமான முறையில், மக்களுக்கு அவற்றைப் பற்றித் தெரியுமா, இல்லையா என்பதைப் பற்றி சம்பந்தமில்லாத முறையில் செயல்படுகின்றன என்ற உண்மையில் சமூக வளர்ச்சி விதிகளின் புற நிலைத்தன்மை அடங்கியிருக்கிறது.

எனினும் வரலாற்று விதிகள் இயற்கை விதிகளிலிருந்து வேறுபடுகின்றன; எல்லாவற்றுக்கும் மேலாக அவை செயல்படுகின்ற முறையில் வேறுபடுகின்றன. இயற்கை விதிகள் குருட்டுத்தனமான, தானாகத் தோன்றும் சக்திகளின் நடவடிக்கையில் வெளிப்படுகின்றன. ஆனால் வரலாற்றில் சித்தமும் உணர்வும் கொண்டுள்ள, உணர்வு பூர்வமாக உருவாக்கப்பட்ட சில நோக்கங்களைத் தமக்கு முன்னே வைத்துள்ள மனிதர்களைப் பற்றி நாம் பேசுகிறோம். எனவே வரலாற்று விதிகள் மனித நடவடிக்கையின் விதிகளாகும். மக்கள் தம் சொந்த வரலாற்றைப் படைக்கிறார்கள்; ஆனால் அவர்கள் மனம் போனபடி அல்லது சொந்த விருப்பத்துக்கேற்றபடி அல்ல. அவர்களுடைய நடவடிக்கைகள் பிரத்யேக நிலைமைகளினாலும் வாய்ப்புக்களினாலும் வரையறுக் கப்படுகின்றன. ஒவ்வொரு புதிய தலைமுறையும் அடைந்திருக்கின்ற உற்பத்தி மட்டத்தையும் அன்றைக் கிருக்கின்ற சமூக உறவுகளையும் மரபுரிமையாக அடைகின்றது. மக்கள் தங்களிடமிருக்கும் சாதனங்

களைப் பயன்படுத்தி புறநிலையான சமூக வளர்ச்சி நிகழ்வுப் போக்கு முன்வைத்திருக்கும் கடமைகளை நிறைவேற்ற வேண்டும். உதாரணமாக, ஒரு நாட்டு மக்கள் காலனியாதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றுப் புதிய வாழ்க்கையை நிர்மாணிப்பதற்குத் தொடங்கியிருக் கிறார்கள். எனினும் அவர்கள் சென்ற காலத்திலிருந்து பெறப்பட்ட உற்பத்தி மட்டத்தை (அது பெரும்பாலும் மிகக் குறைவாக இருக்கும்) புறக்கணிக்க முடியாது. இப்படி அவர்களுக்குச் சம்பந்தமில்லாத பல கூறுகளும் பிரத்யேக நிலைமைகளும் இருக்கின்றன. மக்களின் அரசியல் உணர்வு, உறுதி, புரட்சிகர உத்வேகம் ஆகியவை வரலாற்று நிகழ்வுப் போக்கில் மாபெரும் பாத்திரத்தை வகிக்க முடியும். எனினும் இறுதி நிலையில் சமூக வாழ்க்கையின் பொருளாயத நிலைமைகளே சமூக வளர்ச்சி நிகழ்வுப் போக்கில் தீர்மானகரமாக இருக்கின்றன.

### சமூக வாழ்க்கையின் பொருளாயத அடிப்படை என்ற முறையில் உற்பத்தி முறை

வரலாற்றுப் பொருள்முதல்வாதக் கருத்தை வகுத்தளிப்பது சமூகத்தின் வாழ்க்கையில் பொருளாயத உற்பத்தியின் பாத்திரத்தை விரித்துக் கூறுவதை அவசியமாக முன்னூ கித்தது.

அரசியல், தத்துவஞானம், கலை இதரவற்றில் மக்கள் ஈடுபடுவதற்கு முன்னர் அவர்கள் உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றைப் பெற்றிருக்க வேண்டும், அதாவது அவர்களுடைய ஜீவாதாரத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும் என்ற எளிமையான,

தெளிவான உண்மையிலிருந்து மார்க்சும் எங்கெல்சும் சமூகத்தைப் பற்றிய தங்களுடைய தத்துவத்தை வளர்த்துக் கூறினார்கள். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்றால் அதற்கென பொருளாயத நலன்கள் உற்பத்தி செய்யப்பட வேண்டும். ஆகவே பொருளாயத நலன்களை உற்பத்தி செய்வதும் அவற்றைத் தொடர்ச்சியாக மறு உற்பத்தி செய்வதும் சமூகத்தின் வாழ்க்கைக்கும் வளர்ச்சிக்கும் மிகவும் அவசியமான நிபந்தனையாகும்.

பொருளாயத நலன்களை உற்பத்தி செய்யும் போது மக்கள் கலப்பை, கோடரி, கடைசல் கருவி, இயந்திரங்கள் முதலிய பல்வேறு உழைப்புச் சாதனங்களையும் தண்ணீர், காற்று, நீராவி, மின்சாரம், அணு ஆகிய பல்வேறு சக்தி ஆதாரங்களையும் மரம், கல், உலோகம், பிளாஸ்டிக் மற்றும் இதர பொருள்களையும் உபயோகிக்கிறார்கள். மக்கள் பொருளாயத நலன்களை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுகின்ற அனைத்தும் — அவை உழைப்புக் கருவிகளாக (இயந்திரங்கள், பொறிகள், கருவிகள்), துணைச் சாதனங்களாக (தொழில் நடைபெறுமிடம், சாலைகள், கால்வாய்கள், சக்தி, எரிபொருள், இரசாயனப் பொருள்கள்) அல்லது உழைப்பின் ஆதாரப் பொருள்களாக (தாதுப் பொருள்கள், மரம், பிளாஸ்டிக்) எவ்விதத்திலிருந்தாலும் — உற்பத்திச் சாதனங்களாகும்.

இயந்திரமோ பொருளோ சக்தியோ தானாகவே எதையும் உற்பத்தி செய்ய முடியாது. அவை மனிதனுடைய உழைப்பு நடவடிக்கையில் உபயோகிக்கப்படுகின்றன. உழைப்புச் சாதனங்களும் அவற்றைத் தம்முடைய திறமை, அனுபவம், அறிவு ஆகியவற்றின் மூலம் இயக்குகின்ற மக்களும் சமூகத்தின் உழைப்புச் சக்திகள் என்று அழைக்கப்படுகின்றனர். உழைக்கும் மக்களே

சமூகத்தின் முதன்மையான உற்பத்தி சக்தி என்று லெனின் கூறினார்.*

உற்பத்திச் செயல்முறையில் மக்கள் குறிப்பிட்ட உறவுகளில், அதாவது உற்பத்தி உறவுகளில் அவசியமாக ஈடுபடுகிறார்கள். உற்பத்திச் சக்திகள் இயற்கையின் பாலான மனித உறவுகளைப் பிரதிபலிக்கின்றன, எந்த சாதனங்களின் உதவியால் மக்கள் உற்பத்தி செய்கின்றனர் என்று காட்டுகின்றன. உற்பத்தி, விநியோகம், பரிவர்த்தனை மற்றும் நுகர்வு நிகழ்வுப் போக்கில் மக்களுக்கு இடையில் ஏற்படுகின்ற உறவுகள் உற்பத்தி உறவுகள் எனப்படும். உற்பத்தி உறவுகளின் முக்கியமான கூறு உற்பத்திச் சாதனங்களின் உடைமையாகும். அது தனியுடைமை, பொது உடைமை என்று இரண்டு பிரதான ரகங்களாகப் பிரிக்கப்படுகிறது. முதலாளித்துவத்தின் கீழ் தொழிற்சாலைகள், போக்குவரத்து இதரவை முதலாளிகளின் தனியுடைமையாக இருப்பது அதன் முக்கிய அம்சமாகும். உற்பத்திச் சாதனங்கள் பொது உடைமையாக இருப்பது சோஷலிசத்தின் குறியடையாளமாகும்.

உற்பத்திச் சக்திகளும் உற்பத்தி உறவுகளும் சேர்ந்து பொருளாயத நலன்களின் உற்பத்தி முறையில் அடங்கும். உற்பத்தி முறையின் காரணமாகத்தான் பல்வேறு வரலாற்றுச் சகாப்தங்கள் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன. பொருளாயத நலன்களை உற்பத்தி செய்கின்ற ஐந்து முறைகள் அடுத்தடுத்து ஏற்பட்டிருக்கின்றன. பூர்விக கூட்டு வாழ்க்கை, அடிமை உடைமை, நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம் மற்றும் கம்யூனிசம் மேற்கூறிய ஐந்து முறைகளாகும் (கம்யூனிசத்தில்

---

* V. I. Lenin, *Collected Works,* Vol. 29, p. 364.

சோஷலிசம், மெய்யான கம்யூனிசம் என்று இரண்டு கட்டங்கள் இருக்கின்றன).

சமூக வாழ்க்கையில் பொருளாயத நலன்களை உற்பத்தி செய்கின்ற முறையின் தீர்மானகரமான பாத்திரத்தைப் பற்றிய விதியை மார்க்சும் எங்கெல்சும் கண்டுபிடித்தார்கள். ஒவ்வொரு உற்பத்தி முறையிலும் முற்றிலும் திட்டவட்டமான சமூக நிகழ்வுகள் இருக்கின் றன என்பதை அவர்கள் நிரூபித்தார்கள். அன்றைக் கிருக்கின்ற உற்பத்தி முறையுடன் பொருந்திய வகையில் குறிப்பிட்ட சமூகக் கட்டமைப்புகள் உருவாக்கப் படுகின்றன. பொருளாயத நலன்களை உற்பத்தி செய் கின்ற முறை மக்களின் வாழ்க்கை முறையை அமைக் கிறது. சமூக உணர்வு, அதாவது சமூகத்தில் சில கருத்துக்களின் மேலதிகாரம் கூட நடைமுறையில் உற்பத்தி முறையினால் நிர்ணயிக்கப்படுகிறது. ஆகவே சுரண்டும் வர்க்கத்துக்கு உரித்தான பிறர் உழைப்பைச் சுரண்டுகின்ற வாழ்க்கை பூர்விக கூட்டு உற்பத்தி முறையில் ஏற்பட முடியாது. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி மிகவும் கீழ்நிலையில் இருந்தபடியால் ஒவ்வொரு வரும் உயிரோடிருப்பதற்குக் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது. மற்றொரு உதாரணம்: முதலாளித்துவ அல்லது நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையின் கீழ் வர்க்க வேறுபாடுகளை அகற்றுவது என்பது முடியாது. இது கம்யூனிஸ்ட் சமூகத்தில் மட்டுமே ஏற்பட முடியும். ஏனென்றால் அதற்கு முன்பாக உற்பத்திச் சாதனங்களின் பொது உடைமை ஏற்பட்டிருக்க வேண்டும்.

பொருளாயத நலன்களை உற்பத்தி செய்கின்ற முறை வரலாற்று வளர்ச்சியின் போக்கையும் திசை யையும் நிர்ணயிக்கிறது. உற்பத்தி முறை மாறுகின்ற பொழுது சமூகம் முழுவதுமே மாற்றமடைகின்றது.

ஆகவே சமூகப் பரிணாமத்தின் வரலாறு என்பது எல்லாவற்றுக்கும் மேலாக அடுத்தடுத்து வருகின்ற உற்பத்தி முறைகளின் வரலாறு ஆகும்.

உற்பத்தி எப்படி வளர்ச்சியடைகிறது, பொருளாயத நலன்களின் உற்பத்தி முறை ஒன்றையொன்று அகற்றி சமூகத்தில் தீவிரமான மாற்றங்களை ஏற்படுத்துவது எப்படி?

உற்பத்தி முறை மாற்றங்கள் மற்றும் வளர்ச்சியின் மூலவேர்களை உற்பத்திக்குள் தேட வேண்டும், அதற்கு வெளியே தேடக் கூடாது.

உற்பத்தி முறையின் இரண்டு பக்கங்களான உற்பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளுக்கு இடையில் ஒரு வகையான தர்க்கரீதியான சார்புநிலை இருக்கிறது; அதில் உற்பத்திச் சக்திகள் தலைமையான பாத்திரத்தை வகிக்கின்றன. உற்பத்தி உறவுகள் தற்செயலாகவோ அல்லது திடீர் எண்ணத்திலோ தோன்றிவிடுவதில்லை; அவை உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியின் தன்மை மற்றும் வளர்ச்சி மட்டத்தைப் பொறுத்திருக்கின்றன. பூர்விக கூட்டு வாழ்க்கை அமைப்பின் கீழ் உழைப்புக் கருவிகளின் புராதனத் தன்மையும் உற்பத்திச் சக்திகளின் கீழ்நிலையும் மக்கள் விலங்குகளை வேட்டையாடுவதிலும் விவசாயத்துக்கு நிலங்களைத் தயாரிப்பதிலும் இதரவற்றிலும் தங்களது முயற்சிகளை ஒன்று சேர்க்கும்படி செய்தன. அந்த ஒற்றுமையான முயற்சி இல்லையென்றால் அக்காலத்தில் மக்கள் உயிர் வாழ்ந்திருக்க முடியாது.

ஒரு உற்பத்தி முறையின் சுற்றுவட்டத்துக்குள் உற்பத்திச் சக்திகள் மற்றும் உறவுகளின் ஒற்றுமை அவற்றுக்கு இடையில் முரண்பாடுகள் ஏற்படுவதைத் தவிர்க்கவில்லை. உற்பத்திச் சக்திகளும் உற்பத்தி உறவு

களும் வெவ்வேறு வழிகளில் மாற்றமடைவதால் இவை ஏற்படுகின்றன.

உற்பத்தி நிலையானதல்ல, அது தொடர்ச்சியாக வளர்ச்சியும் முன்னேற்றமும் அடைகிறது. அதில் உற்பத்திச் சக்திகள் அதிகச் சுறுசுறுப்பான கூறாக இருக்கின்றன. மக்கள் உற்பத்தியை அதிகப்படுத்தவும் தங்கள் வேலையைச் சுலபமாக்கவும் விரும்பி உழைப்புக் கருவிகளை அபிவிருத்தி செய்கிறார்கள், அனுபவத்தையும் திறமைகளையும் சேகரிக்கிறார்கள். இந்த மாற்றங்கள்—ஒரு உற்பத்தி முறைக்குள் கூட—மிகவும் கணிசமாக இருக்க முடியும்.

உற்பத்தி உறவுகள் இதைக் காட்டிலும் நிலையானவை. அவை சில மாற்றங்களை அடைந்தாலும் ஒரு குறிப்பிட்ட உற்பத்தி முறைக்குள் சாராம்சத்தில் ஒரே மாதிரியாக இருக்கின்றன. உதாரணமாக, முதலாளித்துவ உற்பத்தி முறையின் கீழ் உற்பத்திச் சக்திகள் கணிசமான மாற்றமும் வளர்ச்சியும் அடைந்திருக்கின்றன, ஆனால் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளின் சாராம்சம் மாறாமலிருக்கிறது. அவை முன்போலவே தனியுடைமையையும் சுரண்டலையும் அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. முதலாளி வர்க்கம் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளைப் பாதுகாப்பதற்குத் தன்னாலியன்ற எல்லாவற்றையும் செய்கிறது.

புதிய உற்பத்திச் சக்திகளுக்கும் பழைய உற்பத்தி உறவுகளுக்கும் இடையில் முரண்பாடுகள் தோன்றுகின்றன. அவை கூர்மையடைந்து மோதலை ஏற்படுத்துகின்றன. அதன் விளைவாக சமூக வாழ்க்கையின் பல்வேறு துறைகளில், எல்லாவற்றுக்கும் மேலாக வர்க்கங்களுக்கு இடையிலுள்ள உறவுகளில் முரண்பாடுகள் தீவிரமடைகின்றன. பழைய உற்பத்தி உறவுகளை

அகற்றிப் புதிய உற்பத்தி உறவுகளை ஏற்படுத்துவது சமூக வளர்ச்சியின் முக்கியமான தேவையாகிறது. இம்மோதல் சாத்தியமான ஒரே வழியில் — விரைவாகவோ அல்லது தாமதமாகவோ — தீர்க்கப்படுகிறது: சமூகப் புரட்சி நிகழ்வுப் போக்கில் பழைய உற்பத்தி உறவுகள் அகற்றப்பட்டுப் புதிய உற்பத்தி உறவுகள் நிறுவப்படுகின்றன.

தற்காலத்தில் முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் (உற்பத்திச் சாதனங்களின் தனியுடைமை மற்றும் தனிப்பட்ட முதலாளித்துவ சுவீகரிப்பு) உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியுடன் முரண்படுகின்றன, அவற்றின் வளர்ச்சியைத் தடுக்கத் தொடங்கிவிட்டன. முதலாளித்துவ நாடுகளில் லட்சக்கணக்கான மக்கள் வேலையில்லாமலிருப்பது சமூகத்தின் முக்கிய உற்பத்திச் சக்தி — உழைக்கும் மக்கள் — பயன்படுத்தப்படவில்லை என்பதை நிரூபிக்கிறது; மேலும் அது பெரும்பாலும் அழிக்கப்பட்டு, மதிப்புக் குறைக்கப்படுகிறது. இந்த நிலை ஏற்படுவதற்கு முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் — பிரதானமாக, உற்பத்திச் சாதனங்களின் தனியுடைமை — காரணமாகும்.

முதலாளித்துவத்தின் கீழ் உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலுள்ள முரண்பாட்டை விஞ்ஞான, தொழில்நுட்ப புரட்சி மேலும் தீவிரப்படுத்துகிறது.

நம் காலத்திய விஞ்ஞான, தொழில்நுட்ப புரட்சி 20ம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் தொடங்கியது. விஞ்ஞானத்தில் ஏற்பட்ட புரட்சி, தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட புரட்சி, விஞ்ஞானம் சமூகத்தில் நேரடியான உற்பத்திச் சக்தியாக வளர்ச்சியடைந்தது ஆகிய அனைத்தும் சேர்ந்து சமூகத்தின் உற்பத்திச் சக்திகளில் மற்றும் மனிதகுலத்தின் மொத்த நாகரிகத்தில் தீவிரமான,

குணரீதியான மாற்றத்தை உண்டாக்கின.

தானியங்கிமயமாக்கல், மின் கணக்கிடும் பொறிகளையும் அவற்றின் செய்முறைகளையும் மனிதனுடைய நடைமுறை மற்றும் அறிவு நடவடிக்கையில் உபயோகித்தல், சக்தித் தொழில்துறையில் தீவிரமான மாற்றங்கள் — அணு சக்தி மற்றும் இதர வாய்ப்பு வளத்தைக் கொண்ட சக்தியின் ரகங்களை உபயோகித்தல், தேவையான குணாம்சங்களைக் கொண்ட செயற்கைக் கருப்பொருள்களைத் தயாரித்தல், விண்வெளியைத் தீவிரமாக ஆராய்தல் மற்றும் இதர நிகழ்வுப் போக்குகள் விஞ்ஞான, தொழில்நுட்ப புரட்சியின் குணாம்சங்களாக இருக்கின்றன.

முதலாளித்துவ சமூகத்தில் விஞ்ஞான, தொழில் நுட்ப புரட்சி முதலாளித்துவத்தின் உள்ளுறையான முரண்பாடுகளைத் தீவிரப்படுத்தி புதிய முரண்பாடுகளைத் தோற்றுவிக்கிறது; முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் இனி நீடிக்க முடியாது என்பதை மேன்மேலும் தெளிவாக அம்பலப்படுத்துகிறது. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்தல், சுற்றுப் புறம் படிப்படியாக அழிக்கப்படுதல், இராணுவமயமாக்கலின் விளைவாக உற்பத்திச் சக்திகளின் ஒருதலையான வளர்ச்சி ஆகியவை விஞ்ஞான, தொழில்நுட்ப புரட்சி தோற்றுவிக்கின்ற எதிர்மறையான விளைவுகளில் சில. உற்பத்திச் சாதனங்களின் தனியுடைமை மற்றும் முதலாளித்துவ ஏகபோகங்களின் லாப வேட்டை இந்த நிலையை ஏற்படுத்துகின்றன.

ஆயுதப் போட்டியில், உலகில் பதட்ட நிலையை அதிகப்படுத்துவதில் அக்கறை கொண்டிருக்கின்ற இராணுவ ஏகபோகங்கள் மனிதகுலத்தை தெர்மோ அணு யுத்தம் என்னும் பேராபத்தின் விளிம்புக்குக் கொண்டுவந்துள்ளன. அவை உற்பத்திச் சக்திகளை அழித்து பூமியில் எல்லா

உயிர்களையும் பூண்டோடு அழிக்கப் போவதாக பயமுறுத்துகின்றன.

முதலாளித்துவ உற்பத்தி உறவுகளை அகற்றி உற்பத்திச் சாதனங்களின் பொது உடைமையை நிறுவுவது சமூக வளர்ச்சிக்கு இன்றியமையாததாகி இருக்கிறது. சோஷலிசம் என்பது வெறும் ஆசை அல்ல, ஒரு குழுவைச் சேர்ந்தவர்களுடைய இலட்சியம் மட்டுமல்ல. இன்று சோஷலிசம் மொத்த சமூக வளர்ச்சியின் அவசரமான தேவையாகும்.

# அத்தியாயம் இரண்டு

# சமூகமும் சமூக-பொருளாதார அமைப்புக்களும்

**சமூகம் என்றால் என்ன?**

பொருள்முதல்வாத இயக்கவியல்வாதிகள் என்ற முறையில் மார்க்சும் எங்கெல்சும், மனிதகுல வரலாறு முழுவதிலும் சமூகம் குணரீதியில் எத்தகைய மாற்றமும் அடையாததைப் போல இருப்பதாகக் கூறிய முந்தைய சூக்குமமான கருத்துக்களைக் குறை கூறினார்கள். அவர்கள் சமூகத்தை ஆராய்வதற்குக் குறிப்பிட்ட வரலாற்று அணுகுமுறையை, அதாவது அதன் வளர்ச்சியில் அடுத்தடுத்துத் தொடர்ந்த குண ரீதியில் தனித்த கட்டங்களைப் பிரித்துக் காட்டுகின்ற முறையை வலியுறுத்தினார்கள். எனினும் மார்க்சியம் சமூகம் என்னும் கருத்தை நிராகரிக்கிறது என்பது இதன் அர்த்தம் அல்ல.

மனித சமூகம் பொருளாயத உலகத்தின் பரிணாமத்தில் ஆக உயர்ந்த கட்டம், பருப்பொருளின் இயக்கத்தில் ஆக உயர்ந்த வடிவமாகும். பி. எங்கெல்ஸ் பருப்பொருளின்

இயக்கத்தின் வடிவங்களைப் பின்வருமாறு பிரித்தார்: 1) இயக்கியல்; 2) பௌதிகவியல்; 3) இரசாயனவியல்; 4) உயிரியல்; 5) சமூகவியல். ஆகவே சமூகத்தின் வாழ்க்கை, பருப்பொருளின் இயக்கத்தின் ஆக உயர்ந்த, சமூக வடிவமாகும்; முந்திய எல்லா வடிவங்களின் அடிப்படையில் அது உருவெடுக்கிறது.

சமூகம் என்பது இயற்கையிலிருந்து பிரிந்து சென்ற பொருளாயத உலகத்தின் ஒரு பகுதி; அது வரலாற்று ரீதியில் வளர்ச்சியடைகின்ற மனித வாழ்க்கையின் வடிவம்.

சமூகம் என்பது ஒரு அமைப்பு, அதன் முக்கியமான கூறுகள் மக்களே. மனிதன் வரலாற்று நிகழ்வுப் போக்கின் அகப்பொருள். மனிதன் இல்லாமல் சமூகம் இருக்க முடியாது. சமூகத்தின் தோற்றம் என்பது எல்லாவற்றுக்கும் மேலாக மனிதனுடைய தோற்றமே. ஆனால் சமூகம் என்பதை வெறும் மக்கள் கூட்டம் என்று புரிந்து கொள்ளக் கூடாது. மனிதனுடைய நடவடிக்கையில் உருப்பெறுகின்ற பொருளாயத உற்பத்தி, வர்க்கப் போராட்டம் போன்ற சமூக வாழ்க்கையின் பல்வேறு நிகழ்வுப் போக்குகளும் சமூகத்தின் பிரிக்க முடியாத பகுதியாக இருக்கின்றன.

மக்கள் தம்முடைய நடவடிக்கைகளின் போது பல்வேறு சமூக உறவுகளில் (பொருளாயத மற்றும் சித்தாந்த உறவுகள்) ஈடுபடுகிறார்கள். இவையும் சமூகத்தின் முக்கியமான பகுதியாக இருக்கின்றன.

இறுதியாக, மனிதன் தன்னுடைய வரலாறு நெடுகிலும் படைத்திருக்கின்ற தொழில்நுட்பம், கலை போன்ற பொருளாயத மற்றும் கலாசார மதிப்புகளும் சமூக வாழ்க்கையின் முக்கியமான பகுதியாக இருக்கின்றன.

ஒரு அமைப்பு என்னும் முறையில் சமூகத்தைப் பகுப்பாய்வு செய்கின்ற பொழுது அதை சார்புநிலையில் சுதந்திரமான கட்டமைப்பு உருவாக்கங்களாகப் பிரிக்க முடியும்: 1) பொருளாதார, 2) சமூக, 3) அரசியல் மற்றும் 4) ஆன்மீகத் துறை. பொருளாதாரத் துறை (பொருளாயத உற்பத்தி, பொருளாதார உறவுகளின் அமைப்பு இதரவை) ஏற்கெனவே முந்திய அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. சமூக, அரசியல் மற்றும் ஆன்மீகத் துறைகளை இனிவரும் அத்தியாயங்களில் விளக்குவோம்.

## சமூக-பொருளாதார அமைப்பு.
## சமூகத்தின் அடித்தளமும் மேற்கட்டுமானமும்

மார்க்ஸ் சமூகத்தைப் பற்றிய ஆராய்ச்சியை ஒரு பொருள்முதல்வாதி மற்றும் இயக்கவியல்வாதி என்ற முறையில் அணுகினார். சமூக வாழ்க்கையின் எல்லா நிகழ்வுகளும் பிரிக்க முடியாத அமைப்பாக இணைந்திருக்கின்றன, சமூகம் வளர்ச்சி அடைகிறது, குண ரீதியான மாற்றங்களுக்கு உள்ளாகிறது என்று அவர் கண்டார். சமூக வளர்ச்சியில் முக்கியமான வரலாற்றுக் கட்டங்களை மார்க்ஸ் பிரித்துக் காட்டினார்; குணரீதியில் நிர்ணயிக்கப்பட்ட பொருளாதார, சமூக, அரசியல் மற்றும் சித்தாந்த உறவுகளின் அமைப்பு, ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டத்தின் குறியடையாளமான திட்டவட்டமான விதிகள் இவற்றின் குணாம்சமாகும். மார்க்ஸ் இவற்றை சமூக-பொருளாதார அமைப்புகள் என்று கூறினார். இக்கருத்தையும் சமூகவியலில் அவர்தான் புகுத்தினார். "சமூகம்" என்னும் வகையினம் இயற்கையுடன் ஒப்பிடுகின்ற பொழுது சமூக வாழ்க்கையின்

பிரத்யேகமான தன்மையைக் குறிப்பிடுகிறதென்றால் ''சமூக-பொருளாதார அமைப்பு'' என்ற வகையினம் சமூக வளர்ச்சியின் வெவ்வேறு கட்டங்களின் விசேஷ அம்சங்களை எடுத்துரைக்கிறது. சமூக-பொருளாதார அமைப்பு என்பது ''வரலாற்று வளர்ச்சியின் திட்டவட்டமான கட்டத்திலுள்ள சமூகம், அது பிரத்யேகமான, தனித்தன்மை உள்ள சமூகம்'' * என்று மார்க்ஸ் வரையறுத்துக் கூறினார்.

மார்க்ஸ் சமூக-பொருளாதார அமைப்புக்களைப் பற்றித் தன்னுடைய தத்துவத்தைக் கூலியுழைப்பும் மூலதனமும், அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை, மூலதனம், இதர நூல்களில் விரித்துரைத்தார். மார்க்ஸ் மூலதனம் நூலில் ''மொத்த முதலாளித்துவ சமூக அமைப்பையும் — அதன் அன்றாட அம்சங்கள், உற்பத்தி உறவுகளில் உள்ளுறையான வர்க்க முரணியல்பு சமூக ரீதியில் வெளிப்படுதல், முதலாளி வர்க்கத்தின் ஆட்சியைப் பாதுகாக்கின்ற பூர்ஷ்வா அரசியல் மேற்கட்டுமானம், சுதந்திரம், சமத்துவம் மற்றும் இதர பூர்ஷ்வா கருத்துக்கள், பூர்ஷ்வா குடும்ப உறவுகள் உள்ளிட்ட எல்லாவற்றையும் — வாழ்கின்ற பொருளாக வாசகருக்குக் காட்டினார்'' ** என்று லெனின் எழுதினார்.

ஒவ்வொரு சமூக-பொருளாதார அமைப்பிலும் முக்கியமான அமைப்புக் கூறுகள் — எல்லாவற்றுக்கும் மேலாக, சமூகத்தின் அடித்தளமும் மேற்கட்டுமானமும் — இருக்கின்றன.

---

* கார்ல் மார்க்ஸ், கூலியுழைப்பும் மூலதனமும், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, *1974*, பக்கம் *42*ஐ பார்க்க.

** V. I. Lenin, "What the 'Friends of the People' Are and How They Fight the Social-Democrats", *Collected Works,* Vol. 1, pp. 141 — 142.

அடித்தளம் என்பது உற்பத்தி உறவுகளின் தொகுப்பாகும்.

மேற்கட்டுமானம் என்பது அரசியல், சட்டவியல், தத்துவஞானம், அறவியல், அழகியல் மற்றும் மதக் கருத்துக்கள், ஒத்த சித்தாந்த உறவுகள் மற்றும் அவற்றுடன் பொருந்திய நிறுவனங்களையும் கொண்ட அமைப்பாகும். அரசு, அரசியல் கட்சிகள், திருச்சபை இதரவை மேற்கட்டுமானத்தில் அடங்கியவை.

ஒவ்வொரு சமூகமும் அதன் பிரத்யேகமான அடித்தளத்தையும் அதற்குப் பொருத்தமான மேற்கட்டுமானத்தையும் கொண்டிருக்கிறது.

சமூகத்தின் அடித்தளத்திற்கும் மேற்கட்டுமானத்துக்கும் இடையிலுள்ள உறவுகள் சில விதிகளின்படி அமைந்திருக்கின்றன. அடித்தளம் மேற்கட்டுமானத்தின் தன்மையை நிர்ணயிக்கிறது. அடித்தளம் மாறுகின்ற பொழுது மேற்கட்டுமானமும் மாற்றமடைகிறது. எனினும் அடித்தளத்தைச் சார்ந்திருந்த போதிலும் மேற்கட்டுமானம் அடித்தளத்தின் மீது தாக்கம் செலுத்துகிறது. சமூகத்தின் வாழ்க்கையில் கருத்துக்கள், அரசு, அரசியல் கட்சிகள் மற்றும் இதர மேற்கட்டுமான நிகழ்வுகளின் பாத்திரம் மிகவும் அதிகமே. உதாரணமாக, பூர்ஷ்வா அரசு முதலாளி வர்க்கத்தின் உடைமைகளைப் பாதுகாப்பதிலும் இருக்கின்ற உறவுகளை ஆதரிப்பதிலும் முக்கியமான பாத்திரத்தை வகிக்கிறது. புரட்சிகரமான தத்துவங்களும் இத்தத்துவங்களினால் வழிகாட்டப்படுகின்ற அரசியல் கட்சிகளும் வரலாற்றின் முன்னேற்றத்தைத் துரிதப் படுத்துகின்றன.

மேற்கட்டுமானத்துடன் ஒப்பிடுகின்ற பொழுது அடித்தளம்தான் முதன்மையானது என்று உண்மையை அங்கீகரிப்பது சமூகத்தைப் பற்றிய தத்துவஞானத்தின்

அடிப்படையான பிரச்சினையைப் பொருள்முதல்வாத வழியில் தீர்ப்பதற்கு உதவுகிறது. உற்பத்தி முறை சமூக வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் அடிப் படையில் எப்படி நிர்ணயிக்கிறது என்பதை அது விளக்குகிறது; சமூகத்தில் பொருளாதார உறவுகளும் மற்றும் இதர எல்லா உறவுகளும் இணைந்திருக்கின்றன என்பதை அது எடுத்துக்காட்டுகிறது.

அடித்தளமும் மேற்கட்டுமானமும் சமூக அமைப்பின் முக்கியமான கட்டமைப்புக் கூறுகள். அவை ஒவ்வொரு அமைப்புக்கும் பிரத்யேகமானவையாக இருக்கின்றன; அவற்றினால்தான் சமூகப் பரிணாமக் கட்டங்கள் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன.

சமூக-பொருளாதார அமைப்பில் மேலே கூறப்பட்டவை தவிர இன்னும் பல நிகழ்வுகளும் இருக்கின்றன: உதார ணமாக, குறிப்பிட்ட வரலாற்று ரீதியான மக்கள் கூட்டுகள் (குடிமரபுக் குழு, குலம், மக்கள் இனம், தேசிய இனம்), வர்க்கங்கள் மற்றும் இதர சமூகக் குழுக்கள், குடும்பம், அன்றாட வாழ்க்கை இதரவை. இவற்றை அடித்தளத்தில் அல்லது மேற்கட்டுமானத்தில் சேர்ப்பது தவறு என்றாலும் அவை சமூக-பொருளாதார அமைப்பில் சேர்ந்தவையே; ஒரு அமைப்பிலிருந்து மற்றொரு அமைப்பில் அவை குணரீதியில் வேறுபடுகின்றன. உதாரணமாக, பூர்விக கூட்டு வாழ்க்கை அமைப் பில் மக்கள் குடிமரபுக் குழுக்களிலும் இனக் குழுக் களிலும் வாழ்ந்தார்கள். முதலாளித்துவத்துக்கு முந்திய வர்க்க அமைப்புக்களில் மக்கள் இனங்கள் இருந்தன. முதலாளித்துவத்தின் கீழ் அவற்றைக் கொண்டு தேசிய இனங்கள் அமைக்கப்படுகின்றன. வளர்ச்சியடைந்த சோஷலிஸ்ட் சமூகத்தில் (சோவியத் யூனியனில்) ஒரு புதிய வரலாற்றுச் சமூகம் — சோவியத் மக்கள் —

தோன்றியிருக்கிறது.

ஒரு சமூக-பொருளாதார அமைப்பு என்பது ஒரே சீராக இல்லாத சமூக நிகழ்வுகள் தற்செயலாக ஒன்று சேர்ந்திருப்பதன் யாந்திரிகமான மொத்தம் அல்ல. மார்க்சியம் சமூக-பொருளாதார அமைப்பைப் பிரிக்க முடியாத ஒன்றாகக் கருதுகிறது. அதில் எல்லா நிகழ்வு களும் அங்கக ரீதியில் இணைந்திருக்கின்றன; அவை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இடைச் செயல் புரிகின்றன. அவை எல்லாவற்றையும் ஒற்றை மொத்தமாகச் சேர்க்கின்ற முக்கியமான இணைப்புக் கூறு பொருளாயத நலன்களை உற்பத்தி செய்கின்ற முறையாகும்.

## சமுதாயத்தின் வரலாறு — சமூக-பொருளாதார அமைப்புகளின் தொடர்ச்சியான மாற்றம்

பூர்விக கூட்டு வாழ்க்கை, அடிமை உடைமை, நிலப் பிரபுத்துவம், முதலாளித்துவம் மற்றும் கம்யூனிசம் என்னும் ஐந்து சமூக-பொருளாதார அமைப்புகள் அடுத்தடுத்துத் தோன்றின.

**பூர்விக கூட்டு வாழ்க்கை உருவாக்கம்தான்** முதல் சமூக-பொருளாதார அமைப்பாகும். மனிதன் விலங் குலகத்திலிருந்து தன்னைப் பிரித்துக் கொண்டு சில பிரத்யேகமான மனிதக் கூறுகளைப் பெற்றதிலிருந்து மனிதகுல வரலாறு தொடங்குகிறது.

அச்சமயத்தில் மிகச் சாதாரணமான, முழுமையில் லாத கருவிகள் உபயோகிக்கப்பட்டன (உதாரணமாக, கம்பு, கற் கோடரி, வில் மற்றும் அம்புகள் இதரவை). மக்கள் நெருப்பைத் தயாரிக்கக் கற்றுக் கொண்டார்கள்;

அது மனிதகுலத்தின் பரிணாமத்தில் மாபெரும் முக்கியத்து வத்தைக் கொண்டிருந்தது. அக்காலத்தில் உபயோ கிக்கப்பட்ட ஒரே சக்தி மனிதனுடைய தசைச் சக்தி யாகும் (மிருகங்களைப் பழக்கி உபயோகித்தல் இதற்குப் பிறகு வந்தது). மனிதனுடைய உழைப்புத் திறமை, அனுபவம் மற்றும் உலகத்தைப் பற்றிய அறிவு மிகவும் பூர்விகமாக இருந்தன.

மக்களுக்கு இடையிலான உறவுகள் உற்பத்திச் சக்திகளின் மிகவும் கீழான நிலைக்குப் பொருத்தமாக இருந்தன. அவை உற்பத்திச் சாதனங்களின் கூட்டு உடைமையையும் அதிலிருந்து வளர்ச்சியடைந்த ஒத் துழைப்பு மற்றும் பரஸ்பர உதவி உறவுகளையும் அடிப்படையாகக் கொண்டிருந்தன. உற்பத்திச் சக்தி களின் வளர்ச்சி கீழ்நிலையில் இருந்தபடியால் மக்கள் இயற்கைச் சக்திகளைக் கூட்டு முயற்சியின் மூலமாகவே எதிர்த்து நிற்க முடிந்தது. தங்களுக்குக் கிடைத்த எல்லாவற்றையும் அவர்கள் சமமாகப் பகிர்ந்து கொண்டார் கள். அவர்கள் உயிரோடிருப்பதற்கு மட்டும் போதுமான பொருள்களே அவர்களுக்குக் கிடைத்தன. அவர்களிடம் உபரி பொருள்கள் இல்லை; எனவே அவற்றைச் சிலர் பலரிடமிருந்து எடுத்துக் கொள்கின்ற நிலை இல்லை. ஆகவே பூர்விக சமூகத்தில் சுரண்டல் அல்லது பொரு ளாதார ஏற்றத்தாழ்வு இல்லை.

மக்கள் இரத்த உறவு முறையை அடிப்படையாகக் கொண்டிருந்த குலங்களில் வசித்தார்கள். பழக்க வழக்கங்களும் மரபுகளும் அவர்களை ஆட்சி செய்தன. அவர்களிடம் வெகுளித்தனமான மத நம்பிக்கைகள் குடிகொண்டிருந்தன.

பூர்விக கூட்டு வாழ்க்கை அமைப்பு மிகவும் மெதுவாக மாற்றமடைந்து வளர்ச்சியடைந்தது. அது பல்லாயிரக்

கணக்கான வருடங்கள் இருந்த பிறகு சமூகத்தில் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியின் காரணமாகத் தகர்ந்தது. மக்கள் கல், மரக்கட்டைக் கருவிகளைக் கைவிட்டு உலோகக் கருவிகளுக்கு முன்னேறினார்கள். அவர்கள் உழைப்பு அனுபவத்தைச் சேகரித்தார்கள். உழைப்புப் பிரிவினை நடைபெற்றது. முதலில் பயிர்த் தொழிலிலிருந்து கால்நடை வளர்ப்பு தனியாகப் பிரிந்தது, பிறகு கைத்தொழில் சுயேச்சையான உற்பத்தித் துறையாக (உழைப்புக் கருவிகள், ஆயுதங்கள், உடைகள், காலணிகள் மற்றும் இதரவற்றைத் தயாரித்தல்) வளர்ச்சி யடைந்தது. உழைப்பின் உற்பத்திப் பொருள்களின் பரிவர்த்தனை வளர்ச்சியடைந்தது. இனிமேல் கூட்டுப் பொருளாதாரம் அவசியமாக இருக்கவில்லை; எனவே குடிமரபுக் குழுக்கள் குடும்பங்களாகப் பிரிந்தன. ஒவ்வொரு குடும்பமும் ஒரு சுதந்திரமான பொருளாதார அலகு ஆயிற்று. உபரி உற்பத்திப் பொருள் தோன் றியது; ஒரு உழைப்பாளியால் தான் உயிரோடிருப் பதற்கு அவசியமானதைக் காட்டிலும் அதிகமாக இப்பொழுது உற்பத்தி செய்ய முடிந்தது. இது சுரண் டலுக்கான சாத்தியத்தைப் படைத்தது. பொருளாதார ஏற்றத்தாழ்வு தோன்றியது. சிலர் வறுமையில் சிக்கி, பொருளாதார ரீதியில் தங்களுடைய உறவினர்கள் அல்லது குலச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களின் ஆதரவை எதிர்பார்த்து வாழ்ந்தார்கள். இவர்கள் அடிமைகளாக மாற்றப்பட்டார்கள். யுத்தங்களில் கைதி களாகப் பிடிக்கப்பட்டவர்களும் அடிமைகளாக ஆக்கப் பட்டார்கள்; எனவே அடிமைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு இதுவும் ஒரு வழியாயிற்று. குடிமரபு மற்றும் குலச் சமுதாயத் தலைவர்கள் — இராணுவத் தலைவர்கள், சமுதாயப் பெரியவர்கள்,

புரோகிதர்கள் இதரர்கள்—முதல் அடிமை உடைமை யாளர்கள் ஆனார்கள்.

**அடிமை உடைமை அமைப்பு.** அடிமையுடைமை யாளர்கள் உற்பத்திச் சாதனங்களை மட்டுமின்றி உழைப்பாளியை, அதாவது அடிமையைத் தனியுடைமை யாகக் கொண்டிருந்ததை அடிப்படையாகக் கொண்டு இந்த அமைப்பில் உற்பத்தி உறவுகள் இருந்தன. உற்பத்தி உறவுகளின் இத்தகைய தன்மை உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி நிலையினால் நிர்ணயிக்கப்பட்டிருந் தது. உற்பத்திச் சக்திகள் உபரிப் பொருள் மற்றும் சுரண்டல் தோன்றுகின்ற அளவுக்கு உயர்வான வளர்ச்சி நிலையைக் கொண்டிருந்தன; எனினும் அது இன்னும் குறைவாகவே இருந்தபடியால் உழைப்பாளர்களின் நுகர்வை ஆகக் குறைந்த பட்சமாக்குவதன் மூலமாகவே அவர்களைச் சுரண்டுவது சாத்தியமாயிற்று.

பூர்விக சமூகத்தின் குறியடையாளமான ஒத்து ழைப்பு மற்றும் பரஸ்பர உதவி உறவுகளுக்குப் பதிலாக சுரண்டல் உறவுகள், அதாவது சமூகத்தின் ஒரு பகுதி மற்றொரு பகுதியின் மீது ஆதிக்கம் செலுத்துவது அடிமை உடைமை அமைப்பில் வேரூன்றியது.

முந்திய உற்பத்தி உறவுகள் அகற்றப்பட்டது சமூக வாழ்க்கையின் இதர எல்லாத் துறைகளிலும் புரட்சியை ஏற்படுத்தியது. முரணியல்பான வர்க்கங்கள்—அடிமைகளும் அடிமை உடைமையாளர்களும்—தோன்றின (பூர்விக கூட்டு வாழ்க்கைச் சமூகத்தில் வர்க்கங்கள் இல்லை).

சுரண்டப்படுகின்ற பெருந்திரளான மக்களை (பெரும் பான்மையானவர்களை) கீழ்ப்படுத்திவைத்திருப்பதற்கும் தனியுடைமையையும் சுரண்டலையும் பாதுகாப்பதற்கும் அரசும் சட்டமும், ஒடுக்குமுறை உறுப்புக்களும் (இரா ணுவம், நீதிமன்றங்கள், நிர்வாக இயந்திரம் இதரவை)

நிறுவப்பட்டன.

சமூக உணர்விலும் கணிசமான மாற்றங்கள் ஏற்பட்டன. சுரண்டல்காரர்கள் உடலுழைப்பை இழிவானதாக, கீழ் நிலையிலுள்ள மக்களுக்கு மட்டுமே உரியதாகக் கருதினார்கள்; அந்த சகாப்தத்தைச் சேர்ந்த தத்துவஞானிகள் சமூக ஏற்றத்தாழ்வைத் தத்துவ ரீதியில் ஆதரிப்பதற்கு முயற்சிகளைச் செய்தார்கள், இதரவை.

அடிமை உடைமை அமைப்பில் உற்பத்தி உறவுகள் ஓரளவுக்கு உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு உதவின. பெரும் எண்ணிக்கையில் அடிமைகளின் உழைப்பை உபயோகித்ததனால் அணைகள், பெரிய கட்டிடங்கள், சாலைகள் முதலியவற்றை நிர்மாணிக்க முடிந்தது. இன்னொரு விதமான உழைப்புப் பிரிவினை தோன்றியது: உடல் உழைப்பிலிருந்து மூளை உழைப்பு பிரிக்கப்பட்டது. அக்காலத்தில் அது ஒரு முற்போக்கான நிகழ்வாக இருந்தது. ஏனென்றால் உற்பத்தியில் நேரடியாகப் பங்கெடுப்பதிலிருந்து சிலர் விலக்கப்பட்டது விஞ்ஞானம், கலைகள் இதரவற்றின் வேகமான வளர்ச்சிக்கு வாய்ப்புக்களை ஏற்படுத்தியது. எனினும் சிறிது காலத்துக்குப் பிறகு அடிமை உடைமை உற்பத்தி உறவுகளின் வாய்ப்புக்கள் முடிந்து விட்டன; உற்பத்திச் சக்திகள் மேலும் வளர்வதை அவை தடுத்தன. அடிமைகளின் மலிவான உழைப்பைப் பயன்படுத்திய அடிமை உடைமையாளர்கள் உற்பத்திக் கருவிகளை அபிவிருத்தி செய்ய முயற்சிக்கவில்லை. அடிமைகளுக்கும் அதில் அக்கறை இல்லை. சமூகத்தின் முக்கியமான உற்பத்திச் சக்தியான அடிமை மனிதத் தன்மையற்ற சுரண்டலுக்கு ஆளாகி அழிந்தான்.

உற்பத்திச் சக்திகள் மேலும் வளர்ச்சி அடைவதற்கு

அடிமை உடைமை உறவுகளுக்குப் பதிலாகப் புதிய உறவுகள் தேவைப்பட்டன.

அடிமைகள் மற்றும் மக்களின் ஆக ஏழைப் பகுதியினரது எழுச்சிகளும் அருகிலுள்ள குலச் சமுதாயக் குழுக்களின் படையெடுப்புகளும் அடிமை உடைமை அமைப்பு வீழ்ச்சி யடைவதற்குக் காரணமாக இருந்தன. அதன் இடத்தில் நிலப்பிரபுத்துவம் என்னும் புதிய அமைப்பு ஏற்பட்டது.

**நிலப்பிரபுத்துவ அமைப்பு.** நிலப்பிரபுத்துவத்தின் கீழ் உற்பத்திச் சாதனங்கள் (எல்லாவற்றுக்கும் மேலாக நிலம்) நிலப்பிரபுவின் உடைமையாக இருந்தன; உழைப் பாளி, அதாவது பண்ணை விவசாயி அவருடைய பாதி உடைமைப் பொருளாக இருந்தான். இவை நிலப்பிரபுத் துவ உற்பத்தி உறவுகளுக்கு அடிப்படையாக இருந்தன. நிலப்பிரபுக்கள் விவசாயியின் உழைப்புக்கு உரிமை கொண்டிருந்தனர்; விவசாயிகள் நிலப்பிரபுக்களுக்குப் பல்வேறு சேவைகளையும் கட்டாயமாகச் செய்ய வேண்டும். அதே சமயத்தில் நிலப்பிரபுத்துவ சமூகத்தில் விவசாயிகளும் கைவினைஞர்களும் சொந்தமாக உடைமை, அதாவது சிறு நிலங்கள் அல்லது பட்டறைகள் வைத் திருந்தார்கள். விவசாயிகள் தங்களுடைய நிலப் பிரபுத்துவக் கடமைகளைச் செய்து முடித்த பிறகு தமது சொந்த நிலங்களில் பாடுபட்டார்கள்; உழைப்புக் கருவிகளையும் விவசாய முறைகளையும் அபிவிருத்தி செய்வதில் அவர்கள் அக்கறை காட்டினார்கள்.

நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுகள் (எல்லாவற்றுக்கும் மேலாக நேரடியான உற்பத்தியாளர் தன்னுடைய உழைப்பின் பலன்களைப் பற்றி எடுத்துக்கொண்ட பொருளாயத அக்கறை) உற்பத்திச் சக்திகளின் வளர்ச் சிக்குப் புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தின. விவசாய உற்பத்தி அபிவிருத்தி செய்யப்பட்டது. நில வளத்தை

அதிகப்படுத்துவதற்கு மேன்மேலும் அதிகமான உரங்கள் பயன்படுத்தப்பட்டன. வர்த்தகமும் கைத்தொழில்களும் வளர்ச்சியடைந்தன; நகரங்கள் விரிவடைந்து பொருளாதார, அரசியல், கலாசார மையங்களாக மாறின.

நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறை சமூக வாழ்க்கையின் மற்ற எல்லா அம்சங்களின் பிரத்யேகமான கூறுகளையும் நிர்ணயம் செய்தது.

நிலப்பிரபுத்துவ அமைப்பில் நிலப்பிரபுக்களும் விவசாயிகளும் முக்கியமான வர்க்கங்களாக இருந்தனர். அவர்களுக்கு இடையில் முரணியல்பான உறவுகள் இருந்தன. ஏனென்றால் அந்த உறவுகள் சமரசப்படுத்த முடியாத வர்க்க நலன்களை அடிப்படையாகக் கொண்டிருந்தன.

அரசு நிலப்பிரபுக்களின் நலன்களை ஆதரித்தது, நிலப்பிரபுத்துவத் தனியுடைமையைப் பாதுகாப்பதற்கும் வலுப்படுத்துவதற்கும் முயற்சித்தது. அரசின் நிர்வாக அமைப்பும் இராணுவமும் குறிப்பிடத்தக்க விதத்தில் வளர்ச்சியடைந்தன. திருச்சபையும் மதமும் நிலப்பிரபுத்துவ சமூகத்தின் ஆன்மீக வாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்தின.

காலப்போக்கில் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுகளுடனும் அவற்றின் மேற்கட்டுமானத்துடனும் மோதிக் கொண்டது. நகரங்களில் தொழில்துறை உற்பத்திகள் வளர்ச்சியடைந்த பொழுது சுதந்திரமான உழைப்புச் சந்தை, அதாவது நிலப்பிரபுத்துவப் பண்ணையடிமைத்தனம் மற்றும் உற்பத்திச் சாதனங்களிலிருந்து விடுதலையடைந்த உழைப்பாளர்கள் தேவைப்பட்டனர். விவசாயத்தில் உற்பத்திச் சக்திகள் வளர்ச்சியடைவதற்கு முக்கியமான பொருளாயதத் தூண்டுதல், அதாவது நேரடியான பொருளாயத அக்கறை மிகவும் அவசியமாக இருந்தது. ஆனால்

நிலப்பிரபுத்துவத்தின் கீழ் விவசாயி தன்னுடைய நேரத்தில் பெரும்பான்மையான பகுதியைத் தன்னுடைய எசமானருக்கு உழைப்பதற்குச் செலவிட்டான்; ஆகவே அவனுக்குத் தன்னுடைய உழைப்பின் பலன்களில் அதிகமான அக்கறை இல்லை. நிலப்பிரபுத்துவ அமைப்பின் சுற்றுவட்டத்துக்குள் முதலாளித்துவ உற்பத்தி முறை மெதுவாக உருவாகத் தொடங்கியது. எனினும் அது மேலும் வளர்ச்சியடைவதை நிலப்பிரபுத்துவ அமைப்பின் ஆதிக்கம் தடுத்தது. எண்ணற்ற பூர்ஷ்வா புரட்சிகள் வெடித்தன. இவை நிலப்பிரபுத்துவத்தை வீழ்த்தி அதனிடத்தில் ஒரு புதிய அமைப்பை, முதலாளித்துவ அமைப்பை ஏற்படுத்தின.

**முதலாளித்துவ அமைப்பு.** முதலாளித்துவ நிலைகள் பலமடைந்த பொழுது உற்பத்திச் சக்திகள் வேகமாக வளர்ச்சி அடையத் தொடங்கின. இயந்திரத் தொழில் துறை தோன்றியது. சக்தியின் ஆதாரங்களாக வன்மையான இயற்கைச் சக்திகள் உபயோகிக்கப்படத் தொடங்கின; முதலில் நீராவியும் பின்னர் மின்சாரமும் உபயோகிக்கப்பட்டன. பெரிய தொழிற்சாலைகள் மற்றும் சுரங்கத் தொழில்கள் நிர்மாணிக்கப்பட்டன. முதலாளித்துவம் தோன்றிய பிறகு குறுகிய காலத்தில் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கு மனிதகுல வரலாற்றின் முந்திய சகாப்தங்கள் எல்லாவற்றிலும் செய்யப்பட்டதைக் காட்டிலும் முதலாளித்துவம் அதிகமாகச் செய்தது என்று மார்க்சும் எங்கெல்சும் **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையில்** சுட்டிக்காட்டினார்கள்.

உற்பத்திச் சக்திகளின் வேகமான வளர்ச்சிக்குப் புதிய, முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் காரணமாக இருந்தன. உற்பத்திச் சாதனங்கள் முதலாளி வர்க்கத்தின் தனியுடைமை மற்றும் உற்பத்திச் சாதனங்

களை இழந்து விட்டுத் தம்முடைய உழைப்புச் சக்தியை விற்பனை செய்யும்படி நிர்ப்பந்திக்கப்படுகின்ற கூலித் தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டுதலை இவை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. உபரி மதிப்பு (அதாவது கூலித் தொழிலாளி தன்னுடைய உழைப்புச் சக்தியின் மதிப்புக்குக் கூடுதலான உழைப்பின் மூலம் படைத்த மதிப்பு) முதலாளியினால் இலவசமாக சுவீகரித்துக் கொள்ளப்படுகிறது.

ஆகவே முதலாளித்துவ சமூகத்தில் வர்க்கங்களுக்கு இடையிலுள்ள உறவுகள் முரணியல்பானவை; ஏனென்றால் அவை சுரண்டலை, உடைமையற்றவர்களை உடைமை உள்ளவர்கள் ஒடுக்குவதை அடிப்படையாகக் கொண் டிருக்கின்றன.

மார்க்ஸ் தன்னுடைய மாபெரும் நூலாகிய மூலதனத் தில் முதலாளித்துவ உற்பத்தி முறையை அகல்விரிவான முறையில் பகுப்பாய்வு செய்தார். அவர் முதலாளித்துவ சமூகத்தின் இயக்கியலின் அடிப்படை விதியை, முதலாளித் துவச் சுரண்டலின் சாராம்சத்தை வெளிப்படுத்தினார். உபரி மதிப்பைப் பெற வேண்டும் என்னும் முதலாளியின் வெறி உற்பத்தியை விரிவுபடுத்துதல், இயந்திரங்களை நவீனப்படுத்துதல், தொழிலாளர்களைச் சுரண்டுவதைத் தீவிரப்படுத்துதல், உற்பத்தி அராஜகம், முதலாளிகள் மத்தியில் போட்டி தீவிரமடைதல், முதலாளித்துவ முரண்பாடுகள் ஆழமடைதல், சமூகச் செல்வம் அருவருப் பான முறையில் வீணாக்கப்படுதல் ஆகியவை உள்பட முதலாளித்துவ உற்பத்தி முறையின் மொத்த இயக் கியலையும் நிர்ணயிக்கிறது என்று மார்க்ஸ் எடுத்துக் காட்டினார்.

முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் (சமூகத்தின் பொருளாதார அடித்தளம்) தமக்கேற்ற மேற்கட்டு

மானத்தைக் கோரின. சுரண்டல் வர்க்கம் உபயோகிக் கின்ற அரசியல் ஆதிக்க முறை மாற்றமடைந்தது. வாக்குரிமை அமுலாக்கப்பட்டது, குடிமக்களுக்கு அரசியல் உரிமைகளும் சட்டத்துக்கு முன்னால் அவர்களின் சமத்துவமும் பிரகடனம் செய்யப்பட்டன. அதே சமயத் தில் தொழிலாளி வர்க்கப் போராட்டங்கள் அதிகரித்து முதலாளி வர்க்கம் பிற்போக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கொள்கைகளைக் கடைப்பிடித்ததனால் அரசு இயந்திரம், குறிப்பாக இராணுவம் மற்றும் இதர ஒடுக்குமுறை உறுப்புகளின் அளவு பெரிதும் அதிகரித்தது.

முதலாளி வர்க்கத்தின் ஆட்சியை ஆதரித்தும் சுரண்டப்படுகின்ற பெருந்திரளான மக்களைக் கீழ்ப்படுத்து வதற்கும் பயன்படுகின்ற பூர்ஷ்வா கருத்துக்களும் நிறுவனங்களும் முதலாளித்துவ சமூகத்தின் மேற்கட்டு மானத்தின் தலைமையான பகுதியாக இருக்கின்றன. பூர்ஷ்வா கருத்துக்களோடு அவற்றை வன்மையாக எதிர்க்கின்ற தொழிலாளி வர்க்க சித்தாந்தமும் அதன் தொழிற்சங்கங்களும் அரசியல் கட்சிகளும் தோன்றி வளர்ச்சி அடைகின்றன.

உலகத்தின் கடைசிச் சுரண்டல் அமைப்பு முதலாளித் துவம். அது வளர்ச்சியடைகின்ற பொழுது உற்பத்தி மேன்மேலும் சமூகத் தன்மையை அடைகிறது. எனினும் முதலாளித்துவ உற்பத்தி தனிப்பட்ட உடைமையாளர் களின் ஆதிக்கத்தில் இருக்கிறது, அது சுவீகரிப்பின் தனிப்பட்ட முதலாளித்துவ வடிவத்தைப் பாதுகாக்கிறது. இது முதலாளித்துவத்தில் உள்ளூறையாகவுள்ள அடிப் படையான முரண்பாடு; உழைப்புக்கும் மூலதனத்துக்கும், தனிப்பட்ட தொழில்நிறுவனங்களில் நன்கு அமைக்கப் பட்ட உற்பத்திக்கும் சமூகம் முழுவதிலும் உற்பத்தியின்

அராஜகத்துக்கும், முடிவில்லாமல் வளர்ச்சியடைகின்ற உற்பத்தியின் போக்குக்கும் செயலோடியான தேவையின் வரையறுக்கப்பட்ட தன்மைக்கும் இடையிலான முரண்பாடுகளிலும் அது வெளிப்படுகிறது. முதலாளித்துவத்தின் அடிப்படையான முரண்பாட்டைப் பருவந்தோறும் ஏற்படுகின்ற மிகை உற்பத்தி நெருக்கடிகளில் காணலாம்.

முதலாளித்துவத்தின் பகையியல் முரண்பாடுகள் தொழிலாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையில் தீவிரமான வர்க்கப் போராட்டத்துக்கு வழிவகுக்கின்றன. முதலாளி வர்க்கத்துடன் போராடுகின்ற பொழுது தொழிலாளி வர்க்கம் விவசாயிகளுடனும் ஒடுக்கப்படுகின்ற, சுரண்டப்படுகின்ற எல்லா சமூகப் பகுதியினருடனும் கூட்டுச் சேருகிறது. தொழிலாளி வர்க்கம் தன்னைச் சுற்றி உழைக்கும் மக்களைத் திரட்டிக் கொண்டு சோஷலிஸ்ட் புரட்சியை நிறைவேற்றுகிறது, மூலதனத்தின் ஆட்சியைத் தூக்கியெறிந்து புதிய, கம்யூனிஸ்ட் அமைப்பைத் தோற்றுவிக்கிறது.

**கம்யூனிஸ்ட் சமூக-பொருளாதார அமைப்பு.** கம்யூனிஸ்ட் சமூக-பொருளாதார அமைப்பு முதலாளித்துவ சமூகத்துக்கு இயற்கையான பதிலாகும். அது உற்பத்திச் சாதனங்களின் பொதுவுடைமையை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது; அது ஆக உயர்ந்த பொருளாயத உற்பத்திக்கும் ஆன்மீக வளர்ச்சிக்கும் திட்டமிடுகிறது. ஒவ்வொரு நபரும் சமூகம் முழுமையும் சுதந்திரமான, முழுமையான வளர்ச்சி அடைவதற்குரிய நிலைமைகளைப் படைப்பது கம்யூனிஸ்ட் திசைவழியில் சமூக மாற்றத்தின் முடிவான நோக்கமாகும்.

கம்யூனிஸ்ட் அமைப்பில் அடுத்தடுத்து வருகின்ற இரண்டு கட்டங்கள் — சோஷலிசம் மற்றும் மெய்யான கம்யூனிசம் — உள்ளன.



6-791

முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறுகின்ற பொழுது ஒரு மாறும் காலகட்டத்தின் அவசியத்தை வரலாற்று அனுபவம் நிரூபித்திருக்கிறது. சோஷலிசம் முதலாளித்துவத்திலிருந்து நேரடியாகத் தோன்ற முடியாது; ஏனென்றால் அவற்றுக்கு இடையில் மிகவும் அதிகமான வேறுபாடு இருக்கிறது. முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறுவதற்கு உடைமை, பொருளாயத மற்றும் ஆன்மீக நலன்களின் வினியோகம் இதரவை ஆகிய சமூக வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் தீவிரமான, குணரீதியான மாற்றங்கள் அவசியமாக இருக்கின்றன. இம்மாற்றங்களை நிறைவேற்றுவதற்கு ஒரு மொத்த வரலாற்றுச் சகாப்தம் அவசியம். அந்த சகாப்தம் பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தை மேற்கொள்வதில் ஆரம்பமாகி சோஷலிசம் நிர்மாணிக்கப்பட்டதும் முடிவடைகிறது.

கம்யூனிஸ்ட் சமூக-பொருளாதார அமைப்பின் முதல் கட்டம் சோஷலிசம். சோவியத் யூனியன், மற்ற சோஷலிச நாடுகளின் அனுபவம், முதலாளித்துவத்தை விட மேம்பட்ட முன்னேற்ற கட்டம் என்ற வகையில் புதிய சமுதாயத்தின் விவாதத்திற்கு அப்பாற்பட்ட சமூக-பொருளாதார, அரசியல், சித்தாந்த மற்றும் தார்மீக மேம்பாடுகளை ஆணித்தரமாக மெய்ப்பிக்கிறது; பூர்ஷ்வா அமைப்பால் தீர்க்க முடியா பிரச்சினைகளுக்குத் தீர்வு தருகிறது.

சோஷலிச சமுதாயத்தின் பதாகையில் ''எல்லாம் மனிதனின் பெயரால், எல்லாம் மனித நன்மைக்காக'' என்று பொறிக்கப்பட்டுள்ளது. இச்சமுதாயத்தில்

— உற்பத்திச் சாதனங்கள் மக்களின் கரங்களில் உள்ளன, மனிதனை மனிதன் சுரண்டுவது, சமூக ஒடுக்குமுறை, சலுகை மிக்க சிறுபான்மையினரின்

ஆட்சி, கோடிக்கணக்கானோரின் வறுமை, கல்வி யறிவின்மை ஆகியவற்றிற்கு என்றென்றைக்குமாக முடிவு கட்டப்பட்டுவிட்டது;

— உற்பத்திச் சக்திகளின் சீரிசைவான, திட்டமிட்ட வளர்ச்சிக்குப் பரவலான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன, விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தால் வேலையில்லா திண்டாட்டம் ஏற்படவில்லை, மாறாக எல்லா மக்களின் வாழ்க்கைத் தரமும் இடையறாது உயருகிறது;

— உழைப்பிற்கான சம உரிமையும், ''ஒவ்வொருவரிடமிருந்தும் அவரவர் திறமைக்கேற்ப, ஒவ்வொருவருக்கும் அவரவர் உழைப்பிற்கேற்ப'' எனும் கோட்பாட்டின்படி ஊதிய முறைக்கான சம உரிமையும் வழங்கப்பட்டுள்ளன, மக்களுக்கு இலவச மருத்துவ உதவி, கல்வி வசதி, குறைந்த வாடகைக்கு வீடு முதலிய சமூக வசதிகள் தரப்பட்டுள்ளன;

— தொழிலாளி வர்க்கம், கூட்டுப் பண்ணை விவசாயிகள், அறிவுத் துறையினர் ஆகியோரிடையே பிரிக்க இயலா ஒற்றுமை ஏற்பட்டுள்ளது, ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான உரிமைகளும் இவற்றை நிறைவேற்றுவதற்கான உத்திரவாதங்களும் தரப்பட்டுள்ளன, இளம் தலைமுறையினர் முன் எதிர்காலம் திறந்து விடப்பட்டுள்ளது, உழைப்பு முதுவர்களுக்கு சமூக வசதிகள் உத்திரவாதப்படுத்தப்பட்டுள்ளன;

— தேசிய இன சமமின்மை அகற்றப்பட்டு விட்டது, எல்லா மக்களினங்கள், தேசிய இனங்களின் சட்ட ரீதியான மற்றும் நடைமுறை சமத்துவத்திற்கும், நட்புறவு, சோதர உணர்வுகளுக்கும் வகை செய்யப்பட்டுள்ளது;

— உண்மையான ஜனநாயகம் — மக்களுக்காக மக்களா



6*

லேயே நடத்தப்படும் ஆட்சி நிலைநாட்டப்பட்டு வளர்ந்து வருகிறது, உற்பத்தி, சமூக மற்றும் அரசு நிர்வாகத்தில் குடிமக்களின் பரவலான, முழு உரிமையுள்ள பங்கேற்பிற்கு வகை செய்யப்பட்டுள்ளது;

— சுதந்திரம், மானுட உரிமைகள், தனிமனித மேன்மை ஆகியவற்றைப் பற்றிய கருத்துக்களுக்கு உண்மையான உட்பொருள் தரப்பட்டுள்ளது, உரிமைகள் மற்றும் கடமைகளின் ஒற்றுமைக்கு வழி செய்யப்பட்டுள்ளது, விதிகளும் தார்மீக வரையளவுகளும் கட்டுப்பாடும் எல்லோருக்கும் பொதுவானவை, தனிநபரின் பன்முக வளர்ச்சிக்கு மேன்மேலும் அனுகூலமான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்படுகின்றன;

— உண்மையிலேயே மனிதாபிமான மார்க்சிய-லெனினிய சித்தாந்தம் கோலோச்சுகிறது, ஞானத்தின் எல்லா வாயில்களும் பரவலான மக்கள் திரளினருக்குத் திறந்து விடப்பட்டுள்ளன, உலக கலாசாரத்தின் தலைசிறந்த அம்சங்களைத் தன்னுள் அடக்கி நிற்கும் முன்னணி சோஷலிச கலாசாரம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது;

— சமூக நீதி, கூட்டு மனப்பாங்கு, தோழமை ரீதியான பரஸ்பர உதவி ஆகியவற்றின் அடிப்படையிலான சோஷலிச வாழ்க்கை முறை உருவாகி உள்ளது, இது உழைக்கும் மனிதனுக்கு எதிர்கால நம்பிக்கையை அளிக்கிறது, புதிய சமுதாய உறவுகளை, சொந்த எதிர்காலத்தை படைப்பவனாக இது இவனை ஆன்மீக ரீதியாகவும் தார்மீக ரீதியாகவும் உயர்த்துகிறது.

சோஷலிசம் என்பது, சுதந்திரம், சமூக முன்னேற்றம் ஆகியவற்றின் மீதுள்ள மக்களினங்களின் நாட்டங்களை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டு சர்வதேச அரங்கில் செயல்படும் சமுதாயமாகும்; பூமியில் சமாதானத்தைப் பேணிக்காப்பதுதான் இதன்

முக்கியக் கடமையாகும்.

வரலாற்று வளர்ச்சியின் புதிய கட்டத்தில், சோஷலிச சமுதாயத்தைப் பன்முக ரீதியாக மேம்படுத்தி, இதன் வாய்ப்புகளையும் மேம்பாடுகளையும் கம்யூனிசத்தை நோக்கி முன்னேறும் நோக்கத்திற்காக மேன்மேலும் முழுமையாகவும் செயல்வன்மையாகவும் பயன்படுத்தும் கடமை சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி சோவியத் மக்கள் முன் நிற்கிறது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் இறுதி லட்சியம் சோவியத் நாட்டில் கம்யூனிசத்தைக் கட்டு வதாகும். சோஷலிசமும் கம்யூனிசமும் ஒரே கம்யூனிச சமுதாய அமைப்பின் இரண்டு தொடர்ச்சியான கட்டங் கள் ஆகும். இவற்றின் இடையே கறாரான எல்லைகள் இல்லை: சோஷலிசத்தின் வளர்ச்சி, இதன் வாய்ப்புகள், மேம்பாடுகளை மேன்மேலும் முழுமையாக வெளிப் படுத்தி பயன்படுத்துவது, இதற்குரிய பொது கம்யூனிச அடிப்படைகளைப் பலப்படுத்துவது, இவையெல்லாம்தான் கம்யூனிசத்தை நோக்கிய உண்மையான இயக்கத்தைக் குறிக்கின்றன.

கம்யூனிசம் என்பது உற்பத்திச் சாதனங்களின் மீதான ஒரே பொது சொத்துடைமை நிலவும் வர்க்கங்களற்ற சமுதாய அமைப்பாகும். இங்கு சமுதாய உறுப்பினர்கள் அனைவரின் மத்தியில் முழு சமத்துவம் நிலவுகிறது. இங்கே தனிமனிதன் பன்முக ரீதியாக வளருவதோடு கூட உற்பத்திச் சக்திகளும் விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத்தின் இடையறா முன்னேற்றத்தின் அடிப்படையில் வளரும். சமுதாய செல்வம் பெரிதும் அதிகரிக்கும், ‘‘ஒவ்வொருவரிடமிருந்தும் அவரவர் திறமைக்கேற்ப, ஒவ்வொரு வருக்கும் அவரவர் தேவைக்கேற்ப’’ எனும் மாபெரும் கோட்பாடு அமல்படுத்தப்படும். கம்யூனிசம் என்பது சுதந்

திரமான, சுய உணர்வுள்ள உழைப்பாளிகளின் உயர்வாக ஒழுங்கமைக்கப்பட்ட சமுதாயம், இதில் சமுதாய சுயநிர் வாகம் நிலைபெற்றிருக்கும், சமுதாய நலன்களுக்காக உழைப்பது என்பது எல்லோருக்கும் உணர்வு பூர்வமான, முதல் ஜீவாதாரத் தேவையாக மாறியிருக்கும், ஒவ்வொரு வரின் திறமைகளும் மக்கள் அனைவருக்கும் அதிகபட்சம் பயனளிக்கும் வகையில் பயன்படுத்தப்படும்.

சமுதாயம் மற்றும் தனிநபரின் விவேகமான தேவை களை முழுமையாக பூர்த்தி செய்வதற்கு அவசியமான வாய்ப்புகளை ஏற்படுத்தக் கூடிய உற்பத்திச் சக்திகளை தோற்றுவிப்பதை கம்யூனிசத்தின் பொருளாயத-தொழில் நுட்ப அடித்தளம் முன்னனுமானிக்கிறது. கம்யூனிச சூழ்நிலைகளில் உற்பத்தி நடவடிக்கை முழுவதும் உயர் பயன் தன்மையுள்ள இயந்திரங்களையும் தொழில் நுட்பத்தையும் பயன்படுத்துவதன் அடிப்படையில் இருக் கும், மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான சீரிசைவான பரஸ்பர செயலாக்கத்திற்கு வகை செய்யப் படும்.

கம்யூனிச சமுதாயத்தின் உயர் கட்டத்தில் உழைப்பு மற்றும் உற்பத்தியின் நேரடியான சமுதாயத் தன்மை முழுமையாக நிலைபெறும். பழைய உழைப்புப் பிரிவினை மற்றும் இதனுடன் தொடர்புடைய முக்கிய சமூக வேறுபாடுகளின் மிச்சசொச்சங்கள் முழுமையாக அகற்றப் பட்டதன் பயனாய் சமூக ரீதியில் ஒரே மாதிரியான சமுதாயத்தை உருவாக்கும் நிகழ்ச்சிப் போக்கு நிறைவு பெறும்.

கம்யூனிசம் என்பது மக்களின் சோஷலிச சுயநிர்வாக முறை, சோஷலிச ஜனநாயகம் சமுதாய ஒழுங்கமைப்பின் உயர் வடிவமாக, அதாவது கம்யூனிச சமுதாய சுயநிர் வாகமாக மாறுவதை குறிக்கும். அவசியமான சமூக-

பொருளாதார, சித்தாந்த முன்தேவைகள் முதிர்ச்சியடைய முதிர்ச்சியடைய, எல்லா மக்களும் நிர்வாகத்தில் பங்கேற்கத் துவங்கும் போது, அனுகூலமான சர்வதேச சூழ்நிலைகள் நிலவும் போது வி. இ. லெனின் குறிப்பிட்டபடி சோஷலிச அரசு ''அரசிலிருந்து அரசல்லாததை'' நோக்கிய மாறுநிலை வடிவமாக மேன்மேலும் மாறும். அரசு உறுப்புகளின் நடவடிக்கை மேன்மேலும் அரசியலற்ற தன்மையைப் பெறும், விசேஷ அரசியல் நிறுவனம் என்ற வகையில் அரசின் தேவை படிப்படியாக மறையும்.

கம்யூனிச வாழ்க்கை அமைப்பின் பிரிக்க இயலா அங்கம்—உயர்வான சுய உணர்வு, சமுதாய சுறுசுறுப்பு, சமுதாய உறுப்பினர்களின் உயர்வான கட்டுப்பாடு, சுயகட்டுப்பாடு முதலியவையாகும். இதில் கம்யூனிச வாழ்க்கை முறையின் ஒரே பொதுவான விதிமுறைகளைக் கடைப்பிடிப்பது என்பது ஒவ்வொரு நபரின் சுயதேவையாக, பழக்கமாக மாறும்.

கம்யூனிச சமுதாயத்தில் ஒவ்வொருவரின் சுதந்திரமான வளர்ச்சியும் எல்லோரின் சுதந்திரமான வளர்ச்சிக்கான நிபந்தனையாக மாறும்.

முழு கம்யூனிசத்தின் அம்சங்களை விரிவாக விளக்குவது சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் நோக்கமல்ல. இச்சமுதாயத்தை நோக்கி முன்னேற முன்னேற, கம்யூனிச கட்டுமான அனுபவம் சேரும் போது, புதிய சமுதாயத்தின் உயர் கட்டத்தைப் பற்றிய விஞ்ஞான பூர்வமான கருத்துக்கள் செழுமையடையும், திட்டவட்டமான வடிவத்தைப் பெறும்.

சோஷலிசம் கம்யூனிசமாக வளர்ச்சியடைவதானது சமுதாய வளர்ச்சியின் புறவய விதிகளால் நிர்ணயிக்கப்படுகிறது, இவற்றை கவனத்தில் கொள்ளாமல் இருக்க

முடியாது. சமுதாயத்தின் பொருளாயத, ஆன்மீக முதிர்ச்சியைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் கம்யூனிச கோட்பாடுகளை நிலைநாட்டவும் அவசரப்பட்டு முன் செல்லவும் செய்யப்படும் எல்லா முயற்சிகளும் தோல்வி யடைவது திண்ணம், இதனால் பொருளாதார, அரசியல் இழப்புகள் ஏற்படும் என்று அனுபவம் காட்டு கிறது.

அதே சமயம் முதிர்ச்சியடைந்த மாற்றங்களை செய்வதில், புதிய கடமைகளைத் தீர்ப்பதில் தாமதமும் கூடாது என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி கருதுகிறது.

உலகத்தில் எல்லாமே வளர்ச்சியடைந்து கொண்டிருக் கின்றன. கம்யூனிஸ்ட் சமூகம் தேக்கநிலை உடையதல்ல. அது வளர்ச்சி அடையும், அபிவிருத்தி அடையும், மேலும் முன்னேற்றமடையும்.

### வரலாற்று நிகழ்வுப் போக்கைப் புரிந்து கொள்வதில் ''சமூக-பொருளாதார அமைப்பு'' என்னும் கருத்தின் முக்கியத்துவம்

சமூக-பொருளாதார அமைப்பைப் பற்றிய மார்க்சியத் தத்துவம், தத்துவஞானத்துக்கும் சமூகத்தைப் பற்றிய இதர விஞ்ஞானங்களுக்கும் மாபெரும் முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது.

வரலாற்று சம்பவங்கள் மற்றும் நிகழ்வுகளின் பல்வகைத் தன்மைக்கு நடுவில் இத்தத்துவம் உலக வரலாற்றின் ஒற்றுமையை வெளிப்படுத்துவதை சாத் தியமாக்கி இருக்கிறது.

மனித சமூக வளர்ச்சி மிகவும் வித்தியாசமான தன்மையைக் கொண்டிருக்கிறது. மக்களினங்களும் நாடு

களும் தம்முடைய சொந்த வழிகளில் செல்கின்றன; அவை பல அம்சங்களில் ஒன்றுக்கொன்று வேறுபடு கின்றன. ஆனால் ''சமூக-பொருளாதார அமைப்பு'' என்னும் கருத்து ஒற்றுமைகளையும் அவசியமான கூறுகள் திரும்பத்திரும்ப நடைபெறுவதையும் வெளிப் படுத்துவதற்கும் வரலாற்று நிகழ்வுப் போக்கின் ஒரு மையைப் புரிந்துகொள்வதற்கும் உதவியிருக்கிறது. உதாரண மாக, கிழக்கு ஆசியாவிலுள்ள ஒரு முதலாளித்துவ நாடு பிரான்சையும் பிரிட்டனையும் போன்ற ஐரோப்பா விலுள்ள முதலாளித்துவ நாடுகளிலிருந்து பல வழிகளில் வேறுபடக் கூடும். ஆனால் அவற்றின் சாராம்சம், அவை அனைத்தையும் முதலாளித்துவ நாடுகளாக்குகின்ற கூறுகள் — உற்பத்திச் சாதனங்களின் தனியுடைமை, முதலாளிகள் கூலியுழைப்பைச் சுரண்டுதல், முதலாளித்துவ அரசின் மக்கள் விரோதத் தன்மை இதரவை — ஒரே மாதிரியானவையே. அவை அனைத்தும் ஒரே சமூக-பொருளாதார அமைப்பை, முதலாளித்து வத்தைச் சேர்ந்தவை.

பூர்விக கூட்டு வாழ்க்கை அமைப்பு எல்லாவற்றுக்கும் முந்திய சமூக அமைப்பாகும். அதிகப் பெரும்பான்மையான மக்களினங்களில் அதனிடத்தில் வர்க்க சமூகம் தோன் றியது. நெடுங்கால நோக்கில் எல்லா மக்களினங்களும் கம்யூனிசத்தை அடையும். இது மனித சமூக வளர்ச்சி யின் பொதுப் பாதை. எனினும் பிரத்யேகமான வரலாற்று நிலைமைகள் சமூக நிகழ்வுப் போக்கை ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு விதமாகக் கணிசமான முறையில் மாற்றும். வரலாறு முழுவதிலும் பொருளாதார வளர்ச்சியில் தலைமை தாங்கிய நாடுகள் மற்றும் மக்களினங்களுக்கும் பின்தங்கிய நாடுகள் மற்றும் மக்களினங்களுக்கும் இடையில் இடைச்செயல் நடைபெற்று

வந்திருக்கிறது. சில மக்கள் இனங்கள் தம்முடைய வளர்ச்சியில் சில வர்க்க சமூக-பொருளாதார அமைப்புக் களைத் தாண்டி வந்திருப்பதற்கு இது காரணமாகும். தற்பொழுது முதலாளித்துவ அமைப்பைப் பெற்றிராத சில மக்களினங்கள் முதலாளித்துவம் அல்லாத வளர்ச்சிப் பாதையைத் தேர்ந்தெடுத்திருக்கின்றன, படிப்படியாக சோஷலிசத்துக்கு மாறுவதில் ஈடுபட்டிருக்கின்றன. இன்று சோஷலிசம் பல நாடுகளில் வேரூன்றி விட்டபடியால் பல மக்களினங்கள் முதலாளித்துவ அமைப்பைத் தவிர்த்து சோஷலிச நிர்மாணத்தை நோக்கி முன்னேறுவது சாத்தியமாக இருக்கிறது.

அடுத்தடுத்து ஏற்பட்ட சமூக-பொருளாதார அமைப்புக் களை ஒப்பிடுகின்ற பொழுது அவை வரலாற்று முன்னேற்றம் என்னும் ஏணியின் படிகள் என்பதை நாம் பார்க்கிறோம். ஒவ்வொரு புதிய சமூக-பொருளா தார அமைப்பும் உற்பத்திச் சக்திகள் மற்றும் கலாசாரத் தின் வளர்ச்சி நிலையில், சுதந்திரத்தின் அளவு இதரவற் றில் முந்தியதை விஞ்சி நிற்கிறது.

சமூக-பொருளாதார அமைப்பு எல்லா சமூக விஞ்ஞானங்களுக்கும் வரலாற்று நிகழ்வுப் போக்கை விஞ்ஞான ரீதியில் காலவரிசைப்படுத்தலின் அலகாகப் பயன்படுகிறது. ஒரு நாட்டின் வரலாற்றை (உலக வரலாற்றையும்) ஆராய்கின்ற பொழுது ஒருவர் முதலில் அந்த நாடு கடந்து வந்திருக்கின்ற சமூக-பொருளாதார அமைப்புக்களைப் பிரித்தெடுக்க வேண்டும்.

உலக வரலாற்றுக் கட்டங்களை அதன் முக்கியமான போக்குகளுக்கு ஏற்ற முறையில் வரையறுப்பதற்கு ‘‘வரலாற்று சகாப்தம்’’ என்னும் கருத்து அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

ஒரு சமூக-பொருளாதார அமைப்பு எப்பொழுதும்

ஒரு வரலாற்று சகாப்தத்துடன் பிணைக்கப்பட்டிருக் கிறது. எனினும் அவை ஒரே மாதிரியானவை அல்ல. ஒவ்வொரு சமூக-பொருளாதார அமைப்பும் மற்றவை களிலிருந்து குணாீதியில் வேறுபடுகிறது. சமூக வளர்ச்சி யின் குறிப்பிட்ட கட்டம் நடைபெற்று சம்பவங்கள் நிகழ்கின்ற வரலாற்றுக் காலப் பகுதி சகாப்தம் எனப்படும். அது சமூக-பொருளாதார அமைப்பின் ஒரு கட்டமாக அல்லது மொத்த அமைப்பாக இருக்க முடி யும். உதாரணமாக, அடிமையுடைமை சகாப்தமும் நிலப் பிரபுத்துவ சகாப்தமும் இருந்தன, பிறகு முதலாளித்துவ அமைப்பு நிறுவப்படுகின்ற, ஆரம்பநிலை பூர்ஷ்வா, நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் புரட்சிகளின் சகாப்தம் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து முதலாளித்துவத்தின் உச்ச வளர்ச்சி சகாப்தம் ஏற்பட்டது. 19ம் நூற்றாண் டின் கடைசியிலும் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் முதலாளித்துவம் அதன் ஆக உயர்ந்த மற்றும் இறுதிக் கட்டமாகிய ஏகாதிபத்தியத்தை அடைந்தது. ஏகாதிபத் தியம் மற்றும் பாட்டாளி வர்க்கப் புரட்சிகளின் சகாப்தம் தோன்றியது. ஒரு சமூக-பொருளாதார அமைப் பிலிருந்து மற்றொன்றுக்கு மாறுகின்ற சகாப்தங்களும் உண்டு. நாம் தற்பொழுது உலக வளர்ச்சியில் மாறும் சகாப்தத்தில் இருக்கிறோம். ‘‘இது முதலாளித்துவத் திலிருந்து சோஷலிசத்திற்கும் கம்யூனிசத்திற்கும் மாறிச் செல்லும் சகாப்தமாகும், இரண்டு உலக சமூக-அரசியல் அமைப்புக்களின் வரலாற்றுப் போட்டி நிகழும் சகாப்தமாகும்; இது சோஷலிச மற்றும் தேசிய விடுதலை புரட்சிகளின் சகாப்தம், காலனியாதிக்கம் தகர்ந்து விழும் சகாப்தம்; ஏகாதிபத்தியம், அதன் ஆக்கிரமிப்புக் கொள்கை, ஒடுக்குமுறை ஆகியவற்றிற்கு எதிராக, சமாதானம், ஜனநாயகம், சமூக முன்னேற்றத்திற்காக

சமுதாய வளர்ச்சியின் முக்கிய உந்து சக்திகள் (உலக சோஷலிசம், தொழிலாளர் மற்றும் கம்யூனிஸ்டு இயக்கம், விடுதலையடைந்த நாடுகளின் மக்கள், வெகுஜன ஜனநாயக இயக்கங்கள்) போராடும் சகாப்தம்.''*

ஒரு சகாப்தத்தின் உள்ளடக்கத்தை அறிய வேண்டுமென்றால் அதில் எந்த வர்க்கம் கேந்திரமாக இருக்கிறது, ''அதன் பிரதான உள்ளடக்கத்தை, அதன் வளர்ச்சியின் முக்கியமான திசையை, அந்த சகாப்தத்தின் வரலாற்று நிலைமையின் முக்கியமான குணாம்சங்களை நிர்ணயிக்கிறது''** என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று லெனின் எழுதினார்.

சர்வதேசத் தொழிலாளி வர்க்கமும் உலக சோஷலிஸ்ட் அமைப்பும் இந்த நவீன சகாப்தத்தின் மையமாக இருக்கின்றன.

சோஷலிசத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் இடையிலுள்ள முரண்பாடு இந்த சகாப்தத்தில் முக்கியமானது. இன்றைய சகாப்தத்தின் சாராம்சம் இந்த முரண்பாட்டுடன் நெருக்கமாக இணைந்திருக்கிறது. உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலுள்ள முரண்பாட்டை அது உலக ரீதியான அளவில் எடுத்துக்காட்டுகிறது. உலகத்தின் ஒரு பகுதியில் (உலக சோஷலிஸ்ட் அமைப்பு) தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் உழைப்பாளர்கள் ஆட்சி செய்கிறார்கள், உலகத்தின் மறு பகுதி (உலக முதலாளித்துவ அமைப்பு) முதலாளி வர்க்கத்தின் ஆதிக்கத்தில் இருக்கிறது.

---

* சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் வேலைத்திட்டம், அரசியல் பதிப்பகம், மாஸ்கோ, *1986*, பக்கம் 22 (ருஷ்ய மொழியில்).

** V. I. Lenin, "Under a False Flag", *Collected Works,* Vol. 21, p. 145.

# அத்தியாயம் மூன்று

# சமூகக் கட்டமைப்பும் சமூக உறவுகளும்

**சமூகக் கட்டமைப்பைப் பற்றிய கருத்து**

சமூகத்தில் வாழ்கின்ற மக்களுக்கு இடையில் இயற்கையான (பால், வயது, இனம்) வேறுபாடு களும் சமூக வேறுபாடுகளும் இருக்கின்றன.

சமூக வேறுபாடுகள் இயற்கையான வேறுபாடு களைப் போன்றவை அல்ல. அவை சமூகத்தின் வரலாற்று ரீதியான வளர்ச்சியின் விளைவாகத் தோன்றியவை. உதாரணமாக, பூர்விக கூட்டு வாழ்க்கை அமைப்பு அழிந்து தனியுடைமை, பொருளாதார ஏற்றத்தாழ்வு மற்றும் சுரண்டல் தோன்றுகின்ற பொழுது வர்க்க வேறுபாடுகள் ஏற்படுகின்றன.

சமூக வேறுபாடுகள் சமுதாய பிரி வினைக்கு அடிப்படையாக இருக்கின்றன. நிலையான சமூகக் கூட்டுகள் (குடிமரபுக் குழு, குலம், மக்கள் இனம், தேசிய இனம், குடும்பம், வர்க்கம், தொழில் இதரவை) வெவ்வேறு முறைகளில் தோன்றுகின்றன.

மனிதகுல வரலாற்றில் இத்தகைய சமூகக்

கூட்டுகள் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக இருந்துவந்திருக்கின்றன. அவற்றில் ஆக முக்கிய மானவை (வர்க்கங்கள், மக்கள் இனங்கள், தேசிய இனங்கள்) வரலாற்று நிகழ்வுப் போக்கில் அகப் பொருளாகச் செயல்படுகின்றன. அவற்றின் நடவடிக் கையின் மூலமாகவே முக்கியமான வரலாற்றுச் சம்பவங் கள் நடைபெறுகின்றன.

ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டுப் பரஸ்பர இடைச்சார்பு நிலையில் இருக்கின்ற இக்கூட்டுகள் சமூகத்தின் கட்டமைப்பாக இருக்கின்றன.

ஒவ்வொரு சமூக-பொருளாதார அமைப்புக்கும் ஒரு பிரத்யேகமான சமூகக் கட்டமைப்பு இருக்கிறது; அது பொருளாயத நலன்களை உற்பத்தி செய்யும் முறையைச் சார்ந்திருக்கிறது. உற்பத்தி முறை மாறுகின்ற பொழுது அது மாற்றமடைகிறது.

## குடிமரபுக் குழு, குலம், மக்கள் இனம், தேசிய இனம்

குடிமரபுக் குழுவும் குலமும் மனித சமூகத்தின் மிகவும் தொன்மையான வடிவங்களாகும். மனிதன் தோன்றிய அதே சமயத்தில் (40,000 – 1,00,000 ஆண்டுகளுக்கு முன்பாக) குடிமரபுக் குழுக்கள் தோன்றின.

குடிமரபுக் குழு என்பது ஒரு பொதுவான மூதாதை யரைக் கொண்ட இரத்த முறை உறவினர்களின் கூட்டாகும். அது 30 – 50 நபர்களை மட்டுமே கொண் டிருக்கும். அதன் முக்கியமான குணாம்சங்கள் பின்வரு மாறு: 1) குடிமரபுக் குழுவை நிறுவியவரின் பெயரை எல்லோரும் பொதுப்பெயராக உபயோகித்தல்; 2) பொது மொழி; 3) பொதுவான பழக்கவழக்கங்கள் மற்றும்

மரபுகள்; 4) பொதுவான மதச் சடங்குகள் மற்றும் நம்பிக்கைகள்.

குடிமரபுக் குழு பொதுவிலான உடைமையையும் சமத்துவமான வினியோகத்தையும் அடிப்படையாகக் கொண்ட கூட்டுப் பொருளாதாரத்தைப் பின்பற்றியது. வயது வந்த எல்லா ஆண்களையும் பெண்களையும் கொண்ட சபை (கவுன்சில்) அதற்குத் தலைமை தாங்கியது. அச்சபை தலைவர்களையும் இராணுவ தளபதிகளையும் தேர்ந்தெடுத்தது, அவசியம் ஏற்படு கின்ற பொழுது அவர்களை மாற்றியது. ஒரே குடிமரபுக் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு இடையில் திருமணம் செய்வது அனுமதிக்கப்படவில்லை.

குடிமரபுக் குழு மனிதகுலத்தின் வளர்ச்சியில் ஒரு முக்கியமான கட்டமாகும். அதன் தனித்தன்மையான கூறுகளை உலக முழுவதிலும் மக்களினங்களின் வரலாற் றில் நாம் பார்க்க முடியும்.

நெருக்கமான உறவுகளைக் கொண்ட குடிமரபுக் குழுக்கள் ஒன்று சேர்ந்து குலம் தோன்றியது. அது இரத்த முறை உறவுகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை, அதற்கு பொது மொழியும் பிர தேசமும் இருந்தன.

பூர்விக கூட்டு வாழ்க்கை அமைப்பின் கீழ் குடிமரபுக் குழுக்களும் குலங்களும் இருந்தன. அவை சமூக வளர்ச்சியில் மாபெரும் பாத்திரத்தை வகித்தன. காலப் போக்கில் பொருளாதார நிகழ்வுப் போக்குகள் குடிமரபுக் குழு மற்றும் குலச் சமுதாய அமைப்பின் சுற்றுவட்டத்தை மீறி வளர்ச்சியடைந்தன; அந்த அமைப்பு வரலாற்று ரீதியில் காலாவதியாகிவிட்டபடியால் சமூக வளர்ச் சியைத் தடுப்பதற்குத் தொடங்கியது. குடிமரபுக் குழு மற்றும் குலச் சமுதாய எச்சங்கள் சில நாடுகளில்

இன்னும் இருப்பதைப் பார்க்க முடியும். இவை உலக வரலாறு சரிசமமற்ற பாதையில் வளர்ச்சியடைந்திருப் பதன் விளைவாகும்.

குடிமரபுக் குழுவும் குலச் சமுதாயமும் மறைந்து மக்கள் இனம் ஏற்பட்டது; அது முதலாளித்துவத்துக்கு முந்திய வர்க்க சமூகங்களின் குறியடையாளமாக இருந்தது. மக்கள் இனம் குடிமரபுக் குழுவைப் போல இரத்த உறவு முறையை அடிப்படையாகக் கொண் டிருக்கவில்லை, அது எல்லாவற்றுக்கும் மேலாக பொது வான பிரதேசம், மொழி மற்றும் கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. மக்கள் இனத்தின் உறுப்பினர்கள் மத்தியில் பலவீனமான பொருளாதார உறவுகள் இருப்பதும் குறியடையாளமாகும்.

மக்கள் இனங்கள் உலகத்தின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு வரலாற்றுக் கட்டங்களில் ஏற்பட்டன; வரலாற்று ரீதியான மக்கள் சமூகங்கள் என்ற முறையில் அவை இன்றும் நீடிக்கின்றன.

நிலப்பிரபுத்துவக் கூறுபாடு படிப்படியாக ஒழிக்கப் படுதல், ஒற்றை தேசியச் சந்தை தோன்றுதல் ஆகிய வற்றைப் போன்ற பொருளாதாரக் காரணிகள் தேசிய இனங்களின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் தீர்மானகர மான பாத்திரத்தை வகித்தன. ஆகவே ஒரு பொதுவான பொருளாதார வாழ்க்கை தேசிய இனத்தின் முக்கியமான கூறாக இருக்கிறது. தேசிய இனம் என்பது பொதுவான பொருளாதார வாழ்க்கை, பொது மொழி மற்றும் பிரதேசம், பொதுவான கலாசாரப் பண்புகள், உணர்வு மற்றும் உளவியல் ஆகியவற்றின் அடிப்படையில் ஏற்பட்டிருக்கின்ற நிலையான, வரலாற்று ரீதியான மக்கள் சமுதாயம் என்று மார்க்சிய-லெனினியம் கூறுகிறது.

தேசிய இனங்களை மனித இனங்களுடன் சேர்த்துக் குழப்பிக் கொள்ளக் கூடாது. இன வேறுபாடுகள் என்பவை மக்களின் வெளிப்புற உயிரியல் அம்சங்களாகும். மனிதனும் மனித சமூகமும் தோன்றிய ஆரம்பக் கட்டங்களில் இனங்களும் தோன்றின. மனித இனங்கள், அதாவது மக்களுடைய உடல் கூறுகளில் வேறுபாடுகள் மிகவும் பழங்காலத்தில் தோன்றின. நவீன மனிதன் அப்பொழுதுதான் உருவாகிக் கொண்டிருந்தான். பூர்விக மனிதர்கள் பல்வேறு வகையான பூகோள நிலைமைகள் மற்றும் தட்பவெப்ப நிலைமைகளில் வசித்துக் கொண்டிருந்தனர்; மக்கள் சமூகங்கள் பல ஊழிகளுக்கு ஒன்றோடொன்று தொடர்பு இல்லாமல் தனித்திருந்தன; அவற்றின் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி நிலை மிகவும் தாழ்வாக இருந்தது; இவை அனைத்தும் மக்களிடம் தோற்ற வேறுபாடுகளை ஏற்படுத்தின. இந்த நிலைமைகளில் அவர்களிடம் தோன்றிய இனக் கூறுகள் (சருமம் மற்றும் முடியின் நிறம், மண்டை மற்றும் மூக்கின் அமைப்பு இதரவை) சூழ்நிலை காரண மாக ஏற்பட்டன, மேலும் அவை பாதுகாப்புத் தன் மையைக் கொண்டிருந்தன. காலப் போக்கில் மக்கள் குடிபெயர்ந்து சென்று புதிய இடங்களில் குடியேறினார் கள். அப்பொழுது இனங்கள் கூடிக்கலந்து அதிக மான இனரகங்கள் தோன்றின.

உலகத்திலுள்ள மனித இனங்கள் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன: 1) நீக்ரோ (கறுப்பு); 2) ஐரோப்பிய (வெள்ளை); 3) மங்கோலிய (மஞ்சள்).

வெவ்வேறு இனங்களைச் சேர்ந்த மக்களுக்கு இடை யில் சிந்தனையில் அல்லது அறிவாற்றலில் அல்லது உடல் வலிமையில் எத்தகைய வேறுபாடுகளும் இல்லை என்பதை விஞ்ஞான ஆராய்ச்சி சந்தேகத்துக்கு இடமில்

லாதபடி நிரூபித்துவிட்டது. எனினும் பிற்போக்கான பூர்ஷ்வா சித்தாந்திகள், ''உயர்ந்த'' மற்றும் ''தாழ்ந்த'' இனங்கள் இருக்கின்றன, சில இனங்கள் ஆதிக்கம் செலுத்தும்படி இயற்கையினால் விதிக்கப்பட்டிருக்கின்றன, வேறு சில இனங்கள் அடிமைப்படுவதற்கு விதிக்கப் பட்டிருக்கின்றன என்னும் விஞ்ஞானத்துக்குப் புறம்பான கருத்துக்களைப் பரப்பி வருகிறார்கள்.

அமெரிக்காவிலும் வேறு சில முதலாளித்துவ நாடுகளிலும் இன வேற்றுமை அல்லது வெள்ளையர் அல்லாத மக்களை ஒடுக்குவது பரவலாக இருக்கிறது.

இனவெறிக் கருத்துக்கள் அடிமை உடைமையாளர்கள் மற்றும் காலனியாதிக்கவாதிகளின் நலன்களுக்கே எப் பொழுதும் உதவி புரிந்திருக்கின்றன. முன்பு காலனிகளாக இருந்த நாடுகளைச் சேர்ந்த மக்களினங்கள் சுதந்திர வாழ்க்கை நடத்துவதற்கு உளவியல் ரீதியில் ஏற்றவர்கள் அல்ல என்று நிரூபிப்பதற்கு பூர்ஷ்வா சித்தாந்திகள் இன்று முயற்சிகளைச் செய்கிறார்கள். வெள்ளையர் அல்லாத சில மக்களினங்கள் பின்தங்கியிருப்பது உண்மை என்றாலும் கூட அதற்குக் காரணம் சில பூர்ஷ்வா சித்தாந்திகள் கூறுவதைப் போல அவர்களுடைய தோல் அல்லது முடியின் நிறம் அல்ல, அவர்களைப் பல நூற்றாண்டுகளாக வெள்ளைச் சுரண்டல்காரர்களிடம் அடிமைகளாக வைத்திருந்த காலனியாதிக்க ஒடுக்கு முறைதான் அதற்குக் காரணம்.

முந்திய காலனிகள் மற்றும் சார்பு நாடுகளின் மக்கள் காலனியாதிக்க ஒடுக்குமுறையிலிருந்து தங்களை விடுவித்துக்கொண்டு இன்று தங்களுடைய பொருளாதாரங் களையும் கலாசாரங்களையும் வெற்றிகரமாக வளர்த்து வருகிறார்கள். சோஷலிஸ்ட் பாதையைப் பின்பற்றுகின்ற நாடுகள் குறிப்பிடத்தக்க வகையில் முன்னேறியிருக்

கின்றன. நவீன உலக சூழ்நிலையில், முதலாளித் துவத்தை மறுத்து உழைப்பாளிகளின் நலன்களுக் காக, சுரண்டலாளர்கள் இல்லாத தம் எதிர்காலத்தை கட்ட முன்னர் ஒடுக்கப்பட்டு கிடந்த மக்களினங்களுக்கு உள்ள வாய்ப்புகள் அதிகரித்துள்ளதை இவற்றின் அனுபவம் மெய்ப்பிக்கிறது. இது பெரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விஷயமாகும்.

இன்று முதலாளித்துவ, சோஷலிச என்று இரண்டு விதமான தேசிய இனங்கள் இருக்கின்றன; அவை ஒன்றுக்கொன்று முற்றிலும் எதிரான சமூக-பொருளாதார அடிப்படைகளை, வர்க்கக் கட்டமைப்புகளை, அரசியல் அமைப்புகளை, மனோபாவங்களைக் கொண்டிருக்கின்றன.

முதலாளித்துவம் தோன்றிய பொழுது முதலாளித்துவ தேசிய இனங்கள் தோன்றின. அவை பொருளாதார ரீதியில் முதலாளித்துவ உற்பத்தி முறை மற்றும் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. பூர்ஷ்வா தேசிய இனங்களில் முதலாளி வர்க்கம், பாட்டாளி வர்க்கம் என்னும் இரண்டு பகைமையான வர்க்கங்கள் இருக்கின்றன, எனவே அவை இரண்டாகப் பிரிந்திருக்கின்றன. அவற்றுக்குள் இடைவிடாத வர்க்கப் போராட்டம் நடைபெறுகிறது. முதலாளித்துவ தேசிய இனங்களுக்கு இடையில் ஆதிக்கம் மற்றும் கீழ்ப்படுதலின் அடிப்படையில் உறவுகள் அமைந்திருக்கின்றன. தேசிய இன சமமின்மை மற்றும் விரோதம், பரஸ்பர அவநம்பிக்கை, தேசிய சுயநலம் ஆகியவை அவற்றின் குறியடையாளங்களாகும்.

பூர்ஷ்வா சித்தாந்தம் மற்றும் அரசியலில் முதலாளித் துவ தேசிய இனங்களுக்கு இடையிலுள்ள உறவு களின் தன்மை தேசியவாதத்தில் வெளிப்படுகிறது.

ஒரு குறிப்பிட்ட தேசிய இனத்தின் தனிப் பெருமை பிரச்சாரம் செய்யப்படுகிறது; மற்ற தேசிய இனங்களின் பால் அவநம்பிக்கையும் பகைமையும் கடைப்பிடிக்கப்படுகின்றன. தேசியவாதத்துக்கு இரண்டு வடிவங்கள் இருக்கின்றன. ஒரு பக்கத்தில் ஆதிக்கம் செய்கின்ற தேசிய இனத்தின் வல்லரசு இனவெறி; இது பிற தேசிய இனங்களின் பால் இறுமாப்பான அணுகுமுறையைக் கடைப்பிடிக்கிறது; இது மிகவும் பிற்போக்கானது. எனவே தொழிலாளி வர்க்கம் இதை உறுதியாக நிராகரிக்கிறது. மறுபக்கத்தில் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் தேசியவாதம் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து சுதந்திரத்துக்குப் போராடுகின்ற போக்கைக் கொண்டிருக்கிறது; ஆகவே பாட்டாளி வர்க்கம் அதை ஆதரிக்கிறது. ''எந்தவொரு ஒடுக்கப்படும் தேசத்தினதும் முதலாளித்துவத் தேசியவாதத்திலும் ஒடுக்குமுறையை எதிர்த்து நெறியாக்கம் செய்யப்பட்டதான பொதுவான ஜனநாயக உட்பொருள் இருக்கிறது, இந்த உட்பொருளைத்தான் நாம் நிபந்தனையின்றி ஆதரிக்கிறோம்''* என்று லெனின் கூறினார். சுதந்திரத்துக்காகப் போராடிக் கொண்டிருக்கின்ற சில ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் தேசியவாதம் இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தது.

எனினும் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் தேசியவாதத்தின் முற்போக்கான தன்மை, தேசிய விடுதலை இயக்கத்தில் தேசிய முதலாளி வர்க்கத்தின் வரலாற்று ரீதியில் முற்போக்கான பாத்திரத்தின் தற்காலிகமான தன்மையினால் தற்காலிகமாகவும் மறையக் கூடியதாகவும் இருக்கிறது.

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 3, 1980, பக்கம் 318.

முதலாளித்துவ சமூகத்தில் இருக்கின்ற மக்கள் இனங்களையும் தேசிய இனங்களையும் கொண்டு சோஷலிசத்தின் கீழ் சோஷலிஸ்ட் தேசிய இனங்கள் அமைக்கப்படுகின்றன. அவை ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவி என்னும் பொருளாதார உறவுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. அவை சுரண்டல்காரர்கள், சுரண்டப்படுபவர்கள் என்று இரண்டாகப் பிரிந்திருக்கவில்லை; அங்கே ஜீவாதாரமான நலன்களைப் பகிர்ந்து கொண்டு, சர்வதேசியவாதத்தில் ஒன்று சேர்ந்துள்ள தோழமையான வர்க்கங்களும் சமூகப் பிரிவுகளும் இருக்கின்றன.

அத்தகைய தேசிய இனங்கள் சோவியத் யூனியனிலும் மற்ற சோஷலிஸ்ட் நாடுகளிலும் இருக்கின்றன. சோவியத் யூனியனைப் போன்ற சோஷலிஸ்ட் பல் தேசிய இன அரசில், தேசிய இனங்களுக்கு இடையிலுள்ள உறவுகள் இரண்டு முக்கியமான கூறுகளைக் கொண்டிருக்கின்றன: 1) ஒவ்வொரு தேசிய இனத்தின் வளர்ச்சியும் முன்னேற்றமும்; 2) அவை மேன்மேலும் நெருங்கி வருதல்.

தேசிய இனங்களுக்கு இடையில் நல்லிணக்க நிலை முக்கியமான போக்காகிக் கொண்டிருக்கிறது, பல திட்டவட்டமான நிகழ்வுகளில் அது வெளிப்படுகிறது. சோவியத் மக்களினங்களை நெருக்கமாகக் கொண்டு வருவதிலும் அவர்களுடைய நட்புறவுக் கூட்டணியையும் ஒற்றுமையையும் வலுப்படுத்துவதிலும் ருஷ்ய மொழி மாபெரும் பாத்திரத்தை வகிக்கிறது. மிகவும் சமீபத்திய மக்கள்தொகைக் கணக்கின்படி சோவியத் யூனியனில் 153.5 மில்லியன் மக்கள் ருஷ்ய மொழியைத் தங்களுடைய தாய்மொழி என்று கூறினார்கள் (அவர்களில் 137.2 மில்லியன் மக்கள் ருஷ்யர்கள், 16.3 மில்லியன் மக்கள்

மற்ற தேசிய இனங்களைச் சேர்ந்தவர்கள்). மேலும் 61.3 மில்லியன் மக்கள் இரண்டாவது மொழி என்ற முறையில் தங்களால் ருஷ்ய மொழியை நன்றாகப் பேசவும் படிக்கவும் இயலும் என்று தெரிவித்தார் கள். அவர்கள் சொந்த விருப்பத்தின் பேரில் ருஷ்ய மொழியைக் கற்றிருக்கிறார்கள். ருஷ்ய மொழியைக் கற்றுக் கொள்கின்ற விருப்பம் சோவியத் யூனியனிலுள்ள மக்களினங்களிடம் இயற்கையாக ஏற்படுகிறது. சோவியத் யூனியனில் நூறுக்கும் அதிகமான தேசிய இனங்களும் மக்கள் இனங்களும் இனச் சிறுபான்மையினரும் வசிக் கிறார்கள்; அவர்கள் ஒவ்வொருவருக்கும் சொந்த மொழி உண்டு. ஒருவரோடொருவர் பேசுவதற்கு ஒரு பொது மொழி அவசியம். ருஷ்ய மொழி இந்த மக்களினங் களைச் சேர்ந்த அனைவருக்கும் தொடர்பு மொழியாக வளர்ச்சியடைந்திருக்கிறது.

லெனினிய தேசிய இனக் கொள்கையைத் தொடர்ச்சி யாகப் பின்பற்றுவதும் மக்களினங்களின் நட்புறவை சகலவிதங்களிலும் வலுப்படுத்துவதும் சோஷலிசத்தை மேம்படுத்துவதன் ஒரு பகுதியாகும்.

நெருங்கி வந்திருக்கின்ற தேசிய இனங்கள் முடிவில் ஒன்றாக இணையும். எனினும் தேசிய இனங்கள் இணைவதும் அவற்றுக்கு இடையிலுள்ள வேறுபாடுகள் மறைவதும் நெடுங்கால நிகழ்வுப் போக்காகும். அது சமீப காலத்தில் முடிந்து விடக் கூடியதல்ல. இந்த நிகழ்வுப் போக்கைத் தடை செய்யக் கூடாது, அதைத் துரிதப்படுத்தவும் கூடாது என்று மார்க்சியவாதிகள் கருதுகிறார்கள்.

பூர்ஷ்வா தேசியவாதத்தைப் பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம் எதிர்க்கிறது.

சர்வதேசியவாதம் தொழிலாளி வர்க்கம் மற்றும்

அதன் கட்சியின் சித்தாந்தத்துக்கும் கொள்கைக்கும் அடிப்படையான கோட்பாடாகும். பல்வேறு நாடுகளைச் சேர்ந்த உழைக்கும் மக்கள் முகலாளித்துவத்தை எதிர்த்தும், சமூக, தேசிய விடுதலை, சோஷலிசம் மற்றும் கம்யூனிசத்தை ஆதரித்தும் நடத்துகின்ற போராட்டத்தின் சர்வதேச ஒருமைப்பாட்டுக்கு அது உருவகமாக இருக்கிறது.

பாட்டாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் எந்த அரசு அல்லது தேசிய இனத்தவராக இருப்பினும் அவர்களுடைய பொதுவான வர்க்க நலன்களிலும் அவர்களுடைய போராட்டத்தின் முடிவான இலட்சியத்திலும் சர்வதேசியவாதம் வேரூன்றியிருக்கிறது. சர்வதேச கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் உதய காலத்தில் அது தோன்றியது; மார்க்சும் எங்கெல்சும் லெனினும் அதைத் தத்துவ ரீதியில் நிறுவினார்கள். மார்க்சும் எங்கெல்சும் ''உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!'' என்னும் தற்பொழுது பிரபலமான சர்வதேசியவாத கோஷத்தை வகுத்தளித்தார்கள்.

மார்க்சிய-லெனினியவாதிகள் ''பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம்'' என்னும் கருத்துடன் ''சோஷலிஸ்ட் சர்வதேசியவாதம்'' என்னும் கருத்தைப் பரவலாக உபயோகிக்கிறார்கள். அது பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதத்தை நவீன நிலைமைகளுக்குத் தகவமைத்திருக்கின்ற கருத்து. சோஷலிஸ்ட் சர்வதேசியவாதம் எல்லா நாடுகளையும் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்தினருக்கு இடையில் உள்ள உறவுகளுக்கு மட்டும் உபயோகிக்கப்படுவதல்ல, பல்தேசிய சோஷலிஸ்ட் அரசில் சோஷலிஸ்ட் மக்கள் இனங்களுக்கும் தேசிய இனங்களுக்கும் இடையிலுள்ள உறவுகளுக்கும் உபயோகிக்கப்படுகிறது.

சோஷலிசத்தை நிர்மாணிப்பதில் ஈடுபட்டிருக்கின்ற

நாடுகளுக்கு இடையிலுள்ள உறவுகளும் சோஷலிஸ்ட் சர்வதேசியவாதக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. உலக சோஷலிஸ்ட் அமைப்பில் வளர்ச்சியடைந்து வருகின்ற சோஷலிஸ்ட் குடும்பம் மனித குலத்தின் வளர்ச்சிப் பாதையில் ஒரு புதிய எல்லையை, சுதந்திரமான மக்களின் எதிர்கால மாதிரிப் படிவத்தைக் குறிக்கிறது.

உண்மையான மார்க்சிய-லெனினியவாதிகள் அனைவரும் மெய்யான, முரணில்லாத சர்வதேசியவாதிகள். அவர்கள் சுறுசுறுப்பான சர்வதேசியவாதத்தின் மீதும் அன்றாட நடவடிக்கைகளில் அதை அமுலாக்குவதைப் பற்றியும் விசேஷமான அக்கறை கொண்டிருக்கிறார்கள்.

## வர்க்கங்களும் வர்க்க உறவுகளும்

உற்பத்திச் சாதனங்களின் தனியுடைமையை அடிப்படை யாகக் கொண்ட உற்பத்தி உறவுகள் நிலவுகின்ற சமூகங்களில் வர்க்கங்களும் வர்க்க உறவுகளும் சமூகக் கட்டமைப்புக்களில் முக்கியமான கூறுகளாக இருக் கின்றன. லெனின் மாபெரும் தொடக்கம் என்னும் கட் டுரையில் வர்க்கங்களைப் பின்வருமாறு வரையறுத் திருக்கிறார்: ‘‘வர்க்கங்கள் என்பவை வரலாற்று வழியில் நிர்ணயிக்கப்பட்ட சமூகப் பொருளுற்பத்தி அமைப்பில் அவை வகிக்கும் இடத்தாலும், உற்பத்திச் சாதனங்களுடன் அவற்றுக்குள்ள உறவாலும் (மிக பெரும்பாலும் இது சட்டத்தால் நிலைநிறுத்தப்பட்டு வரையறுக்கப்பட்டிருக்கிறது), உழைப்பின் சமூக ஒழுங் கமைப்பில் அவற்றுக்குள்ள பாத்திரத்தாலும், ஆகவே சமூகச் செல்வத்தில் அவற்றின் செயலாட்சிக்கு உட்படும் பங்கின் பரிமாணங்களாலும், இந்தப் பங்கை அவை

சுவாதீனமாக்கிக் கொள்ளும் முறையினாலும் ஒன்றுக் கொன்று வேறுபடும் பெரும் மக்கள் பகுதிகளாகும்''*.

இங்கே லெனின் வர்க்கங்களின் முக்கியமான பொருளாதார குணாம்சங்களைச் சுட்டிக்காட்டுகிறார். எனினும் வர்க்க வேறுபாடுகள் அரசியல், அன்றாட வாழ்க்கை, சித்தாந்தம் இதரவற்றிலும் வெளிப்படுகின்றன. ஒவ்வொரு வாக்கத்துக்கும் சொந்த அரசியல் உணர்வு, அறவியல் இதரவை இருக்கின்றன. எனினும் அவை அனைத்தும் எல்லாவற்றிலும் மிக முக்கியமான வேறுபாடாகிய பொருளாதார வேறுபாடுகளினால் நிர்ணயிக்கப்படு கின்றன.

உற்பத்திச் சாதனங்களுடன் மக்களுடைய உறவுதான் மிகவும் அவசியமான வர்க்க குணாம்சமாகும். இது மற்ற எல்லா குணாம்சங்களையும் நிர்ணயிக்கிறது. முதலாளித்துவ சமூகத்தில் முதலாளி வர்க்கம் அடிப் படையான உற்பத்திச் சாதனங்களை உடைமையாகக் கொண்டிருப்பதால் அது சமூகம் படைக்கின்ற பொரு ளாயத மற்றும் ஆன்மீக மதிப்புகளில் பெரும் பகுதியை லாபத்தின் வடிவத்தில் சுவீகரித்துக் கொள்கிறது, பொருளாதாரத் துறையில் மட்டுமின்றி அரசியல், சித்தாந்தத் துறைகளிலும் ஆதிக்கம் செலுத்துகிறது.

வர்க்கங்கள் உற்பத்திச் சாதனங்களுடன் கொண் டுள்ள உறவுகளில்தான் வேறுபடுகின்றன என்ற உண் மையை அங்கீகரிப்பது அதிகமான முக்கியத்துவத்தைக் கொண்ட புரட்சிகரமான முடிவுகளுக்கு இட்டுச் செல்லும். வர்க்கங்களை ஒழித்து வர்க்கங்களே இல்லாத சமூகத்தை நிர்மாணிப்பது உற்பத்திச் சாதனங்களின்

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 9, 1982, பக்கங்கள் 312—313.

தனியுடைமையை ஒழிப்பதை உள்ளடக்கியிருக்கிறது; லெனின் குறிப்பிட்டதைப் போல, "சமூகம் முழுமைக்கும் பொதுவான உற்பத்திச் சாதனங்களைப் பொறுத்தவரை குடிமக்கள் எல்லோரையும் சமமான நிலையில் வைப் பது"* தேவை. உற்பத்திச் சாதனங்களின் பொது மக்கள் உடைமை சோஷலிசத்தின் பொருளாதார அடிப்படையாக இருக்கிறது. அதனால்தான் உற்பத்திச் சாதனங்களை சோஷலிஸ்ட் திசைவழியில் சமூகமயமாக்க வேண்டும் என்ற கோரிக்கை சோஷலிசத்தை நிர் மாணித்துக் கொண்டிருக்கின்ற அல்லது நிர்மாணிக்க உத்தேசிக்கின்ற கட்சிகளின் செயல்திட்டங்களில் முக் கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது.

வர்க்கங்கள் எல்லாக் காலத்திலும் இருக்கவில்லை. அவை எப்படித் தோன்றின என்பதை எங்கெல்ஸ் டூரிங்குக்கு மறுப்பு மற்றும் குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம் என்ற நூல்களில் விரிவாக விளக்கியிருக்கிறார்.

எங்கெல்ஸ் வர்க்கங்கள் தோன்றிய நிகழ்வுப்போக்கைப் பொருள்முதல்வாத நிலையிலிருந்து ஆராய்ந்தார். வர்க் கங்களின் தோற்றம் நேரடியாகப் பொருளாதாரக் காரணிகளையும் பொருளாயத உற்பத்தியின் வளர்ச்சி யையும் பொறுத்திருக்கிறது என்று அவர் நிரூபித்தார்.

பூர்விக கூட்டு வாழ்க்கை அமைப்பு தகர்ந்து கொண்டிருந்த காலகட்டத்தில் வர்க்கங்கள் தோன்றின. வர்க்கங்களின் தோற்றத்துக்குப் பொதுவான முன்நிபந் தனையாக இருந்த உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி உபரிப் பொருள் உற்பத்தியை, உழைப்புப் பிரிவினையை,

---

* V. I. Lenin, "A Liberal Professor of Equality", *Collected Works,* Vol. 20, p. 146.

பண்டங்களின் பரிவர்த்தனையை மற்றும் உற்பத்திச் சாதனங்களின் தனியுடைமையை ஏற்படுத்தியது. உபரிப் பொருள் உற்பத்தி சுரண்டலை சாத்தியமாக்கியது. அதற்கு முன்பு ஒரு நபருடைய உற்பத்திப் பொருளை அவரிடமிருந்து எடுத்துக்கொண்டால் அவருக்கு மரணம் நிச்சயம், வேறு வழியில்லை. ஆனால் இப்பொழுது அவர் தன்னுடைய வாழ்க்கைக்கு அவசியமானதைக் காட்டிலும் அதிகமாக உற்பத்தி செய்தார். எனவே அவருடைய உபரிப் பொருளை ஆபத்தான விளைவுகள் ஏதுமின்றி அடுத்த நபர் சுவீகரித்துக் கொள்ள முடியும். உற்பத்தியாளர் இன்னும் உயிரோடிருக்க முடியும், வேலை செய்ய முடியும், அதாவது அவர் இன்னும் தொடர்ந்து உபரிப் பொருளை உற்பத்தி செய்ய முடியும். பரிவர்த்தனை வடிவங்களின் வளர்ச்சியும் உழைப்பின் உற்பத்தித் திறன் வளர்ச்சியும் உற்பத்திச் சாதனங்களின் தனியுடைமையின் தோற்றத்துக்கு உதவி யாக இருந்தன. இதன் விளைவாகப் பொருளாதார ஏற்றத்தாழ்வு தோன்றியது. சிலர் அதிகமாக வைத்திருந் தார்கள், மற்றவர்கள் குறைவாக வைத்திருந்தார்கள்; இன்னும் சிலரிடம் ஒன்றுமே இல்லை. உடைமை இல்லாதவர்கள் உடைமை உள்ளவர்களைச் சார்ந்திருந் தார்கள்.

வரலாற்றில் முதன் முதலில் ஏற்பட்ட வர்க்க சமூகம் அடிமை உடைமைச் சமூகமே. சுரண்டல் காரர்கள் (அடிமை உடைமையாளர்கள்) முதலில் குடிமரபு மற்றும் குலச் சமுதாயத் தலைவர்களை (பூசாரிகள், பெரியவர்கள், இராணுவத் தலைவர்கள்) சமூகத்தின் சாதாரண உறுப்பினர்களிடமிருந்து பிரிப் பதன் மூலம் தோன்றினார்கள். யுத்தக் கைதிகளையும் கடனாளிகளாகிவிட்ட குடிமரபு மற்றும் குலச் சமுதாய

தனியுடைமையை ஒழிப்பதை உள்ளடக்கியிருக்கிறது; லெனின் குறிப்பிட்டதைப் போல, "சமூகம் முழுமைக்கும் பொதுவான உற்பத்திச் சாதனங்களைப் பொறுத்தவரை குடிமக்கள் எல்லோரையும் சமமான நிலையில் வைப் பது"* தேவை. உற்பத்திச் சாதனங்களின் பொது மக்கள் உடைமை சோஷலிசத்தின் பொருளாதார அடிப்படையாக இருக்கிறது. அதனால்தான் உற்பத்திச் சாதனங்களை சோஷலிஸ்ட் திசைவழியில் சமூகமயமாக்க வேண்டும் என்ற கோரிக்கை சோஷலிசத்தை நிர் மாணித்துக் கொண்டிருக்கின்ற அல்லது நிர்மாணிக்க உத்தேசிக்கின்ற கட்சிகளின் செயல்திட்டங்களில் முக் கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது.

வர்க்கங்கள் எல்லாக் காலத்திலும் இருக்கவில்லை. அவை எப்படித் தோன்றின என்பதை எங்கெல்ஸ் **டூரிங்குக்கு மறுப்பு** மற்றும் **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** என்ற நூல்களில் விரிவாக விளக்கியிருக்கிறார்.

எங்கெல்ஸ் வர்க்கங்கள் தோன்றிய நிகழ்வுப்போக்கைப் பொருள்முதல்வாத நிலையிலிருந்து ஆராய்ந்தார். வர்க் கங்களின் தோற்றம் நேரடியாகப் பொருளாதாரக் காரணிகளையும் பொருளாயத உற்பத்தியின் வளர்ச்சி யையும் பொறுத்திருக்கிறது என்று அவர் நிரூபித்தார்.

பூர்விக கூட்டு வாழ்க்கை அமைப்பு தகர்ந்து கொண்டிருந்த காலகட்டத்தில் வர்க்கங்கள் தோன்றின. வர்க்கங்களின் தோற்றத்துக்குப் பொதுவான முன்நிபந் தனையாக இருந்த உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி உபரிப் பொருள் உற்பத்தியை, உழைப்புப் பிரிவினையை,

---

* V. I. Lenin, "A Liberal Professor of Equality", *Collected Works*, Vol. 20, p. 146.

பண்டங்களின் பரிவர்த்தனையை மற்றும் உற்பத்திச் சாதனங்களின் தனியுடைமையை ஏற்படுத்தியது. உபரிப் பொருள் உற்பத்தி சுரண்டலை சாத்தியமாக்கியது. அதற்கு முன்பு ஒரு நபருடைய உற்பத்திப் பொருளை அவரிடமிருந்து எடுத்துக்கொண்டால் அவருக்கு மரணம் நிச்சயம், வேறு வழியில்லை. ஆனால் இப்பொழுது அவர் தன்னுடைய வாழ்க்கைக்கு அவசியமானதைக் காட்டிலும் அதிகமாக உற்பத்தி செய்தார். எனவே அவருடைய உபரிப் பொருளை ஆபத்தான விளைவுகள் ஏதுமின்றி அடுத்த நபர் சுவீகரித்துக் கொள்ள முடியும். உற்பத்தியாளர் இன்னும் உயிரோடிருக்க முடியும், வேலை செய்ய முடியும், அதாவது அவர் இன்னும் தொடர்ந்து உபரிப் பொருளை உற்பத்தி செய்ய முடியும். பரிவர்த்தனை வடிவங்களின் வளர்ச்சியும் உழைப்பின் உற்பத்தித் திறன் வளர்ச்சியும் உற்பத்திச் சாதனங்களின் தனியுடைமையின் தோற்றத்துக்கு உதவி யாக இருந்தன. இதன் விளைவாகப் பொருளாதார ஏற்றத்தாழ்வு தோன்றியது. சிலர் அதிகமாக வைத்திருந் தார்கள், மற்றவர்கள் குறைவாக வைத்திருந்தார்கள்; இன்னும் சிலரிடம் ஒன்றுமே இல்லை. உடைமை இல்லாதவர்கள் உடைமை உள்ளவர்களைச் சார்ந்திருந் தார்கள்.

வரலாற்றில் முதன் முதலில் ஏற்பட்ட வர்க்க சமூகம் அடிமை உடைமைச் சமூகமே. சுரண்டல் காரர்கள் (அடிமை உடைமையாளர்கள்) முதலில் குடிமரபு மற்றும் குலச் சமுதாயத் தலைவர்களை (பூசாரிகள், பெரியவர்கள், இராணுவத் தலைவர்கள்) சமூகத்தின் சாதாரண உறுப்பினர்களிடமிருந்து பிரிப் பதன் மூலம் தோன்றினார்கள். யுத்தக் கைதிகளையும் கடனாளிகளாகிவிட்ட குடிமரபு மற்றும் குலச் சமுதாய

உறுப்பினர்களையும் அடிமைகளாக்கிய பொழுது சுரண்டப் படுகின்ற வர்க்கம் தோன்றியது.

உலகத்தின் வெவ்வேறு பிரதேசங்களில் வெவ்வேறு சமயங்களில் வர்க்கங்கள் தோன்றின; அவை தமக்குரிய பிரத்யேகமான கூறுகளைக் கொண்டிருந்தன. ஆதிக்கால வர்க்க சமூகங்கள் எகிப்து மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் கி. மு. நாலாயிரத்தின் கடைசியிலும் மூவாயிரத்தின் ஆரம்பத்திலும் தோன்றியதாக வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். உலக மக்களினங் களில் பெரும்பான்மையினர் மத்தியில் வர்க்கங்கள் பல ஊழிகளாக இருந்து வந்திருக்கின்றன. எனினும் பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கியிருந்து காலனி யாதிக்கத்திலிருந்து சமீபத்தில் விடுதலையடைந்த சில நாடுகளில் (உதாரணமாக, வெப்பமண்டல ஆப்பிரிக்கா) வர்க்க உருவாக்க நிகழ்வுப் போக்கு இன்னும் நடை பெற்றுக் கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு சமூக-பொருளாதார அமைப்பும் (பூர்விக கூட்டு வாழ்க்கை அமைப்பைத் தவிர) ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் பிரதான மற்றும் துணை வர்க்கங்களைக் கொண்ட திட்டவட்டமான வர்க்கக் கட்டமைப்பையும் வர்க்க இடையுறவுகளையும் கொண்டிருக்கிறது. குறிப்பிட்ட உற்பத்தி முறையினால் படைக்கப்பட்டவை பிரதான வர்க்கங்கள்; உதாரணமாக, பகையியலான வர்க்க சமூகத்தில் அடிப்படையான உற்பத்திச் சாதனங்களை உடைமையாகக் கொண்டிருக்கும் வர்க்கமும் தன்னுடைய பகைவனாகிய சுரண்டப்படுகின்ற வர்க்கமும் இவை. அடிமை உடைமைச் சமூகத்தில் அடிமைகளும் அடிமை உடைமையாளர்களும், நிலப்பிரபுத்துவ அமைப்பில் விவசாயிகளும் நிலப்பிரபுக்களும், முதலாளித்துவத்தின் கீழ் பாட்டாளி வர்க்கமும் முதலாளி வர்க்கமும்

பகையியலான சமூகங்களில் முக்கியமான வர்க்கங்களாக இருக்கின்றன. ஆதிக்கம் செலுத்துகின்ற உற்பத்தி முறையினால் தோற்றுவிக்கப்படாத துணை வர்க்கங்களும் (உதாரணமாக, அடிமை உடைமைச் சமூகத்தில் சுதந்திரமான கைவினைஞர்கள், முதலாளித்துவ சமூகத்தில் விவசாயிகள் இதரர்) உண்டு. மேலும், வர்க்கங்களாக இல்லாத, ஆனால் அநேகமாக வர்க்கங்களை ஒத்திருக்கின்ற பல்வேறு சமூகப் பிரிவுகளும் (உதாரணமாக, அறிவுஜீவிகள், திருச் சபையினர்) இருக்கின்றன. வர்க்கங்கள் ஒரே சீரானவை அல்ல. உதாரணமாக, முதலாளித்துவத்தின் கீழ் தொழில்துறை மற்றும் விவசாயப் பாட்டாளி வர்க்கம் இருக்கிறது; முதலாளி வர்க்கத்துக்குள்ளாகக் குட்டி முதலாளி வர்க்கம், நடுத்தர முதலாளி வர்க்கம் மற்றும் ஏகபோக முதலாளி வர்க்கம் இருக்கின்றன.

சில மக்களினங்களில் சாதி முறை இருந்தது. சமூக அமைப்பில் சில பிரிவினர் பரம்பரையாகவும் மிகவும் தனித்த முறையிலும் குறிப்பிட்ட இடத்தை வகிக்கின்ற முறை சாதி அமைப்பு எனப்படும். அவர்கள் மரபுவழியாக சில வேலைகளைச் செய்துவந்தார்கள்; அவர்களுக்கு இடையில் மிகவும் குறைவான தொடர்புகளே இருந்தன. பண்டைக்கால மற்றும் மத்தியகால அரசுகள் பலவற்றின் சமூக அமைப்பில் சாதி முறையின் கூறுகள் இருந்தன. பண்டைக்கால எகிப்தில் தனிச் சலுகைகளைக் கொண்ட மதகுருக்கள் இருந்தனர்; ஜப்பானில் ராணுவ வகுப்பினர்கள் இருந்தனர் இதரவை. இந்தியாவில் சாதி அமைப்பு அனைத்தையும் தழுவியிருந்தது.

சில நாடுகளில் சாதிப் பிரிவினையின் எச்சங்கள் இன்றளவும் நீடிக்கின்றன. சாதிகள் சமூக வளர்ச்சிக்கு மாபெரும் தடையாக இருந்தன, இன்று இன்னும்

அதிகமாகவே இருக்கின்றன. கீழ்த்திசை நாடுகளில் சாதிப் பிரிவினைகளையும் தப்பெண்ணங்களையும் ஒழிக்காமல் பின்தங்கிய நிலையை அகற்ற முடியாது.

வர்க்கங்கள் கெட்டிப்பட்டவுடன் வர்க்கங்களுக்கு இடையில் போராட்டம் ஆரம்பமாகிறது. பகையியலான சமூகங்கள் அனைத்திலும் வர்க்கப் போராட்டங்கள் நடைபெற்றிருப்பதை வரலாறு நிரூபிக்கிறது. நமக்குத் தெரிந்த பகையியலான சமூகங்கள் அனைத்தின் வரலாறுமே வர்க்கப் போராட்டங்களின் வரலாறு என்று மார்க்சும் எங்கெல்சும் **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையில்** எழுதினார்கள். ''சுதந்திரமுடையானும் அடிமையும், பட்ரீஷிய உயர்குலச் சீமானும் பிலெபியப் பாமரக் குடியோனும், நிலப்பிரபும் பண்ணையடிமையும், கைவினைச் சங்க ஆண்டானும் கைவினைப் பணியாளனும், சுருங்கக் கூறுமிடத்து ஒடுக்குவோரும் ஒடுக்கப்படுவோரும் ஒருவருக்கொருவர் தீராப்பகை கொண்டோராய், ஒரு நேரம் மறைவாகவும் ஒரு நேரம் பகிரங்கமாகவும், இடையறாப் போராட்டம் நடத்தி வந்தனர். இந்தப் போராட்டம் சமுதாயம் முழுவதன் புரட்சிகரப் புத்தமைப்பிலோ, அல்லது போராடும் வர்க்கங்களது பொது அழிவிலோதான் எப்போதும் முடிவுறலாயிற்று.'' *

தொழிலாளர்களின் வர்க்கப் போராட்டத்தைக் கண்டு நடுங்கிய பூர்ஷ்வா சித்தாந்திகள், அது தற்செயலாக ஏற்படுவது, வரலாற்று வளர்ச்சியைத் தடுப்பது என்று நிரூபிப்பதற்குப் பாடுபடுகிறார்கள். மார்க்சிய-லெனினியம் இக்கற்பனைகளை நிராகரித்து

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில்**, தொகுதி *1*, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, *1983*, பக்கம் *191*.

வர்ககப் போராட்டம் தவிர்க்க முடியாதது என்று நிரூபித்திருக்கிறது.

வர்க்க நலன்களின் மாறுபட்ட தன்மை வர்க்கப் போராட்டத்தின் தோற்றுவாய். முதலாளித்துவ சமூகத்தில் தொழிலாளி மற்றும் முதலாளியின் நலன்கள் எதிரிடையாகவும் சமரசப்படுத்த முடியாதவையாகவும் இருக்கின்றன. முதலாளி வர்க்கம் சுரண்டலை அதிகப்படுத்துவதிலும் முதலாளித்துவ அமைப்பைப் பாதுகாப்பதிலும் அதன் பொருளாதார, அரசியல் ஆகிக்கத்தை வலுப்படுத்துவதிலும் அக்கறை கொண்டிருக்கிறது. தொழிலாளி வர்க்கம் — முதலாளித்துவத்தின் கீழ் அதன் புறநிலை காரணமாக — சுரண்டல், தனியுடைமை, அதை அடிப்படையாகக் கொண்ட சமூக ஒடுக்குமுறை ஆகியவற்றை அகற்றுவதிலும் சுரண்டல் அரசை ஒழிப்பதிலும் அக்கறை கொண்டிருக்கிறது.

பகையியலான சமூக அமைப்புகளில் வர்க்கப் போராட்டமே சமூக வளர்ச்சியின் இயக்கு சக்தி என்பதை மார்க்சும் எங்கெல்சும் எடுத்துக் காட்டினார்கள். சமூக வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் வர்க்கப் போராட்டம் தவிர்க்க முடியாதபடி சமூகப் புரட்சிக்கு வழி வகுக்கிறது. புரட்சி வர்க்கப் போராட்டத்தின் சிகரமாக இருக்கிறது; அப்பொழுது புரட்சிகர வர்க்கம் அரசியல் அதிகாரத்தை மேற்கொள்கிறது, சமூக உறவுகள் அனைத்திலும் தீவிரமான மாற்றங்கள் ஏற்படுகின்றன. பழைய சமூக-பொருளாதார அமைப்பு சமூகப் புரட்சியின் மூலமாகப் புதிய அமைப்பை நோக்கி முன்னேறுகிறது, அதாவது வரலாற்று முன்னேற்றம் சாதிக்கப்படுகிறது. சமூக வளர்ச்சியின் அவசரக் கடமைகளை நிறைவேற்றுவதற்குப் புரட்சிகரமான வர்க்கப் போராட்டம் ஒன்றே வழியாகும்.

பகையியலான ஒவ்வொரு சமூகத்திலும் வர்க்கப் போராட்டம், உற்பத்தி முறை மற்றும் சமூகத்தின் வர்க்கக் கட்டமைப்பினால் நிர்ணயிக்கப்படுகின்ற அதற்குரிய பிரத்யேகமான கூறுகளைக் கொண்டிருக்கிறது.

முதலாளித்துவ சமூகம் ஆழமான சமூக மாறுபாடுகளையும் வர்க்க முரணியல்புகளையும் கொண்டிருக்கிறது. முதலாளித்துவம் முன்னேறுகின்ற பொழுது சமூகம் எதிரிடையான இரண்டு வர்க்கங்களை — முதலாளி வர்க்கம், பாட்டாளி வர்க்கம் — கொண்டதாக மேன்மேலும் அதிகமாகப் பிரிந்துவிடுகிறது. முந்திய சமூக அமைப்புகளில் நடைபெற்ற வர்க்கப் போராட்டங்களைக் காட்டிலும் பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டம் சிறப்பாக அமைக்கப்பட்டு வளர்ச்சியடைந்திருக்கிறது.

பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டத்தின் ஆரம்ப வடிவம் பொருளாதாரப் போராட்டம், அதாவது அதன் அப்போதைய பொருளாதார நலன்களைப் பாதுகாக்கின்ற போராட்டம் (கூலி உயர்வு மற்றும் உழைப்பு நிலைமைகளில் முன்னேற்றத்துக்கான போராட்டம், வேலையின்மையை எதிர்த்துப் போராட்டம் இதரவை). இப்போராட்டத்தின் போதுதான் தொழிலாளி வர்க்கத்தின் முதல் ஸ்தாபனங்களான தொழிற் சங்கங்கள் ஏற்படுகின்றன. பொருளாதாரப் போராட்டம் அத்தியாவசியமானது; அது ஆக்கபூர்வமான விளைவுகளை ஏற்படுத்துகிறது. எனினும் அப்போராட்டத்தினால் அடிப்படையான பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. அது தொழிலாளி வர்க்கத்தை ஒரு தனிமொத்தமாக அமைக்காது; அதன் நிகழ்ச்சிப் போக்கில் அரசியல் ஸ்தாபனங்கள் தோன்றுவதில்லை, வர்க்க உணர்வு ஏற்படுவதில்லை.

தொழிலாளர்கள் மற்றும் மக்கள்தொகையின் இதர ஒடுக்கப்படுகின்ற பகுதியினர் தம்முடைய அரசியல் நலன்களை முன்வைப்பது, அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு, முடிவில் அதைக் கைப்பற்று வதற்கு, அரசியல் உறவுகளின் அமைப்பில் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையை நிறுவுவதற்குப் போராடுவது அரசியல் போராட்டமாகும்.

அரசியல் போராட்டம்—அதன் உணர்வு பூர்வமான வடிவத்தில்—சித்தாந்தப் போராட்டமின்றி சாத்தியமல்ல. சித்தாந்தப் போராட்டம் அரசியல் நோக்கங்களைத் தத்துவ ரீதியில் நிறுவி தொழிலாளி வர்க்கத்தை சோஷலிஸ்ட் உணர்ச்சியில் பயிற்றுவித்து அதற்கு ஆன்மீக அடிப்படையைக் கொடுக்கிறது.

இன்று வர்க்கப் போராட்டம் இன்றைய சகாப்தத்தின் குறியடையாளமான அம்சங்களுடன் தொடர்புடைய சில முக்கியமான கூறுகளைப் பெற்றிருக்கிறது. உலக சோஷலிஸ்ட் அமைப்பு மனிதகுலத்தின் வளர்ச்சியில் தீர்மானகரமான காரணியாக வளர்ச்சியடைந்திருப்பது, முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி மேன்மேலும் அதிகரிப்பது, விஞ்ஞான-தொழில்நுட்ப புரட்சி—இவை அனைத்தும் வர்க்கப் போராட்டத்தின் உள்ளடக்கம் மற்றும் வடிவங்கள் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தைச் செலுத்தியிருக்கின்றன.

ஒவ்வொரு நாட்டிலும் மூலதனத்தின் ஆட்சியை எதிர்த்துத் தொழிலாளர்கள் நடத்துகின்ற போராட்டம் உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கின் ஒரு பகுதி என்னும் உண்மை இன்று மறுக்க முடியாத முக்கியத் துவத்தைக் கொண்டிருக்கிறது. முதலாளித்துவ நாடு களின் தொழிலாளி வர்க்க இயக்கமும், சோஷலிசத்தின் வளர்ச்சியும் தேசிய விடுதலை இயக்கமும் சேர்ந்து

உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கை உருவாக்குகின்றன. இன்று வளர்ச்சியடைந்த அல்லது வளர்முக முதலாளித் துவ நாட்டின் புரட்சிகர இயக்கத்தை இரண்டு உலக அமைப்புகளின் போராட்டத்திலிருந்து, வளர்ச்சியடைந்த சோஷலிசத்தின் உலக அமைப்பு மற்றும் சர்வதேசத் தொழிலாளி வர்க்கம் முதலாளித்துவத்தை எதிர்த்து நடத்துகின்ற போராட்டத்திலிருந்து பிரித்துப் பார்க்க இயலாது.

இன்று தொழிலாளி வர்க்கத்தின் அணிகளும் மார்க் சிஸ்ட் கட்சிகளின் சக்தியும் வளர்ச்சியடைந்து வரு கின்றன. தொழிலாளி வர்க்கம்தான் நவீன சகாப்தத்தின் முக்கிய புரட்சிகர வர்க்கமாக இருந்தது, இருக்கிறது. மூலதன உலகில் இதுதான் சுரண்டல் அமைப்பை தூக்கியெறிந்து, புதிய சமுதாயத்தைக் கட்டுவதற்காகப் போராடும் முக்கிய சக்தியாகும்.

சமுதாயத்தில் தொழிலாளி வர்க்கத்தின் பாத்திரம் அதிகரிப்பதைப் பற்றிய மார்க்சிய-லெனினிய கருத்து நிலையை வாழ்க்கை மெய்ப்பிக்கிறது. உற்பத்தியில் விஞ்ஞானம் மேன்மேலும் பயன்படுத்தப்படுவதால், உயர் தேர்ச்சி பெற்றவர்கள் மேன்மேலும் அதிகமாக உற்பத்தித் துறைக்கு வருகின்றனர். வர்க்கப் போராட்டத் தில் தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமை அதிகரிக்கிறது, இது தன் அரசியல் கட்சிகளையும் தொழிற்சங்கங் களையும் மற்ற ஸ்தாபனங்களையும் தோற்றுவிக்கிறது, முதலாளித்துவத்திற்கு எதிராக பொருளாதார, அரசியல், சித்தாந்தப் போராட்டத்தை நடத்துகிறது. இப்போராட் டத்தின் அளவுகள் கூடுகின்றன, வடிவங்கள் பன்முகத் தன்மையைப் பெறுகின்றன, உட்சாரம் செழுமை யடைகிறது. பாட்டாளி வர்க்கத்தின் அடிப்படை நலன்கள் தொழிலாளி வர்க்க ஒற்றுமையை நிலைநாட்டு

வதையும், இதன் எல்லா பிரிவுகளின் நடவடிக்கை களையும் ஒத்திசைவிப்பதையும் மேன்மேலும் அவசிய மாக்குகின்றன.

ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் உள்ள விரைவாக வளர்ந்து வரும் இளம் தொழிலாளி வர்க்கத்தின் முன் கடினமான கடமைகள் நிற்கின்றன. அன்னிய மூலதனமும் ஸ்தல சுரண்டலாளர்களும் இத்தொழிலாளி வர்க்கத்திற்கு எதிராக நிற்கின்றனர். போராட்டத்தில்தான் இதன் அரசியல் முதிர்ச்சியும் ஸ்தாபன ஒற்றுமையும் அதிகரிக்கின்றன.

சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கம்தான் தொழிலாளர் இயக்கத்தின், உலக புரட்சிகர நிகழ்ச்சிப் போக்கில் பங்கேற்கும் எல்லா சக்திகளின் முன்னணிப் படையாகும். தொழிலாளி வர்க்கத்தின் உடனடி நோக்கங்கள், நீண்டகால லட்சியங்கள், எல்லா உழைப்பாளிகளின் நலன்கள், சமூக முன்னேற்றம், மக்களினங்களின் தேசிய விடுதலை, படைக் கலைப்பு மற்றும் சமாதானத் திற்காக கம்யூனிஸ்டுகள் போராடுகின்றனர். கம்யூனிச இயக்கம் நவீன காலத்தின் செல்வாக்கு மிக்க சித்தாந்த, அரசியல் சக்தியாகத் திகழுகிறது.

இன்று அநேகமாக 100 நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் இருக்கின்றன; கம்யூனிஸ்டுகளின் மொத்த எண்ணிக்கை 70 மில்லியனுக்கு அதிகம். முதலாளித்துவ நாடுகளிலும் வளர்முக நாடுகளிலும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் பாத்திரம் வளர்ச்சியடைந்து கொண்டிருக் கிறது. கடந்த பத்தாண்டுகளில் மேற்கு ஐரோப்பாவில் மட்டும் சுமார் 8,00,000 மக்கள் அவற்றின் அணி களில் சேர்ந்திருக்கிறார்கள்.

வர்க்கப் போராட்டத்தின் சமூக அடிப்படை தற்பொழுது விரிவடைந்து கொண்டிருக்கிறது, சமூகத்தின்

நடுப்பகுதியினர், இளைஞர்கள் மற்றும் அறிவுப் பகுதியினரில் கணிசமான பகுதியினர் தொழிலாளி வர்க்கத்தினரின் பல்வேறு பகுதியினருடன் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள். ஏகபோகங்களை எதிர்க்கின்ற வெகுஜன சமூக இயக்கங்களின் நடவடிக்கைகள் ஓங்கியிருக்கின்றன; யுத்த எதிர்ப்பு இயக்கம் பரவிக்கொண்டிருக்கிறது.

தொழிலாளர் மற்றும் கம்யூனிஸ்ட் இயக்கம் வீச்சிலும் சக்தியிலும் வளர்ச்சி அடைகின்ற பொழுது சந்தர்ப்பவாதத்துக்கும் திருத்தல்வாதத்துக்கும் எதிரான போராட்டத்தைத் தீவிரப்படுத்த வேண்டிய அவசியமேற்படுகிறது. கம்யூனிஸ்ட் இயக்கத்தில் புதிதாகச் சேருகின்ற பகுதியினர் சில சமயங்களில் பூர்ஷ்வா மற்றும் குட்டி பூர்ஷ்வா சித்தாந்தம் மற்றும் மனோபாவத்தைத் தம்முடன் கொண்டு வருகின்றனர். மார்க்சிய-லெனினியத்தை வளர்ப்பதாகச் சொல்லிக்கொண்டு அதைத் திருத்துவதற்குச் செய்கின்ற முயற்சியே திருத்தல்வாதம். இது சந்தர்ப்பவாதத்துக்கு, தொழிலாளி வர்க்கத்தின் நலன்களுக்கு நேரடியாக துரோகம் செய்து மூலதனத்துக்கு எதிரான போராட்டத்தைக் கைவிடுவதற்கு இட்டுச் செல்கிறது. இரண்டு நிகழ்வுகளும் பூர்ஷ்வா சித்தாந்தம் மற்றும் மனோபாவத்தின் விளைவுகளாகும்.

பூர்ஷ்வா தத்துவாசிரியர்களும் வலதுசாரி சமூக-ஜனநாயகவாத சித்தாந்திகளும் மார்க்சியத்தை திருத்தல்வாத நோக்கில் விமர்சிப்பவர்களும் இன்றைய முதலாளித்துவ சமூகத்தில் வர்க்கப் போராட்டத்தின் முக்கியத்துவத்தை மறுக்கிறார்கள். இப்பிரச்சினையைப் பற்றி பிரிட்டிஷ் லேபர் கட்சியின் தத்துவாசிரியர்களின் கருத்துக்கள் குறியடையாளமாக இருக்கின்றன. வர்க்க அரசியல் போராட்டங்கள் கடந்த காலத்தில் தவிர்க்க முடியாதவை என்பதை அவர்கள் மறுப்பதில்லை,

ஆனால் இன்றைய நிலையில் பிரிட்டனில் அத்தகைய முரண்பாடுகள் ஏற்பட வேண்டிய ஆதாரமில்லை, பொருளாதாரப் பிரச்சினைகள் உள்பட வர்க்க சலுகைகளைப் பற்றிய கருத்து வேறுபாடுகளை பூர்ஷ்வா அரசின் ஜனநாயக அமைப்புக்குள் வெற்றி கரமாகத் தீர்த்துக்கொள்ள முடியும் என்று அவர்கள் வலியுறுத்துகிறார்கள். ஆனால் பிரிட்டனில் தொழிலாளி வர்க்கத்தின் மெய்யான நிலை லேபர் கட்சித் தலைவர் களுடைய கூற்றுக்களுடன் சிறிதளவு கூடப் பொருந்த வில்லை. மற்ற ஐரோப்பிய நாடுகளைப் போலவே பிரிட்டனிலும் அரசியல் போராட்டங்கள் உள்பட வர்க்க மோதல்கள் அன்றாட விஷயமாக இருக்கின்றன. தொழிலாளர்கள் தலைமை தாங்குகின்ற இன்றைய வெகுஜன சமாதான இயக்கம் ஒரு வர்க்க அரசியல் அம்சத்தைக் கொண்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை என்று மட்டும் குறிப்பிடுவதே போதுமானது. அணு யுத்தப் பேராபத்தை எதிர்த்து நடைபெறுகின்ற ஆர்ப்பாட்டங் கள் மக்களுடைய ஜீவாதார நலன்களுக்கு விரோதமான ஏகாதிபத்திய ஆளும் வட்டாரங்களின் கொள்கைகளுக்கு மறுப்பைப் பிரதிநிதித்துவம் செய்கின்றன.

தம்மைத் தொழிலாளர்களின் ''நண்பர்கள்'' — மார்க் சியவாதிகள் என்று கூட — அழைத்துக் கொள்கின்ற சில தத்துவாசிரியர்கள் வர்க்கப் போராட்டத்துக்கும் வர்க்க முரணியல்புக்கும் பதிலாக தேசிய இனங்களுக்கு இடையிலுள்ள, அதாவது, பணக்கார நாடுகளுக்கும் ஏழை நாடுகளுக்கும் இடையிலுள்ள முரணியல்பை வைக்கிறார்கள். ஆப்பிரிக்க மக்களினங்களின் தேசிய விடுதலை இயக்கமும் வர்க்கப் போராட்டமும் பிரதான மாக அந்த நாடுகளின் குறியடையாளமாகிய அடிப் படையான சமூக, பொருளாதார முரண்பாடுகளினால்

நிர்ணயிக்கப்படவில்லை, இரண்டு வகையான தேசிய வாதங்களின் மோதலினால் நிர்ணயிக்கப்படுகின்றன என்று கூறுகிறார்கள். ''மேற்கத்திய'' தேசியவாதம் மிதவாதத்தன்மை கொண்டது, சமரசத்துக்கு முன் வருவது, ''கிழக்கத்திய'' தேசியவாதம் ''ஆக்கிரமிப்புத் தன்மை'' கொண்டது, கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தை நோக்கிச் சாய்வது என்று பேசுகிறார்கள். ''கிழக்கத்திய'' தேசியவாதம் பலமடைவது மனிதகுலத்துக்கு மாபெரும் ஆபத்து என்றும் கூறுகிறார்கள். எனினும் நாடுகளுக்கு இடையில் ஏற்படுகின்ற சண்டைகளும் அவற்றைப் பிரதிபலிக்கின்ற தேசியவாத சித்தாந்தமும் வர்க்க முரண்பாடுகளிலிருந்து பிரிக்கப்பட முடியாதவை என்று வரலாற்று அனுபவம் எடுத்துக் காட்டுகிறது. அந்த முரண்பாடுகளைத் தீர்ப்பது நாடுகளுக்கு இடையில் நட்புரீதியான உறவுகளை நிறுவுவதற்கு உதவுகிறது. புரட்சிகரமான தொழிலாளி வர்க்கம் மக்களினங் களுக்கிடையில் விரோதத்தை ஏற்படுத்துகின்ற தேசிய வாதத்தைப் பின்பற்றவில்லை, அது எப்பொழுதும் பாட்டாளி வர்க்க மற்றும் சோஷலிஸட் சர்வதேசிய வாதத்தையே பின்பற்றுகிறது.

''உலக நகரங்களுக்கு'' எதிராக ''உலக நாட்டுப் புறம்'' என்னும் தத்துவம் சுரண்டல்காரர்களை எதிர்த்துத் தொழிலாளி வர்க்கம் நடத்துகின்ற சர்வதேச வர்க்கப் போராட்டத்துக்கு மாபெரும் தீங்கைச் செய்துவருகிறது. அது சாராம்சத்தில் புரட்சிகர இயக்கத்தில் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையான பாத்திரத்தை அங்கீகரிப்பதை எதிர்க்கிறது. இக் கருத்தைக் கூறுபவர்கள் யார்? சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் சோஷலிசத்தை ஆதரித்துப் போராடுகின்ற சர்வதேச சக்திகளை வர்க்க ரீதியில் மதிப்பிடுவதற்குப்

பதிலாக மேற்கிலும் கிழக்கிலும், வடக்கிலும் தெற்கிலும் வாழ்கின்ற மக்களினங்களுக்கு இடையில் கற்பனையான விரோதத்தை நிறுவ முயற்சிப்பவர்கள் அவர்கள்.

### சோஷலிசமும் வர்க்கங்களும்

சமூகத்திலுள்ள வர்க்கப் பிரிவினை வரலாற்று ரீதியில் தற்காலிகமானது என்பதை முதலில் நிரூபித்தது மார்க்சியமே. எனினும் வர்க்கங்களை ஒழித்தல் என்பது தனி நடவடிக்கை அல்ல, அது ஒரு மொத்த வரலாற்று சகாப்தம். இத்திசையில் முதல் நடவடிக்கை, மிக முக்கியமான நடவடிக்கை முதலாளித்துவத் திலிருந்து சோஷலிசத்துக்கு மாறுகின்ற காலகட்டமாகும். சோஷலிஸ்ட் மாற்றத்தைத் தேர்ந்தெடுத்திருக்கின்ற எல்லா நாடுகளும் இக்கட்டத்தைக் கடந்து வர வேண்டும்.

சோஷலிஸ்ட் புரட்சி சமூகத்தின் வர்க்கக் கட்டமைப் பில் தீவிரமான மாற்றத்தை ஏற்படுத்துகிறது.

முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறு கின்ற காலகட்டத்தில் பல்தொகுதியான பொருளாதார அமைப்பு ஏற்படுகிறது. இக்காலகட்டத்தில் பெரும்பான்மை யான நாடுகளில் மூன்று வர்க்கங்கள் இருக்கின்றன: பிரதானமாக சோஷலிஸ்ட் பொருளாதாரக் கட்டமைப் புடன் தொடர்புடைய தொழிலாளி வர்க்கம், சிறிய அளவிலான பண்ட உற்பத்தியைப் பெரும்பாலும் பிரதிநிதித்துவம் செய்கின்ற உழைக்கும் விவசாயிகள் மற்றும் நகரத்திலும் நாட்டுப்புறத்திலும் உள்ள முதலா ளித்துவ சக்திகள், இவர்கள் முதலாளித்துவப் பொருளா தாரக் கட்டமைப்புடன் தொடர்புடையவர்கள். நிலப் பிரபுக்கள் என்னும் வர்க்கம் மறைந்து விட்டது.

தொழிலாளி வர்க்கம் சமூகத்தில் தலைமையான சக்தியாக இருக்கிறது. முதலாளித்துவ சக்திகள் இருக்கின்றன என்றாலும் அவற்றின் நிலைகள் மிகவும் அழிக்கப் பட்டுவிட்டன (அவற்றிடமிருந்த அரசியல் அதிகாரம் பறிக்கப்பட்டுவிட்டது, அவற்றின் உடைமையில் கணி சமான பகுதி தேசியமயமாக்கப்பட்டு விட்டது, இதரவை).

முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறு கின்ற காலகட்டத்தில் பகையியலான வர்க்கங்கள் இருப்பதால் அவற்றுக்கு இடையில் போராட்டம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. ஆனால் தற்பொழுது வர்க்க சக்திகளின் அணிச் சேர்க்கை சோஷலிஸ்ட் புரட்சிக்கு முன்பிருந்ததிலிருந்து முற்றிலும் வேறுபடு கிறது: தொழிலாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தை வைத்திருக்கிறது, முதலாளி வர்க்கம் அதை இழந்து விட்டது. வர்க்கப் போராட்டத்தின் வடிவங்களும் வேறுவிதமாக இருக்கின்றன; ஏனென்றால் அவை மாறும் காலகட்டத்தின் பிரத்யேகமான தன்மையைப் பிரதிபலிக்கின்றன.

சோவியத் ருஷ்யாவில் முதல் சில ஆண்டுகளில் நடைபெற்ற சோஷலிஸ்ட் வளர்ச்சியின் அனுபவத்தைத் தொகுத்துரைத்த பொழுது லெனின் வர்க்கப் போராட் டத்தின் பின்வரும் வடிவங்களைக் குறிப்பிட்டார்: 1) சுரண்டல்காரர்களின் எதிர்ப்பை நசுக்குதல்; 2) உள் நாட்டுப் போர்; 3) குட்டி முதலாளித்துவ வர்க் கத்தை, குறிப்பாக விவசாய வர்க்கத்தை ‘‘நடுநிலைப் படுத்துதல்’’; 4) முதலாளித்துவ நிபுணர்களின் திறமையை ‘‘உபயோகித்துக் கொள்ளுதல்’’; 5) புதிய உழைப்புக் கட்டுப்பாட்டை அமுலாக்குதல். முதல் வடிவம் சர்வப் பொதுவானது, அது எல்லா நாடுகளுக்கும் தவிர்க்க முடியாதது. இரண்டாவது வடிவம் தவிர்க்க முடியாத

தல்ல. அது ருஷ்யாவில் நடைபெற்றது. ஏனென்றால் அங்கே உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு எதிர்ப்புரட்சி தொழிலாளர்கள் மீது உள்நாட்டுப் போரைத் திணிப் பதில் வெற்றி அடைந்தது. வியட்நாமிலும் கொரியா விலும் மக்கள், அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களையும் அவர்களுடைய உள்நாட்டுக் கூட்டாளிகளையும் எதிர்த்து விடுதலைப் போர் நடத்தினார்கள். எனினும் மற்ற சில நாடுகளில் வர்க்கப் போராட்டம் அவ்வளவு தீவிரமாக இருக்கவில்லை. முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத் துக்கு மாறுகின்ற காலகட்டத்தில் வர்க்க உறவுகளின் வளர்ச்சியில் ஆசிய மற்றும் ஆப்பிரிக்க நாடுகள் தமக்கே உரிய பிரத்யேகமான கூறுகளைக் கொண்டிருக்கின்றன. சோஷலிஸ்ட் புரட்சிக்கு முன்பு இந்த நாடுகளின் வர்க்கக் கட்டமைப்பு மிகவும் சிக்கலான முறையில் அமைந்திருந்தது. ஏனென்றால் ஏகாதிபத்தியம் அவற்றின் பொருளாதாரங்களை உருக்குலைத்திருந்தது; சில நாடு களில் முதலாளித்துவ உறவுகள் நிலப்பிரபுத்துவ, நிலப்பிரபுத்துவத்துக்கு முந்திய உறவுகளுடன் கூட கலந்திருந்தன. அதிகமான வளர்ச்சியடைந்த முதலாளித் துவ நாடுகளில் சோஷலிஸ்ட் புரட்சியை ஆரம்பிப்பது மிகவும் கடினம், ஆனால் புரட்சி வெற்றியடைந்த பிறகு சோஷலிசத்தை நிர்மாணிப்பது சுலபம், அதை நிர்மாணிப்பதற்குத் தேவைப்படுகின்ற காலம் குறைவு என்று லெனின் அடிக்கடி கூறினார்*. அதே சமயத்தில்

---

* See V. I. Lenin, "Extraordinary Seventh Congress of the R.C.P.(B), March 6—8, 1918. Political Report of the Central Committee, March 7", *Collected Works,* Vol. 27, p. 93; "Session of the All Russia C.E.C., April 29, 1918", *Collected Works,* Vol. 27, p. 291; "Report Delivered at a Moscow Gubernia Conference of Factory Committees, July 23, 1918", *Collected Works,* Vol. 27, p. 547.

பின்தங்கிய நாடுகளில் புரட்சியை ஆரம்பிப்பது பெரும் பாலும் சுலபமாக இருக்கிறது, ''அதைத் தொடர்வதும் வெற்றிகரமாக நிறைவேற்றுவதும் மிகவும் கடினமாக இருக்கும்''* என்றும் லெனின் கூறினார். லெனின் பின்வரும் சார்புநிலையை வகுத்தளித்தார்: ''வரலாற்றின் நெளிவு சுளிவுகள் காரணமாக சோஷலிஸ்டு புரட்சியைத் தொடங்கும் நாடு எவ்வளவு அதிகமாகப் பின்தங்கி நிற்குமோ, பழைய முதலாளித்துவ உறவுகளிலிருந்து சோஷலிஸ்டு உறவுகளுக்கு மாறிச் செல்வது அதற்கு அவ்வளவு கஷ்டமாக இருக்கும்.''** இந்நாடுகள் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறுகின்ற காலகட்டத்தில் தேசிய தொழிலாளி வர்க்கத்தை ஸ்தாபன ரீதியாக ஒழுங்கமைத்தல், அதன் பொருளாதார மற்றும் அரசியல் நிலைகளை வலுப்படுத்துதல், நாட்டின் பொருளாதார மற்றும் கலாசாரப் பின்தங்கிய நிலையை அகற்றுதல், குறுகிய சுயநலம் அல்லது இனவெறியை எதிர்த்துப் போராடுதல் இதரவை முதலிய கடமைகள் வழக்கமாக அந்த நாடுகளை எதிர்நோக்குகின்றன.

சோஷலிஸ்ட் சமூகத்தை நிர்மாணிப்பதென்றால் உற்பத்திச் சாதனங்களின் தனியுடைமையையும் சுரண்டு கின்ற வர்க்கங்களையும் ஒழிப்பது என்று பொருளாகும். சமூகத்தின் வர்க்கக் கட்டமைப்பு தீவிரமாக மாற்றமடை கிறது. சோஷலிஸ்ட் சமூகம் என்பது உழைப்பாளர்களின் சமூகமாகும். தொழிலாளர்களின் ஜீவாதாரமான நலன் களின் ஒற்றுமை அவர்களுடைய சமூக-அரசியல்

---

* V. I. Lenin, "Report Delivered at a Moscow Gubernia Conference of Factory Committees, July 23, 1918", *Collected Works*, Vol. 27, p. 547.

** வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 7, *1981*, பக்கம் *216*.

மற்றும் சித்தாந்த ஒற்றுமையைப் படைக்கிறது. இத்தகைய சமூகத்தை ஏற்படுத்துவது வரலாற்று ரீதியில் ஒரு வெற்றியாகவும் வர்க்கமற்ற சமூகத்தை நோக்கி ஒரு மாபெரும் காலடியாகவும் இருக்கும். ஆனால் சுரண்டுகின்ற வர்க்கங்களையும் வர்க்கப் பகைமைகளையும் ஒழிப்பது பொதுவாக வர்க்கங்களை அகற்றி விடுவதைக் குறிக்காது. வளர்ச்சியடைந்த சோஷலிசத்தின் ஆரம்பக் கட்டத்தில் கூட வர்க்கங்களும் வர்க்க வேற்றுமைகளும் இன்னும் காணப்படுகின்றன.

சோஷலிசத்தின் கீழ் வர்க்கங்கள் இருப்பதற்கு உற்பத்திச் சாதனங்களுக்கும் அவற்றுக்கும் உள்ள உறவில் வேறுபாடுகள் நீடிப்பதும் உழைப்பின் தன்மையில் கணிசமான வேற்றுமைகள் இருப்பதும் காரணமாகும். தொழிலாளி வர்க்கம் பொதுவுடைமையையும் பொது நிறுவனங்களில் உழைப்பதையும் விரும்புகிறது. சோஷலிசத்தின் கீழ் விவசாய வர்க்கமும் சோஷலிஸ்ட் உடைமையை—ஆனால் கூட்டுறவு உடைமை என்னும் கூட்டு வடிவத்தில்—விரும்புகிறது. மூளை உழைப்பு மற்றும் உடலுழைப்பில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இடையிலுள்ள வேறுபாடுகள் காரணமாக அறிவுப் பகுதியினர் சுயேச்சையான சமூகப் பிரிவாக இருக்கின்றனர். மூளை உழைப்பில் ஈடுபடுபவர்கள் அறிவுப் பகுதியினராவர்.

இன்றைய காலகட்டத்தில் சோவியத் நாட்டில் சமூக உறவுகளின் வளர்ச்சியில் ஒரு முக்கிய நியதி காணப்படுகிறது—அதாவது தொழிலாளி வர்க்கமும் கூட்டுப் பண்ணை விவசாயிகளும் அறிவுத் துறையினரும் நெருங்கி வருகின்றனர், வர்க்கங்களற்ற சமுதாயக் கட்டமைவு உருவாகும் நிகழ்ச்சிப் போக்கு (இதில் தொழிலாளி வர்க்கம் தீவிரப் பங்கேற்கிறது) நடைபெறுகிறது.

தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் அனுபவமும் அதன் உயர்வான சுய உணர்வும், ஸ்தாபன அமைப்பும், சித்தமும் சமுதாயத்தை ஒன்றிணைக்கின்றன. தொழிலாளி வர்க்கத்தின் பொதுக் கல்வித் தரமும் கலாசார, தொழில்திறமை மட்டமும், உழைப்பு மற்றும் சமூக-அரசியல் நடவடிக்கையும் வளருவதானது சோஷலிசத்தை மேம் படுத்துவதிலும் கம்யூனிச கட்டுமானத்திலும் இதன் முன்னணிப் பாத்திரத்தை அதிகப்படுத்துகிறது.

கட்சியின் விவசாயக் கொள்கை தொடர்ச்சியாக நிறைவேற்றப்படும் போது விவசாய உழைப்பு தொழிற் துறை உழைப்பின் ஒரு வகையாகிறது, நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடையிலான கணிசமான சமூக, கலாசார, அன்றாட வாழ்க்கை வேறுபாடுகள் அகலு கின்றன; விவசாயிகளின் வாழ்க்கை முறையும் உழைப்பின் தன்மையும் மேன்மேலும் தொழிலாளி வர்க்கத்தின் வாழ்க்கை முறையையும் உழைப்பையும் ஒத்ததாகின்றன. சோவியத் நாட்டில் இவ்வர்க்கங்களுக்கு இடையிலான வேறுபாடுகளை அகற்றுவதும், வர்க்கங்களற்ற சமு தாயத்தை நிலைநாட்டுவதும் பெரும்பாலும் கம்யூனிச அமைப்பின் முதல், சோஷலிச கட்டத்தின் வரலாற்று வரம்புகளுக்குள்தான் நடைபெறும்.

உற்பத்திச் சக்திகளில் ஏற்படும் புரட்சிகர மாற்றங்கள் பரவலான தொழிலாளர்கள், கூட்டுப் பண்ணை விவசாயிகளின் நடவடிக்கையில் மூளையுழைப்பின் பங்கு அதிகரிப்பதற்கு இட்டுச் செல்லும். அதே நேரத்தில் அறிவுத் துறையினரின் எண்ணிக்கை அதிகரிக்கும், பொருளாயத உற்பத்தியிலும் சமுதாய வாழ்க்கையின் மற்ற துறைகளிலும் இவர்களின் ஆக்க பூர்வமான பங்கு அதிகரிக்கும். இது மூளையுழைப்பிற்கும் உடலுழைப்பிற்கும் இடையிலான கணிசமான வேறுபாடுகள் படிப்படியாக

அகலவும் எல்லா சமூகப் பிரிவினரும் நெருங்கி வரவும் உதவும். கம்யூனிசத்தின் உயர் கட்டத்தில் இந்த வேறுபாடுகள் முழுமையாக அகற்றப்படும், சமூக ரீதியாக ஒரே மாதிரியான சமுதாயம் உருவாகும்.

வர்க்க வேறுபாடுகளை அகற்றுகின்ற நிகழ்வுப் போக்கு தானாகவே ஏற்படுவதல்ல; அது கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சோஷலிஸ்ட் அரசினால் அமைக்கப்பட்டு இயக்குவிக்கப்படுகிறது. கம்யூனிசம் வெற்றியடைகின்ற பொழுது ஒரே சீரான சமூகம் ஏற்படும்.

வர்க்கங்கள் மற்றும் வர்க்க உறவுகளைப் பற்றிய தத்துவம் மார்க்சிய முறையியலில் ஒரு முக்கியமான அவசியத்தை, அதாவது வர்க்க சமூகத்தில் சமூக நிகழ்வுகளைப் பற்றிய வர்க்கப் பகுப்பாய்வை முன்னூகிக் கிறது. ஒரு சமூக நிகழ்வு அல்லது வரலாற்றுச் சம்பவத்தை சரியாகப் புரிந்து கொண்டு மதிப்பிடுவதற்கு அதன் வர்க்க உள்ளடக்கம் அல்லது வர்க்க அம்சங்களைத் தெளிவுபடுத்த வேண்டும்; அதற்குப் பின்னால் எந்த வர்க்கங்கள் இருக்கின்றன, அது முடிவாக யாருடைய நலன்களுக்குப் பாடுபடுகிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். ''நீதி, மதம், அரசியல், சமுதாயம் சம்பந்த மான எல்லாவிதச் சொல்லடுக்குகளுக்கும் பிரகடனங் களுக்கும் வாக்குறுதிகளுக்கும் பின்னே ஏதாவதொரு வர்க்கத்தின் **நலன்கள்** ஒளிந்து நிற்பதைக் கண்டு கொள்ள மக்கள் தெரிந்து கொள்ளாத வரையில் அரசியலில் அவர்கள் முட்டாள்தனமான ஏமாளி களாகவும் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்வோராக வும் இருந்தனர், எப்போதும் இருப்பார்கள்.''*

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி *1*, *1979*, பக்கம் *109*.

இதுவரை இருந்திருக்கின்ற அரசியல் கட்சிகள் அனைத்தும் குறிப்பிட்ட வர்க்கங்களின் நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்தன, ஆனால் அவை தம்முடைய வர்க்கச் சார்பையும் மெய்யான நோக்கங்களையும் எப்போதும் பகிரங்கமாக அறிவித்ததில்லை. சுரண்டு கின்ற வர்க்கங்களும் அவற்றின் கட்சிகளும் யாரையும் ஆதரிக்காமை, ''யதார்த்தம்'' என்ற முகப்புக்குப் பின்னால் மறைந்து கொள்வதற்குப் பெரும்பாலும் முயற்சி செய்கின்றன. காலாவதியான சமூக உறவுகளை சித்தாந்த ரீதியில் ஆதரிப்பவர்கள் பிரதானமாக வர்க்க முரண்பாடுகளையும் சமூக நிகழ்வுகளின் வர்க்க உள்ளடக்கத்தையும் தெளிவில்லாமல் செய்வதற்கு எல்லா முயற்சிகளும் செய்கிறார்கள். ஆகவே கட்சிகளை அவற்றின் பெயர்களை, பிரகடனங்களை அல்லது செயல்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு மதிப் பிடுவது கூடாது, அவற்றின் செயல்களை அடிப் படையாகக் கொண்டு முடிவு செய்ய வேண்டும் என்று லெனின் கூறினார்.*

கம்யூனிஸ்டுகள் தமது சித்தாந்தம் மற்றும் அரசியல் வர்க்கச் சார்புடையதாக இருப்பதைப் பகிரங்கமாக ஒத்துக்கொள்கிறார்கள். அவர்கள் தம்முடைய கட்சியின் ஈடுபாட்டை மறைக்க வேண்டிய அவசியமில்லை, ஏனென்றால் அந்த நிலை மார்க்சிய-லெனினியத் தத்துவத்துடன் முற்றிலும் பொருந்தியிருக்கிறது. சமூக வளர்ச்சியின் புறநிலையான பாதை மிகவும் புரட்சிகர மான வர்க்கமாகிய பாட்டாளி வர்க்கத்தினால் தலைமை தாங்கப்படுகின்ற உழைக்கும் மக்களின்

---

* See V. I. Lenin, "The Grand Total", *Collected Works*, Vol. 17, p. 294.

விருப்பார்வங்களுடன் பொருந்தியிருக்கிறது. ஏனென்றால் அவர்கள் முதலாளித்துவ அமைப்பை அகற்றி அதனிடத்தில் புதிய, கம்யூனிஸ்ட் அமைப்பை நிறுவுவதில் அக்கறை கொண்டிருக்கிறார்கள், வரலாற்று ரீதியில் அவசியமான இந்த நடவடிக்கையை நிறைவேற்றுவதற்கு அவர்கள் பாடுபடுகிறார்கள். தன்னுடைய அடிப்படையான நோக் கங்களை நிறைவேற்றுவதற்கு சமூக எதார்த்தத்தின் வளர்ச்சி விதிகள் ஆகப் பொருத்தமான, துல்லியமான முறையில் பிரதிபலிக்கப்பட வேண்டும் என்று தொழிலாளி வர்க்கம் விரும்புகிறது.

சமூக அறிவைப் பற்றி வர்க்க ரீதியான அணுகுமுறை என்னும் கோட்பாடு அதிகமாக முரணில்லாமல் அமுலாக்கப்படுகின்ற அளவுக்கு விளைவுகளும் அதிகத் துல்லியமாகவும் செயலுரத்தோடும் இருக்கும் என்ற உண்மையிலிருந்து மார்க்சிய-லெனினியவாதிகள் முன் னேறுகிறார்கள். அதே சமயத்தில் சமூக வளர்ச்சி விதிகளைப் பற்றிய அறிவு எவ்வளவு ஆழமாக இருக் கின்றதோ அந்த அளவுக்கு அது தொழிலாளி வர்க்கம் மற்றும் அதன் கட்சியின் நலன்களுடன் முழுமையாகப் பொருந்துகிறது.

லெனின் தன்னுடைய நூல்களில் சமூக நிகழ்வுகள் மற்றும் நிகழ்வுப் போக்குகளைப் பற்றிய பகுப்பாய்வைத் தந்தார்; அவை விஞ்ஞானப் புறநிலைத் தன்மையையும் தொழிலாளி வர்க்கத்தின் நிலையிலிருந்து தெளிவான மதிப்பீட்டையும் அங்ககமான முறையில் கொண் டிருக்கின்றன.

ஜனநாயகத்தையும் சர்வாதிகாரத்தையும் பற்றிய பிரச்சினையை அவர் விரித்துரைத்திருப்பதில் இது தெளிவாக வெளிப்படுகிறது; எல்லா ரகங்களையும் சேர்ந்த சந்தர்ப்பவாதிகளும் துரோகிகளும் இதை

எப்பொழுதுமே கொச்சையான முறையில் திரித்துக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் ''தூய ஜனநாயகம்'', ''எல்லோருக்கும் ஜனநாயகம்'', ''பொதுவான ஜன நாயகம்'' ஆகியவற்றைப் பற்றி வீண் பேச்சுப் பேசுகிறார்கள். இதை அம்பலப்படுத்திய லெனின் வர்க்கங்களைக் கடந்த ஜனநாயகம் என்பது இல்லை, அப்படி ஒன்று இருக்கவும் முடியாது, பூர்ஷ்வா ஜனநாயகம் அல்லது சோஷலிஸ்ட் ஜனநாயகம்தான் இருக்க முடியும் என்று சுட்டிக்காட்டினார். ஒரு நாட்டின் ஜனநாயகம் அந்த சமூகத்தில் இருக்கின்ற உடைமை உறவுகளாலும் ஆட்சியதிகாரத்தைக் கொண்டிருக்கின்ற வர்க்கத்தினாலும் நிர்ணயிக்கப்படுகிறது.

சுரண்டப்படுகின்ற பெரும்பான்மையினர் மீது உடைமையாளர்களான சிறுபான்மையினரது அதிகாரத்தை அமுலாக்குகிறது பூர்ஷ்வா ஜனநாயகம். ''பொதுவான'' சர்வாதிகாரத்தைப் பற்றிப் பேசுவதும் தவறாகும். ஒரு திட்டவட்டமான வர்க்கம் — ஆதிக்கம் செலுத்து கின்ற வர்க்கம் — தன்னுடைய சொந்த நிலைகளைப் பாதுகாத்து வலுப்படுத்துகின்ற நோக்கத்துடன் எப்பொழுதும் சர்வாதிகாரத்தை அமுலாக்குகிறது. பூர்ஷ்வா ஜனநாயகத்தின் எந்த ரகமும் உழைப்பாளர்கள் மீது சுரண்டுகின்ற சிறுபான்மையினர் செலுத்தும் சர்வாதிகாரமே. மறுபக்கத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் உழைக்கும் மக்களின் நலன்களுக்காகவும் அவர்களுடைய கூட்டணியுடனும் பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் ஆதிக்கத்தைக் குறிக்கிறது. அச்சர்வாதிகாரம் மிகவும் குறைவான எண்ணிக்கையில் உள்ள சிறுபான்மையினருக்கு, தூக்கியெறியப்பட்ட உடைமை வர்க்கங்களுக்கு எதிராகச் செலுத்தப்படுகிறது.

இக்கால சர்வதேச உறவுகளிலுள்ள சிக்கலான

மற்றும் முரண்பாடான நிகழ்வுப் போக்குகளை சரியான முறையில் பகுத்தாராய்வதற்கும் சமூக நிகழ்வுகளைப் பற்றிய வர்க்க அணுகுமுறை முக்கியமானதே. எதார்த் தத்தைப் புரிந்துகொள்வதற்கு அது திறவுகோல், சமூக வளர்ச்சியின் அவசரமான கடமைகளை நிறைவேற்று வதற்கு அது நம்பகமான வழிகாட்டி.

## அத்தியாயம் நான்கு

# சமூகத்தின் அரசியல் அமைப்பு

### அரசியலும் போரும்

வர்க்கங்கள் தோன்றியவுடன் அவை அரசியல் என்னும் புதிய சமூக நிகழ்வை ஏற்படுத்துகின்றன. **அரசியல்** என்பது ஒரு நாட்டில் அல்லது நாடுகளுக்கு இடையில் வர்க்கங்கள், தேசிய இனங்கள் மற்றும் இதர சமூகப் பிரிவுகளுக்கு இடையிலுள்ள உறவாகும்.

எனினும் அரசியல் என்பது வர்க்கங்களுக்கு இடையில் எல்லா மற்றும் எவ்விதமான உறவுகளையும் பற்றியதல்ல; ஆனால் குறிப்பாக அரசு அதிகாரம், அதன் ஒழுங்குமுறை, திசையமைவு, முறைகள் மற்றும் சாதனங்களின் போராட்ட உறவுகள், மற்ற நாடுகளுடனான உறவுகள், உள்நாட்டில் கட்சிகளுக்கு இடையில் போட்டி, இதரவற்றைப் பற்றியது. ''அரசின் பாலும் அரசாங்கத்தின் பாலும் **எல்லா** வர்க்கங்களுக்கும் மக்கள்

பகுதிகளுக்கும் இருக்கும்''* உறவுகளைப் பற்றியது அரசியல் என்று லெனின் வரையறுத்தார்.

ஒரு தனி அரசில் வர்க்கங்கள், கட்சிகள் மற்றும் தேசிய இனங்கள் மத்தியிலான உறவுகள் அல்லது உள்நாட்டு அரசியலுக்கும் வெளிநாட்டு உறவுகள் அல்லது வெளிநாட்டு அரசியலுக்கும் நாம் வேறுபாடு காண்கிறோம். அவை இரண்டும் நெருக்கமான தொடர்பைக் கொண்டிருக்கின்றன; அதில் உள்நாட்டு அரசியல் தீர்மானகரமாக இருக்கிறது.

உள்நாட்டு அரசியலின் தொடர்ச்சியே வெளிநாட்டு அரசியல் என்பது வரலாற்று ரீதியில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. உள்நாட்டில் ஆளும் வர்க்கங்கள் எப்படி நடந்துகொள்கின்றனவோ அதே முறையில்தான் சர்வ தேச அரங்கத்தில் அந்த அரசுகள் நடந்துகொள்கின்றன. சுரண்டுகின்ற சமூகத்தில் உள்நாட்டில் ஒடுக்குமுறைக் கொள்கை பின்பற்றப்படுகிறது, வெளிநாட்டுத் துறையில் மற்ற நாடுகளைப் பயமுறுத்துகின்ற, ஆக்கிரமிக்கின்ற கொள்கை கடைப்பிடிக்கப்படுகிறது. இது இக்கால முதலாளித்துவ அரசுகளுக்கு, குறிப்பாக உள்நாட்டுக் கொள்கையிலும் வெளிநாட்டுக் கொள்கையிலும் மிகவும் பிற்போக்கான அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு மிகவும் பொருந்துகிறது.

ஆக்கிரமிப்பு நோக்கத்தைக் கொண்ட வெளிநாட்டுக் கொள்கைகள் சமாதானத்துக்கு ஆபத்தானவை; அவை அடிக்கடி நாடுகளைப் போரில் இழுத்திருக்கின்றன. நாடுகளுக்கிடையில் ஆயுதமேந்திய போராட்டம் என்னும்

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 1, 1979, பக்கம் 317.

முறையில் போரை முரணியல்பான வர்க்க சமூகங்கள் ஏற்படுத்துகின்றன. அரசியலை வேறு வழிகள், வன்முறையான வழிகளின் மூலம் தொடர்வது போர் என்று கூறலாம். "ஒரு குறிப்பிட்ட அரசு, அந்த அரசுக்குள் ஒரு குறிப்பிட்ட வர்க்கம் போருக்கு நெடுங்காலத்துக்கு முன்பிருந்தே கடைப்பிடித்து வருகின்ற கொள்கையை அதே வர்க்கம் போர் நடைபெறும் பொழுது தவிர்க்க முடியாதபடி தொடர்கிறது, நடவடிக்கையின் வடிவம் மட்டுமே மாறியிருக்கிறது"* என்று லெனின் எழுதினார். ஆகவே சுரண்டுகின்ற வர்க்கங்களின் ஒடுக்குமுறையான, பிற்போக்குத்தனமான கொள்கை அநீதியான, கொள்ளைக்காரத்தனமான, ஏகாதிபத்திய யுத்தங்களுக்கு இட்டுச் செல்கிறது. ஒடுக்கப்படுகின்ற வர்க்கங்களும் தேசிய இனங்களும் நடத்துகின்ற சமூக விடுதலை மற்றும் தேசிய விடுதலைப் போர்கள் (உள்நாட்டுப் போர் மற்றும் தேசிய விடுதலைப் போர்) நியாயமான போர்கள். ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து நடத்துகின்ற போர்களும் நியாயமானவையே. நாஜி ஆக்கிரமிப்பை எதிர்த்து சோவியத் யூனியன் நடத்திய மாபெரும் தேசபக்தப் போர் மற்றும் ஐரோப்பிய நாடுகள் நடத்திய போர்கள், அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிராக நடைபெற்ற வியட்நாம் போர் மற்றும் கொரியப் போர் ஆகியவை நியாயமானவை.

கோடிக்கணக்கான மனித உயிர்களைப் பலி கொண்ட இரண்டு உலக யுத்தங்களை மூட்டி விட்ட குற்றம் ஏகாதிபத்தியத்தையே சாரும்.

---

* V. I. Lenin, "War and Revolution", *Collected Works,* Vol. 24, p. 400.

முன் பின் கண்டறியா அளவிற்கு அணு ஆயுதங்கள், மற்ற ஆயுதங்களின் போட்டியைக் கட்டவிழ்த்து விட்டதன் மூலம் ஏகாதிபத்தியம் உலக மக்களின் முன் மாபெரும் குற்றமிழைத்து உள்ளது. இது ஏகபோகங் களுக்கு இதுவரை கேட்டறியா கொள்ளை லாபங்களைக் கொண்டு வருகிறது. பிரம்மாண்டமான இராணுவச் செலவினங்கள் உழைப்பாளிகளின் தோள்கள் மீது கடும் சுமையாக விழுகின்றன. ஆயுதங்களை உற்பத்தி செய்யும் ஏகபோகங்கள், இராணுவ அதிகாரிகள், அரசு சடங்கு முறை இயந்திரம், சித்தாந்த உறுப்புகள், இராணுவமயப்படுத்தப்பட்ட விஞ்ஞானம் ஆகியவை இராணுவ தொழிற்துறை இணையமாக ஒன்று சேர்ந்து வெறி கொண்ட நிலையில் அதிசாகசவாத, ஆக்கிரமிப்புக் கொள்கைகளை நடத்துகின்றன.

மூன்றாவது உலக யுத்தம் மூளும் அபாயத்தை ஏகாதிபத்தியம் தோற்றுவிக்கிறது. அதிபயங்கர ஆயுதங் களைத் தோற்றுவிக்க ஏகாதிபத்தியம் மனித மேத மையின் சாதனங்களை பயன்படுத்துகிறது. முழு மக்களினங்களையே பலியிடத் தயாராக உள்ள ஏகாதி பத்திய வட்டங்களின் கொள்கை இப்படிப்பட்ட ஆயுதங்கள் பயன்படுத்தப்படும் அபாயத்தை அதிகரிக் கிறது. இறுதியில் இது உலகந் தழுவிய இராணுவ மோதல்களை ஏற்படுத்தக் கூடும், இவற்றால் யாரும் வெற்றி பெறப் போவதுமில்லை, தோல்வியுறப் போவது மில்லை, மாறாக உலக நாகரிகமே அழிந்து போகக் கூடும்.

மேன்மேலும் வளர்ந்து வரும் சமாதான சக்திகளின் உள்ளாற்றல் ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புக் கொள் கைக்கு எதிராக உள்ளது.

மனிதகுலத்தை எதிர்நோக்கியுள்ள அபாயம் இன்றுள்

ளதைப் போல் இதற்கு முன் எப்போதுமே இவ்வளவு அச்சுறுத்தத் தக்க வகையில் இருந்ததில்லை. அதே நேரத்தில், சமாதானத்தைப் பேணிக் காத்து பலப் படுத்தும் வாய்ப்புகளும் இன்றுள்ளதைப் போல் இவ்வளவு யதார்த்தமானவையாகவும் இருந்ததில்லை. உலக மக் களால் தம் சக்திகளை ஒன்றிணைத்து அணு ஆயுதப் பேரழிவு அபாயத்தை அகற்ற முடியும், அகற்ற வேண் டும்.

ஆக்கிரமிப்பு தன்மையுள்ள ஏகாதிபத்திய வட்டங் களின் கொள்கை உலக சமாதானத்தை எவ்வளவுதான் அச்சுறுத்தினாலும் உலக யுத்தத்தைத் தவிர்க்கவே இயலாது என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு கட்சி கருதவில்லை. யுத்தத்தைத் தவிர்த்து, மனிதகுலத்தைப் பேரழிவிலிருந்து காப்பாற்ற முடியும். சோஷலிசத்தின், சமாதான நாட்டமுடைய எல்லா முற்போக்கு மக்களின் வரலாற்றுக் கடமை இதில்தான் அடங்கியுள்ளது.

''யுத்தங்களற்ற, ஆயுதங்களற்ற உலகம்தான் சோஷ லிசத்தின் லட்சியம்'' என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27வது காங்கிரசில் ஏற்கப்பட்ட வேலைத்திட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

சுரண்டல் மற்றும் ஒடுக்குமுறை இல்லாத, யுத்தங் களை கட்டவிழ்த்து விடுவதில் அக்கறை கொண்ட வர்க்கங்களும் சமூகப் பிரிவினரும் இல்லாத சோஷலிச சமுதாயத்தின் மனிதாபிமானத் தன்மைதான் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் சர்வதேசக் கொள் கையை நிர்ணயிக்கிறது. இக்கொள்கை உள்நாட்டில் கட்சியின் அடிப்படை, நீண்டகால கடமைகளுடன் பிரிக்க இயலா வகையில் தொடர்புடையது, இது ஆக்கபூர்வமான உழைப்பில் ஈடுபட வேண்டும், உலகில் உள்ள எல்லா மக்களினங்களுடனும் சமாதானமாக வாழ வேண்டும்

என்ற சோவியத் மக்களின் ஒரே நாட்டத்தை பிரதிபலிக்கிறது.

## சமூகத்தின் அரசியல் அமைப்பு

வர்க்கங்களுக்கும் மற்ற சமூகக் குழுக்களுக்கும் இடையிலான உறவுகள் நவீன அரசியல் அமைப்பில் உள்ள பல்வேறு ஸ்தாபனங்கள், நிறுவனங்கள், சங்கங்கள், கழகங்கள் மற்றும் இதரவற்றினால் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. அரசு, அரசியல் கட்சிகள், தொழிலாளர்களின் தொழிற்சங்கங்கள், விவசாயிகளின் சங்கங்கள், வாலிபர் கழகங்கள் மற்றும் இதர ஸ்தாபனங்கள் சமூகத்தின் அரசியல் அமைப்பின் முக்கியமான உறுப்புகளாகும்.

சில உறுப்புகள் (அரசு, அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்கள், வாலிபர் கழகங்கள் மற்றும் இதரவை) திட்டவட்டமான அரசியல் தன்மையைக் கொண்டு அரசியல் அமைப்பின் கருவாக இருக்கின்றன; வேறு சில உறுப்புகள் (எழுத்தாளர்கள், கலைஞர்கள், இசை அமைப்பாளர்கள் சங்கங்கள் போன்றவை மற்றும் விளையாட்டுக் கழகங்கள், கலாசாரக் கழகங்கள் இதரவை) அரசியல் நோக்கில் முற்றிலும் நடுநிலைமை வகிப்பவை அல்ல என்ற போதிலும் முனைப்பான அரசியல் தன்மையைக் கொண்டவை அல்ல.

ஆளும் வர்க்கங்கள் பிரதானமாக அரசு மற்றும் அரசியல் கட்சிகளை ஆதாரமாகக் கொண்டு அரசியல் அமைப்பின் மூலமாக ஆட்சி செய்து தமது நலன்களைப் பாதுகாத்துக் கொள்கின்றன.

வர்க்க சமூகத்தில் மட்டுமே அரசியல் அமைப்பு இருக்கிறது. அது வர்க்க உறவுகளின் ரகத்தைப் பொறுத்து

முரணியல்பு உடையதாக அல்லது முரணியல்பு இல்லாத தாக இருக்கும்.

முரணியல்பான வர்க்கங்களைக் கொண்ட சமூகத்தில் அரசியல் அமைப்பு மிகவும் சிக்கலான கட்டமைப்பைக் கொண்டிருக்கிறது. சுரண்டுகின்ற வர்க்கங்களும் சுரண்டப் படுகின்ற வர்க்கங்களும் இருப்பதனால் அந்த அமைப்பு சமத்துவமில்லாத பலத்தைக் கொண்ட இரண்டு எதிர்ப்பகுதிகளாகப் பிரிந்திருக்கிறது; ஒரு தரப்பில் ஆளும் வர்க்கத்தின் ஸ்தாபனங்களும் சங்கங் களும் அதன் சர்வாதிகாரத்தை நிறுவுவதற்கு உதவு கின்றன, மறுதரப்பில் ஒடுக்கப்படுகின்ற வர்க்கம் தன் ஸ்தாபனங்கள் (அதன் அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங் கள் மற்றும் இதரவை) மூலம் தன்னுடைய விடுதலைக்குப் போராடுகிறது.

ஒரு சோஷலிஸ்ட் சமூகத்தில் வர்க்கங்களுக்கும் இதர சமூகப் பிரிவுகளுக்கும் இடையில் கூட்டணி மற்றும் ஒத்துழைப்பு உறவுகள் இருக்கின்றன, ஆகவே அரசியல் ஸ்தாபனம் எல்லா தனிநபர்கள் மற்றும் குழுக்களுக்கு இடையில் சமூக மற்றும் அரசியல் உறவுகளை ஒழுங்குபடுத்துகின்ற நெருக்கமான, ஒன்றுபடுத் தப்பட்ட அமைப்பாக இருக்கிறது. சோவியத் யூனியன் வளர்ச்சியடைந்த சோஷலிஸ்ட் சமூகத்தில் கேந் திரமான அலகுகள் பின்வருமாறு: 1) பொதுஜன சோஷலிஸ்ட் அரசு; 2) சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி (சோவியத் அரசியல் அமைப்பின் கரு); 3) வெகுஜன ஸ்தாபனங்கள்; 4) உழைப்புக் கூட்டுகள்.

சமூக அரசியல் அமைப்பின் முதன்மையான அலகு அரசு. அரசைப் பற்றிய மார்க்சிய-லெனினியத் தத்துவம் பிரெடெரிக் எங்கெல்ஸ் எழுதிய குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம், டூரிங்குக்கு மறுப்பு மற்றும் லெனின் எழுதிய அரசும் புரட்சியும், அரசு ஆகிய நூல்களில் எழுதப்பட்டிருக்கிறது.

அரசு இல்லாத காலம் இருந்தது. அரசு சமூகத்தின் வரலாற்று வளர்ச்சியின் விளைவாகத் தோன்றியது. தனியுடைமையும் வர்க்கங்களும் இல்லாத பூர்விக சமூகத்தில் அரசு இல்லை, அது தேவைப்படவும் இல்லை. பொது அமைதி பழக்கவழக்கங்கள் மற்றும் மரபின் சக்தியினாலும் மக்களின் பொது நலன்களை பிரதிபலித்த மூத்தவர்கள் அல்லது குலத் தலைவர்கள் சபையின் அதிகாரத்தினாலும் பாதுகாக்கப்பட்டது.

உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியின் விளைவாகத் தனியுடைமை, பொருளாதார ஏற்றத்தாழ்வு, வர்க்கங்கள் மற்றும் வர்க்க முரணியல்புகள் தோன்றின. சமூக விவகாரங்களைக் கூட்டாகத் தீர்ப்பது இனிமேல் சாத்தியமில்லை; ஏனென்றால் வெவ்வேறு வர்க்கங்கள் வெவ்வேறு விதமான, முரணியல்பான நலன்களைக் கொண்டிருந்தன. தனியுடைமையை, ஒரு வர்க்கம் மற்றொரு வர்க்கத்தைச் சுரண்டுகின்ற உரிமையைப் பாதுகாப்பதும் சமூகத்தில் பெரும்பான்மையாக இருக்கின்ற ஒடுக்கப்பட்ட பெருந்திரளான மக்களைக் கீழே அமுக்கிவைப்பதும் அவசியமாயிற்று. அதற்காகவே அரசு அமைக்கப்பட்டது. ‘‘வர்க்கப் பகைமைகள் இணக்கம் காண முடியாதவை ஆனதன் விளைவும் வெளியீடுமே அரசு. எங்கே, எப்பொழுது, எந்த அளவுக்கு வர்க்கப்

பகைமைகள் புறநிலைக் காரணங்களால் இணக்கம் காண முடியாதவை ஆகின்றனவோ, அங்கே, அப்பொழுது, அந்த அளவுக்கு அரசு உதித்தெழுகிறது''* என்று வி. இ. லெனின் எழுதினார்.

அரசு வர்க்கத் திசையமைவைக் கொண்ட உறுப் பாகும். முரணியல்பான சமூகத்தில் பொருளாதார ரீதியில் ஆதிக்கம் செலுத்துகின்ற வர்க்கம் அதை இயக்குகிறது; பிரதானமாக, தன்னுடைய வர்க்க எதிரிகளை ஒடுக்குவதற்குப் பயன்படுத்துகிறது. ''அரசென் பது ஒரு வர்க்கம் மற்றொரு வர்க்கத்தால் ஒடுக்கப் பெறுவதற்கான ஓர் இயந்திரம், ஒரு வர்க்கத்திற்கு மற்ற அடிப்பட்ட வர்க்கங்களைக் கீழ்ப்படிந்து இருக்கச் செய்யும் ஓர் இயந்திரம்''** என்று லெனின் எழுதினார்.

சுரண்டுகின்ற அரசு இரண்டு அவசியமான கடமை களை நிறைவேற்றுகிறது. அதன் உள்துறைச் செயல், அதாவது உள்நாட்டுக் கொள்கை ஒடுக்கப்படுகின்ற, சுரண்டப்படுகின்ற பெருந்திரளான மக்களைக் கட்டுப்படுத்து வதாகும். இது எண்ணற்ற அதிகாரிகள், உளவு ஸ்தாபனங்கள், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் இதரவற் றின் மூலம் பகிரங்கமான பலாத்காரத்தைக் கொண்டு நிறைவேற்றப்படுகிறது. அரசின் வெளிநாட்டுச் செயல்— இது வெளிநாட்டுக் கொள்கை மற்றும் ராஜதந்திரத்தின் மூலம் நிறைவேற்றப்படுகிறது—அதன் உள்நாட்டுச் செயலி லிருந்து பிறக்கிறது; சர்வதேச அரங்கத்தில் அரசின் நலன்களைப் பாதுகாப்பது, நம்பகமான இராணுவத் தற்காப்பை ஏற்படுத்துவது, மற்ற அரசுகளை எதிர்த்து

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுகிகளில், தொகுதி 6, 1980, பக்கங்கள் 14—15.

** வி. இ. லெனின். தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 10, 1981, பக்கம் 26.

இராணுவ அல்லது அரசியல் ஆக்கிரமிப்பில் வெற்றியை உறுதிப்படுத்துவது ஆகியவை இதில் அடங்கும்.

சென்ற காலத்தைப் போலவே இன்றும் அரசுகளுக்கு இடையில் குண ரீதியான வேறுபாடு இருக்கிறது. உற்பத்தி உறவுகளின் ஒவ்வொரு ரகத்துக்கும் பொருந்து கின்ற திட்டவட்டமான அரசு ரகம் இருக்கிறது. அரசின் ரகம் அதன் வர்க்க சாராம்சத்தை வெளிப்படுத்து கிறது. அரசுகள் அவை பாதுகாக்கின்ற வர்க்கத்தின் நலன்களை அடிப்படையாகக் கொண்டு வேறுபடுகின்றன. அடிமை உடைமை, நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ மற்றும் சோஷலிஸ்ட் அரசு என்று நான்கு அடிப் படையான ரகங்கள் இருக்கின்றன. இவற்றைத் தவிர அடிப்படை அல்லாத ரகங்களும் இருக்கின்றன. இன்று மொத்தம் 150க்கு அதிகமான அரசுகள் இருக் கின்றன. சோஷலிஸ்ட், முதலாளித்துவ அரசுகளும் வளர்முக நாடுகளில் சோஷலிஸ்ட் அல்லது முதலாளித் துவத் திசையமைவைக் கொண்ட அரசுகளும் இவற்றி லடங்கும். உலக மக்கள் தொகையில் 2,000 தேசிய இனங்கள் மற்றும் மக்கள் இனங்கள் இருக்கின்றன; சில நூறு மக்களை மட்டுமே கொண்ட மிகச் சிறிய பழங்குடிகளும் கோடிக்கணக்கான மக்களைக் கொண்ட மிகப் பெரிய தேசிய இனங்களும் இவற்றில் அடங்கும்.

தலைமையான வர்க்கம் ஆட்சி செய்கின்ற முறைக்குத் தகுந்தபடி அரசு பல்வேறு ஆட்சி வடிவங்களைக் கொண்டிருக்கிறது. ஆட்சி வடிவங்கள் வரலாற்று நிலைமைகளையும் வர்க்க சக்திகளின் அணிச் சேர்க் கையையும் வெளிப்புறத் தாக்கங்களையும் பொறுத்திருக் கின்றன. முடியாட்சி ஒரு நபரின் (அரசர், பேரரசர், ஷா இதரவை) எதேச்சாதிகாரமான அல்லது அரசி யலமைப்புச் சட்டத்தின்படி வரையறுக்கப்பட்ட ஆட்சியாக

இருக்கும். குடியரசில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்புகள் ஆட்சி செய்கின்றன. பெரும்பான்மையான பூர்ஷ்வா அரசுகள் குடியரசுகளாகும் (அமெரிக்கா, பிரான்ஸ், இத்தாலி இதரவை). சில முதலாளித்துவ நாடுகள் முடியாட்சிகளாக, அநேகமாக அரசியலமைப்புச் சட்ட முடியாட்சிகளாக (கிரேட் பிரிட்டன், பெல்ஜியம், ஜப்பான், மொரோக்கோ இதரவை) இருக்கின்றன.

அரசாங்க முறைக்குத் தகுந்தவாறு சில அரசுகள் தனி முழுமை அரசுகளாகவும் சில கூட்டாட்சி அரசு களாகவும் இருக்கின்றன. சட்ட ரீதியாக ஒப்பளவில் சுதந்திரமான அரசு அலகுகள் ஒன்றுசேர்ந்து (உதாரண மாக மாநிலங்கள், குடியரசுகள் போன்றவை) கூட்டரசு அமைகிறது. சோவியத் யூனியன் 15 சோவியத் சோஷ லிஸ்ட் குடியரசுகளைக் கொண்ட கூட்டாட்சி அரசு ஆகும். சோவியத் கூட்டாட்சி அரசு பல தேசிய இனங்களைக் கொண்ட நாட்டில் சோஷலிஸ்ட் அரசின் வரலாற்று ரீதியான செல்லத்தக்க வடிவம் என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு அரசின் சாராம்சத்தை அதன் ஆட்சி முறையை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிப்பது மிகவும் முக்கியமாகும். ஆட்சி முறை என்பது ஆட்சியதிகாரம் நடைபெறுகின்ற முறைகளின் தொகுதியாகும்; ஜனநாயக உரிமைகளும் சுதந்திரங்களும் எந்த அளவுக்கு நிறை வேறியிருக்கின்றன என்பதை அது எடுத்துக்காட்டுகிறது. இக்கால பூர்ஷ்வா அரசுகளில் நாடாளுமன்ற, இராணுவ சர்வாதிகார, பாசிஸ்ட், அரை பாசிஸ்ட் மற்றும் இதர ஆட்சி முறைகள் இருக்கின்றன.

முதலாளித்துவத்தை ஆதரிப்பவர்கள் நவீன பூர்ஷ்வா அரசின் முற்போக்கான பாத்திரத்தைப் பற்றிப் பேசி உழைப்பாளர்களை ஏமாற்றுகிறார்கள்; அது “மக்கள்

நல அரசு'', எல்லா வர்க்கங்கள் மற்றும் சமூகப் பிரிவினருடைய நலன்களைப் பற்றி சமமான அக்கறை காட்டுகின்ற அரசு என்று வர்ணிக்கிறார்கள். ஆனால் பூர்ஷ்வா அரசு (அதன் ஆட்சியின் வடிவம் எவ்வளவு ஜனநாயகமயமானதாக இருந்தபோதிலும்) உண்மையில் முதலாவதாகவும் முதன்மையாகவும் முதலாளி வர்க்கத்தின் அரசியல் சர்வாதிகாரம் என்னும் சாதனத்தின் மூலம் உழைப்பாளர்களை ஒடுக்குகின்ற பொறியமைவாக இருக்கிறது.

19ம் நூற்றாண்டின் கடைசியிலும் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் ஏகாதிபத்தியம் தோன்றிய பிறகு பூர்ஷ்வா அரசு மேலும் பிற்போக்கானதாயிற்று. ஏகாதிபத்தியம் நெடுகிலும்—பிரதானமாக, அரசு மற்றும் அரசியல் விவகாரங்களில்—பிற்போக்கை மந்திரமாக ஒலிக்கிறது என்று லெனின் பன்முறை எடுத்துக் காட்டினார். பூர்ஷ்வா அரசின் சமூக அடிப்படை குறுகிக்கொண்டிருக்கிறது. ஒரு காலத்தில் அது பெரிய முதலாளி வர்க்கத்தையும் குட்டி முதலாளி வர்க்கத்தில் ஓரளவு பரந்த பகுதியையும் பிரதிநிதித்துவம் செய்தது; இன்று அது ஏகபோக முதலாளி வர்க்கத்தின் விவகாரங் களை நிர்வகிக்கின்ற கமிட்டியாக இருக்கிறது. ஏகாதிபத் தியம் அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் விரிவான வளர்ச்சியை ஊக்குவிக்கிறது, ஏகபோகங்களையும் அரசை யும் ஒரே சக்தியாக இணைத்து ஏகபோகங்களின் கொள்ளை லாபத்தை அதிகப்படுத்துகிறது, தொழிலாளி வர்க்க இயக்கத்தையும் தேசிய விடுதலைப் போராட்டத் தையும் நசுக்குகிறது, முதலாளித்துவத்தைப் பாதுகாக் கிறது, ஆக்கிரமிப்புப் போர்களை நடத்துகிறது.

ஏகாதிபத்திய அரசின் உள்நாட்டுக் கொள்கை, வெளிநாட்டுக் கொள்கை ஆகிய இரண்டுமே சாராம்

சத்தில் மிகவும் பிற்போக்காகவும் மக்களுக்கு விரோ தமாகவும் இருக்கின்றன. இன்றைய பூர்ஷ்வா அரசு உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலான உறவு களில் தீவிரமாகத் தலையிடுகிறது, அடிக்கடி கூலி மற்றும் ஊதியங்களை ஓரளவு முடிவு செய்கிறது, வேலை நிறுத்தங்களைக் கட்டுப்படுத்துகிறது அல்லது தடைசெய்கிறது, தொழிற்சங்கங்களை நிர்ப்பந்தம் செய் கிறது.

அரசு-ஏகபோக முதலாளித்துவம் வளர்ச்சியடைகின்ற பொழுது பூர்ஷ்வா அரசுகளின் தேசியப் பொருளாதாரங் கள் (மற்ற எல்லாத் துறைகளையும் போல) முன்னெப் போதும் இல்லாத அளவுக்கு இராணுவ மயமாக்கப் படுகின்றன. இராணுவ-தொழில்துறை இணையத்தின், அதாவது ஆயுதப் போட்டியினால் லாபமடைகின்ற மற்றும் இராணுவத் துறையினருடன் நெருக்கமான தொடர்புடைய முதலாளிகளின் சக்தி அதிகரிக்கிறது. இன்று அமெரிக்காவின் வெளிநாட்டு, உள்நாட்டுக் கொள்கைகளை இராணுவ-தொழில்துறை இணை யத்தைத் தவிர வேறு எதுவும் நிர்ணயிக்கவில்லை. அது சர்வதேச பிரச்சினைகளை சமாதான ரீதியில் தீர்ப்பதைத் தடுக்கிறது. பூர்ஷ்வா அரசின் பிற்போக்கான சாராம் சத்தின் மிகக் கேவலமான வெளிப்பாடாகிய இராணுவ வெறி பூமியில் சமாதானத்துக்கும் மக்களுடைய வாழ்க்கைக்கும் மாபெரும் ஆபத்தாக இருக்கிறது.

பூர்ஷ்வா அரசு சாராம்சத்தில் பிற்போக்காகவும் மக்களுக்கு விரோதமாகவும் இருப்பதால் அதை சோஷலிஸ்ட் புரட்சிக்கு அல்லது சமூகத்தில் தீவிரமான, புரட்சிகரமான மாற்றத்தைக் கொண்டுவருவதற்குப் பயன்படுத்த முடியாது. முரணியல்பான சமூகங்களில் அரசு மக்களைச் சுரண்டுவதற்கு, நசுக்குவதற்கு, ஒடுக்கு

வதற்குத் தயாராக இருக்கிறது. சோஷலிஸ்ட் புரட்சி சமூகத்தில் சுரண்டலின் எல்லா வடிவங்களையும் அகற்றிவிடுகிறது. ஆகவே தொழிலாளி வர்க்கம் தன்னுடைய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு பூர்ஷ்வா அரசைப் பயன்படுத்த முடியாது. சோஷலிஸ்ட் புரட்சியின் போது தொழிலாளர்கள் அந்த அரசை நொறுக்க வேண்டும், அதற்குப் பதிலாக ஒரு புதிய, பாட்டாளி வர்க்க அரசை நிறுவ வேண்டும். முதலாளித்துவத்தை ஒழித்து தீவிரமான புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்த விரும்புகின்ற எல்லா நாடுகளுக்கும் இது ஒரே அளவுக்குப் பொருந்தும் என்பதை வெற்றியடைந்த, வெற்றி அடையாத எல்லாப் புரட்சிகளின் அனுபவமும் நிரூபிக்கிறது. இன்று சோஷலிசத்தை நிர்மாணிக்கின்ற எல்லா நாடுகளும் முதலில் பூர்ஷ்வா அரசு இயந்திரத்தை அழித்து விட்டன. பூர்ஷ்வா அரசின் எல்லா நிறுவனங்களையும் அழிக்க வேண்டியதில்லை என்பது உண்மையே. சமூக ரீதியில் நடுநிலைமை உள்ளதாக, சுரண்டல் கருவிகளாகப் பயன்படாத அரசு நிறுவனங்களை (உதாரணம்: தபால், தந்தி இலாகா) அழிக்க வேண்டிய அவசியமில்லை. அவற்றையும் அழித்தால் குழப்பம் ஏற்படும். முதலில் பழைய சுரண்டல் சமூக அமைப்பைப் பாதுகாக்கின்ற நிறுவனங்களை (அதிகார வர்க்கம், சட்டத்தை அமுலாக்குகின்ற இலாகாக்கள் இதரவை) அழிக்க வேண்டும். பழைய அரசை அழித்து அதற்குப் பதிலாகப் புதிய, சோஷலிஸ்ட் அரசை நிர்மாணித்தல் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு விதமாக நடைபெறுகிறது என்று வரலாறு எடுத்துக்காட்டுகிறது. அந்த நிகழ்வுப் போக்கு குறுகியதாக அல்லது நீண்டதாக இருக்கக் கூடும்; அது எல்லாவற்றையும் அழிக்கக் கூடும் அல்லது

நாடாளுமன்றத்தைப் போன்ற பழைய நிறுவனங்களில் சிலவற்றை (அவற்றின் தன்மை, கோட்பாடுகள், வேலை முறை ஆகியவற்றை முற்றிலும் மாற்றியமைத்து) பாதுகாக்கக் கூடும். பூர்ஷ்வா அரசு இயந்திரத்தை அழிப்பது எல்லா சோஷலிஸ்ட் புரட்சிகளுக்கும் பொது வாகும்.

**பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஏன் அவசியம்?**

சோஷலிஸ்ட் புரட்சி பூர்ஷ்வா அரசை ஒழித்துப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுகிறது.

சோஷலிஸ்ட் சமூகத்தை நிர்மாணிப்பதை இலட்சியமாகக் கொண்ட தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் உள்ள உழைப்பாளர்களின் ஆட்சியே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்.

அரசு எப்பொழுதுமே ஏதாவதொரு வர்க்கத்தின் சர்வாதிகாரமாகவே இருக்கிறது. உழைப்பாளர்களின் அரசியல் அதிகாரம் என்றால் சமூகத்தில் மிகவும் அதிகமான பெரும்பான்மையினருடைய சர்வாதிகாரம், ஆகவே அது ஒரு வர்க்க சமூகத்தில் இயன்ற அளவுக்கு முழுமையான ஜனநாயகத்தின் வடிவம் என்று பொருளாகும்.

சோஷலிஸ்ட் மாற்றங்களைத் தொடங்கியிருக்கின்ற எல்லா நாடுகளுக்கும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பொதுவானதாகும்; மேலும் அது சோஷலிஸ்ட் நிர்மாணத்துக்கு இன்றியமையாததாகும். ''எந்தப் புரட்சிகரமான வர்க்கத்தின் வெற்றிக்கும் சர்வாதிகாரம் அவசியமென்பதை யாராவது புரிந்துகொள்ளவில்லை என்றால் அவருக்குப் புரட்சிகளின் வரலாற்றைப் பற்றி

ஒன்றும் தெரியாது, அல்லது இத்துறையில் அவர் எதையும் தெரிந்து கொள்ள விரும்பவில்லை''* என்று லெனின் எழுதினார்.

மார்க்சியத்தின் எதிரிகள் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைப் பற்றி பொய்களைப் பரப்புகிறார் கள், அது பலாத்காரமானது அல்லது பயங்கரமானது, அது ஜனநாயகத்தின் எல்லா வடிவங்களுக்கும் எதிரானது என்று கூறுகிறார்கள். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் சில நாடுகளுக்குச் சரியானதாக இருந்தாலும் சோஷலிசம் நிர்மாணிக்கப்படுகின்ற எல்லா நாடுகளுக்கும் அது அவசியமானதல்ல என்று திருத்தல்வாதிகள் கூறுகிறார் கள்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை வரலாற்று அவசியமாகச் செய்வது எது என்பதை நாம் காண்போம்.

முதலாவதாக, தன்னுடைய வர்க்க எதிரிகளின் எதிர்ப்பை நொறுக்குவதற்குப் பாட்டாளி வர்க்கத்துக்கு சர்வாதிகாரம் அவசியம். சுரண்டும் வர்க்கங்கள் அரசியல் அதிகாரத்தையும் இழந்த சலுகைகளையும் மறுபடியும் பெறுவதற்காக எதையும் செய்யத் தயாராக இருக்கிறார்கள். அவர்கள் தோல்வியை ஏற்றுக்கொள்ள வில்லை; மற்ற நாடுகளில் உள்ள, புரட்சியை வெறுக் கின்ற, அது எங்கே, எப்பொழுது ஏற்பட்டாலும் அதை நசுக்குவதற்குத் தயாராக இருக்கின்ற ஏகாதிபத்தியவாதி களிடம் உதவிக்கு அடிக்கடி ஓடுகிறார்கள். புரட்சியைப் பாதுகாப்பதும் சுரண்டும் வர்க்கங்களின் எதிர்ப்பை நசுக்குவதும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் முக்கியமான நோக்கமாகும். புரட்சி தன்னைத் தற்காத்துக்

---

* வி. இ. லெனின், சர்வாதிகாரப் பிரச்சினையின் வரலாற்றைப் பற்றி, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1983, பக்கம் 3.

கொள்வதற்குத் தகுதியுடையதாக இருக்க வேண்டும் என்பதை வரலாறு எடுத்துக் காட்டியிருக்கிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், புதிய வரலாற்று நிலைமைகளில், புதிய வரலாற்று வடிவங்களில் உழைப்பாளர்கள் நடத்துகின்ற வர்க்கப் போராட்டமே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்.

மறுபக்கத்தில், வர்க்க எதிரிகளை நசுக்குவது மட்டுமே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் முதன்மையான நோக்கம் அல்ல. உழைப்பாளர்கள் சோஷலிசத்தை நிர்மாணிப்பதற்கு, பொருளாதாரம், கலாசாரம், சமூக-அரசியல் உறவுகள் மற்றும் இதர துறைகளில் தீவிரமான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு அதை உபயோகிக்கிறார்கள். சர்வாதிகாரத்தின் தலைமையான நோக்கம் சோஷலிச நிர்மாணமே. "பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் சாரம் பலப்பிரயோகத்தில் மட்டுமோ அல்லது பிரதானமாயும் பலப்பிரயோகத்திலோ இல்லை. அதன் முக்கிய அம்சம் உழைக்கும் மக்களின் முன்னேறிய படைப்பிரிவின், அவர்களது முன்னணிப் படையின், அவர்களது ஏகத் தலைவனான பாட்டாளி வர்க்கத்தின் நிறுவன ஒழுங்கமைப்பும் கட்டுப்பாடும் ஆகும். பாட்டாளி வர்க்கத்தின் குறிக்கோள் சோஷலிசத்தைக் கட்டுவது, சமுதாயம் வர்க்கங்களாகப் பிளவுபட்டிருப்பதை ஒழிப்பது, சமுதாயத்தின் உறுப்பினர்கள் அனைவரையும் உழைக்கும் மக்களாக்குவது, மனிதனை மனிதன் எவ்விதத்திலும் சுரண்டுவதற்கான அடிப்படையை அகற்றுவது என்பதாகும்."*

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் மற்றொரு

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 9, 1982, பக்கம் 288.

முக்கியமான கடமையையும் — விவசாய வர்க்கம் மற்றும் இதர உழைப்பாளிகள் முதலாளி வர்க்கத்திடமிருந்து முற்றாகவும் முடிவாகவும் முறித்துக்கொள்வதையும் அவர்களை சோஷலிச நிர்மாணத்தில் ஈடுபடுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு அவர்களிடம் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையை நிறுவுதல் — நிறைவேற்றுகிறது. தொழிலாளி வர்க்கத்துக்கும் மற்ற உழைப்பாளிகளுக்கும் கூட்டணி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் சாராம்சமாகவும் ஆகவுயர்ந்த கோட்பாடாகவும் இருக் கிறது. தொழிலாளி வர்க்கம் தன்னந்தனியாக, நேச சக்திகள் இல்லாமல், சோஷலிஸ்ட் நிர்மாணத்தின் மகத்தான நோக்கங்களை நிறைவேற்ற முடியாது, ஆட்சியதிகாரத்தைப் பெறுவதும் அதைத் தக்கவைத்துக் கொள்வதும், சுரண்டல்காரர்களை ஒடுக்கி, தீவிரமான சமூக மாற்றங்களை நிறைவேற்றுவதும் முடியாது. தொழிலாளி வர்க்கம் விவசாய வர்க்கம் மற்றும் இதர உழைப்பாளிகளுடன் உறுதியான கூட்டணி அமைப்பது சோஷலிசத்துக்கான போராட்டத்தின் மற்றொரு விதி யாகும். அது எல்லா நாடுகளுக்கும் பொதுவானது, பிரத் யேகமான வரலாற்று நிலைமைகளுக்கேற்ப அது பல்வேறு வடிவங்களை அடைகிறது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஒரு குறிப்பிட்ட நாட்டின் முக்கியமான குணாம்சங்களையும் அது சோஷலிசத்துக்கு மாறுகின்ற கட்டத்தின் போது இருக்கின்ற பிரத்யேகமான வரலாற்று நிலைமை களையும் பிரதிபலிக்கின்ற பல்வேறு வடிவங்களை அடைகின்றது. “எல்லா நாடுகளும் சோஷலிசத்திற்கு வரும், இது தவிர்க்க இயலாதது, ஆனால் இது ஒரே மாதிரியாக நடக்காது, ஜனநாயகத்தின் வடிவத்தில், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வகையில்,

சமுதாய வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களில் சோஷலிச மாற்றங்களை ஏற்படுத்தும் வேகத்தில் ஒவ்வொரு நாடும் தன் விசேஷப் பங்கைச் செலுத்தும்''* என்று வி. இ. லெனின் கூறினார்.

வரலாற்று ரீதியில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் முதல் வடிவமாக பாரிஸ் கம்யூன் இருந்தது. பாரிஸ் கம்யூன் 1871 மார்ச் 18 முதல் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு எதிர்ப்புரட்சிக்காரர்கள் அதை நசுக்கிய மே 28ந் தேதி வரை நீடித்தது. பாரிஸ் கம்யூன் குறைந்த காலமே இருந்தாலும் முக்கியத்துவம் நிறைந்த வரலாற்று அனுபவத்தைக் கொடுத்தது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் மற்றொரு வடிவமாகிய சோவியத் ஆட்சியதிகாரம் ருஷ்யாவில் வெற்றியடைந்த சோஷலிஸ்ட் புரட்சியின் விளைவாகத் தோன்றியது. பெருந்திரளான மக்களினால் அமைக்கப்பட்ட இந்த அரசாங்க வடிவம் உழைப்பாளர்களுடைய போராட்டத்தின் தேவைகளுடன் பொருந்தியிருந்தது. சோவியத்துகள் வர்க்க ஸ்தாபனங்கள், அதாவது தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் உழைக்கின்ற அறிவுப் பகுதியினரால் தமக்கிடையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்புக்கள் என்ற முறையில் வளர்ச்சியடைந்தன. மாற்றக் காலகட்டத்தின் போது சோவியத்துகளின் தேர்தல் பிரதேச அடிப்படையில் நடைபெறவில்லை, உற்பத்தி ஸ்தாபனத்தின் பிரதிநிதித்துவ அடிப்படையில் நடைபெற்றது. சோவியத்துகளுக்குப் பிரதிநிதிகள் தொழில் நிறுவனங்கள், இராணுவத்தின் படைப் பிரிவுகள் இதரவற்றிலிருந்து நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்

* V. I. Lenin, "A Caricature of Marxism and Imperialist Economism", *Collected Works*, Vol. 23, pp. 69—70.

கள். சோவியத்துகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இலட்சக்கணக்கான உழைப்பாளர்கள் அரசாங்கக் கலையில் பயிற்சி பெற்றார்கள். 1905ம் வருட ஆயுதமேந்திய எழுச்சியின் போது அதன் உறுப்புகளாகத் தோன்றிய சோவியத்துக்கள் பாட்டாளி வர்க்கம் அரசாட்சியை வென்ற பிறகு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் அரசு வடிவமாக மாறின. அவை ஒரே சமயத்தில் அரசு உறுப்புக்களாகவும் விரிவான சமூக அமைப்புக் களாகவும் இருந்தன. முதல் சோவியத்துக்கள் முற்றிலும் பாட்டாளி வர்க்க ஸ்தாபனங்களாக இருந்தன, அதாவது அவை ஆகப் புரட்சிகரமான வர்க்கத்தைப் பிரதிநிதித் துவம் செய்தன. காலப் போக்கில் மற்ற சமூகப் பிரிவினர் அவற்றில் பங்கெடுத்தல் மேன்மேலும் அதிகரித் தது, முடிவில் அவை மொத்த உழைக்கும் மக்களின் ஸ்தாபனங்களாக மாறின.

இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு ஐரோப் பாவிலும் ஆசியாவிலும் சில நாடுகளில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரங்கள் நிறுவப்பட்டன; அவை மக்கள் ஜனநாயகம் என்று அழைக்கப்பட்டன. புரட்சி விரிவான சமூக அடிப்படையைக் கொண்டிருத்தல், ஓரளவுக்கு சமாதான ரீதியான வளர்ச்சி, சோவியத் யூனியனுடைய உதவி ஆகியவை பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் இந்த வடிவத்தின் முக்கியமான கூறுகளை நிர்ணயித்தன. மக்கள் முன்னணி என்னும் பெயரில், மார்க்சிய-லெனினியக் கட்சியின் தலைமையில் பல்வேறு ஜனநாயக ஸ்தாபனங்களைக் கொண்ட வெகுஜன சமூக-அரசியல் அமைப்பு அதன் முக்கிய அம்சமாகும். சோவியத் யூனியனில் வரலாற்று ரீதியான விளைவாகிய ஒற்றைக் கட்சி அமைப்பிலிருந்து வேறுபட்ட முறையில் ஐரோப்பிய நாடுகளில் பெரும்

பான்மையானவற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகள் அரசாங்கத்தில் பங்கெடுக்கின்றன. இந்த அரசுகள் பலவற்றில் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் பாட்டாளி வர்க்கமல்லாத ஜனநாயகக் கட்சிகளுடன் பலனுள்ள உறவுகளைக் கொண்டிருக்கின்றன. சில ஐரோப்பிய சோஷலிஸ்ட் அரசுகள் தம்முடைய பழமையான நாடாளுமன்ற அமைப்புக்களை — சற்று மாற்றியமைத்த போதிலும் — வைத்துக் கொண்டிருக் கின்றன. இன்னும் சில வேறுபாடுகளும் இருக்கின்றன. சோவியத் யூனியனுடைய அனுபவத்தைப் போல இந்த நாடுகளின் அனுபவமும் சர்வதேச தொழிலாளி வர்க்க மற்றும் தேசிய விடுதலை இயக்கங்களுக்கு, சோஷலிசத் துக்கான போராட்டத்துக்கு அதிகமான முக்கியத்து வத்தைக் கொண்டிருக்கின்றது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தில் புதிய வடிவங்கள் எதிர்காலத்தில் தோன்றக் கூடும்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் உழைப்பாளர் களின், தொழிலாளி வர்க்கத்தின் இறுதி இலட்சியம் அல்ல, புதிய சமூகத்தை நிறுவுவதற்கு அது ஒரு முதன்மையான வழி. சோஷலிச கட்டுமானப் போக்கில் இதுவே மாறுகிறது. சுரண்டல் வர்க்கங்கள் ஒழித்துக் கட்டப்பட்ட பின் தூக்கியெறியப்பட்ட சுரண்டலாளர் களை ஒடுக்கும் பணி படிப்படியாக மறைந்தது, முக்கிய ஆக்க பூர்வமான கடமைகளை நிறைவேற்றுவது முழு வேகத்தில் ஆரம்பமாகியது. பாட்டாளி வர்க்க சர்வாதி காரம் தன் வரலாற்றுக் கடமையை நிறைவேற்றிய பின் எல்லா உழைப்பாளிகளின் அரசியல் ஆட்சியாக மாறியது, பாட்டாளி வர்க்க அரசு அனைத்து மக்கள் அரசாகியது. இது சோவியத் நாட்டில் சோஷலிசத்தை மேம்படுத்தும் முக்கிய உறுப்பாக இயங்குகிறது, சர்வதேச

அரங்கில் இது சோஷலிசத்தின் வெற்றிகளைக் காத்து நிற்கிறது, உலக சோஷலிச நிலைகளை வலுப்படுத்தப் பாடுபடுகிறது, ஏகாதிபத்திய சக்திகளின் ஆக்கிரமிப்புக் கொள்கையை எதிர்த்து நிற்கிறது, எல்லா மக்களினங் களுடனும் சமாதானமான ஒத்துழைப்பை வளர்க்கிறது.

இன்றைய காலகட்டத்தில் சோவியத் ஜனநாயகத்தை மேம்படுத்துவதும், அரசு மற்றும் சமூக வாழ்க்கையின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் உழைப்பாளிகள், இவர் களுடைய கூட்டுகள், ஸ்தாபனங்களைத் தீவிரமாக, செயல்முனைப்போடு பங்கேற்கச் செய்வதன் அடிப் படையில் மக்களின் சோஷலிச சுயநிர்வாகத்தை மேன்மேலும் முழுமையாக நிறைவேற்றுவதும்தான் சோவியத் சமுதாயத்தின் அரசியல் முறையை வளர்ப் பதில் நீண்ட காலப் போக்காகும் என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

சோவியத் சமுதாயத்தின் அரசியல் முறையின் உட்கருவாகிய கட்சி இந்நிகழ்ச்சிப் போக்கின் முக்கிய சக்தியாகத் திகழுகிறது. எல்லா மக்கள் பிரிவினர், நாட்டின் தேசிய இனங்கள், மக்களினங்களின் ஒற்றுமை யையும் விசேஷ நலன்களையும் பிரதிபலிக்கும் இந்த முறையின் மற்றெல்லா அங்கங்களும் (சோவியத் அரசு, தொழிற்சங்கங்கள், கம்சமோல், கூட்டுறவுகள், மற்ற சமூக ஸ்தாபனங்கள்) கட்சியின் தலைமையின் கீழ்தான் செயல்படுகின்றன.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திலிருந்து அனைத்து மக்களின் அரசுக்கு மாறுவது வளர்ச்சியடைந்த சோஷ லிசத்தை நிர்மாணித்துக் கொண்டிருக்கின்ற எல்லா நாடுகளிலும் வரலாற்று ரீதியில் தவிர்க்க முடியாத கட்டமாக இருக்கிறது.

அரசு நிரந்தரமானதல்ல. கம்யூனிசம் நிர்மாணிக்கப்

பட்டவுடன் அதற்கான அவசியம் மறையும், அது கம்யூனிஸ்ட் பொது சுயநிர்வாகமாக படிப்படியாக வளர்ச்சி அடையும். எனினும் இது நடைபெறுவதற்கு நெடுங்காலமாகும்.

உள்நாட்டுப் பொருளாதார நிலைமைகளின் விளைவாக அரசு உலர்ந்து உதிரும்: உற்பத்திச் சக்திகள் ஆக உயர்ந்த வளர்ச்சி நிலையை அடைந்துவிடும், சோஷலிஸ்ட் உடைமையின் இரண்டு வடிவங்களும் இணைந்து விடும், உழைப்பு ஒவ்வொரு தனிநபருக்கும் பிரதானமான, ஜீவாதாரமான தேவையாக மாறிவிடும், ''ஒவ்வொரு வரிடமிருந்தும் அவரவர் திறமைக்கேற்ப, ஒவ்வொரு வருக்கும் அவரவர் தேவைகளுக்கேற்ப'' என்னும் கம்யூனிஸ்ட் வினியோகக் கோட்பாடு சமூகத்தின் வாழ்க்கையை ஒழுங்குபடுத்தும்.

வெளிநாட்டு நிலைமைகளும் முக்கியமானவையே; ஏனென்றால் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு அபாயம் நீடிக்கின்ற வரையிலும் நம்பகமான பாதுகாப்பை வைத்திருப்பது அவசியமாகும். சோஷலிஸ்ட் நாடுகளுக்கு எதிரான ஆக்கிரமிப்பு அபாயம் இனிமேல் இல்லை என்கின்ற அளவுக்கு உலகத்தில் சக்திகளின் அணிச் சேர்க்கை சோஷலிசத்துக்கு ஆதரவாகப் பேரளவில் வளர்ச்சியடைகின்ற வரை அரசு உலர்ந்து உதிராது என்பது இதிலிருந்து அறியப்படும்.

# அத்தியாயம் ஐந்து

# சமூகத்தின் ஆன்மீக வாழ்க்கை. சமூக உணர்வின் வடிவங்கள்

**ஆன்மீக வாழ்க்கையும்
சமூக உணர்வும்**

வரலாற்றுப் பொருள்முதல்வாதம் ஆன்மீக வாழ்க்கையை முழுமையாக ஆராய்கிறது, அதன் எல்லாச் செயல்களையும் தேர்ந்து காண்கிறது. சமூகத்தின் ஆன்மீக வாழ்க்கையை அமைக்கின்ற கூறுகள் உருவெடுப்பதற்கு முன்பாக சமூக உணர்வைக் கடந்து வருகின்றன. ஏதாவதொரு சமூக நிகழ்வை ஆன்மீக வாழ்க்கைத் துறையில் சேர்ப்பதற்கு இது ஒரு புறநிலை அளவுகோலாகப் பயன்படுகிறது. சமூக நிகழ்வுகள் அனைத்தும் சமூக வாழ்நிலையிலிருந்து தோன்றுகின்றன, அவை சமூக உணர்வுடன் பிரிக்க முடியாதபடி இணைக்கப்பட்டிருக்கின்றன என்பவை இதிலிருந்து தொடரும்.

சமூக உணர்வு என்பது ஆன்மீக வாழ்க்கையின் செயல்படுகின்ற அமைப்பு; சமூக உணர்வுக்கும் தனிப்பட்ட உணர்வுக்கும் இடைச்செயல், சமூகப் பிரிவுகளுக்கும் வர்க்கங்

களுக்கும் இடையில் சித்தாந்தப் போராட்டம், கருத்துக்கள், சிந்தனைகள், தத்துவங்களின் பரிவர்த்தனை, அவற்றின் தோற்றம், வளர்ச்சி, பெருந்திரளான மக்கள் மீது அவற்றின் தாக்கம் ஆகியவை அதிலடங்கும்.

கடைசியாக, சமூக உணர்வு சமூக நிறுவனங்களுடன் கூட்டாகச் செயல்படுகிறது; அவற்றின் மூலம் மெய்யான சித்தாந்த உறவுகளின் வடிவத்தை அடைகிறது.

சமூக வாழ்நிலை சமூக உணர்வை நிர்ணயிக்கிறது; எனினும் கருத்துக்கள் உற்பத்தியிலிருந்து, உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியிலிருந்து நேரடியாகத் தோன்றுகின்றன என்பது இதன் பொருளல்ல.

உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி அடித்தளத்தில், அதாவது சமூகத்தின் பொருளாதாரக் கட்டமைப்பில் ஏற்படுகின்ற மாற்றங்களின் மூலமாக சமூக உணர்வில் எடுத்துரைக்கப்படுகிறது. உற்பத்தி அடித்தளத்தின் மூலமாகவே சமூக உணர்வு மற்றும் சித்தாந்தத்தின் தன்மையையும் வளர்ச்சியையும் உருவாக்குகிறது.

19ம் நூற்றாண்டைச் சேர்ந்த ருஷ்யப் புரட்சிகர ஜனநாயகவாதிகளின் பொருள்முதல்வாதத் தத்துவஞானம் அக்காலத்திய சமூகத்தின் பொருளாயதத் தேவைகளையும் பண்ணை அடிமைகளுக்கும் பண்ணை அடிமைகளின் உடைமையாளர்களான நிலப்பிரபுக்களுக்கும் இடையில் தோன்றிய முக்கியமான மோதலையும் பிரதிபலித்தது. அது விவசாயப் புரட்சி என்னும் கருத்துக்குத் தத்துவப் பின்னணியைக் கொடுத்தது. ஆகவே இங்கே குறிப்பிடப்படுகின்ற பொருள்முதல்வாதத் தத்துவஞானம் விவசாயிகளுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் இடையில் கூர்மையாக வெளிப்பட்ட வர்க்கப் போராட்டத்தில் வேரூன்றியிருந்தது; அது முதலாளித்துவத்தின் வளர்ச்சியுடன் சேர்ந்திருந்த புதிய உற்பத்திச் சக்தி

களுக்கும் புதிய உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியைத் தடுக்கத் தொடங்கியிருந்த பழைய, நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுகளுக்கும் இடையில் கூர்மையான முரண்பாட்டைப் பிரதிபலித்தது.

ருஷ்யாவின் புரட்சிகர ஜனநாயகவாதிகளின் சித்தாந்தம் ஒடுக்கப்பட்ட மக்களுடன் பிணைப்புக்களை ஏற்படுத்திக் கொண்டு வலிமையடைந்தது; அது மக்களுடைய அக்கறைகள் மற்றும் விருப்பார்வங்களின் வெளியீடாக இருந்தது. அதனால்தான் அது முற்போக்குடைய சித்தாந்தமாக இருந்தது.

சமூக உணர்வின் ஏதாவதொரு வடிவத்தின் மூலத்தையும் தன்மைகளையும் ஆராய்கின்ற பொழுது குறிப்பிட்ட உற்பத்தியின் வளர்ச்சி மட்டத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு முடிவு செய்யக் கூடாது, அடித்தளத்தின் தன்மை, சமூகத்தின் பொருளாயதத் தேவைகள், அந்த சமூகத்தின் பொருளாதர அமைப்பு உருவாக்குகின்ற வர்க்கப் போராட்டத்தின் மொத்தப் போக்கு ஆகிய அனைத்தையும் அடிப்படையாகக் கொள்வது பொருத்தமாகும். சமூக உணர்வு சமூக வாழ்நிலைக்குப் பின்தங்கிவிடலாம், அல்லது சமூக வாழ்நிலை சமூக உணர்வுக்குப் பின்தங்கிவிடலாம். சமூக உணர்வின் வடிவங்கள் சார்புநிலையில் சுதந்திரமாக வளர்ச்சியடைவதை நாம் அங்கீகரித்தால் மட்டுமே இவை அனைத்தையும் விளக்க முடியும்.

எங்கெல்ஸ் (வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தைப் பற்றி 1890க்களில் எழுதிய கடிதங்களில்) சுட்டிக்காட்டியதைப் போல, மேற்கட்டுமானத்தின் பல்வேறு கூறுகள் தமக்குள்ளாகவும் அடித்தளத்துடனும் பல்தொகுதியான உறவுகளில் ஈடுபடுகின்றன. முடிவாகப் பார்க்கும் பொழுது, இந்த இடைச்செயலில் பொருளாதார

வளர்ச்சி, வளர்ச்சியின் இயக்கு சக்தியாக இருக்கிறது. ஆகவே எங்கெல்ஸ் சமூக உணர்வின் வடிவங்களின் ஓரளவுக்கு சுதந்திரமான வளர்ச்சியைச் சுட்டிக் காட்டுகிறார்.

இச்சார்புநிலைச் சுதந்திரம் எங்கேயிருந்து கிடைக் கிறது? பிரதானமாக, சமூக உணர்வின் ஒவ்வொரு வடிவத்தின் வளர்ச்சியின் தொடர்ச்சியிலிருந்துதான் இது வந்தது. வரலாற்றில் ஒவ்வொரு காலகட்டத்திலும் கலைகள், விஞ்ஞானம் மற்றும் தத்துவஞானம் முந்திய காலகட்டத்தில் தொகுக்கப்பட்ட அனுபவத்தின் மீது தயாரிக்கப்படுகின்றன. இத்தொடர்ச்சியை நாம் புறக்கணித்தால் சித்தாந்தத்தின் வளர்ச்சியை நம்மால் புரிந்து கொள்ள முடியாது. மறுமலர்ச்சிக் கலாசாரமும், இத்தாலிய மனிதநேயமும் பழங்காலத்திலிருந்து பெற்ற பாரம்பரியத்தை நாம் கணக்கிலெடுத்துக் கொள்ளாவிட் டால் அவற்றைச் சரியாகப் புரிந்துக் கொள்ள முடியாது.

அதைப் போலவே பிரெஞ்சுப் பொருள்முதல்வாதத் தைக் கணக்கிலெடுத்துக் கொள்ளாமல் சான்-சிமோன் மற்றும் ஃபூரியேயின் கற்பனாவாத சோஷலிசத்தைப் புரிந்து கொள்ள முடியாது. கற்பனாவாத சோஷலிசம் உருவத்தில் 18ம் நூற்றாண்டைச் சேர்ந்த பிரெஞ்சு அறிவியக்கவாதிகளின் நிலைகளைத் தொடர்ந்தும் வளர்த் தும் சென்று கொண்டிருந்த பொழுது, சாராம்சத்தில் முதலாளித்துவத்தின் முரண்பாடுகளைப் பிரதிபலித்தது என்று எங்கெல்ஸ் **டூரிங்குக்கு மறுப்பு** என்னும் நூலில் எழுதினார். ‘‘எவ்வளவுதான் அதன் வேர்கள் [பொரு ளாயத] பொருளாதார உண்மைகளில் ஆழப்பதிந்திருந்த போதிலும், எந்தவொரு புதிய தத்துவத்தையும் போலவே நவீன சோஷலிசமும் தயாராய்த் தன் கைக்குக் கிடைத்த அறிவுத்துறை விவரங்களுடன் முதலில்

தன்னை இணைத்துக் கொள்ள வேண்டியிருந்தது.''*

சமூக உணர்வில் ஒரு வகையான தொடர்ச்சி இருக்கிறது என்பதை நாம் பார்த்தோம். ஒவ்வொரு சித்தாந்தமும் ஒரு குறிப்பிட்ட காலத்தின் சமூக-பொருளாதார முரண்பாடுகளையும் உறவுகளையும் அவசியமாகப் பிரதிபலிக்கின்ற பொழுது அது வடிவத்தில் தொடர்ச்சியான விமர்சனப் பகுப்பாய்வின் விளைவாக அல்லது முந்திய காலத்தின் சித்தாந்த பாரம்பரியத்தை ஏதாவதொரு வடிவத்தில் உபயோகப்படுத்துகின்றதாக இருக்கிறது.

கடந்த காலத்தின் கருத்துக்களை வெறுமளவில் புனருற்பத்தி செய்வதே இத்தொடர்ச்சி என்று அதைப் புரிந்து கொள்ளக் கூடாது. சித்தாந்த பாரம்பரியத்தை வெவ்வேறு வழிகளில் பயன்படுத்திக் கொள்ள முடியும்: அதை ஏற்றுக் கொள்ளலாம், அல்லது விமர்சன ரீதியில் பகுப்பாய்வு செய்யலாம், அல்லது நிராகரிக்கவும் செய்யலாம், அல்லது தொடக்க நிலையாக எடுத்துக் கொள்ளலாம். அதை எவ்விதத்தில் பயன்படுத்திக் கொண்டாலும் சித்தாந்த வளர்ச்சியில் இடைவெளி என்பது ஒரு போதும் இல்லை. யாரும் — தத்துவ ஞானியோ அல்லது கலைஞரோ — கீறல் கோட்டிலிருந்து தொடங்க முடியாது. அவர் தனக்கு முந்தியவர்களுடைய சாதனையின் மீது ஏதாவதொரு முறையில் எப்பொழுதும் சாய்ந்து நிற்கிறார். இது முக்கியமான கருத்து; ஏனென்றால் அத்தகைய தொடர்ச்சி இல்லாமல் முன்னேற்றம் இல்லை.

சித்தாந்த வளர்ச்சியில் தொடர்ச்சி இருக்கின்ற

---

* பி. எங்கெல்ஸ், டூரிங்குக்கு மறுப்பு, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1979, பக்கம் 31.

அளவில், பொருளியல் மற்றும் பொருளாதார உறவுகள் சமூக உணர்வின் ஒரு குறிப்பிட்ட வடிவத்தின் விவரங்கள் மற்றும் பிரத்யேகமான கூறுகளின் மூலமாக சித்தாந்த வளர்ச்சியின் மீது தாக்கம் செலுத்துகின்றன. எங்கெல்ஸ் 1890க்களில் எழுதிய ஒரு கடிதத்தில் சுட்டிக்காட்டியதைப் போல. பொருளாதாரம் இத்துறையில் புதிதாக எதையும் படைப்பதில்லை, சிந்தனை விவரங்கள் மாற்றப்பட்டு மேலும் வளர்க்கப்படுகின்ற முறையை அது நிர்ணயிக் கிறது. இது கூடப் பெரும்பாலும் மறைமுகமாகவே நடைபெறுகிறது என்றும் எங்கெல்ஸ் சேர்த்துக் கூறினார். இந்த வடிவங்கள் சார்புநிலையில் சுதந்திரமாக வளர்ச்சி அடைவதற்கு சமூக உணர்வின் வடிவங்களின் தொடர்ச்சி ஒரு காரணம் என்று எங்கெல்ஸ் கருதினார்.

சமூக உணர்வின் பல்வேறு வடிவங்களின், அடித்தளத் துடன் தொடர்பில் மேற்கட்டுமானத்தில் வெவ்வேறு நிலைகளை வகிக்கின்ற வெவ்வேறு கூறுகளின் இடைச் செயல் மற்றொரு காரணமாகும். அரசும் சட்டவியலும் அடித்தளத்துக்கு மிகவும் அருகில் இருக்கின்றன; ஆகவே அவை ஆளும் வர்க்கத்தின் நலன்களை மிகவும் விசு வாசமான முறையில் வெளியிடுகின்றன. மேற்கட்டுமானத் துக்கு மிகவும் தள்ளியிருக்கின்ற தத்துவஞானம், மதத் தைப் போன்ற இதர கூறுகள் வானத்தில் பறக்க முற்படுகின்றன என்று எங்கெல்ஸ் கூறினார். முடிவாகப் பார்க்கும் பொழுது அவை கூட சமூகத்தின் பொரு ளாதார அமைப்பை — நேரடியாக இல்லாவிட்டாலும் அரசு மற்றும் அரசியல் மூலமாக — பிரதிபலிக்கின்றன. இப்படி மேற்கட்டுமானத்தின் கூறுகள் சில இடை இணைப்புக்களின் மூலமாகக் தமக்குள் இடைச்செயல் புரிகின்றன. சமூக உணர்வின் ஒவ்வொரு வடிவமும் சமூக வாழ்நிலையை ஒவ்வொரு விதத்திலும் — அரசியல்

அல்லது சட்ட உணர்வு இதர வடிவத்தில் — பிரதிபலிக்கிறது. சமூக உணர்வின் வடிவங்களின் சார்புநிலையான சுதந்திரத்துக்கு இது மற்றொரு காரணம்.

கடைசியாக, சமூக உழைப்புப் பிரிவினையைப் பற்றி ஒரு முக்கியமான கருத்தைக் குறிப்பிடுவது அவசியம். சமூக உணர்வின் வெவ்வேறு வடிவங்களின் வளர்ச்சியை சமூக உழைப்புப் பிரிவினையின் நோக்கிலிருந்து சிறப்பாகப் புரிந்து கொள்ள முடியும் என்று எங்கெல்ஸ் ஜி. ஷ்மிட் என்பவருக்கு எழுதிய கடிதத்தில் சுட்டிக் காட்டினார். சித்தாந்தத் துறை ஒவ்வொன்றுமே அறிவு உற்பத்தியில் உழைப்புப் பிரிவினையின் துறையாக இருக்கிறது. உதாரணமாக, அரசு தோன்றியவுடன் தொழில்முறை அரசியல்வாதிகள், சட்டவியலாளர்கள் இதரர் தோன்றிவிடுகிறார்கள்; கலை சமூக உணர்வின் வடிவமாக மாறிய பிறகு படைப்புக் கலைகளைத் தொழிலாகக் கொண்டிருக்கின்ற கலைஞர்கள் தோன்றுகிறார்கள்.

பொருளாயத உற்பத்தியில் உழைப்புப் பிரிவினையைப் போல அறிவு உற்பத்தியிலும் உழைப்புப் பிரிவினை இருக்கிறதென்பதை நாம் பார்த்தோம்.

சமூக உணர்வின் வடிவங்கள் சார்புநிலையில் சுதந்திரமாக இருப்பதைத் தவிர அவை சமூக வாழ்நிலையின் மீது தீவிர எதிர்ச்செயல் புரிகின்றன. கொச்சையான "பொருளாதாரப் பொருள்முதல்வாதம்" சமூக உணர்வின் எல்லா வடிவங்களையும் பொருளாதாரமாக வகைப்படுத்துகிறது; மேலும் அது கருத்துக்களின் செயல்வன்மை வாய்ந்த பாத்திரத்தை அங்கீகரிப்பதில்லை. "பொருளாதாரப் பொருள்முதல்வாதிகள்" சித்தாந்தத்தின் சார்புநிலையான சுதந்திரத்தை மறுத்ததுடன் சித்தாந்த நிகழ்வுகள் அனைத்தையும் பொருளாதார

வளர்ச்சியின் நேரடியான விளைவு என்று கருதினார்கள், சமுதாயத்தின் வளர்ச்சியில் சித்தாந்தத்தின் பங்கை குறைத்து மதிப்பிட்டார்கள். சமுதாய வளர்ச்சியில் பொருளர்தாரம் மட்டுமே ஒரே தீவிர சக்தி என்று கூறிய கொச்சை ''பொருளாதார பொருள்முதல்வாதிகள்'' சமூக உணர்வின் பல்வேறு வடிவங்களும் பொருளாதாரத் தின் செயலற்ற விளைவு என்று வழக்கமாகக் கருதினார் கள்.

சமூகத்தில் கருத்துக்களின் பாத்திரத்தைப் பற்றிய இவ்விளக்கத்தை மார்க்சிய-லெனினியவாதிகள் எப்பொழு தும் எதிர்த்து வந்திருக்கிறார்கள். கொச்சையான ''பொருளாதாரப் பொருள்முதல்வாதத்தை'' ஆதரித்த ''பொருளாதாரவாதிகளையும்'' மென்ஷிவிக்குகளையும் லெனின் எதிர்த்துப் போராடினார்.

வரலாற்றுப் பொருள்முதல்வாதம் கொச்சையான பொருள்முதல்வாதத்திலிருந்து வேறாக இருக்கிறது; அது கருத்துக்களின் ஜீவனுள்ள பாத்திரத்தையும் சமூக வாழ்நிலையின் வளர்ச்சியின் மீது கருத்துக்கள், தத்துவங்கள் மற்றும் அரசியல் நிறுவனங்களின் எதிர்த் தாக்கத்தையும் அங்கீகரிக்கிறது. கருத்துக்கள் பிற்போக் கானவையாக அல்லது முற்போக்கானவையாக இருக்க முடியும் என்பதால் இத்தாக்கமும் வெவ்வேறு விதமாக இருக்க முடியும். பிற்போக்கான கருத்துக்கள் சமூக வளர்ச்சியைத் தடுக்கின்றன, முற்போக்கான கருத்துக்கள் சமூக வளர்ச்சியில் தொடர்ச்சியாக ஏற்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவி செய்து வளர்ச்சியை வேகப்படுத்துகின்றன.

எனினும் மார்க்சிய-லெனினியவாதிகள், கருத்துக்களை சமூக மாற்றத்தை இயக்குகின்ற பிரதான சக்தியாக என்றுமே பார்க்கவில்லை. புரட்சிகரமான மாற்றங்

களுக்கு சமூகத்தின் பொருளாயத நிலைமைகளே மூல காரணம். சமூகத்தின் பொருளாயத வளர்ச்சியிலுள்ள மோதல்களையும் முரண்பாடுகளையும் மக்கள் உணர்ந்து, இந்த வளர்ச்சி முன்வைக்கின்ற புதிய தேவைகளை அங்கீகரிக்கின்ற பொழுது அவர்கள் இம்மோதல்களைத் தீர்க்கின்ற ஆன்மீக ஆயுதத்தைப் புதிய சமூகக் கருத்துக் களில் அடைகிறார்கள்.

கருத்துக்கள் சமூக வளர்ச்சியில் ஒரு மாபெரும் சக்தி என்று மார்க்சிய-லெனினியம் கருதுகிறது என்பதை நாம் அறிவோம். கருத்துக்கள் சில நிலைமைகளில் — பெருந்திரளான மக்கள் அவற்றை ஏற்றுக்கொள்கின்ற பொழுது — பொருளாயதச் சக்தியாக மாறுகின்றன என்று மார்க்ஸ் எழுதினார்.* காலாவதியான சமூக நிறுவனங்களை ஒழிப்பதற்கு முற்போக்கான கருத்துக்கள் மட்டும் போதுமானவை அல்ல. கருத்துக்கள் மட்டுமே சமூக வாழ்க்கையை மாற்றிவிட முடியாது. அவை பெருந்திரளான மக்களின் மனங்களைப் பற்றுகின்ற பொழுது, வர்க்கங்களை வென்றெடுக்கின்ற பொழுது மட்டுமே மிகப் பெரிய, ஜீவனுள்ள சக்தியாக மாறு கின்றன. அப்பொழுதுதான் அவற்றை நடைமுறைக்குக் கொண்டுவர முடியும்.

சமூக வளர்ச்சியில் கருத்துக்களின் பாத்திரத்தைப் பற்றிய மார்க்சிய-லெனினியக் கருதுகோள் சோஷலிஸ்ட் சமூகத்தின் வளர்ச்சியைப் புரிந்து கொள்வதில் சிறப் பான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது. இங்கே முற்போக்கான கருத்துக்களின் பாத்திரம் பேரளவில் அதிகரிக்கிறது; அவை சமூகத்தின் வளர்ச்சியையும்

---

* Karl Marx, "On the Jewish Question", in: Karl Marx, Frederick Engels, *Collected Works,* Vol. 3, p. 155 பார்க்க.



11–791

கம்யூனிசத்தை நோக்கி அதன் முன்னேற்றத்தையும் வேகப்படுத்துகின்றன.

கருத்துக்கள் சமூக வளர்ச்சியின் மீது எந்த அளவில் தாக்கம் செலுத்த முடியும் என்பது முக்கியமாகப் பின்வருவனவற்றைப் பொறுத்திருக்கிறது:

1) குறிப்பிட்ட சமூக அமைப்பின் தன்மை மற்றும் அதன் வளர்ச்சியின் புறநிலையான விதிகள்;

2) குறிப்பிட்ட சமூகத்தின் கருத்துக்களின் தன்மை, அந்த சமூகத்தின் பொருளாயத தேவைகளை அவை பிரதிபலிக்கின்ற அளவு;

3) பெருந்திரளான மக்கள் மத்தியில் இக்கருத்துக்கள் பரவியிருக்கின்ற அளவு.

சோஷலிஸ்ட் சூழ்நிலையில் கருத்துக்களின் பாத்திரம் வளர்ச்சியடைதல் மேற்கூறிய மூன்று நிபந்தனைகளையும் பொறுத்திருக்கிறது.

கடைசி நிபந்தனையைப் பொறுத்த மட்டில், மார்க்சியக் கருத்துக்களுக்கும் முந்திய தத்துவஞானக் கருத்துக்களுக்கும் முக்கியமான வேறுபாடு உள்ளது. மார்க்சிய-லெனினியக் கருத்துக்கள் பெருந்திரளான மக்களின் தீவிரமான ஆதரவைப் பெற முடியும்; ஏனென்றால் அவை அவர்களுடைய ஜீவாதாரமான நலன்களை வெளியிடுகின்றன. எனவே கடந்த காலத்தில் முற்போக்குக் கருத்துக்கள் எதுவும் பரவாத அளவுக்கு அவை விரிவாகப் பரவுகின்றன.

மார்க்சிய-லெனினியக் கருத்துக்கள் முந்திய கருத்துக்கள் அனைத்திலிருந்தும் தன்மையில் அதிகமாக வேறுபட்டிருக்கின்றன; ஏனென்றால் அவை சமூகத்தின் பொருளாயதத் தேவைகளைத் துல்லியமாகப் பிரதிபலிக்கின்றன. கருத்துக்கள் சமூகத்தின் அவசரமான தேவைகளை எவ்வளவு துல்லியமாகப் பிரதிபலிக்கின்றனவோ அந்த

அளவுக்கு சமூகத்தில் அவற்றின் பாத்திரம் பெரியதாக இருக்கும். இக்கோணத்தில் முற்காலத்திய முற்போக்குக் கருத்துக்கள் எந்தக் காலத்திலும் வகித்திராத மாபெரும் பாத்திரத்தை மார்க்சிய-லெனினியக் கருத்துக்கள் சமூக வளர்ச்சியில் வகிக்கின்றன. கடைசியாக, சோஷலிஸ்ட் சமூகத்தில் கருத்துக்களின் பாத்திரம் மேன்மேலும் அதிகரிப்பதற்கு சமூக அமைப்பின் தன்மையும் அதன் வளர்ச் சியின் புறநிலை விதிகளும் காரணமாக இருக்கின்றன.

சோஷலிஸ்ட் பொருளாதாரம் தானாகத் தோன்றி வளர்ச்சியடையவில்லை. அதன் பொருளாதார விதிகளை சமூகம் உணர்வு பூர்வமாகக் கையாள்கிறது. சோஷலிசத் தின் தன்மை தன்னியல்பானதல்ல; ஏனென்றால் அதன் வளர்ச்சி கோடிக்கணக்கான உழைப்பாளர்களின் உணர்வு பூர்வமான நடவடிக்கைகளைப் பொறுத்திருக்கிறது. உண்மையான சோஷலிசத்தை நிர்மாணிப்பவர்கள் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சோஷலிஸ்ட் அரசினால் தலைமை தாங்கப்படுகின்ற உழைப்பாளர்களே. அவை பொருளாதார விதிகளின் இயக்கத்தைக் கணக்கி லெடுத்துக் கொள்கின்றன. சோஷலிஸ்ட் சூழ்நிலையில் பெருந்திரளான மக்களின் முற்போக்குக் கண்ணோட்டமும் உணர்வு பூர்வமான நடவடிக்கையும் பேரளவில் அதிகரித்திருப்பதற்கு இது காரணமாகும்.

சோஷலிஸ்ட் சமூகத்திலும் சமூக வாழ்நிலைதான் நிர்ணயிக்கின்ற கூறாக இருக்கிறது; சமூக உணர்வு சமூக வாழ்நிலையின் பிரதிபலிப்பே. சமூக உணர்வு சமூக வாழ்நிலையினைப் பொதுவாகச் சார்ந்திருக்கின்ற சுற்றுவட்டத்துக்குள் சமூகக் கருத்துக்களின் பாத்திரம் அதிகரிக்கிறது. சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் நிர்மாணிக்கின்ற பொழுது இதைக் கணக்கிலெடுத்துக் கொள்வது அவசியம்.

### சமூக உணர்வின் கட்டமைப்பு

வரலாற்று நிகழ்வுப் போக்கின் ஆன்மீக அம்சம் என்ற முறையில் சமூக உணர்வு தனிப்பட்ட கண்ணோட்டங்களின் மொத்தம் அல்ல, அது உள்கட்டமைப்பில் பல்வேறு மட்டங்களையும் வரலாற்று வடிவங்களையும் கொண்ட ஆன்மீக பொருளாகும். சமூக உணர்வின் கட்டமைப்பில் அடங்கியிருக்கின்ற பின்வரும் கூறுகளைக் குறிப்பிட முடியும்:

1) வெவ்வேறு மட்டங்கள்: சமூக உளவியல் மற்றும் சித்தாந்தம்;

2) தனிப்பட்ட உணர்வு மற்றும் சமூக உணர்வு;

3) சமூக உணர்வின் முக்கியமான வடிவங்கள்: அரசியல், சட்டம், அழகியல், அறவியல், தத்துவ ஞானம் மற்றும் மதம்.

### சமூக உளவியலும் சித்தாந்தமும்

சமூக உணர்வு, மக்களின் மனங்களில் இருக்கின்ற உற்பத்தி உறவுகளின் பிரதிபலிப்புகள் என்ற முறையில் பொதுவாக சமூக வாழ்க்கை மற்றும் அதன் தனித் தனியான அம்சங்களைப் பற்றிய எல்லாவிதமான கண்ணோட்டங்கள், கருத்துக்கள் மற்றும் தத்துவங்களை தழுவியிருக்கிறது. சமூக வாழ்நிலை ஆரம்பத்தில் — ஒருவிதத்தில் முடிவு படாத நிலையில் — **சமூக உளவியலில்** எடுத்துரைக்கப்படுகிறது; சமூகத்தில் மக்களுடைய நிலையைப் பிரதிபலித்து, சில சமூக நடவடிக்கைகளுக்கு அவர்களைத் தூண்டி அவர்களிடம் நாள்தோறும் தோன்றுகின்ற உடனடியான கருத்துக்கள், எண்ணங்கள், உணர்ச்சிகள் மற்றும் மனோபாவங்களை அது உள்ளடக்கி

யிருக்கிறது. வர்க்க சமூகத்தில் ஒவ்வொரு வர்க்கமும் உற்பத்தி உறவுகளின் அமைப்பில் குறிப்பிட்ட நிலையை வகித்து சில பிரத்யேகமான நலன்களைக் கொண்டிருக்கின்ற அளவில், நாம் வர்க்கக் கருத்துக்கள், எண்ணங்கள், உணர்ச்சிகளை அல்லது வர்க்க சமூக உளவியலைப் பற்றிப் பேசுகிறோம். முதலாளி வர்க்க சக்திகள் இருக்கின்ற வரை முதலாளி வர்க்க உளவியல் இருக்கிறது, அந்த சக்திகள் மறைந்தவுடன் அது உலர்ந்து உதிர்ந்து விடுகிறது. இது பண்ணையடிமைகளை உடைமையாகக் கொண்டிருக்கின்ற நிலப்பிரபுக்கள் அல்லது அடிமையுடைமையாளர்களின் உளவியலுக்கும் அல்லது அடிமைகள் அல்லது பண்ணையடிமைகளின் உளவியலுக்கும் பொருந்தும். **சமூக உளவியல் என்பது ஒரு வர்க்கத்தின் ஆன்மீக பாங்கின், உணர்வின் தனித்தன்மை.**

சமூக உளவியல் ஒரு வர்க்கத்தின் அந்தஸ்தையும் நலன்களையும் திட்டவட்டமாக வெளியிடவில்லை, அது மங்கலாக, சுய உணர்வு இல்லாமல், தன்னியல்பான முறையில் வெளியிடுகிறது. அது சாராம்சத்தில் குறிப்பிட்ட வர்க்கத்தின் அந்தஸ்தின் பிரதிபலிப்பு என்பதானால் பெரும்பாலும் ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்குக் கைமாற்றிக் கொடுக்கப்பட்டு, அந்த வர்க்கத்தின் அல்லது அதன் முந்தையர்களின் கடந்தக் கால சமூக அந்தஸ்தைப் பிரதிபலிக்கின்ற மரபுவழிப்பட்ட கண்ணோட்டங்களினால் நிர்ணயிக்கப்படுகிறது. உதாரணமாக, ஆரம்பத்தில் தொழிலாளி வர்க்கம் நசித்துப் போன விவசாயிகள், கைவினைஞர்கள் மற்றும் இதர குட்டி பூர்ஷ்வா சமூகப் பிரிவுகளின் உறுப்பினர்களைக் கொண்டதாக இருந்தது. அதனால்தான் குட்டி பூர்ஷ்வா அம்சங்கள் நெடுங்காலம் வரை, குறிப்பாக, தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தன்னிச்சையான கட்டத்தில்,

தொழிலாளி வர்க்க உளவியலின் வளர்ச்சியின் மீது தாக்கம் செலுத்தின. பழக்க வழக்கங்கள், பழைய மரபுகள் மற்றும் கண்ணோட்டங்கள் கோடிக்கணக்கான மக்களிடம் வேரூன்றியிருக்கின்ற பொழுது அவற்றின் சக்தி பிரமாண்டமானதாகும். பழைய கண்ணோட்டங் களைத் தூக்கியெறிவது எவ்வளவு கடினம் என்பதைத் தொழிலாளர் இயக்கத்தின் வரலாறு எடுத்துக் காட்டு கிறது. மேலும், எந்த வர்க்கமும் மற்ற வர்க்கங்களிட மிருந்து தனித்திருக்கவில்லை. அது மற்ற வர்க்கங்களுடன், அவற்றின் உளவியல் மற்றும் சித்தாந்தத்துடன் நிரந் தரமான தொடர்பையும் அவற்றின் தாக்கத்தையும் கொண்டிருக்கிறது. முதலாளித்துவ சமூகத்தில் பூர்ஷ்வா கண்ணோட்டங்கள் பொருளாதாரம் மற்றும் ஆன்மீக துறை உள்ளிட்ட வெவ்வேறு வழிகளில் தொழி லாளர்களின் உணர்வில் ஊடுருவுகின்றன (''தொழி லாளர் உயர்வகுப்பைத்'' தோற்றுவிப்பது; பூர்ஷ்வா சித்தாந்தம் மதம், பத்திரிகை, நாடகம், சினிமா இதரவற்றின் மூலம் தொழிலாளி வர்க்கத்தின் மீது தாக்கம் செலுத்துதல்).

சமூக உளவியலில் அரசியல், அறவியல், அழகியல் மற்றும் இதர கண்ணோட்டங்கள் அடங்கியிருக்கின்றன. நெருக்கமான இடையுறவு கொண்டிருக்கின்ற, முழுமை யான உணர்வு பெறாத இக்கண்ணோட்டங்களின் மொத்தமே சமூக உளவியல்.

சமூக உணர்வின் முதல் கட்டம், நேரடியாக எடுத்துரைக்கப்படுகின்ற கட்டம் என்ற முறையில் சமூக உளவியலைக் குணாம்சப்படுத்துகின்ற கூறுகள் இவையே.

சித்தாந்தம் உள்ளடக்கத்தில் சமூக உளவியலை ஒத்திருக்கிறது; இரண்டும் சமூக வாழ்நிலையை, சமூக

வர்க்கங்கள் மற்றும் பிரிவுகளின் அந்தஸ்தை, அவற்றின் நலன்களைப் பிரதிபலிக்கின்றன. மறு பக்கத்தில் அது சமூக உணர்வின் உயர்ந்த வடிவமாகும். சித்தாந்தம் என்பது ஒரு வர்க்கம் அல்லது சமூகப் பிரிவின் தத்துவ சுய உணர்வு அல்லது எண்ணங்கள் மற்றும் கருத்துக்களின் அமைப்பு.

பொதுவாக, ஒரு சித்தாந்தத்தை விரித்துரைப்பதும் பரப்புவதும் உணர்வு பூர்வமான நிகழ்வுப் போக்கு; ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் அல்லது சமூகப் பிரிவின் நலன்களை எடுத்துரைக்கின்ற மனிதர்களுடைய குறிவழிப் பட்ட நடவடிக்கையின் விளைவு. சமூகத் தத்துவங்கள், கோட்பாடுகள் அல்லது அமைப்புக்களை நிறுவியவர்கள் பொருளாதார வளர்ச்சிப் போக்கில் ஏற்படுகின்ற தங்களுடைய வர்க்கத்தின் தேவைகளுக்கும் அவசியங் களுக்கும் பதிலளிக்குமாறு வற்புறுத்தப்படுகிறார்கள். எனினும், சித்தாந்தங்களின் உள்ளடக்கம் சமூகத்தின் பொருளாயத நிலைமைகளின் நேரடியான உற்பத்திப் பொருள் அல்ல; சமூக வாழ்நிலையைப் பல சக்திகளின் இடையீட்டில் பிரதிபலிக்கின்ற சார்புநிலையில் சுதந்திர மான நிகழ்வுப் போக்கே சித்தாந்தம்.

சமூக உளவியல் ஆரம்பத்திலிருந்து பெருந்திரளான மக்களின் உணர்வாகும்; ஆனால் சித்தாந்தம் குறிப்பிட்ட வர்க்கத்தைச் சேர்ந்த தனிநபர்களின் (தத்துவாசிரியர்கள் அல்லது சித்தாந்திகள்) அறிவில் சிற்சில பொருளாதார, அரசியல் இதர நிலைமைகளின் காரணமாக உதித்துப் பிறகு ஒரு திட்டவட்டமான சமுதாயச் சூழலில் பரவுகிறது.

வர்க்கம் மற்றும் கட்சியின் மதிப்பீடுகள் மற்றும் அளவுகோல்கள், நோக்கங்கள் மற்றும் செயல்திட்டங்கள், ஆணைகள் மற்றும் கோஷங்களுக்கு அடியிலுள்ள

நோக்கு நிலைகள், கருத்துக்கள் மற்றும் தத்துவங்களைக் கொண்ட அமைப்பு சித்தாந்தம் எனப்படுகிறது. வேறு விதமாகச் சொல்வதென்றால் அளவுகோல்கள், மதிப்பீடு கள், செயல்திட்டங்கள் இதரவை சித்தாந்த அமைப்பின் பகுதிகளே. சித்தாந்தம் விஞ்ஞானம், கலை மற்றும் அரசியல், வர்க்கங்கள் மற்றும் அவற்றின் கட்சிகளின் கொள்கைகள், சட்ட அமைப்புகள், அறவியல் இதர வற்றில் வெளியிடுகிறது.

எத்தகைய சித்தாந்த அமைப்பிலும் தத்துவங்கள் மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றன; ஏனென்றால் அவை சித்தாந்தத்தின் சாரமாக அமைந்து அதன் வளர்ச்சியை நிர்ணயிக்கின்றன; இது சித்தாந்தத்தை சமூக உளவியலுக்கு மேலே வைக்கிறது.

வரலாற்றுப் பொருள்முதல்வாதம் சித்தாந்தத்துக்கும் சமூக உளவியலுக்கும் இடையிலுள்ள இடையுறவைச் சுட்டிக் காட்டுகிறது; ஆனால் பூர்ஷ்வா சமூகவியலும் சமூக உளவியலும் சித்தாந்தத்தை அன்றாட உணர்வாக மற்றும் உணர்வை சமூக உளவியலாக வழக்கமாக வகைப்படுத்துகின்றன. முதலாளித்துவ சமூகத்தில் மார்க் சிய-லெனினிய சித்தாந்தத்தின் தாக்கத்தைப் பலவீனப் படுத்துவதற்காக வெகுஜன உணர்வைக் கைவினையாற் றுவதன் அடிப்படை இதுவே.

மார்க்சிய-லெனினியத் தத்துவஞானத்தின்படி சித்தாந் தம் சமூக உளவியலுடன் நேரடியாக அல்ல, இடை நிலையான சித்தாந்தத் தாக்கத்துடன், அதாவது மக்களுடைய உணர்வில் கருத்துக்களையும் எண்ணங் களையும் திட்டமிட்டுச் செலுத்துகின்ற வழியின் மூலம் சம்பந்தப்பட்டிருக்கிறது. இத்திட்டவட்டமான முயற்சி அவற்றின் அங்ககப் பிணைப்பைத் தோற்றுவிக் கிறது, சமூக உளவியல் மீது சித்தாந்தத்தின் தாக்கத்தை,

சமூக உளவியல் நிகழ்வுகளைச் சித்தாந்த மயமாக்குவதை நிர்ணயிக்கிறது.

இவ்வாறாக, சித்தாந்தத்தை சமூக உளவியலுடன் பொருத்தி ஆராய்வது சமூக உணர்வின் கரு என்ற முறையில் சித்தாந்தத்தை ஆராய்வதற்கும் அதன் ஜீவசக்தியை அறிந்து கொள்வதற்கும் அதிகமான வாய்ப்புக்களைத் தருகிறது. அன்றாட வாழ்க்கையின் பொருளாதார, சமூக, அரசியல் அல்லது ஏதாவதொரு துறையில் ஸ்தூலமான பிரச்சினைகளுக்கு மார்க்சிய-லெனினியத் தத்துவத்தைக் கையாளுகின்ற பொழுது, பெருந்திரளான மக்கள் தத்துவத்தை ஏற்றுக் கொண்டு புதிய சமூகத்தை உணர்வு பூர்வமாக நிர்மாணிப்பவர்களாக மாறுகின்ற பொழுது மட்டுமே சோஷலிஸ்ட் சமூகத்தில் முன்னேற்றம் ஏற்படுகிறது.

கம்யூனிஸ்ட் சித்தாந்தம் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரால் உருவாக்கப்பட்டு வெளியிலிருந்து, தத்துவஞான, சமூக சிந்தனைத் துறையிலிருந்து தொழிலாளர் இயக்கத்துக்குள் கொண்டுவரப்பட்டது. சோஷலிஸ்ட் புரட்சி வெற்றியடைந்த பிறகு கம்யூனிஸ்ட் சித்தாந்தம் புதிய கூறுகளைப் பெற்றது; அவை மேன் மேலும் முக்கியத்துவம் அடைந்து வருகின்றன.

விஞ்ஞான ரீதியில் தகுதிமிக்க, ஜனநாயக, புரட்சிகரமான, மனித நேயமுள்ள கம்யூனிஸ்ட் சித்தாந்தம் சுரண்டல், ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புக் கொள்கைகள், தேசியவாதம் மற்றும் இனவெறி ஆகியவற்றை நியாயப்படுத்தி, ஆசி வழங்குகின்ற பூர்ஷ்வா சித்தாந்தத்திலிருந்து அடிப்படையில் வேறுபட்டிருக்கிறது. பூர்ஷ்வா சித்தாந்தத்தைப் போலன்றி கம்யூனிஸ்ட் சித்தாந்தம் அதன் நேர்மையான, ஒன்றிணைப்பான, எதிர்காலத்தில் நம்பிக்கை நிறைந்த இலட்சியங்களால் கோடிக்கணக்கான

மக்களின் இதயங்களைக் கவர்ந்திருக்கிறது. அது வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்ற வர்க்கத்தின், புதிய சமூகத்தின், நாடுகளுக்கிடையில் சமாதானம் மற்றும் நட்புறவின் சித்தாந்தம்.

இப்புதிய கூறுகள் சோஷலிச எதிரிகளை எதிர்த்து, பூர்ஷ்வா சித்தாந்தத்தையும் திருத்தல்வாதத்தையும் எதிர்த்து உலக அரங்கத்தில் மேன்மேலும் சமரசப் படுத்த முடியாததாகவும் தீவிரமாகவும் நடைபெறுகின்ற வர்க்கப் போராட்டத்தில் தோன்றி அதில் வளர்ச்சி அடைகின்றன.

**சமூக உணர்வுக்கும்**
**தனிப்பட்ட உணர்வுக்கும் இடையில்**
**உறவுப் பொருத்தம்**

சமூக உணர்வும் தனிப்பட்ட உணர்வும் ஒருமையில் இருக்கின்றன; அதற்குப் பிரதான காரணம் மக்களின் சமூக வாழ்நிலை என்ற பொதுத் தோற்றுவாய், அது சமூக உணர்வையும் தனிப்பட்ட உணர்வையும் நிர்ணயிக்கின்றது. அவற்றின் பொது அடிப்படை சமூக மற்றும் வரலாற்று நடைமுறையாகும். சமூக வாழ்நிலையில் மாற்றங்கள் சமூக உணர்வில் தமக்குப் பொருத்தமான மாற்றங்களை ஏற்படுத்துகின்றன; தனிப்பட்ட உணர்வும் தனிநபரின் ஆன்மீக வளர்ச்சியும் அவற்றைப் பிரதிபலிக்கின்றன, அவை சமூக உணர்வில் தமக்குப் பொருத்தமான கூறுகளை நேரடியாகச் சார்ந்திருக்கின்றன.

அவை ஒருமையை அடைந்தாலும் சமூக உணர்வும் தனிப்பட்ட உணர்வும் உள்ளடக்கத்தில், அவை பிரதிபலிக்கின்ற பொருள்களில், அவை உடலெடுக்கின்ற முறையில் மற்றும் அவற்றின் பிரதான செயல்களில் வேறுபடுகின்றன.

சம்பந்தப்பட்ட தனிநபர்தான் தனிப்பட்ட உணர்வின் அகப்பொருள்; தனிநபரின் சமூக வாழ்நிலை மற்றும் அந்த நபர் வளர்ந்த, வசித்த ஸ்தூலமான நிலைமைகளின் பிரதிபலிப்பே அதன் உள்ளடக்கம்.

மறுபக்கத்தில், சமூக உணர்வு சமூக வாழ்நிலையின் பிரதிபலிப்பாக மட்டுமே இருக்கிறது. அது பல தலைமுறைகளின் வளர்ச்சியின் விளைவு என்ற முறையில் மொத்த சமூகத்துக்குரியது. எனினும் தன்னுடைய சொந்த அறிவைக் கொண்ட ''தனிமனித வாழ்வின் உருவகமாகிய சமூகம்'' என்ற அர்த்தத்தில் அல்ல. சமூக உணர்வைக் கூட்டாகத் தாங்கியிருப்பது என்ற முறையில் சமூகத்தைத் தனிநபருடன் ஒப்பிட முடியாது. ''சமூகத்தை ஒரு தனிப் பொருளாகக் கருதுவது... தவறு; ஏனென்றால் அது ஊகச் சிந்தனா முறையாகும்''* என்று மார்க்ஸ் எழுதினார். ஒவ்வொரு சமூகமும்— குறிப்பாக, நம் காலத்தில்—வேற்றுமையில் (சமூக-பொருளாதார ரீதியிலும் இதரவற்றிலும் வெவ்வேறாக இருக்கின்ற வர்க்கங்கள், சமூகப் பிரிவுகள், தேசிய மற்றும் மக்கள் இனங்கள், தொழில்கள்) ஒற்றுமை காண்கிறது. அதைப் போல சமூக உணர்வு என்பது சமூகத்தில் சாராம்சத்தில் வெவ்வேறு அளவுகோல்களைக் கொண்ட, அதாவது மொத்த உலக சமூகம் அல்லது வெறும் தனிப்பட்ட சமூகம் அல்லது வர்க்கம், சமூகப் பிரிவு, தேசிய அல்லது மக்கள் இனம் தொழில் முறை பிரிவு இதரவற்றுக்கு உரிய வெவ்வேறான கூறுகளின் ஒற்றுமையே.

சமூக உணர்வு தனிநபர்களின் உணர்வில் இருந்து

---

* Karl Marx, *A Contribution to the Critique of Political Economy*, Progress Publishers, Moscow, 1977, p. 199.

மக்களுக்கு இடையில் பல அடுக்கு ஆன்மீக இணைப் பாகச் செயல்படுகிறது என்ற போதிலும் மொத்தத்தில் அது தனிநபர்களைப் பொறுத்த வரை வெளிப்புறப் பொருளே; தனிப்பட்ட உணர்வு எண்ணற்ற மற்றும் வெவ்வேறான இணைப்புகளைக் கொண்டிருக்கின்ற ஆன்மீக சூழல் அது.

இந்த உறவுகள் தெரிந்தெடுக்கப்படும் தன்மை கொண்டவை. தனிநபர்களுடைய உணர்வில் தோன்று கின்ற ஒவ்வொரு புதிய கருத்தும் சமூக உணர்வாக மாற்றப்படுவதில்லை, சமூக உணர்வின் எல்லாக் கூறுகளும் தனிநபர்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதும் இல்லை. தனிநபருடைய சிற்சில கருத்துக்கள் சமூகம், வர்க்கம் இதரவற்றின் கருத்துக்களிலிருந்து வேறுபடு கின்ற பொழுது அல்லது எதிராகச் செல்கின்ற பொழுது சமூக உணர்வுக்கும் தனிப்பட்ட உணர்வுக்கும் இடையில் வேற்றுமைகள் ஏற்படும் என்பது உண்மையே.

இந்த வேற்றுமைகளில் தனித்தனி ரகங்கள் இருக் கின்றன. தனிநபரின் உணர்வு புதிய கூறுகளைக் கொண்டிருந்தால், சரியான சித்திரத்தை மற்றும் எதார்த்தத்தைப் பற்றி மேலும் ஆழமான தெளிவைக் காட்டினால், பொதுவாக அது முற்போக்கான சமூக உறவுகளுடன் பொருந்தி சமூக முன்னேற்றத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்தால் அது முற்போக்கு ரகம்; அது முற்போக்கான சமூக உறவுகளுடன், சமூக முன்னேற்றத்தின் தேவைகளுடன் முரண்படுகின்ற கூறுகளைக் கொண்டிருந்தால் பிற்போக்கு ரகம்.

கம்யூனிஸ்ட் நிர்மாணம் சமூக உணர்வின் கட்டமைப்புக் கூறுகள் எல்லாவற்றிலும், குறிப்பாக விஞ்ஞானத்தில் கணிசமான மாற்றங்களை ஏற்படுத்துகிறது; சாதாரண உணர்வு அறிவுமயமாக்கப்படுகிறது; பெருந்திரளான

மக்களின் உளவியல் கடந்தகால எச்சங்களில் பெரும் பான்மையானவற்றைக் கைவிடுகிறது; அறநெறி கம் யூனிஸ்ட் இலட்சியங்களையும் கோட்பாடுகளையும் பிரதி பலிக்கத் தொடங்குகிறது; தனிநபர் ஆன்மீக முறையில் மாற்றமடைகிறார். கம்யூனிஸ்ட் உணர்வு இன்னும் உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்லப்படுகிறது. மக்கள் மேன்மேலும் அதிகமான சமூக மற்றும் உழைப்பு நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள். நெடுங்கால அளவில் சமூக வளர்ச்சிக்குத் திட்டமிடுவதும் அதன் விஞ்ஞான ரீதியான நிர்வாகத்தை உறுதிப்படுத்துவதும் சுலபமாகின்றன.

## சமூக உணர்வின் வடிவங்கள்

சமூக உணர்வின் ஒவ்வொரு வடிவமும் — அரசியல், சட்டவியல், அறவியல், அழகியல், தத்துவஞானம், மதம் — சமூக வாழ்நிலையின் ஒரு திட்டவட்டமான அம்சத்தைப் பிரதிபலிக்கிறது. ஒரு வர்க்க சமூகத்தில் கேந்திரமான அம்சம் அரசியல் உணர்வு.

### அரசியல் உணர்வு

அரசியல் உணர்வு என்பது வர்க்கங்கள் மற்றும் சமூகப் பிரிவுகள் தம்முடைய பொருளாதார நலன்களைப் பிரதிபலிக் கின்ற நடவடிக்கைகளை அடியொற்றியுள்ள கருத்துக்கள், அணுகுமுறைகள், உணர்ச்சிகள் மற்றும் நோக்கங்களின் அமைப்பாகும். அதை அரசியல் சித்தாந்தம், உளவியல் ஆகிய இரண்டு மட்டங்களிலும் ஆராய முடியும். வர்க்க ஒருமைப்பாட்டுணர்ச்சி, நட்புறவு, பகைமை, வெறுப்பு, நாட்டுப்பற்று, தேசியவாதம் மற்றும் இன வெறி, சர்வதேசியவாதம் மற்றும் உலகப் பொதுவாதம்,

அரசியல் அவநம்பிக்கை அல்லது நம்பிக்கை, அரசியல் நலன்கள், கற்பனைகள், அணுகுமுறைகள் இதரவை அரசியல் உளவியலாகும்.

அரசியல் சித்தாந்தம் ஒரு சமூக வர்க்கத்தின் நலன்கள் மற்றும் நோக்கங்கள், இதர வர்க்கங்கள், சமூகப் பிரிவுகள் மற்றும் அரசைப் பற்றி அதன் அணுகுமுறை ஆகியவற்றின் மிகவும் ஒன்றுகுவிக்கப்பட்ட வெளியீடு. வர்க்கப் போராட்டம், புரட்சி, தேசிய விடுதலை இயக்கங்கள், தேசிய இனங்களுக்கு இடை யிலுள்ள உறவுகள் ஆகியவற்றைப் பற்றி ஒரு வர்க்கத்தின் அணுகுமுறையைப் பிரதிபலிக்கின்ற கருத்துக்களும் நிலை களும் அரசியல் சித்தாந்தம்; அது சமூகத்தின் அரசியல் அமைப்பு, அரசு, சட்டம், போர் மற்றும் சமாதானம் மற்றும் இதர பிரச்சினைகளைப் பற்றியது.

அரசியல் உணர்வை அரசியல் நடவடிக்கையிலிருந்து பிரிக்க முடியாது; ஏனென்றால் அது அரசியல் நிறுவனங் கள், வர்க்கங்கள், கட்சிகள் மற்றும் வெகுஜன ஸ்தாபனங் கள், இயக்கங்கள் மூலம் இந்த நடவடிக்கையில் நிறைவேற்றப்படுகிறது.

ஒரு திட்டவட்டமான வர்க்கம் ஒரு சமூக அமைப் பைப் பற்றிக் கொண்டிருக்கும் அணுகுமுறை மற்றும் பொதுவாக வரலாற்றுப் போக்கைப் பற்றி அதன் கருத்து ஆகியவற்றை எடுத்துரைக்கின்ற அடிப்படையான நிலைகள் மற்றும் கருத்துக்கள் அரசியல் சித்தாந்தத்தில் அடங்கும்.

முதலாவதாக, ஒரு வர்க்கத்தின் அரசியல் சித்தாந்தம் அந்த வர்க்கம் ஆதரிக்கின்ற சமூக அமைப்பின் அவசியத்தை நிரூபிப்பதற்குப் பாடுபடுகிறது. பூர்ஷ்வா சித்தாந்தம் முதலாளித்துவ உற்பத்தி முறையின் அவசியத்தை நிரூபிப்பதற்கு முயற்சிக்கிறது; முதலாளி வர்க்கம்

முதலாளித்துவ உற்பத்தி உறவுகளை நம்பி வாழ்ந்து கொண்டிருப்பதால் அவையே சரியானவை எனக் கூறுகிறது. அதே போல தொழிலாளி வர்க்கம் கம்யூனிஸ்ட் உற்பத்தி முறையின் அவசியத்தை வலியுறுத்துகிறது.

இரண்டாவதாக, ஒரு குறிப்பிட்ட சமூக அமைப்பை வலுப்படுத்தி வளர்க்கின்ற வழிகளும் முறைகளும் அரசியல் சித்தாந்தத்தில் அடங்கியிருக்கின்றன.

மூன்றாவதாக, அரசியல் சித்தாந்தம் தெரிந் தெடுக்கப்படுகின்ற அரசியல் உறவுகளையும் வர்க்கப் போராட்டத்தின் வடிவங்களையும் மற்றும் சமூகத்தின் அரசியல் அமைப்பையும் (அந்த வர்க்கம் அதுவே மிகவும் விவேகமானது என்று கருதுகிறது) நியாயப்படுத்துகிறது.

அரசியல் சித்தாந்தம் வர்க்க முனைப்புக் கொண் டிருக்கிறது. எல்லா வர்க்கங்களும் சொந்த அரசியல் சித்தாந்தத்தைக் கொண்டிருக்கின்றன; அது அவற்றின் நலன்களை ஊக்குவிக்கிறது.

அரசியல் சித்தாந்தம் வர்க்கங்களின் வர்க்க நலன்களை வளப்படுத்துகின்ற அரசியல் ஸ்தாபனங்கள் மற்றும் அமைப்புகளிலிருந்து பிரிக்கவியலாததாகும். ஆளும் வர்க் கங்கள் அரசு, சட்ட அமைப்புகள் மற்றும் ஸ்தாபனங் களின் மூலம் தம்முடைய அரசியல் நடவடிக்கைகளை நிறைவேற்றுகின்றன.

முதலாளித்துவ சமூகத்தில் அரசியல் கட்சிகள் அரசியல் சித்தாந்தத்தைப் பரப்புகின்றன. அவை ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் நோக்கங்களையும் அவற்றைச் சாதிக்கின்ற முறைகளையும் வடிவங்களையும் வகுத் தளிக்கின்றன. இவை கட்சியின் கொள்கை ஆவணங் களிலும் கட்சித் தலைவர்களின் சொற்பொழிவுகளிலும் நூல்களிலும் விரித்துரைக்கப்படுகின்றன.

பூர்ஷ்வா கட்சிகளின் அரசியல் செயல்திட்டங்கள்

வேண்டுமென்றே தெளிவில்லாமல் இருக்கின்றன. அவை ஜனநாயகத்தைப் பற்றி, சுதந்திரம் மற்றும் மனித உரிமைகளைப் பற்றி வாய்ப்பந்தல் போடுகின்றன. அவற்றில் சொல்லப்படுகின்ற வாக்குறுதிகள் நிறைவேற்றப் படுவது அபூர்வம்.

ஏகாதிபத்திய முதலாளி வர்க்க அரசியல்வாதிகளின் கருத்துக்கள் — குறிப்பாக அமெரிக்காவில் — அரசியல் வீர சாகசத்துக்குத் தெளிவான உதாரணங்களாகும். இன்று மக்களைப் பேரளவில் அழிக்கின்ற ஆயுதங்களின் குவியல் மாபெரும் அளவில் அதிகரித்துக் கொண்டிருக்கும் பொழுது அவை நாகரிகத்துக்குப் பேராபத்தை ஏற் படுத்துகின்றன.

சோஷலிச அரசியல் சித்தாந்தம் தொழிலாளி வர்க்கம் மற்றும் அதன் கட்சியின் சித்தாந்தமாக, அந்த வர்க்கத்தின் அரசியல் சுய உணர்வின் வெளியீடாக, அதன் நடவடிக்கைக்கு வழிகாட்டியாக வகுத்தளிக்கப்பட்டு வளர்க்கப்படுகிறது. முரணில்லாத முற்போக்கான, புரட்சிகரமான வர்க்கம் பாட்டாளி வர்க்கம்; அதன் நலன்கள் சமூக வளர்ச்சியின் புறநிலையான விதிகள் மற்றும் முக்கிய போக்குகளுடன் முழுமையாக பொருந்து கின்றன. எனவே சோஷலிஸ்ட் அரசியல் சித்தாந்தம் முரணில்லாதது, முற்போக்கானது, புரட்சிகரமானது, விஞ்ஞான ரீதியானது.

தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் சித்தாந்தம் வர்க்கப் போராட்டத்தையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் பற்றிய மார்க்சிய-லெனினியத் தத்துவத்தில், முதலாளி வர்க்க மற்றும் பாட்டாளி வர்க்க அரசு மற்றும் சட்டம், சோஷலிஸ்ட் மற்றும் தேசிய விடுதலைப் புரட்சிகள், முதலாளித்துவத்தின் முடிவும் சோஷலிசத்தின் வெற்றியும் தவிர்க்க முடி

யாதவை என்னும் மார்க்சிய-லெனினியப் போதனையில் தத்துவ ரீதியாக நிறுவப்படுகிறது. ஏகாதிபத்திய சகாப்தத்தில் போர்கள் ஏற்படுவதன் காரணங்களும் தன்மையும், நியாயப்படுத்தக் கூடிய போர்கள், அநீதியான போர்கள் மற்றும் எதிரெதிரான சமூக அமைப்புக் களான முதலாளித்துவமும் சோஷலிசமும் ஒத்துவாழ்க்கை நடத்துவதும் சமாதான பூர்வமான போட்டியில் ஈடுபடுதலும் ஆகியவை மார்க்சிய-லெனினியத்தை ஆதார மாகக் கொண்டவையே. மார்க்சிய-லெனினியம் நாடு களுக்கு இடையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் ஏகாதிபத்தியத்தையும் யுத்தவெறியர்களை எதிர்த்தும் முரணில்லாமல் பாடுபடுகிறது. இந்த அரசியல் சித்தாந்தம் எல்லா நாடுகளுக்கும் இனங்களுக்கும் இடையில் சமத்துவத்தையும் நட்புறவையும், தேசிய அரசுரிமையை யும் சுதந்திரத்தையும் ஆதரிக்கிறது. சோவியத் சோஷ லிஸ்ட் அரசு மற்றும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைகளுக்கும் நடைமுறைகளுக்கும் சோஷ லிஸ்ட் அரசியல் கருத்துக்கள் அடிப்படையாக இருக் கின்றன; மற்ற சோஷலிஸ்ட் நாடுகளிலுள்ள மார்க்சிய-லெனினியக் கட்சிகளின் கொள்கைகளுக்கும் அவை அடிப்படையாக இருக்கின்றன.

## சட்ட உணர்வு

சட்ட உணர்வு அரசியல் உணர்வுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டிருக்கிறது. அரசு மற்றும் சட்டம் தோன்றியவுடன் சட்ட உணர்வு தோன்றுகிறது. அரசு சட்டத்தைப் படைத்து அமுலாக்குகிறது; ஆகவே அது சமூகம் முழுமைக்கும் உரியதாகிறது.

ஆளும் வர்க்கங்களின் சட்டக் கோட்பாடுகளும்



12–791

தத்துவங்களும் அவற்றுக்குப் பொருத்தமான சமூக அமைப்பும் சமூக உறவுகளும் முறைப்படியானவை என்று நியாயப்படுத்துவதற்கு முயற்சிக்கின்றன. ஒரு குறிப்பிட்ட சமூக அமைப்பின் கீழ் இருக்கின்ற உடைமை உறவுகளுக்குச் சட்டம் ஒரு ''சட்டபூர்வமான'' தன்மையைக் கொடுக்கிறது. இரண்டாவதாக, சட்டக் கருத்துக்களும் தத்துவங்களும் சமூக அமைப்பிற்கும் உடைமையின் வடிவத்திற்கும் மிகச் சிறப்பான முறையில் பொருந்துகின்ற சட்ட அமைப்புக்களையும் அளவு கோல்களையும் வடிவங்களையும் கண்டுபிடித்து நியாயப் படுத்துகின்றன.

சட்டக் கோட்பாடுகள் மற்றும் தத்துவங்களின் பிரத்யேகமான கூறுகள் இவையே.

சோஷலிஸ்ட் மற்றும் பூர்ஷ்வா சட்ட உணர்வு சாராம்சத்தில் வெவ்வேறு விதமாக இருக்கின்றன.

முதலாளித்துவம் உருவெடுத்துக் கொண்டிருந்த பொழுது பூர்ஷ்வா ஜனநாயகத்தின் சட்டக் கோட்பாடு கள் (சட்டத்துக்கு முன்பு எல்லோரும் சமமானவர்களே, தனிநபரின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாது காத்தல் இதரவை) முற்போக்கான பாத்திரத்தை வகித்தன. எனினும் பூர்ஷ்வா சட்டக் கோட்பாடுகள் கொள்கையளவில் சமத்துவத்தைப் பிரகடனம் செய்து நடைமுறையில் இருக்கின்ற ஏற்றத்தாழ்வை மறைக் கின்றன. பல முதலாளித்துவ அரசுகளில் தொழிலாளி வர்க்கம் பூர்ஷ்வா ஜனநாயக சமூக நலச் சட்டங்களில் சில சலுகைகளை முதலாளி வர்க்கத்திடமிருந்து பெறுவதில் வெற்றி அடைந்திருக்கிறது. எனினும் அது ஒரு சுரண்டப்படுகின்ற வர்க்கமாகவே இருக்கிறது. ஏகாதிபத்தியத்துக்கு மாறுகின்ற பொழுது ஏகபோக மூலதனம் பூர்ஷ்வா ஜனநாயக சட்டபூர்வமான

தன்மையை அரித்தழிக்கிறது, பாசிஸ்ட் வளர்ச்சியையும் போலீஸ் அரசுகளை நிறுவுதலையும் ஊக்குவிக்கிறது. ஆகவே ஜனநாயகத்துக்கான உழைப்பாளர்களின் போராட்டம் சோஷலிசத்துக்கான போராட்டத்தின் ஒரு பகுதியாகிறது.

சோஷலிஸ்ட் சட்ட உணர்வு மனிதனை மனிதன் சுரண்டலை ஒழித்துவிட்ட சோஷலிஸ்ட் உற்பத்தி உறவுகளைப் பிரதிபலித்து அவற்றை வலுப்படுத்துகிறது. முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறுகின்ற கட்டத்திலும், சோஷலிசத்தின் கீழும் சோஷலிஸ்ட் உடைமையைப் பாதுகாக்கின்ற, உழைப்புக்கும் நுகர்வுக்கும் இடையில் உரிய பொருத்தத்தை நிறுவுகின்ற சட்ட அளவுகோல்களும் விதிகளும் சமூகத்துக்கு அவசியம்.

சோவியத் யூனியன் அரசியலமைப்பு நிறுவியுள்ள சோஷலிஸ்ட் சட்டம் மனிதனுடைய அடிப்படை உரிமைகளுக்கு — உழைப்பு, இலவச மருத்துவம், உயர் கல்வி உட்படக் கல்வி வசதி, சமூக நலப் பாதுகாப்பு, தொழில் நிறுவனங்கள், கூட்டுப் பண்ணைகள், கல்வி ஸ்தாபனங்களின் நிர்வாகத்தில் பங்கெடுத்தல், நகரங்கள், குடியரசுகள் மற்றும் நாடு முழுவதிலும் நிர்வாக உறுப்புகளைத் தேர்ந்தெடுப்பதில் பங்கெடுத்தல் — நம்பகமான உத்தரவாதமளிக்கிறது.

சோஷலிஸ்ட் சட்டவியல் சட்டத்துக்கு முன்பு குடிமக்கள் அனைவரது சமத்துவத்துக்கும் எல்லோருக்கும் ஒரே விதமான சட்டத்துக்கும் உத்தரவாதமளித்து உண்மையான நீதியை வழங்குகிறது. இக்கோட்பாடு விதிவிலக்கு இல்லாமல் எல்லோருக்கும் அமுலாக்கப் படுகிறது. சோஷலிஸ்ட் சட்டம் ஒரு தனித்தன்மை உடையது. ஏனென்றால் அது குடிமக்களின் உரிமைகளையும்

கடமைகளையும் பிரிக்கவியலாதபடி ஒன்று சேர்க்கிறது. அதன் நியாயமான தன்மைக்கு இது மற்றொரு எடுத்துக்காட்டாகும். ஏனென்றால் சமூகத்தின் எல்லா உறுப்பினர்களும் சட்டத்துக்கு முன்னால் சமமாக நடத்தப்படுவது மட்டுமின்றி அவர்களுடைய கடமைகளும் சமமாக இருக்க வேண்டும் என்பது சமூக நீதியாகும். கடமைகளைப் புறக்கணித்து விட்டு உரிமைகளை மட்டும் வற்புறுத்துவது ஒரு அநீதி, சட்டத்தை மீறுதல் எனலாம்.

சட்ட வடிவத்தில் உள்ள சோஷலிஸ்ட் சட்ட உணர்வு குடிமக்களிடம் தங்கள் கடமைகளையும் உரிமைகளையும் பற்றிய உணர்வைத் தூண்டி அவர்கள் சோஷலிஸ்ட் சட்டங்களைப் பின்பற்றுவதற்கும் அவற்றை சரியாகக் கையாளுவதற்கும் உதவி செய்கிறது. சோஷலிஸ்ட் சமூகத்தில் சட்டங்களைக் கடைப்பிடிப்பதை அரசு அமுலாக்குகிறது. எனினும் சோஷலிஸ்ட் சட்ட உணர்வு சட்டத்தை விருப்பமாகவும் உணர்வு பூர்வமாகவும் பின்பற்றுவதற்கு உதவி செய்து இதில் முக்கியமான பாத்திரத்தை வகிக்கிறது. ஆகவே ஒழுங்கை நிலை நிறுத்துவதிலும் குற்றம் செய்வதைத் தடுப்பதிலும் சோஷலிஸ்ட் உணர்வின் உணர்ச்சியில் பயிற்றுவித்தல் மாபெரும் முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது.

## அற உணர்வும் அறவியலும்

‘‘ஒழுக்கநெறியின்’’ தத்துவஞானக் கருதுகோள் கருத்துக்களின் தொகுதியை, நடத்தையின் அளவுகோல்களை, தனிப்பட்ட குணாம்சங்களைக் குறிக்கிறது; ஒழுக்கநெறித் தத்துவம் அறவியல் என்று அழைக்கப்படுகிறது.

மனித இன வரலாற்றின் மிகச் சமீபத்திய ஆய்வு

விவரங்களை அடிப்படையாகக் கொண்ட வரலாற்றுப் பொருள்முதல்வாதம் ஒழுக்கநெறியின் சமூக இயல்பு மற்றும் உழைப்பின் நிர்ணயிக்கின்ற பாத்திரம் ஆகிய வற்றிலிருந்து தொடங்கி ஒழுக்கநெறியின் தோற்றத் தையும் வரலாற்று வளர்ச்சியையும் உண்மையான விஞ்ஞான நோக்கில் ஆராய்கிறது. உழைப்பானது சமூக மற்றும் உழைப்பு உறவுகளையும் உழைப்புக் கருவிகளை உற்பத்தி செய்கின்ற திறமையையும் தெளிவான பேச்சையும் கலைகள், அறவியல் இதர சிக்கலான ஆன்மீக நிகழ்ச்சிகளையும் தோற்றுவித்தது என்று மார்க்சியம் போதிக்கிறது.

பூர்விக சமூகங்களில் தனிநபரைப் பொறுத்தமட்டில் சமூகத்தின் ஆரம்பக் கோரிக்கைகளைப் பிரதிபலித்த எண்ணற்ற, எழுதப்படாத விதிகள் உறவுகளை ஒழுங்கு படுத்தின. இந்த ஆரம்ப விதிகளுடன் பொருந்துகின்ற நடத்தை அங்கீகரிக்கப்பட்டு உற்சாகப்படுத்தப்பட்டது, அந்த விதிகளை யாராவது மீறினால் அதிருப்தி காட்டப்பட்டது. சமூகத்தின் மற்ற உறுப்பினர்களுடனும் மொத்தமாக சமூகத்துடனும் பூர்விக மனிதனின் நேரடியான உறவுகளைப் பற்றி அவனுடைய உணர்வு என்ற முறையில் ஒழுக்கநெறியுணர்வு தோன்றியது. அதன் கருவடிவத்தில் அது விரும்பக் கூடிய மற்றும் விரும்பத் தகாத, அனுமதிக்கப்படக் கூடிய மற்றும் அனுமதிக்கப்பட முடியாத நடத்தைகளைப் பற்றிய கூட்டுக் கருத்துக்களைப் பிரதிநிதித்துவம் செய்தது.

ஒழுக்கநெறி ''கடவுளின் சித்தத்தினால்'' உருவாக்கப் பட்டது, மதத்தின் தாக்கத்தில் அது வளர்ச்சியடைந்தது என்னும் இறையியல் தத்துவங்களை வரலாற்றுப் பொருள்முதல்வாதம் நிராகரிக்கிறது.

ஒழுக்கநெறியின் ஆரம்ப நியதிகள் மெய்யாகவே

மதத்துக்கு முன்பாக ஏற்பட்டன. பிற்காலத்தில்தான் அவை மத நம்பிக்கைகள், தடைகள் மற்றும் சடங்கு களின் பகுதியாக மாறின. பூர்விக கூட்டு வாழ்க்கைச் சமூகத்தில் இருந்த ஒழுக்கநெறி நியதிகள், தடைகளில் சிலவற்றுக்கும் மத அல்லது மந்திரவித்தை தன்மை கிடையாது.

ஒழுக்கப் பண்புகள் அல்லது நடவடிக்கைகள் மனித னுடைய உயிரியல் அல்லது ''பிராணித்'' தன்மையிலிருந்து தோன்றவில்லை. இக்கண்ணோட்டம் ஒழுக்கநெறியை இயல்புணர்ச்சியாக (தாய் தன்னுடைய குழந்தைகளைப் பாதுகாத்தல், கூட்ட இயல்புணர்ச்சி இத்தியாதி) இனம் காண்கிறது. உண்மையில் பிராணிகளிடம் இருக்கின்ற இயல்புணர்ச்சி நடத்தைக்கும் மனிதர்களிடம் (மனித சமூகத்தின் ஆரம்பக் கட்டம் உள்பட) உள்ள ஒழுக்கம் அல்லது அறவியல் உறவுகளுக்கும் எத்தகைய சம்பந்தமும் இல்லை. வரலாற்றுப் பொருள்முதல்வாதம் மனித இயல்பை எல்லா சமூக உறவுகளின் மொத்தமாகக் காண்கிறது.

ஒழுக்கநெறி என்பது சமூக உணர்வின் ஒரு வடிவம், அது சமூக-பொருளாதார வாழ்நிலையைக் விசேஷமாக பிரதிபலிக்கிறது என்னும் விஞ்ஞான ரீதியான தெளிவை முதலில் கொடுத்தது மார்க்சிய-லெனினியமே.

ஒழுக்கம் வரலாற்றுத் தன்மை மற்றும் வர்க்கத் தன்மையைக் கொண்டிருக்கிறது. சமூக வாழ்க்கையில் மற்றும் உற்பத்தி உறவுகளில் ஏற்படுகின்ற மாற்றங் களுடன் சேர்ந்து அதுவும் மாறுகிறது.

முதலாளி வர்க்கம் நிலப்பிரபுத்துவம் மற்றும் நிலப்பிரபுத்துவ சித்தாந்தத்துடன் மோதிக் கொண் டிருந்த காலத்தில் பூர்ஷ்வா ஒழுக்கத்துக்கு ஒரு முற்போக்கான உள்ளடக்கம் இருந்தது. அக்காலத்தில்

முதலாளி வர்க்கமும் அதன் சித்தாந்திகளும் நிலப்பிரபுத் துவ மேன்மக்களின் ஒழுக்கக்கேட்டை, சமயப் போலி ஆசாரத்தை இதரவற்றை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்தார்கள். பிற்காலத்தில் முதலாளி வர்க்கம் பிற்போக்கான வர்க்கமாக மாறி அதன் ஆரம்பகாலக் கோட்பாடுகளையும் கருத்துக்களையும் கைவிட்டது. இக்காலத்தில் பூர்ஷ்வா ஒழுக்கம் மிகவும் பிற்போக்கான தாக, மனிதப் பண்பை வெறுப்பதாக, சீர்கேடடைந்த தாக இருக்கிறது.

வெற்றியடைந்த சோஷலிஸ்ட் அமைப்பில் முழுமையாக வளர்ச்சியடைகின்ற, சோஷலிஸ்ட் சித்தாந்தத்துடன் தொடர்புடைய கம்யூனிஸ்ட் ஒழுக்கம் புதிய ஒழுக்க மதிப்பீடுகளின் தொகுதியைப் பிரதிநிதித்துவம் செய்கிறது. பூர்ஷ்வா ஒழுக்கத்தின் தனிமனிதவாதம், ஆணவம் ஆகியவற்றுக்கு எதிராகக் கம்யூனிஸ்ட் ஒழுக்கம் கூட்டுவாதம், ஒருமைப்பாடு, சோஷலிஸ்ட் மனிதநேயம், நட்புறவான ஒத்துழைப்பு மற்றும் உழைப்பாளிகளின் சர்வதேசியவாதத்தை நிறுத்துகிறது. லெனின் கம்யூனிஸ்ட் ஒழுக்க உணர்ச்சியில் கல்வி பயிற்றுவிப்பதற்கு மாபெரும் முக்கியத்துவம் அளித்தார்; ஏனென்றால் அது புதிய உணர்ச்சிகளையும் பண்புகளையும் படைத்து வளர்க்கிறது, பழைய சமூகத்தின் எச்சங்களையும் பூர்ஷ்வா மற்றும் குட்டி பூர்ஷ்வா உளவியலையும் முதலாளித்துவ சமூகத்திலிருந்து பெற்ற பழைய பழக்கங்களையும் நடைமுறைகளையும் துடைத்தெறிகிறது.

தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர ஒழுக்கத்தின் வாரிசு என்ற முறையில் கம்யூனிஸ்ட் ஒழுக்கம் அதே உள்ளடக்கத்தைக் கொண்டிருக்கிறது; ஏனென்றால் உழைப்பாளர்கள் தங்களுடைய நடத்தையைத் தொழி லாளி வர்க்கத்தின் நலன்களுக்குத் தகவமைத்துக்

கொள்ள வேண்டும், புரட்சியின் இலட்சியத்துக்குத் தங்களுடைய வாழ்க்கையை அர்ப்பணிக்க வேண்டும் என்று அது போதிக்கிறது. ருஷ்யாவில் ஜாரிசத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் எதிரான போராட்ட நிலைமைகளில் தொழிலாளி வர்க்க ஒழுக்கம் பிரதான மாக பழைய பூர்ஷ்வா அமைப்பை எதிர்த்து, முதலாளி களையும் நிலப்பிரபுக்களையும் எதிர்த்துத் திருப்பப் பட்டிருந்தது. சோஷலிஸ்ட் மற்றும் கம்யூனிஸ்ட் நிர்மாணத்தின் போது கம்யூனிஸ்ட் ஒழுக்கம் புதிய கோட்பாடுகளினால் வளம் பெற்றுப் புதிய உள்ளடக் கத்தைப் பெறுகிறது: கம்யூனிச உணர்ச்சியில் மக்களைப் பயிற்றுவிப்பதை அது ஊக்குவிக்கிறது. கம்யூனிஸ்ட் ஒழுக்கம் ''கம்யூனிசத்தை உறுதியாக்குவதற்கும் நிறைவுச் செய்வதற்குமான போராட்டத்தில்''* மையங் கொண்டிருக்கிறது.

கம்யூனிஸ்ட் ஒழுக்கம் புதிய ரகத்தைச் சேர்ந்த மனிதனை, எல்லோருடைய நன்மைக்கும், சமூகத்தின் நலன்களுக்கும் பாடுபடுவதை நோக்கமாகக் கொண்ட கூட்டுவாதியைத் தயாரிப்பதற்கு உதவுகிறது.

கம்யூனிஸ்ட் ஒழுக்கத்தின் மூன்று கட்டங்களைப் பிரித்துப் பார்க்க முடியும்.

*1)* இது சோஷலிஸ்ட் புரட்சியுடன் ஆரம்பமாகின்ற இடைக்காலக் கட்டம். இக்கட்டத்தின் போது பழைய ஒழுக்கம் நிராகரிக்கப்பட்டு, வரலாற்று ரீதியில் புதிய ஒழுக்கம் நிறுவப்படுகிறது. புரட்சிகரமான பெருந் திரளான மக்கள் பூர்ஷ்வா ஒழுக்கத்தைக் கைவிடு கின்றனர். அவர்களுடைய ஒழுக்க உணர்வு முந்திய

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி *11*, *1982*, பக்கம் *101*.

முற்போக்கான ஒழுக்கத்திலிருந்து, முதலாவதாகவும் முதன்மையாகவும் பாட்டாளி வர்க்க ஒழுக்கத்தி லிருந்து வளர்ச்சியடைகிறது.

புரட்சிகரமான பெருந்திரளான மக்களுடைய ஒழுக்க உணர்வு வெறுமளவில் பழையதைக் கைவிட்டுப் புதியதை ஏற்றுக் கொள்ளவில்லை; புதிய வாழ்க்கைக்கான போராட்டத்தின் பொழுது நடத்தைக்குரிய புதிய கோட்பாடுகளும் அளவுகோல்களும் வளர்க்கப்பட்டன.

மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சி *(1917)* மனிதனுடைய ஒழுக்க உணர்வில் ஒரு புதிய மதிப்பை, சோஷலிஸ்ட் தேசபக்தியை வளர்த்தது. அது பழைய ரகத்தைச் சேர்ந்த தேசபக்தியிலிருந்து தீவிரமாக வேறுபடுகிறது; ஏனென்றால் அது சோஷலிசம் மற்றும் கம்யூனிசம் என்ற கருத்தை ஆதரிப்பதிலிருந்து, ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்திலிருந்து உரு வெடுக்கிறது. சோஷலிஸ்ட் தேசபக்தி தேசிய மற்றும் சர்வதேசிய மதிப்புகளை உள்ளடக்கியிருக்கிறது. சோஷ லிஸ்ட் கூட்டுவாதம் என்பதும் புதிய தார்மிக மதிப்பாகும். அது பாட்டாளி வர்க்கக் கூட்டுவாதத்தின் தொடர்ச்சி, சுரண்டலிலிருந்து விடுவிக்கப்பட்ட மக்களுடைய நட் புறவான சோஷலிஸ்ட் பரஸ்பர உதவி மற்றும் ஒத் துழைப்பின் வெளியீடாகும். சோஷலிஸ்ட் புரட்சி, உலக முழுவதிலும் உள்ள தொழிலாளர்களுடன் சகோதர ஒருமைப்பாடு, கம்யூனிசத்துக்கும் சுதந்திரத் துக்கும் ஆதரவாக, ஆக்கிரமிப்புப் போர்களுக்கு எதிராக, இன மற்றும் தேசிய வேற்றுமைகளுக்கு எதிராகப் போராடுபவர்களுடன் நட்புறவும் சகோதரத் துவமும் போன்ற மதிப்புக்களை உருவாக்கியது. சோஷலிஸ்ட் கூட்டுவாதம் இந்த மதிப்புக்களுடன் உறவு கொண்டிருக்கிறது. புரட்சி அவசியமாக இருக்கிறது;

ஏனென்றால் அது ஆளும் வர்க்கத்தைத் தூக்கியெறிவதற்கு ஒரே வழியாகும் என்பதோடு புரட்சிகர வர்க்கம் புரட்சியில் மட்டுமே பழையனவற்றைக் கைவிட முடியும், புதிய சமூகத்துக்கு அடிப்படையை அமைத்துக் கொள்ள முடியும் என்று விஞ்ஞான கம்யூனிசத்தின் மூலவர்கள் கூறினார்கள். இக்கருத்துக்கள் மிகவும் சரியானவை என்பதை வரலாறு நிரூபித்திருக்கிறது.

2) இரண்டாவது கட்டம் சோஷலிச நிர்மாணம் முழுமை பெறுவதுடன் சம்பந்தப்பட்டிருக்கிறது. இக் கட்டத்தில் பெருந்திரளான மக்களின் உணர்வில் ஆழமான மாற்றங்கள் ஏற்படுகின்றன. சோஷலிசத்தினால் தோற்று விக்கப்பட்ட சோவியத் மக்களின் சமூக-அரசியல் மற்றும் சித்தாந்த ஒற்றுமை ஒரு ஒற்றை ஒழுக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. முதலாளித்துவத்திலிருந்து சோஷ லிசத்துக்கு மாறுகின்ற கட்டத்தில் தனித்தனியாகத் தம் முடைய ஒழுக்கத்தையும் அளவுகோல்களையும் நடத்தை விதிகளையும் கொண்ட முரணியல்பான வர்க்கங்கள் இருக்கின்றன என்றால் சோஷலிசத்தின் வெற்றி அதே அவசியமான நலன்களை அடிப்படையாகக் கொண்டு எல்லா சமூகப் பிரிவினரையும் திரட்டுவதை, ஒற்றை கம்யூனிஸ்ட் ஒழுக்கத்தை உருவாக்குவதை சாத்தியமாக் கியது.

3) மூன்றாவது கட்டம் சோஷலிஸ்ட் சமூகக் கட்டத்துடன் சம்பந்தப்பட்டிருக்கிறது. இது சோஷலிச சமுதாயம் மேம்பாடு அடைவதுடனும், கம்யூனிசத்தை நோக்கி படிப்படியாக முன்னேறுவதுடனும் தொடர் புடையது. இக்கட்டத்தில், சீரிசைவாக வளர்ச்சியடைந்த, சமுதாய ரீதியாக சுறுசுறுப்பான தனிநபரை உருவாக்கும் கடமை நேரடியாக நிறைவேற்றப்படுகிறது. இந்தத் தனிநபர் ஆன்மீக செல்வம், தார்மீகத் தூய்மை

மற்றும் உடற்கூறு ரீதியான மேம்பாட்டைத் தன்னுள் கொண்டிருப்பார்.

### அழகியல் உணர்வும் கலைகளும்

ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் கலைத்துறை அணுகுமுறைகள் அழகியல் உணர்வு எனப்படும். அழகியல் உணர்ச்சிகள், ருசிகள், அக்கறைகள், எண்ணங்கள், இலட்சியங்கள் மற்றும் அழகைப் பற்றிய கருத்துக்கள் ஆகியவை அதிலடங்கும்.

பழங்காலத்தில் மனிதனுடைய உழைப்பின் அவசியங்கள் அழகியல் உணர்வை உருவாக்கின. எதார்த்தத்தை அழகியல் ரீதியாக (அதாவது அழகியல் உணர்ச்சிகளின் மூலமாக) மதிப்பிடுகின்ற திறமை, கலைத்துறைக் கற்பனை மற்றும் கலைத்துறைச் சிந்தனையின் வளர்ச்சி ஆகியவற்றிலும் உழைப்பு அடிச்சரடாக இருந்தது.

**அழகியல்** என்பது அழகியல் உணர்வின் உயர்வான, தத்துவ மட்டமாகும். அது கலையைப் பற்றிய விஞ்ஞானம், கலையின் சாரம், கலைக்கும் எதார்த்தத்துக்கும் இடையேயுள்ள உறவு, கலை முறைகள் மற்றும் விதிகள், கலையின் வடிவங்கள் போன்றவற்றைப் பற்றி எடுத்துரைக்கின்ற கலைத் தத்துவம். அழகியல் தத்துவம் ஒரு வர்க்க சமூகத்தில் தோன்றுகிறது. அது சம்பந்தப்பட்ட வர்க்கத்தின் சித்தாந்தத்தின் பகுதியாக இருக்கிறது; எனவே அதன் அடிப்படையான அழகியல் மற்றும் இதர அக்கறைகளை வெளியிடுகிறது.

கலை என்பது எதார்த்தத்தைக் கலை வடிவில் பிரதிபலிக்கின்ற சமூக உணர்வின் குறிப்பிட்ட வடிவமாகும்.

கலை என்னும் பிரிவில் கட்டிடக் கலை, ஓவியம், சிற்பம், இலக்கியம், இசை, நடனம், நாடகம், திரைப்

படம் மற்றும் புகைப்படம், சர்க்கஸ், இசையும் நடனமும் கலந்த ''பாப்'' சங்கீதம், தொலைக் காட்சி முதலிய விசேஷமான கலைகளும், செய்முறைக் கலைகளும் (தொழில்துறை உருவரைப்படம், விளையாட்டு வசதி களை அலங்கரித்தல்), தனிப்பட்ட விளையாட்டு நிகழ்ச்சிகளும் (உடற்பயிற்சி, சறுக்கு நடனம்), அறை அலங்காரமும், இயற்கைக் காட்சி அமைத்தலும் இதரவை அடங்கும்.

எதார்த்தத்தைக் கலைச் சாதனையான இசை, ஓவியம் இதரவற்றின் மூலமாகச் சித்திரித்தல் எல்லாக் கலை வடிவங்களுக்கும் பொதுவானதாகும். கலை நயம் ஒவ்வொரு கலைக்கும் தனித்தன்மையானது, எல்லாக் கலை வடிவங்களுக்கும் பொதுவானது.

கலை வாழ்க்கையை அறிய உதவுகிறது, மனித வளர்ப்பு, மனித கருத்துக்களும் உணர்வுகளும் உருவாவது ஆகியவற்றின் மீது தாக்கம் செலுத்துகிறது. கலைக்கும் முற்போக்கான கருத்துக்களுக்கும் இடையிலான தொடர்பு இதன் முற்போக்குத் தன்மையை முன்னனுமானிக்கிறது.

வர்க்க சமூகத்தில் கலை வர்க்கத் தன்மையைக் கொண்டிருக்கிறது. மறு பக்கத்தில், முரணியல்பான வர்க்கங்களைக் கொண்ட சமூகத்தில்கூட முற்போக்கான எழுத்தாளர்கள், கலைஞர்கள் இருக்கிறார்கள். அவர் களுடைய படைப்புகள் உழைப்பாளர்களின் அக்கறைகள் மற்றும் தேடல்களுடனும் முற்போக்கான சித்தாந்தத் துடனும் இணைக்கப்பட்டிருக்கின்றன. அதனால்தான் அவர்களுடைய படைப்புகள் தமது சொந்தக் காலத்தைக் கடந்து பிற்காலத்திய தலைமுறைகளுக்கு முக்கியத்து வத்தைக் கொண்டிருக்கின்றன. தியடோர் டிராய்ஸர், பெர்னார்டு ஷா, ரொமேன் ரொலாந்து, தாமஸ் மான், எர்னெஸ்ட் ஹெமிங்வே போன்றவர்களின்

படைப்புகள் இப்படிப்பட்டவையாகும். மனிதனைப் பற்றி நம்பிக்கை, மக்களை ஒடுக்குவதையும் அவமதிப் பதையும் தீவிரமாக எதிர்த்தல் அவர்களிடமுள்ள பொதுவான பண்பாகும்.

சோவியத் கலையும் இலக்கியமும் உலகத்தின் மூலச் சிறப்பான இலக்கியம் மற்றும் சோவியத் மக்களினங்களின் இலக்கியத்தின் மிகச் சிறப்பான படைப்புகளை கவீகரித்துக் கொண்டிருக்கின்றன. புஷ்கின், கோகல், நெக்ராஸவ், தல்ஸ்தோய், சேகவ், ரெபின், முஸ்ஸோர்ஸ்கி ஆகியோருடைய படைப்புகளில் உள்ள விமர்சன எதார்த்த வாதத்தை சோவியத் கலையும் இலக்கியமும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன.

அதே சமயத்தில் சோவியத் கலை புதிய, சோஷலிஸ்ட் சமூக அமைப்பின் நிலைமைகளில் கலைத் துறையில் புதிய வளர்ச்சிக் கட்டமாக இருக்கிறது.

கலை மக்களுடைய வாழ்க்கையில் தாக்கம் செலுத்து கின்ற முக்கியமான காரணி; அழகியல் கல்வியில் அது ஒரு கூறு. சோவியத் கலை சோஷலிஸ்ட் எதார்த்தவாதத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. எதார்த்தத்தை அதன் புரட்சிகரமான வளர்ச்சியில், மார்க்சிய-லெனினிய உலகக் கண்ணோட்டத்துடன் சேர்த்து மெய்யான முறையில் சித்திரிப்பது அதன் முக்கியமான கோட்பாடா கும்.

சோவியத் கலை சமூக வளர்ச்சி பிரச்சினைகளின் மீது ஒருபோதும் அலட்சியம் காட்டியதில்லை; அதற்கு மாறாக, சோவியத் மக்களை சர்வதேசியவாத உணர்ச்சி யில், சோவியத் தேசபக்தி உணர்ச்சியில், அரசின் நலன்களுக்குத் தம்மை அர்ப்பணிக்கும்படி பயிற்று விப்பதைத் தன்னுடைய கடமையாகக் கருதுகிறது. சோஷலிஸ்ட் கலை மக்களுடன் தன்னுடைய பிணைப்புக்

களை அதிகப்படுத்துவதை, பன்முகமான சோஷலிஸ்ட் எதார்த்தத்தைத் துல்லியமாக, கலாபூர்வமாகப் படைத் தளிப்பதை, புதியனவற்றை, மெய்யான கம்யூனிஸ்ட் தன்மை கொண்ட அனைத்தையும் தத்ரூபமாகச் சித்திரிப்பதை, சமூக முன்னேற்றத்தைத் தடுக்கின்ற எல்லாவற்றையும் அம்பலப்படுத்துவதை மையமாகக் கொண்டிருக்கிறது.

கலைகளின் வளர்ச்சியில் நாட்டுப்புறக் கலை நேரடி யான, மாபெரும் தாக்கத்தைக் கொண்டிருக்கிறது. இது எல்லா வர்க்கங்களுக்கும் மெய்யாகும். கலை பெருந்திரளான மக்களின் படைப்பு முயற்சிகளுடன் இணைந்திருந்தால், அது எதார்த்தமாகவும் இருந்தால் அதிக முற்போக்குத் தன்மையைக் கொண்டிருக்கும். மக்களின் வாழ்க்கையிலிருந்து தொலைவாகத் தள்ளிப் போய்விட்ட கலை மலட்டுத்தனமாக, உள்ளடக்கம் குன்றியதாக இருக்கும்; அது முழுமையான சித்தாந்த மற்றும் கலைத்துறைத் தோல்விக்கு அடுத்திருக்கும் எனலாம்.

சோஷலிசம் பெருந்திரளான மக்கள் கலையை சுவீகரித்துக் கொள்கின்ற நிலைமைகளைப் படைக்கிறது, எல்லா வழிகளிலும் எல்லா தேசிய வடிவங்களிலும் திறமையை வளர்ந்து கலை செழிப்பதற்குரிய நிலைமை களைப் படைக்கிறது என்பதை சோவியத் யூனியனிலும் மற்ற சோஷலிஸ்ட் நாடுகளிலும் சோஷலிஸ்ட் நிர்மாண நடைமுறை எடுத்துக் காட்டியிருக்கிறது. கலையின் வெகுஜன சாராம்சமும், எதார்த்தத்தைத் துல்லியமாகப் படைத்தல் என்னும் அதன் அடிப்படைக் கோட்பாடும் சோஷலிசத்தின் கீழ் அதிக முனைப்பாக வெளிப்படு கின்றன. கடந்த கால எதார்த்தவாதத்தின் புரட்சிகர மற்றும் விமர்சனப் போக்கைத் தொடர்கின்ற சோஷலிஸ்ட்

எதார்த்தவாதம் முதலாளித்துவத்தின் கோரத்தைச் சித்திரித்து, முதலாளித்துவ எச்சங்களை அம்பலப் படுத்துகிறது, இயற்கைவாதம், உருவவாதம், சித்தாந்த நிராகரிப்பு, எதார்த்தத்திலிருந்தும் மக்களிடமிருந்தும் கலை விலகி நிற்பது ஆகியவற்றைத் தீவிரமாக எதிர்க் கிறது.

மக்களுடைய வாழ்க்கையுடனான தொடர்புகளை வலுப்படுத்துவது, சோஷலிச யதார்த்தத்தை உள்ளது உள்ளபடியே, உயர்வான கலைத் திறமையோடு வெளிப்படுத்துவது, புதியவற்றை, முற்போக்கானவற்றை உற்சாகமாக அழகுபட வடிப்பது, சமூதாயத்தின் முன்னோக்கிய இயக்கத்திற்குத் தடையாக உள்ள எல்லாவற்றையும் ஈவிரக்கமின்றி அம்பலப்படுத்துவது — இவைதான் சோஷலிசத்தில் இலக்கியம் மற்றும் கலையின் வளர்ச்சியில் முக்கியப் போக்குகளாகும்.

மக்களின் கலாசார மட்டம் அதிகரிக்க அதிகரிக்க, சமுதாய வாழ்க்கையின் மீதான கலையின் செல்வாக்கு அதிகரிக்கிறது. இது தம் படைப்பு நடவடிக்கையின் சித்தாந்தப் போக்கிற்கும், தம் படைப்புகளின் கலை தாக்கத்திற்கும் இலக்கியவாதிகள், கலைஞர்களுக்கு உள்ள பொறுப்புணர்வை அதிகப்படுத்துகிறது.

## தத்துவஞானம்

தத்துவஞானம் சமூக உணர்வின் ஒரு வடிவம். அது உலகத்தைப் பற்றி பொதுப்படையான கருத்தையும் உலகத்தில் மனிதனுடைய இடத்தையும் பிரதிநிதித்துவம் செய்கிறது, அதாவது மக்களுக்கு உலகக் கண்ணோட்டத்தின் அவசியமான கோட்பாடுகளைத் தருகிறது.

தத்துவஞானத்தின் இரண்டு எதிர் முகாம்கள் அல்லது

போக்குகள் பொருள்முதல்வாதம் மற்றும் கருத்துமுதல் வாதம் என்று அழைக்கப்படுகின்றன. அவை தத்துவ ஞானத்தின் முக்கியமான பிரச்சினைக்கு, அதாவது பொருளுக்கும் உணர்வுக்கும் உள்ள உறவைப் பற்றி வெவ்வேறு விதமான பதில்களைத் தருகின்றன. தத்துவ ஞானத்தின் வரலாறு என்பது பொருள்முதல்வாதத்துக் கும் கருத்துமுதல்வாதத்துக்கும் இடையில் எழுந்த போராட்டத்தின் வரலாறு எனலாம். அது வர்க்கங் களின் போராட்டத்தை, தத்துவஞானத்தில் இரண்டு கட்சிகளின் போராட்டத்தைப் பிரதிபலிக்கிறது. இந்த அர்த்தத்தில் மார்க்சிய-லெனினியம், தத்துவஞானத்தின் கட்சி சார்புநிலைக்குத் தத்துவ அடிப்படையைக் கொடுக்கிறது.

கருத்துமுதல்வாதம் எப்பொழுதுமே வரலாற்று அரங் கத்திலிருந்து வெளியேறிச் செல்கின்ற வர்க்கங்களின் சித்தாந்தமாக, அதாவது பிற்போக்கான சித்தாந்தமாக இருந்து வந்திருக்கிறது. 18ம் நூற்றாண்டின் கடைசியிலும் 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் இருந்த ஜெர் மானியக் கருத்துமுதல்வாதம் 1789ம் வருட பிரெஞ்சு புரட்சிக்கும் பிரெஞ்சுப் பொருள்முதல்வாதத்துக்கும் எதிர்ச்செயலாக இருந்தது.

பொருள்முதல்வாதம் வளர்ச்சியடைந்து கொண்டிருக் கின்ற, வரலாற்று ரீதியில் முற்போக்கான வர்க்கங்களின் சித்தாந்தமாகும். 17ம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆங்கிலப் பொருள்முதல்வாதமும் 18ம் நூற்றாண்டைச் சேர்ந்த பிரெஞ்சு பொருள்முதல்வாதமும் இப்படிப் பட்டவையே.

19ம் நூற்றாண்டைச் சேர்ந்த ருஷ்யப் பொருள் முதல்வாதம் வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது. அது புரட்சிகர ஜனநாயகத்துடன்

பிணைக்கப்பட்டிருந்த அளவில் மார்க்சுக்கு முந்திய மேற்கு ஐரோப்பிய பொருள்முதல்வாதத்தைக் காட்டிலும் உயர்வானதாகும்.

மார்க்சுக்கு முந்திய பொருள்முதல்வாதம் இயக்க மறுப்பியல் தன்மை கொண்டதாகவும் ஊக முறையான தாகவும் முரண்பாடானதாகவும் (அது வரலாற்றை முற்றிலும் கருத்துமுதல்வாத நோக்கில் அணுகியது) இருந்தபடியால் ஆழமான குறைகளைக் கொண்டிருந்தது.

இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல் வாதம் தத்துவஞானத்தின் வரலாற்றில் புதிய அத்தியாயமாகும். அது தத்துவஞானத்தில் மார்க்சும் எங்கெல்சும் நிறைவேற்றிய புரட்சியைப் பிரதிநிதித்துவம் செய்கிறது. இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள் முதல்வாதம் பெருந்திரளான மக்களின் விடுதலை இயக்கத்துடன் இணைக்கப்பட்டிருந்தபடியால் முந்திய தத்துவஞானங்கள் அனைத்திலிருந்தும் அடிப்படையில் வேறுபட்டிருக்கிறது. தத்துவஞானங்களின் முந்திய மரபுகளுக்கும் போக்குகளுக்கும் — இக்கால பூர்ஷ்வா கருத்துமுதல்வாதக் கோட்பாடுகளுக்கும் — மாறாக இயக்கவியல் பொருள்முதல்வாதம் பெருந்திரளான மக்களின் உலகக் கண்ணோட்டமாக இருக்கிறது. பாட்டாளி வர்க்கப் பெருந்திரளான மக்கள் மார்க்சிய தத்துவஞானத்திலும் மார்க்சிய-லெனினியத்திலும் தம்முடைய சுய உணர்வுக்கு ஒரு சாதனத்தையும் சமூகத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைப்பதற்கு ஒரு வழியையும் கண்டார்கள்.

இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதம் கம்யூனிசத்தை நிர்மாணிப்பதற்கு விஞ்ஞான அடிப்படையாகவும் மக்களின் புரட்சிகரமான போராட்டத்தில் கூர்மையான தத்துவ ஆயுதமாகவும் இருக்கிறது.

லெனின் விஞ்ஞான சாதனைகளைச் சிறப்பான முறையில் உபயோகித்துப் புதிய வரலாற்று நிலைமை களில் மார்க்சியத்தை வளர்த்து தத்துவஞானத்தை உயர்ந்த நிலைக்குக் கொண்டு சென்றார், புதிய கருத்துக்களினால் அதை வளப்படுத்தினார்.

மார்க்சிய-லெனினியத் தத்துவஞானம் சமூகத்தின் வாழ்க்கையிலும் கம்யூனிஸ்ட் நிர்மாணத்திலும் முக்கிய மான பாத்திரத்தை வகிக்கிறது: 1) அது எதார்த்தத்தை அறிவதற்கும் அதைப் புரட்சிகரமாக மாற்றியமைப் பதற்கும் உரிய விஞ்ஞானத் தத்துவமாக இருக்கிறது; 2) விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளையும் பல்வேறு விஞ் ஞானங்கள் முன்வைக்கின்ற தத்துவஞானப் பிரச்சினை களையும் சரியாகப் புரிந்துகொள்வதற்கு ஒரு திறவு கோலாக இருக்கிறது; இது தற்காலத்துக்கு மிகவும் முக்கியமானது, ஏனென்றால் இப்பொழுது விஞ்ஞானம் வேகமாக வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது; 3) முத லாளித்துவத்துடனான சித்தாந்தப் போராட்டத்தில் சக்திமிக்க ஆயுதமாகவும் விஞ்ஞானத்துக்குப் புறம்பான பூர்ஷ்வா தத்துவஞானம் மற்றும் சித்தாந்தத்தை அம்பலப்படுத்துகின்ற சாதனமாகவும் இருக்கிறது; 4) உழைப் பாளிகளிடையே உலகத்தைப் பற்றி விஞ்ஞானக் கண்ணோட்டத்தை ஊக்குவிப்பதற்கும் அடிப்படையாக இருக்கிறது.

### மத உணர்வும் மதமும்

மத உணர்வு சமூக உணர்வில் பிரத்யேகமான வடிவம்; அது எதார்த்தத்தை விஞ்ஞானத்துக்குப் புறம்பான முறையில் பிரதிபலிக்கிறது. அது இயற்கைக்கு அப்பாற் பட்டவை மீது, கடவுள், ஆவிகள், மரணத்துக்குப்

பிறகு வாழ்க்கை மற்றும் அவை போன்றவற்றின் மீது நம்பிக்கை வைக்கிறது.

ஆதியில் பூர்விக மனிதன் மீது இயற்கைச் சக்திகள் செலுத்திய ஆதிக்கத்திலிருந்து மதம் தோன்றியது; தங்கள் மீது ஆதிக்கம் செலுத்திய வெளிப்புறச் சக்திகளைப் பற்றி மனிதர்களுடைய மூளைகளில் ஏற்பட்ட அதிசயமான பிரதிபலிப்பாக மதக் கருத்துக்கள் இருந்தன.

மதத்தின் பல்வேறு விதமான சமூகப் பாத்திரத்தை வர்க்க சமூகத்தின் வரலாறு நெடுகிலும் பார்க்க முடியும். தமக்குள் போராடிக் கொண்டிருக்கின்ற சமூக-அரசியல் சக்திகள் மதக் கோட்பாடுகளை வெவ்வேறு வழிகளில் எப்படி உபயோகிக்கின்றன என்பதற்கு எண்ணற்ற உதாரணங்களை இக்காலத்தில் பார்க்க முடியும். ஒரே மதத்தைச் சேர்ந்தவர்கள் வெவ்வேறு சமூக, அரசியல் கருத்துக்களைக் கொண்டிருப்பதால் இக்கருத்துக்களில் பரந்த வேறுபாடுகளைப் பார்க்கிறோம்.

மத ஸ்தாபனங்களும் அமைப்புகளும் இக்கால சமூகப் பிரச்சினைகளை — உலகப் பிரச்சினைகள் (போர் மற்றும் சமாதானம், புறச்சூழல், உணவு, சக்தி இதரவை) என்று சொல்லப்படுபவை முதல் சமூக-அரசியல் வளர்ச்சி, கலாசாரம், ஒழுக்கநெறி, குடிமக்களுடைய மனச்சாட்சி மற்றும் பொறுப்பு ஆகியவை வரை — மேன்மேலும் எடுத்துக் கொள்கின்றன.

மார்க்சிய-லெனினியக் கட்சிகள் இக்கால சமூக வளர்ச்சியில் மதம் வகிக்கின்ற பாத்திரத்தையும் பெருந்திரளான மக்கள் மீது அதன் தாக்கத்தையும் பற்றி உரிய கவனம் செலுத்துகின்றன. தம்முடைய மத நம்பிக்கைகள் எப்படியிருந்தாலும் சமாதானத்துக்

காகப் பாடுபடுகின்றவர்களை மார்க்சியவாதிகள் மிகவும் மதிக்கிறார்கள். மதத்தைப் பற்றிய அணுகுமுறையில் வேறுபாடுகள் இருப்பது ஜனநாயகம், சுதந்திரம் மற்றும் விடுதலைக்காகப் போராடுபவர்கள் மத்தியில், உலகத்தில் சமாதானத்தை நேசிக்கின்ற எல்லா சக்திகளின் மத்தியில் சர்வதேச ஒத்துழைப்புக்குத் தடையாக இருக்கக் கூடாது. மறுபக்கத்தில், மார்க்சியவாதிகள் பிற்போக் கான சமயவாதிகளுக்கும் ஏகாதிபத்திய மற்றும் ஆக்கிரமிப்பு சக்திகளுக்கும் இடையிலான கூட்டணியை எதிர்த்துப் போராடுகிறார்கள்.

# அத்தியாயம் ஆறு

# கலாசாரம் ஒரு சமூக நிகழ்வு

## கலாசாரம் என்னும் கருத்தமைப்பு

கலாசாரத்தைப் பற்றிய மரபுவழிப்பட்ட கருத்து இயற்கையுடன் ஒப்பிடுகின்ற பொழுது சமூக வாழ்க்கையின் பிரத்யேகமான தன்மையை நாம் இனங்காணுவதற்கு உதவி செய்கின்ற வரலாற்று அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டது. இயற்கை மனிதனுக்குப் பலவற்றைக் கொடுத்திருக்கிறது; ஆனால் மனிதன் படைத்திருக்கின்ற அனைத்தையும் கலாசாரம் என்னும் சொல் (அதன் விரிவான பொருளில்) குறிக்கிறது. ஆதியில் ''கலாசாரம்'' என்னும் சொல் (இலத்தீன் மொழியில் பயிர் செய்தல், வேளாண்மை ஆகியவற்றைக் குறிக்கும் cultura என்னும் சொல்லிலிருந்து தோன்றியது) சுற்றுப்புற நிலங்களில் மனிதன் பயிர் செய்வதை, இயற்கை சக்திகளை வெற்றி கொள்வதில் மனிதனுடைய சாதனைகளைக் குறித்தது. 19ம் நூற்றாண்டில் பூர்ஷ்வா கலா

சாரத்தின் எழுச்சியின் போது வரலாற்றாசிரியர்கள், மனித இன ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் இக்கருத்தை மிகவும் அதிகமாகக் கையாண்டார்கள்.

பிற்காலத்தில் கருத்துமுதல்வாதக் கருதுகோள்களின் தாக்கத்திலிருந்த பூர்ஷ்வா தத்துவாசிரியர்கள் கலாசாரம் என்னும் சொல்லின் பொருளைக் கருத்துக்களுக்கு மட்டுமே உரியதாகக் குறைக்க முயற்சி செய்த பொழுது இப்பிரச்சினையை மோசமான முறையில் குழப்பிவிட்டார்கள்.

இந்த அணுகுமுறை கலாசாரத்தை முற்றிலும் அறிவுத் துறைக்குள் அடைப்பதுடன் எதார்த்தத்தில் வேரூன்றியுள்ள அதன் அடிப்படைகளைப் புறக்கணிக்கவும் செய்கிறது. வரலாற்றுப் பொருள்முதல்வாதம் இதிலிருந்து வேறுபடுகிறது. அது கலாசாரம் என்ற கருதுகோளின் பொருளை விரிவுபடுத்துகிறது, அறிவுத் துறை உற்பத்தி மட்டுமல்லாமல், முதலாவதாகவும் முதன்மையாகவும் மனிதனுடைய அடிப்படையான, நிர்ணயிக்கின்ற நடவடிக்கையான பொருளாயத வாழ்க்கையின் உற்பத்தியைக் குறிக்கும்படி விரிவுபடுத்துகிறது. மார்க்சிய-லெனினியம் கலாசாரத்தைத் தனிநபரினுடைய ஆன்மீக சுயவளர்ச்சியாகக் கருதவில்லை, அது உழைக்கும் மக்கள், பொதுவாக முற்போக்கான வர்க்கங்கள் மற்றும் பிரிவினருடைய சமூக உழைப்பு நடவடிக்கைத் துறையில் அதன் பொருளாயத மற்றும் ஆன்மீக வடிவங்களை உள்ளடக்கியதாகக் கருதுகிறது.

கலாசாரத்தைப் பற்றி சரியான அணுகுமுறை சமூக-பொருளாதார அமைப்புகளைப் பற்றிய தத்துவத்தையும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் உற்பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளின் வளர்ச்சி,

மேற்கட்டுமானம் ஆகியவை பற்றிய பகுப்பாய்வையும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. எனினும் இக்கருத்துக் கள் கலாசாரத்துக்குப் பதில்பொருளாக முடியாது; ஏனென்றால் கலாசாரம் எல்லாத் துறைகளிலும் மனிதனுடைய நடவடிக்கையின் சாதனைகளை, அவனு டைய மூளை மற்றும் உடல் உழைப்பின் விளைவுகளின் மொத்தத்தை உள்ளடக்கியதாக இருக்கிறது, குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டங்கள், சமூகங்கள், தேசிய இனங்கள் மற்றும் நாடுகள் சம்பந்தப்பட்ட சாதனைகளின் தனித்தன்மையை இனங்காணுகிறது. எல்லாத் துறை களிலும் மனிதனுடைய படைப்பு முயற்சிகளும் உழைப் பைப் பற்றி அவனுடைய அணுகுமுறையும் கலாசாரத்தின் தோற்றுவாயாகவும் சமூக முன்னேற்றத்தின் மிக முக்கியமான குறியீடாகவும் இருக்கின்றன. வரலாற்றுப் பொருள்முதல்வாதம் கலாசாரத்தை சமூக வளர்ச்சி யின் குறிப்பிட்ட கட்டத்தில் திட்டவட்டமான குண ரீதியான வளர்ச்சி நிலை என்று கருதுகிறது; கலாசாரம் என்பது உழைப்பு மற்றும் படைப்பு முயற்சி என்று அர்த்தமுள்ள வரையறுப்பைக் கொடுக்கிறது. கலாசாரம் உற்பத்திச் சக்திகளும் உற்பத்தி உறவுகளும் அடைந்துள்ள மட்டத்தில், பொருளாயத மற்றும் ஆன்மீக உற்பத்தியில், விஞ்ஞானம், இலக்கியம், கலை இதரவற்றின் வளர்ச்சி நிலையில் அதிகத் தனித்தன்மையான முறையில் வெளிப்படுகிறது.

இதுவரை கூறியவற்றின் அடிப்படையில் கலாசாரம் என்பதைப் பின்வருமாறு வருணிக்கலாம்: **கலாசாரம் என்பது சமூகத்தின் பொருளாயத மற்றும் ஆன்மீக சாதனைகளின் மொத்தம்; அது சமூகத்தின் கலாசார மரபுகளை உள்ளடக்கியிருக்கிறது, மனிதகுலத்தின் முன் னேற்றத்துக்கு உதவுகிறது.** வர்க்க சமூகத்தில் கலாசாரம்

சித்தாந்த உள்ளடக்கத்திலும் செய்முறைத் திசையமை விலும் வர்க்கத் தன்மையைக் கொண்டிருக்கிறது.

### பொருளாயத மற்றும் ஆன்மீக கலாசாரம்

வரலாற்றுப் பொருள்முதல்வாதம் கலாசாரத்தின் பொரு ளாயத மற்றும் ஆன்மீக பகுதிகளை வேறுபடுத்திக் காண்கிறது; இவை இயக்கவியல் ரீதியில் இடையுறவும் இடைச் சார்பும் கொண்டிருக்கின்றன.

பொருளாயத கலாசாரம் மனிதன் இயற்கையை எந்த அளவுக்கு வென்றிருக்கிறான் என்பதை எடுத்துக் காட்டுகின்ற குண ரீதியான சாதனைகள், உழைப்புக் கருவிகளின் தரம், உற்பத்தியின் தொழில்நுட்ப வளர்ச்சி நிலை, மக்களின் தொழில்நுட்பத் திறமைகள், உழைப்பின் விஞ்ஞான ரீதியான அமைப்பு, மனிதனுடைய பொருளா யத மற்றும் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் இதரவற்றை உள்ளடக்கியிருக்கிறது. உழைப்புக் கருவிகள் பொருளாயத கலாசாரத்தின் கருவாக இருக்கின்றன; அவை இக்காலத்தில் மேன்மேலும் விஞ்ஞானத்தின் பொருண்மைப்படுத்தப்பட்ட சாதனைகளாக இருக் கின்றன. கலாசார நிலை பொருளாயத உற்பத்தியில் உபயோகிக்கப்படுகின்ற திறமை மற்றும் அறிவை வெளியிடுகிறது. நாம் இந்த அர்த்தத்தில் ஒரு குறிப் பிட்ட வரலாற்று சகாப்தத்தின் ‘‘உழைப்புக் கலா சாரத்தைப்’’ பற்றிப் பேச முடியும். கலாசார வளர்ச்சி நிலையை சமூக வாழ்க்கையின் இதர பொருளாயதக் கூறுகளில், உதாரணமாக, மனிதன் உழைக்கின்ற இயற்கைப் பொருள்களில் (உதாரணமாக, பண்படுத்தப் பட்ட நிலம்), மனிதன் அன்றாட வாழ்க்கையில்

பயன்படுத்துகின்ற பொருள்களில் (உடைகள், மரச்சாமான் கள், பாத்திரங்கள் — ஏனென்றால் கலாசாரம் மனிதன் அவற்றை உபயோகிப்பதைக் குறிக்கிறது), விஞ்ஞான, கல்வித்துறை, மருத்துவ சாதனங்கள் மற்றும் இதர வற்றில் காண முடியும்.

**ஆன்மீக கலாசாரம்** இயற்கை மற்றும் சமூக அறிவின் அளவு மற்றும் நிலையை எடுத்துரைக்கின்ற குண ரீதியான சாதனைகள், முற்போக்குக் கருத்துக்களையும் ஆக்கமுறையான அறிவையும் சமூகம் ஏற்றுக் கொண் டிருக்கின்ற அளவு ஆகியவற்றை உள்ளடக்கியது; அதாவது ஆன்மீக கலாசாரம் என்பது விஞ்ஞானம், கல்வி, அறவியல், இலக்கியம், கலை ஆகிய துறைகளில் குண ரீதியான சாதனைகளின் மொத்தமாகும். அது அரசியல் கருத்துக்கள், அரசியல் கல்வி மற்றும் சட்ட உறவுகளையும் உள்ளடக்கியிருக்கிறது.

மொழி, பேச்சு, சிந்தனை (தர்க்கம்) மற்றும் நடத்தை அளவுகோல்களும் ஆன்மீக கலாசாரத்தில் சேர்ந்தவையே.

வரலாற்றுப் பொருள்முதல்வாதம் பொருளாயத மற்றும் ஆன்மீக கலாசாரங்களின் அங்கக ஒற்றுமையை அங்கீகரிக்கிறது. ஆன்மீக கலாசாரம் இரண்டாம் நிலையானது, சார்புநிலையில் சுதந்திரமானது; எனினும் மொத்தத்தில் அது பொருளாயத கலாசாரத்துடன் அங்கக ரீதியான ஒற்றுமையில் வளர்ச்சியடைகிறது. ''...கலாசார வளர்ச்சி பெறுவதற்கு நாம் பொருளாயத உற்பத்திச் சாதனங்களில் குறிப்பிட்ட அளவு வளர்ச்சி அடைந்தாக வேண்டும், குறிப்பிட்ட ஒரு பொருளாயத அடித்தளத்தைப் பெற்றாக வேண்டும்''* என்று

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்**, பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 12, 1982, பக்கம் 303.

கூட்டுறவு குறித்து என்னும் நூலில் லெனின் எழுதினார். ஆன்மீக கலாசாரம் ஒரு அங்கக நிகழ்வுப் போக்கு என்ற முறையில் இந்தப் பொருளாயத அடிப்படையின் மீது எழுகின்ற பொழுது அதே சமயத்தில் அதன் மீது தாக்கத்தைச் செலுத்துகிறது.

மார்க்ஸ் கூறியதைப் போல "எல்லா சகாப்தங் களுக்கும் செல்தகைமை"* உடைய கலாசாரம் — இதர சமூக நிகழ்வுகளைப் போல் — முதலாவதாகவும் முதன் மையாகவும் குறிப்பிட்ட வரலாற்று நிலைமைகளின் உற்பத்தியே. அதன் விளைவாக அதற்கு அர்த்தமும் உள்ளடக்கமும் ஏற்படுகிறது. ஒவ்வொரு சமூக-பொருளா தார அமைப்பும் அதற்கே உரித்தான கலாசாரத்தைக் கொண்டிருப்பது ஏன் என்பதை இது விளக்கு கிறது. ஒரு சமூக-பொருளாதார அமைப்பு அதைக் காட்டிலும் முற்போக்கான ஒன்றினால் அகற்றப் படுகின்ற பொழுது பழைய கலாசாரத்தின் இடத்தை அதைக் காட்டிலும் முற்போக்கான கலாசாரம் பிடித்துக் கொள்கிறது. "ஆன்மீக உற்பத்திக்கும் பொருளாயத உற்பத்திக்கும் இடையிலுள்ள தொடர்பை ஆராய்கின்ற பொழுது எல்லாவற்றுக்கும் முதலாவதாக, பொருளாயத உற்பத்தியை பொதுவான வகையினமாக அல்லாமல் திட்டவட்டமான வரலாற்று இனங்களில் ஆராய்வது அவசியம். உதாரணமாக, ஆன்மீக உற்பத்தியின் வெவ்வேறு ரகங்கள் முதலாளித்துவ உற்பத்தி முறை யுடனும் மத்திய காலங்களிலிருந்த உற்பத்தி முறையுட னும் பொருந்துகின்றன"** என்று மார்க்ஸ் எழுதினார்.

---

* Karl Marx, *A Contribution to the Critique of Political Economy*, p. 210.

** Karl Marx, *Theories of Surplus Value*, Part I, Progress Publishers, Moscow, 1969, p. 285.

வர்க்க சமூகத்தின் வரலாற்று வளர்ச்சியின் வெவ்வேறு கட்டங்கள் முழுவதிலும் படைக்கப்பட்டிருக்கின்ற கலாசாரச் செல்வத்தை வரலாற்றுப் பொருள்முதல்வாதம் குறிப்பிட்ட வரலாற்று நிலையிலிருந்து அணுகுகிறது. எனினும் வர்க்கங்களுக்கு அப்பாற்பட்ட முறையில் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய கலாசார மதிப்புகள் இருக்கின்றன, அவை பிந்திய தலைமுறைகளுக்கும் முக்கியத்துவம் உடையதாக இருக்கின்றன என்பதை அது ஏற்றுக் கொள்கிறது. கலாசார மரபுகள், மதிப்புகள், நடைமுறைகள் ஒத்திருப்பதை வெவ்வேறு கட்டங்களில் பல நாடுகளில் நாம் பார்க்க முடியும். வர்க்கத் தன்மை இல்லாத கலாசாரக் கூறுகள் இருக்கின்றன என்று லெனின் கூறினார். முதலாளித்துவ சமூகத்தில் படைக்கப்பட்டிருக்கின்ற அரிய கூறுகள் அனைத்தையும், குறிப்பாக பெரிய அளவிலான முதலாளித்துவத்தின் தொழில்நுட்ப மற்றும் கலாசார சாதனைகளை சோஷலிச நிர்மாணத்தில் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று லெனின் கூறினார்.*

முரணியல்பான சமூகங்களில் கலாசாரத்தின் எக்காலத்துக்கும் உரிய கூறுகளின் வளர்ச்சி வர்க்கத்தின் வரையறுப்புக்கு உள்ளான ஆன்மீக உற்பத்தியின் குறுகிய எல்லைகளுக்குள் நடைபெறுகிறது. ஆகவே முரணியல்பான சமூகத்தில் — பொதுவான கூறுகள் இருந்தாலும் — அனைத்து மக்களின் 'கலாசாரம் என்பது கிடையாது. இக்கூறுகளும்கூட ஆளும் வர்க்கத்தின் நலன்களைப் பிரதிபலிக்கின்றபடியால், அவை உருத்

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 8, 1981, பக்கம் 164 பார்க்க.

திரிபாக இருக்கின்றன. கலாசாரத்தின் வர்க்கக் கூறுகளுக்கும் பொதுவான, வர்க்கம் அல்லாத கூறுகளுக் கும் உள்ள பொருத்தம் உற்பத்தி உறவுகளில் மாற்றத்தின் விளைவாக வரலாற்றுப் போக்கில் மாறுகிறது.

இன்று சர்வதேச கலாசாரப் பிணைப்புகளும் கலாசார இடையுறவுகளின் அளவும் கோடிக்கணக்கான மக்களை சம்பந்தப்படுத்துகின்ற அளவுக்கு மிகப் பெரியதாக இருக்கின்றன. வெகுஜன செய்தி சாதனங் களான பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி ஆகியவை இதற்கு முக்கிய காரணம்.

மனிதனுடைய நடவடிக்கையின் புதிய வடிவங்கள் மேன்மேலும் அதிகரிக்கின்றன; அவை கலாசாரத்தின் சமூக-தத்துவஞான உள்ளடக்கத்தை வளப்படுத்துகின்றன, ''புறச் சூழல் கலாசாரம்'', ''விண்வெளி ஆராய்ச்சிக் கலாசாரம்'' இதர கருதுகோள்களை உருவாக்கியிருக் கின்றன. கலாசாரத்தின் பிரதான கூறுகள் நம் காலத்தின் பொருளாதார, சமூக-அரசியல் மற்றும் ஆன்மீக அவசியங்களாலும் திட்டவட்டமான வர்க்கங் களின் நலன்களாலும் நிர்ணயிக்கப்படுகின்றன.

**பூர்ஷ்வா கலாசாரம்:**
**வளர்ச்சியின் கட்டங்கள்**

பூர்ஷ்வா கலாசாரத்தையும் அதன் முக்கியமான மைல்கற்களையும் ஆராய்ந்தால், அது முதலாளி வர்க்கம் என்னும் புதிய வர்க்கம் தோன்றிய பொழுது உருவெடுத்தது, தொன்மையைச் சேர்ந்த மூலச்சிறப் பான காலத்தின் சாதனைகளை மரபுரிமையாகப் பெற்றுக் கொண்டது என்று நாம் கூறலாம். அது ''சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்'' என்ற

கோஷங்களைப் பிரகடனம் செய்த முதல் பூர்ஷ்வா புரட்சிகளின் காலத்தில் மிகவும் வேகமாக வளர்ச்சி யடைந்தது. அது பெருந்திரளான மக்களின் நலன் களுடனும் சமூக முன்னேற்றத்தின் அவசியங்களுடனும் நிலப்பிரபுத்துவ சமூகத்தை அகற்றிய முதலாளித்துவ சமூகத்தின் வளர்ச்சியுடனும் பொருந்தியிருந்தது. முதலாளித் துவம் ஏகாதிபத்தியமாக மாற்றமடைந்தது பூர்ஷ்வா கலாசாரத்தில் நெருக்கடியைத் தோற்றுவித்தது.

பொதுக் கல்வியின் கீழ்நிலை இந்த நெருக்கடியில் மிகவும் புலப்படத்தக்க அம்சமாகும். முதலாளித்துவ சமூகத்தில் ஒரு சராசரிக் குடும்பத்தின் குழந்தைகள் நல்ல கல்வி பெறுவதோ, பல்கலைக்கழகத்தில் சேர்ந்து படிப்பதோ மிகவும் கடினம். உதாரணமாக, பிரிட்டனில் கல்வி வாய்ப்புக்கள் மிகவும் குறைந்துவிட்டன. பதினாறு வயதில் பள்ளி வகுப்பை முடித்து விட்ட குழந்தைகளில் 40 % அதற்கு மேல் படிப்பைத் தொடர்வதில்லை அல்லது தொழிற் பயிற்சி பெறுவதில்லை. 1981இல் 3,000 பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் வேலைகளை இழந்தார்கள்; எதிர்காலத்தில் இன்னும் ஏராளமானவர் களுக்கு இதே நிலை ஏற்படும். முறையான கல்வி பெறுவதற்கு வசதிகள் குறைவாக இருத்தல் உழைப் பாளர்கள் கலாசாரத்தைப் பெற முடியாதபடி தடுக்கின்ற பல காரணங்களில் ஒன்றாகும். வேலை இல்லாமல் தவிக்கின்ற பல இலட்சம் மக்கள் — குறிப்பாக இளைஞர் கள் — கலாசாரத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருக்கிறார் கள். அவர்கள் நாட்டின் அறிவு சார்ந்த வாழ்க்கையின் பலன்களை அனுபவிக்க முடியாது, அதில் நிச்சயமாகப் பங்கெடுக்க முடியாது.

முதலாளித்துவ சமூகத்தில் கலாசாரத் துறையில் புதியனவற்றைப் படைக்கின்ற முயற்சியில் மிகக்

குறைவான சிலரே ஈடுபட முடிகிறது; அவர்களில் பலரும் சிறு வயதிலிருந்தே கலாசாரத்தை அனுபவிக்கின்ற வசதி படைத்த சிறுபான்மையினரைச் சேர்ந்தவர்களே. திரைப்படங்கள், நாடகங்கள், நாவல்கள் மற்றும் இதர கலைப் படைப்புகள் அங்கே உண்மையில் பண்டங்களாகத்தான் கருதப்படுகின்றன. சந்தை இருந்தால்தான் அவற்றை உற்பத்தி செய்ய, விற்பனை செய்ய முடியும். திரைப்படம் இதற்குத் தக்க எடுத்துக் காட்டாகும். சமீப வருடங்களில் திரைப்பட உற்பத்திச் செலவுகள் மிகவும் அதிகரித்துவிட்டன. ஆனால் இப்பண்டங்களுக்குச் சந்தை மிகவும் குறைந்துவிட்டது. புத்தக வெளியீட்டாளர், கலைப் பொருள்கள் விற்பனையாளர், திரைப்படத் தயாரிப்பாளர், திரையரங்க உரிமையாளர் இதரர்கள் தங்களுக்கு அதிகமான லாபம் தரக்கூடிய பண்டத்தையே (அது எவ்வளவு தரக்குறைவானதாக இருந்தாலும்) வாங்கி வினியோகம் செய்வார்கள்.

உயர்வான கலாசார மதிப்புகள் நிராகரிக்கப்படுவதில், அரசியல், பொருளாதார, தத்துவஞான, சமூகவியல், அறவியல், அழகியல் கருத்துக்களின் விஞ்ஞானக்கேடான, பிற்போக்கான சமூகத் தன்மையில், புதிய நிலைமைகளில் தனிமனிதனுடைய சுதந்திரமான, சர்வாம்ச மற்றும் ஒத்திசைவான வளர்ச்சிக்குரிய வழிகளையும் முறைகளையும் கண்டுபிடிக்க இயலாத பூர்ஷ்வா மனித நேயத்தின் தோல்வியில் பூர்ஷ்வா கலாசாரத்தின் சீர்குலைவைக் காண முடியும். கலாசாரம் மற்றும் தார்மிக மதிப்புகளின் நசிவு ஏகாதிபத்தியத்தின் உள்ளுறையான அம்சம் என்பது மேன்மேலும் தெளிவாகப் புலப்படுகிறது.

பெருந்திரளான மக்கள் கலாசாரத்திலிருந்து விலக்கி

வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ''பொதுஜனக் கலாசாரப்'' படைப்புகள் வழங்கப்படுகின்றன. உண்மை யான கலாசாரப் படைப்புகளை சாதாரண மக்கள் ரசிக்க முடியாது என்று காரணம் கூறி கீழ்த்தரமான வற்றை அவர்களுக்குக் கொடுக்கிறார்கள். மக்களை ஏமாற்றுவது அவர்களுடைய நோக்கம். அமெரிக்கா விலும் மேற்கு ஐரோப்பாவிலும் அதிக விற்பனையா கின்ற பத்திரிகைகள் அவநம்பிக்கை, மனித வெறுப்பு, கொடுஞ்செயல்கள், இழிவான வர்ணனைகள், அரசியல் மோசடிகள் ஆகியவற்றைப் பரபரப்பான முறையில் விரிவாக வெளியிடுகின்றன. அதைப் போல தொலைக் காட்சி நிகழ்ச்சிகளில் கொலை, கொள்ளை, போலீஸ் வன்முறை, கீழ்த்தரமான மர்மக் கதைகள், காம உணர்ச்சியைத் தூண்டுகின்ற காட்சிகள் அதிகமாக இடம்பெறுகின்றன. திரைப்படங்கள், புத்தகங்கள், கலை, இசை, நாடகம் ஆகியவற்றிலும் இதே நிலைதான். ''பொதுஜனக் கலாசாரப்'' படைப்புகளில் பெரும் பகுதி இழிவான தரத்தைக் கொண்டிருக்கின்றது. ''பொதுஜனக் கலாசாரத்தைப்'' பற்றி பூர்ஷ்வா விமர்சகர்களிடம் தீவிர கருத்து வேற்றுமைகள் இருக்கின்றன: அது நவீன நாகரிகத்தின் அதிசயப் படைப்பு, அறிவையும் அழகியல் மதிப்புகளையும் பரப்புவதற்கு அது மாபெரும் வாய்ப்புக்களைத் தோற்றுவித்திருக்கிறது என்று சிலர் வரவேற்கிறார்கள். அது உண்மையான கலையை அப்புறப்படுத்தி பதில்பொருள்களைப் புகுத்துகின்ற நாகரி கத்தின் மோசடி என்று வேறு சிலர் கண்டனம் செய்கிறார்கள்.

முதலாளித்துவ சமுதாயத்தில் கலைஞர்களின் ''சுய வெளியீட்டுக்கு முழுச் சுதந்திரம்'', அரசியல் சார்பு நிலையைக் கைவிடுதல், கட்டுப்பாடில்லாத தன்னிலைவாதம்

ஆகியன கலைத் துறை சுதந்திரத்தின் சிகரமாக வலியுறுத்தப்படுகின்றன. கலாசாரத்துக்கும் திட்டவட்ட மான சமூக உறவுகளின் அமைப்புக்கும், திட்டவட்ட மான உற்பத்தி முறைக்கும் உள்ள இணைப்பை பூர்ஷ்வா கருதுகோள்கள் எல்லாம் மொத்தத்தில் மறுக்கின்றன. அவை கலாசாரப் பிரச்சினைகளைக் கருத்துமுதல்வாத அல்லது ''தொழில்நுட்பவியல்'' நிலை களிலிருந்து அணுகுகின்றன, ஆன்மீக கலாசாரத்திலிருந்து வர்க்க உள்ளடக்கத்தையும் எவ்விதமான சமூக ரீதியில் தகவமைக்கப்பட்ட தன்மையையும் அகற்றிவிடுகின்றன.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் — குறிப் பாக 1960க்களுக்குப் பிறகு அதிகரித்துள்ள — ''கலாசார எதிர்ப்பு'' இயக்கம் அந்த நாடுகளின் கலாசார வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள ஆழமான நெருக்கடியைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. அதில் நம் கால முதலாளித்துவ சமூகத்தைப் பற்றிய விமர்சனக் கருத்துக்கள் இருக்கின்றன என்பது உண்மையே. அது பூர்ஷ்வா கலாசாரத்தையும் முதலாளித்துவ அடிப் படையான மதிப்புகளின் தொகுதியையும் மேற்கத்திய ''ஒடுக்கும்'' நாகரிகத்தையும் கண்டிக்கிறது. எனினும் ''கலாசார எதிர்ப்பு'' இயக்கத்தில் அடங்கியிருக்கின்ற முதலாளித்துவத்தைப் பற்றிய சமூக விமர்சனத்தினால் பூர்ஷ்வா கலாசாரத்துக்குப் பதிலாக உண்மையிலேயே முற்போக்கான கலாசார அமைப்பை ஏற்படுத்த முடியவில்லை. அமெரிக்கா மற்றும் வளர்ச்சியடைந்த இதர முதலாளித்துவ நாடுகளில் உள்ள பல இளைஞர் கள் பூர்ஷ்வா கலாசாரத்தை உண்மையில் எதிர்க்கின்ற அணுகுமுறையைப் பின்பற்றுகிறார்கள் (இது முதலாளித் துவ சமூகத்தின் ஆழமடைந்து வருகின்ற ஆன்மீக நெருக்கடியைச் சுட்டிக்காட்டுகிறது); எனினும் இந்த

இளைஞர்கள் தம்மைச் சூழ்ந்திருக்கின்ற இருள்கவிந்த எதார்த்தத்திலிருந்து தப்புவதற்காக போதை மருந்து களையும் மதத்தையும் மாயாவாதத்தையும் சரணடை கின்றார்கள். முதலாளித்துவ சமூகம் தன்னுடைய இளைஞர்களுக்கு ஆன்மீக அபின் போன்ற காம வெறியூட்டும் கலைகளை வழங்குகிறது.

முதலாளித்துவ நாடுகளில் இளைஞர்களின் பயங் கரவாதம், இடதுசாரி மாயாவாதம், போதைப் பழக்கம், காம வெறி ஆகியவை சில அகநிலையான காரணங்களினால் ஏற்படுகின்றன என்று பூர்ஷ்வா சித்தாந்திகள் நியாயப்படுத்துகிறார்கள். முதலாளித்துவ நாடுகளில் உள்ள சக்தி வாய்ந்த தொழிலாளர் இயக் கத்தையும் அங்கே தீவிரமான சமூக மாற்றத்துக்கு எதார்த்தமான வாய்ப்புக்கள் தோன்றியிருப்பதையும் கணக்கிலெடுத்துக் கொண்டால் மேற்கூறியவை மிகவும் பிற்போக்கான நிகழ்வுப் போக்குகளாகும். பிற்போக்கு சக்திகள் இளைஞர்களைப் படுகுழியில் தள்ளுவதற்கு முயற்சி செய்கின்றன. எனவே முற்போக்கு சக்திகள் சோஷலிஸ்ட் கலாசாரத்தையும் விஞ்ஞான கம்யூனிச இலட்சியங்களையும் உபயோகித்து இளைஞர்கள் மத்தியில் அதை எதிர்த்துத் தீவிரமாகச் செயலாற்ற வேண்டும்.

## சோஷலிஸ்ட் கலாசாரம்

பூர்ஷ்வா கலாசாரம் நெருக்கடியில் சிக்கியிருக்கின்ற நிலையில் கலாசாரம் வளர்ச்சியடைவதற்கு ஒரே வழிதான் இருக்கிறது. அது சோஷலிஸ்ட் வழியே. சோஷலிசம் முந்திய கலாசாரங்களிலுள்ள சிறந்த கூறுகள் அனைத்தையும் விமர்சன ரீதியில் சுவீகரித்துக் கொண்டு புத்துயிரூட்டுகிறது என்பதை சோவியத்



14-791

யூனியன் மற்றும் இதர சோஷலிஸ்ட் நாடுகளின் கலாசார வளர்ச்சி எடுத்துக்காட்டியிருக்கிறது.

மேலும் சோஷலிசம் முறைப்படியாகவும் குறிவழிப்பட்ட முறையிலும் முற்றிலும் புதிய கலாசாரத்தைப் படைக் கிறது. சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் நிர்மாணிக் கின்ற எல்லா நாடுகளின் வளர்ச்சியிலும் பொதுவான அம்சமாகிய கலாசாரப் புரட்சி இதற்குப் பெரிய அளவில் உதவி செய்கிறது. கலாசாரப் புரட்சி சமூகத்தின் ஆன்மீக வாழ்க்கையில் ஒரு குணாம்ச ரீதியான மாற்றம் என்று லெனின் கண்டார். பொருளாதார மற்றும் அரசியல் அமைப்பில் சோஷலிஸ்ட் மாற்றங்கள் கலாசாரப் புரட்சியை உருவாக்குகின்றன, அதே சமயத்தில் கலாசாரப் புரட்சி முடிவில் மக்களை உண்மையான அகப்பொருளாகவும் கலாசாரப் படைப் பாளியாகவும் செய்கின்ற நோக்கத்துடன் இந்த மாற்றங்களின் மீது வன்மையான எதிர்த்தாக்கத்தைச் செலுத்துகிறது.

உழைப்பாளர்கள் ஆன்மீக விடுதலையைப் பெறுகின்ற அனுபவத்தின் மூலம் இன்றைய சோஷலிசம் வரலாற்றைச் செழுமைப்படுத்தியிருக்கிறது. சோவியத் யூனியன் மக் களிடையில் கல்வியின்மையை ஒரு தலைமுறைக் காலத்தில் ஒழித்துவிட்டது. உழைப்பாளர்கள் கலாசாரத்தைப் படைப்பவர்களாகவும் அதை நுகர்வோராகவும் இருக் கின்றனர். புதிய, சோஷலிஸ்ட் அறிவுப் பகுதியினர் விஞ்ஞானம், தொழில்நுட்பம், இலக்கியம், கலைகள் ஆகிய துறைகளில் மாபெரும் சாதனைகளை நிறை வேற்றியுள்ளனர்.

1982இல் தொழில்துறைத் தொழிலாளர்களில் 80% மற்றும் விவசாயிகளில் 65,5% உயர்நிலைக் கல்வி அல்லது பல்கலைக்கழகக் கல்வி பெற்றிருந்தனர்.

சோவியத் யூனியனில் இன்று ஒவ்வொருவரும் கட்டாய மாக உயர்நிலைப் பள்ளிக் கல்வி கற்க வேண்டும்.

பல்கலைக்கழகங்களிலும் விசேஷமான உயர்நிலை தொழில்நுட்பப் பள்ளிகளிலும் கல்வி இலவசம்; மாணவர் களுக்கு உதவிச் சம்பளம் உண்டு.

இன்றைய சோவியத் சமூகத்தில் 100% கல்வித்தகுதி இருக்கிறது. தேசியப் பொருளாதாரத் துறையில் பணிபுரிபவர்களில் முக்கால் பகுதியினருக்கு மேற்பட் டோர் உயர்நிலைப் பள்ளி வரை அல்லது அதற்கு மேலும் படித்திருக்கின்றனர். மொத்தம் 5 மில்லியனுக்கும் அதிகமானவர்கள் பல்வேறு கல்வி நிலையங்களில் படிக்கிறார்கள். பலவிதமான கலாசார மற்றும் கல்வி நிலையங்களைக் கொண்ட விரிவான அமைப்பு உருவாக் கப்பட்டிருக்கிறது; புத்தகங்கள், பத்திரிகைகள், இதழ் களின் வெளியீடு தொடர்ச்சியாக அதிகரித்துக் கொண் டிருக்கிறது.

சோஷலிசம் விஞ்ஞான வளர்ச்சிக்கு மாபெரும் வாய்ப்புக்களை ஏற்படுத்தி அதை மக்கள் அனைவருக் கும் சேவை செய்யும்படி செய்திருக்கிறது. பல்வேறு ஆராய்ச்சித் துறைகளில் ஈடுபட்டிருக்கின்ற நிபுணர்களின் மொத்த எண்ணிக்கை 13,00,000ஐ எட்டிவிட்டது. சோவியத் யூனியன் சமூக வளர்ச்சி, இயற்கை விஞ்ஞானங் கள், பொறியியல் ஆகிய ஆராய்ச்சித் துறைகளில் முன்னணியில் இருக்கிறது. சோவியத் அரசாங்கம் கடந்த அறுபது சொச்சம் வருடங்களில் சாதித்திருக் கின்ற அனைத்தின் சாரமான சோவியத் அரசியலமைப்பு சட்டம் குடிமக்களின் பிறப்பு, தேசிய இனம், வசிக்கும் இடம் இதரவற்றைப் பற்றி சம்பந்தமில்லாமல் அவர்கள் எல்லோருக்கும் சமத்துவமான உரிமைகளை வழங்கியிருக் கிறது. கல்வி உரிமை, பொருளாயத மற்றும் ஆன்மீக

கலாசாரத்தை அனுபவிப்பதற்கு சம உரிமையும், கலா சாரத்தின் எல்லா வடிவங்களிலும் பங்கெடுப்பதற்கு உரிமையும் சமத்துவ நிலைமைகளுக்கான உத்தரவாதமும் இவற்றிலடங்கும். ஆன்மீக மதிப்புகளைப் பாதுகாப்பதற் கும் பன்மடங்கில் பெருக்குவதற்கும், சோவியத் மக்களின் கலாசார நிலையை உயர்த்துவதில் அவற்றை விரிவாகப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்கும் அரசு பாடுபடுகிறது.

சோஷலிசத்தின் கீழ் புதிய கலாசாரத்தைப் படைத்தல் என்பது பொது வாழ்க்கை மற்றும் குடும்ப வாழ்க் கையின், உழைப்பு மற்றும் சமூக உறவுகளின் புதிய வடிவங்களைப் படைப்பதைக் குறிக்கிறது.

மக்கள் நாகரிக நடத்தையின் தரங்களை உணர்வு பூர்வமாகவும் சுறுசுறுப்பாகவும் சுவீகரித்துக் கொள்வது அதன் உள்ளுறையாக இருக்கிறது. அத்தகைய நடத் தையில் ஒரு பக்கத்தில் பண்பும் சுய கட்டுப்பாடும் இருக்க வேண்டும்; மறுபக்கத்தில், சமூக நலன்களுடன், ஆகவே தனிநபரின் நலன்களுடன் பொருந்துகின்ற சமூக வாழ்க் கைத் தரங்கள் மற்றும் விதிகளைப் பின்பற்ற வேண் டுமே தவிர தனிநபருடைய நலன்களை மட்டுமே பின் பற்றக் கூடாது. எனவே இத்தகைய நடத்தை கூட்டு வாதத் தன்மையைக் கொண்டுள்ளது.

சோவியத் கலாசாரம் சோஷலிச உள்ளடக்கத்தையும் பன்முகமான தேசிய வடிவங்களையும் சர்வதேசியவாத உணர்ச்சி மற்றும் தன்மையையும் கொண்டிருக்கிறது. சோவியத் மக்களினங்கள் அனைத்தும் உருவாக்கியுள்ள பல்வேறு கலாசார மதிப்புகளை அது ஒன்றிணைத் திருக்கிறது. வெகுஜனத் தன்மை, கம்யூனிஸ்ட் சார்புநிலை, பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம், சோஷலிஸ்ட் தேசபக்தி, வரலாற்றின் முன்னேற்றத்தில் நம்பிக்கை,

புரட்சிகரமான மனிதநேயம், கூட்டுவாதம், கம்யூனிஸ்ட் கருத்துக்கள், மக்களுடைய அறிவிலிருந்தும் நடத்தையிலிருந்தும் பூர்ஷ்வா சித்தாந்தத்தையும் கடந்த காலத்தின் எச்சங்களையும் நிராகரித்தல் ஆகியன அதன் உள்ளுறையான கூறுகளாகும்.

சோஷலிசத்தின் கீழ் . ஆன்மீக கலாசாரத்தின் தரமும் நிலையும் புதிய கூறுகளில், அரசியல், சித்தாந்தம், ஒழுக்க நெறி, அழகியல், விஞ்ஞானம், கல்வி, உழைப்பு ஆகிய அனைத்துக் துறைகளில் வெளிப்படுகிறது. சோஷலிஸ்ட் சமூகத்தின் அரசியல் கலாசாரம் சட்ட உணர்வின் உயர்ந்த நிலை, சோவியத் தேசபக்தி மற்றும் சர்வதேசியவாதத்தைக் குணாம்சமாகக் கொண்டிருக்கிறது. சோஷலிசத்தின் சித்தாந்த கலாசாரம் பொருள்முதல்வாத உலகக் கண்ணோட்டத்தின் முதன்மையை சிறப்பான அம்சமாகக் கொண்டிருக்கிறது. சோவியத் மக்களின் பொறுப்புணர்வும் பொதுக் கடமையைப் பற்றிய மனச்சாட்சி பூர்வமான அணுகுமுறையும் சோஷலிஸ்ட் ஒழுக்கத்தின் குணாம் சங்கள். அழகியல் கலாசாரத்தின் அவசியமான கூறு தனிநபரின் ஒத்திசைவான, சர்வாம்ச வளர்ச்சி, அதாவது நயப்படுத்தப்பட்ட அழகுணர்ச்சியும் உழைப்பையும் வாழ்க்கையையும் பற்றிய அழகியல் அணுகுமுறையும். சோஷலிஸ்ட் சமூகத்தில் உழைப்பு, குடும்ப வாழ்க்கை, தனிப்பட்ட உறவுகள் ஆகியவை உயர்ந்த கலாசாரத் தரத்தை அடைகின்றன. சோவியத் சமுதாயத்தின் சமூக-பொருளாதார மற்றும் ஆன்மீக முன்னேற்றத்தில் கலாசாரம் ஒரு முக்கியக் காரணியாகியுள்ளது.

ஆன்மீக கலாசாரத்தில் தேசிய மற்றும் சர்வதேசியப் பாத்திரத்தை மதிப்பிடுகின்ற பொழுது வரலாற்றுப் பொருள்முதல்வாதம் பின்வரும் கோட்பாடுகளிலிருந்து தொடங்குகிறது: தேசிய இனங்களின், தேசியப் பண்

பாட்டின் சுதந்திரமான வளர்ச்சி சர்வதேசியத்தின் வளர்ச்சிக்கு உதவுகிறதே தவிர தடைசெய்யவில்லை; சர்வதேசியக் கலாசாரத்தில் தேசியப் பண்புகள் இடம் பெறாதிருக்கவில்லை, மேலும் அது தேசியக் கலாசாரங் களின் சர்வாம்ச வளர்ச்சியை அடிப்படையாகக் கொண் டிருக்கிறது; சோஷலிசத்தில் தேசிய மற்றும் மக்கள் இனங்களின் ஒற்றுமை ஆன்மீக வாழ்க்கையில் காணப் படுகின்ற வளம் மற்றும் பல்வகைத் தன்மையின் மூலம் மனிதகுலத்தின் வகைப்படுத்தலை வலியுறுத்துகிறது. தேசிய மற்றும் சர்வதேசிய அம்சங்களின் இயக்கவியல் ரீதியான இணைப்பு, முற்போக்கான தேசியப் பண்புகள் சாராம்சத்தில் சர்வதேசியத் தன்மை கொண்டவை, சர்வதேசியம் தவிர்க்க முடியாத விதத்தில் தேசிய வடிவங்களை அடைகிறது என்ற அர்த்தத்தைக் கொண் டிருக்கிறது. இதில் சர்வதேசியம் தலைமையான பாத் திரத்தை வகிக்கிறது.

சோஷலிஸ்ட் சூழலில் கலாசாரம் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் அரசாங்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் வளர்ச்சியடைகிறது. கம்யூனிஸ்டுகள் ''கலாசார சர் வாதிகாரத்தைக்'' கடைப்பிடிப்பதாக பூர்ஷ்வா சித் தாந்திகள் கூறுவதுண்டு. அதற்கும் இதற்கும் சம் பந்தமில்லை. வரலாற்றுப் பொருள்முதல்வாதம் தன் னியல்புவாதத்தையும் கட்டுப்பாடற்ற எழுத்தையும் எதிர்க் கின்ற அதே அளவில் கலாசாரத் துறையில் எதேச்சாதி காரம், நிர்வாக முறைகள், தான்தோன்றித்தனம் ஆகியவற்றையும் எதிர்க்கிறது. இன்றைய காலகட்டத்தில் உழைக்கும் மக்கள் திரளினர் ஆன்மீக மற்றும் பொருளா யத கலாசாரச் சாதனைகளை மேன்மேலும் முழுமை யாகவும் ஆழமாகவும் கிரகிப்பதற்கும் கலை படைப்பு நடவடிக்கையில் இவர்கள் தீவிரமாக ஈடுபாடு கொள்ளு

மாறு செய்வதற்கும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி பெரும் முக்கியத்துவம் தருகிறது.

கலாசாரத் துறை, பல்வேறு மக்கள் பிரிவினரின் மேன்மேலும் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும், மக்களின் அமெச்சூர் கலை படைப்பு நடவடிக்கைகளுக்கு அவசியமான வாய்ப்புகளுக்கு வகை செய்ய வேண்டும், திறமைகளை வளர்க்க வேண்டும், சோஷலிச வாழ்க்கை முறையை செழுமைப்படுத்த வேண்டும், ஆரோக்கியமான தேவைகளையும் உயர்ந்த அழகியல் சுவைகளையும் உருவாக்க வேண்டும்.

சோஷலிஸ்ட் அரசியல் மற்றும் கலாசாரத்தை பிற் போக்கு, இனவெறி, இராணுவ வெறி அரசியல் மற்றும் கலாசாரம் எதிர்க்கிறது. பிற்போக்கு அரசியல், கலா சாரம் மற்றும் நாகரிகத்துக்கு உலக ரீதியான ஆபத்தை ஏற்படுத்தியிருக்கிறது. கலாசாரம் அரசியல் சார்புநிலையைக் கொண்டிருக்க வேண்டும் என்று லெனின் கூறியது இன்று விசேஷமான முக்கியத்துவத்தைக் கொண்டிருக் கிறது. கலாசாரம் மற்றும் நாகரிகத்தின் எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்படுகின்ற, அவற்றின் முன்னேற்றத்தை விரும்புகின்ற அனைவரும் பொருளாயத மற்றும் கலாசார அர்த்தத்தில் உண்மையிலேயே சுறுசுறுப்பான வாழ்க்கை முறையின் மகத்தான இலட்சியங்களுக்காக உலக ரீதியில் நடைபெறுகின்ற போராட்டத்திலிருந்து ஒதுங்கிநிற்க முடியாது. சமாதானம், ஜனநாயகம், சோஷலிசம் என்ற மனிதநேய கொள்கையை ஆதரிப்பதும் நாகரிகத்தின் சாதனைகளைப் பாதுகாப்பதும் கலாசாரத்தின் இலட் சியமாகும்.

அத்தியாயம் ஏழு

# மனிதன் மற்றும் சோஷலிச மனிதநேயத்தைப் பற்றி மார்க்சிய-லெனினியக் கருதுகோள்

## தனிநபரைப் பற்றிய மார்க்சிய-லெனினியக் கருதுகோள்

மனிதனைப் பற்றிய மார்க்சிய-லெனினியக் கருதுகோள் அதற்கு முந்திய மனிதநேயக் கருதுகோள்களின் சிறந்த கூறுகள் அனைத்தையும் சுவீகரித்துக்கொண்டு தொடர்ந்து வளர்த்து வருகிறது. மனிதன் சமூகச் சூழ்நிலையிலும் கல்வியிலும் உருவாகிறான் என்று 18ம் நூற்றாண்டைச் சேர்ந்த பிரெஞ்சுப் பொருள்முதல்வாதிகள் கூறினார்கள். மக்கள் தங்களுடைய நடவடிக்கையின் போக்கில் இச்சூழ்நிலையை மாற்றுகிறார்கள் என்று மார்க்சியம் இந்த ஆய்வுரையை மேலும் விரிவாக்கியிருக்கிறது. தனி மனிதனைப் ''பொதுவான முறையில் மனிதன்'' என்று ஆராய்ந்த பூர்ஷ்வா மனித இன ஆய்வுமுறையை மார்க்சும் எங்கெல்சும் சூக்குமக் கருத்தாக்கம் என்று நிராகரித்தார்கள். மனிதனை ஒரு தொடக்க முனை என்று எடுத்துக்கொண்டால் அவன் முற்றிலும் உயிரியல் பிறவியே என்று மனித

இனவியல் தத்துவம் கூறுகிறது. இன்றைய பூர்ஷ்வா சமூகவியலில் அதிகமாகப் பின்பற்றப்படுகின்ற இக் கோட்பாடு புறநிலையான சமூக வளர்ச்சி விதிகளை அடிப்படையாகக் கொண்ட வரலாற்று ஆய்வுமுறையை ஒதுக்குகிறது, தனிமனிதனை, மனிதனுடைய ''பொது வான மனித'' குணாம்சங்களை முக்கியமாகக் கருது கிறது. இக்கோட்பாட்டினால் ''எதார்த்தமான இயற் கையைப் பற்றியோ எதார்த்தமான மனிதனைப் பற்றியோ எதையும் திட்டவட்டமாகச் சொல்ல இயலாது''* என்று எங்கெல்ஸ் கூறினார். மனித இனவியல் தத்துவத்துக்கு வேறான முறையில் மார்க்சிய-லெனினியம் மனிதனை சமூக ரீதியில் நிர்ணயிக்கப்பட்ட மற்றும் தனிப்பட்ட குணாம்சங்களின் முழுமை என்று விளக்குகிறது.

மார்க்ஸ் மனிதனுடைய சாராம்சத்தை வரையறுக் கின்ற பொழுது மனிதனுடைய வாழ்நிலையின் தவிர்க்க முடியாத, நிரந்தரமான, நிர்ணயகரமான கூற்றின் மீது, உயிரியல் பிறவியை மனிதப் பிறவியாக மாற்றிய கூற்றின் மீது பிரதானமாக கவனம் செலுத்தினார். அந்தக் கூறு உழைப்பு ஆகும்; அது ''நிரந்தரமான, இயற் கையினால் சுமத்தப்பட்ட அவசியம்''.** மனிதனுடைய மனித சமூக சாராம்சம் உழைப்பில், நடவடிக்கையில் எடுத்துரைக்கப்படுகிறது.

மனிதனுடைய உழைப்பினால், மனிதனுடைய உழைப் பின் விளைவுகளினால் மாற்றப்படுகின்ற புறநிலை எதார்த்தம் மனித வாழ்க்கையின், மனிதனுடைய உலகத்தின், மனிதனுடைய ''இரண்டாவது இயற்

---

* பி. எங்கெல்ஸ், லுட்விக் ஃபாயர்பாகும் மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானத்தின் முடிவும், பக்கம் 60.

** Karl Marx, *Capital,* Vol. I, Progress Publishers, Moscow, 1974, p. 50.

கையின்'' எதார்த்தம் ஆகியிருக்கிறது. முறையான இயற்கையைப் பொறுத்தமட்டில் மனிதனுடைய உழைப் பின் விளைவுகள் ''இரண்டாவது'', ''மனிதமயமாக்கப் பட்ட'' இயற்கையாக இருக்கின்றன.

மனிதன் ஒரு சமூகப் பிறவி, ஒரு ஆளுமை நிலை, ஒரு தனிநபர். வரலாற்றின் அகப்பொருள் என்ற முறையில் மனிதனுடைய ஆளுமை மற்றும் பாத்திரத்தைப் பொறுத்த மட்டில் இறுதியாகப் பார்க்கும் பொழுது, வசிக்கின்ற, உழைக்கின்ற பிரத்யேகமான வரலாற்றுச் சமூக உறவுகளின் உற்பத்தியே அவன். மனித னுடைய ஆன்மீக சாராம்சம் சமூக ரீதியில் தகவமைக் கப்பட்டிருக்கிறது, அந்த சமூகத்தின் அல்லது வர்க்கத்தின் திட்டவட்டமான சட்டவியல், தார்மிக மற்றும் அழகியல் அளவுகோல்களை வெளியிடுகின்ற சமூக உறவுகளின் இருக்கின்ற மொத்தத்தின் குறியடையாளமான கூறு களைக் கொண்டிருக்கிறது. ஆளுமையின் உருவாக்கத்தைப் பற்றிய இவ்விதி சமூக உறவுகளின் முக்கியத் துவத்தையும் தனிநபரின் முன்னேற்றத்துக்குரிய வழிகளை யும் எடுத்துக் காட்டுகிறது. அதே சமயத்தில் மார்க்சிய-லெனினிய அணுகுமுறை மனிதனுடைய தனிப்பட்ட குணாம்சங்களின் தொகுதியைக் கணக்கிலெடுத்துக் கொள் கிறது.

உற்பத்தி உறவுகளின் நிர்ணயகரமான பாத்திரத்தை அங்கீகரிக்கின்ற மார்க்சிய-லெனினியத் தத்துவம் ஆளுமை யின் உருவாக்கத்தில் சமூக உறவுகளின் மொத்தத் தொகுதி வகிக்கின்ற பாத்திரத்தை ஆராய வேண்டும், நுண்ணியல் சூழல், வாழ்க்கை நிலைமைகள், குடும்பம் மற்றும் மக்களுடைய தனிப்பட்ட குணாம்சங்கள் ஆகிய வற்றின் தாக்கத்தை முழுமையாகக் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

மார்க்சிய-லெனினியக் கருதுகோளின் மற்றொரு உள்ளுறையான அம்சம் நடைமுறையுடன், உழைப் பாளர்களின் புரட்சிகரமான நடவடிக்கையுடன் அதன் நெருக்கமான இணைப்பாகும். மார்க்சிய-லெனினியம் வரலாறு மற்றும் இன்றைய சமூக வளர்ச்சிகளைப் பற்றி, குறிப்பாக பாட்டாளிகளின் வர்க்கப் போராட் டத்தின் படிப்பினைகளைப் பற்றி ஆழமான முறையில் பகுப்பாய்வு செய்து, மனிதன் அடிமைப்பட்டதற்கு சமூக ரீதியில் தகவமைக்கப்பட்ட காரணங்களைச் சுட்டிக் காட்டி, அவன் விடுதலைக்கு வழிகளை விளக்கியது.

உழைப்பாளியின் படைப்பாற்றலை விடுவிக்கும் வழி களை ஆராய்ந்து மார்க்சிய-லெனினியத் தத்துவம் மனிதன் அடிமைப்பட்டதற்கு மூல காரணத்தை (முதலாளித்துவ அமைப்பு), அக்காரணத்தை ஒழிக்கப் போகின்ற முக்கியமான வரலாற்று சக்தியை (பாட்டாளி வர்க்கம்), அந்த விடுதலைக்கான வழியை (சோஷலிஸ்ட் புரட்சி) வரையறுத்துக் கூறியது. வர்க்கப் போராட்டம், சோஷலிஸ்ட் புரட்சி மற்றும் பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தைப் பற்றிய மார்க்சிய-லெனினியத் தத்து வம் வன்முறையை போதிக்கிறது என்று பூர்ஷ்வா பொய்யுரைஞர்கள் கூறுவது உண்மையல்ல. மனிதனை மனிதன் அடிமைப்படுத்துவதை இறுதியாக ஒழிப்பதற்கும் மக்கள் மத்தியில் உண்மையான மனிதநேய உறவுகளை உருவாக்குவதற்கும் அவசியமான வழிமுறைகளை அது விஞ்ஞான ரீதியில் நிரூபிக்கிறது.

லெனின் புதிய ரகத்தைச் சேர்ந்த மனிதனை, போராட்டத்துக்கும் புரட்சிக்கும் தன்னை அர்ப்பணிக் கின்ற மனிதனை உருவாக்குவதற்கு முதன்மையான முக்கியத்துவம் கொடுத்தார். சமூக ரீதியில் முக்கியமான மனிதனை உருவாக்குதல் சுறுசுறுப்பான, புரட்சிகர

ஆளுமையின் வளர்ச்சியுடன் இணைந்திருப்பதை அவர் வலியுறுத்தினார். புரட்சி மனிதனுடைய அக உலகத்தை மாற்றுவதில்லை, மனிதனுடைய வாழ்க்கையின் ''வெளிப் புற'' நிலைமைகளை மட்டுமே மாற்றுகிறது, ஆகவே புரட்சி மனிதனுடைய ஆளுமையின் மீது பாதகமான தாக்கத்தைச் செலுத்துகிறது என்னும் கூற்றை லெனின் மறுத்தார்; புரட்சிகரமான போராட்டத்தில்தான் ஒரு நபர் முழு ஆளுமையைப் பெறுகிறார், உண்மையான சுதந்திரத்தையும் சுய கௌரவத்தையும் பெறுகிறார், தன்னுடைய திறமைகளை முழு அளவில் வளர்த்துக் கொள்கிறார் என்று அவர் கூறினார். இதற்கு மாறான முறையில் சுரண்டுகின்ற சமூக அமைப்புக்குத் தகுந்தவாறு தன்னை வளைத்துக் கொள்வது ஆளுமையை நசுக்கு கிறது அல்லது சிதைத்து விடுகிறது; போலீசையும் வேலைநிறுத்தங்களையும் பற்றி பயப்படுகின்ற, சமூக இயக்கங்களில் பங்கெடுப்பதற்கு அஞ்சுகின்ற, சமூக ரீதியில் வளர்ச்சி அடையாத, ஆன்மீக ரீதியில் நசுக்கப்பட்ட மனித ரகங்களைப் படைக்கிறது.

வரலாற்றுப் பொருள்முதல்வாதம் மனிதனை மிக உயர்ந்த மதிப்பாகக் கருதுகிறது. மக்கள் நலமும் மகிழ்ச் சியுமே எந்த மனித சமூகத்துக்கும் இறுதி இலட்சியமாக இருக்க வேண்டும்.

## ஆளுமை குறித்த கருத்து

ஒவ்வொரு மனிதரும் ஒரு ஆளுமையாக, அதாவது சமூக ரீதியில் முக்கியத்துவமுடைய குணாம்சங்களைக் கொண்டவராக இருக்கிறார். ஒவ்வொரு நபரும் ஒரே சமயத்தில் சமூகச் சூழ்நிலையின் விளைவாகவும், அந்தச் சூழ்நிலையின், வாழ்க்கையின் மற்றும் அந்த நபரினுடைய

சமூகப் பிரிவின் பொதுக் கூறுகளின் தற்சிந்தனையான மற்றும் தனித்துவமான வெளியீடாகவும் இருக்கிறார் என்பது இதன் பொருளாகும். மனிதன் சமூக உறவு களின் அமைப்புக்குள் இருப்பதால் ஒவ்வொரு நபருடைய ஆளுமையிலும் சமூக குணாம்சங்கள் கூடுதலாகவோ, குறைவாகவோ இருக்கின்றன. வரலாற்றுப் பொருள் முதல்வாதம் ஆளுமையின் சமூக சாராம்சத்தை அங்கீ கரித்தாலும், மனிதனுடைய முற்றிலும் உயிரியல், உளவி யல் குணாம்சங்களை ஒதுக்கிவிடுவதில்லை.

ஆளுமையின் கட்டமைப்பு பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கிறது: 1) சமூகத் திசையமைவு, உலகக் கண்ணோட்டம், அக்கறைகள், தேவைகள், தார்மிக குணாம்சங்கள்; 2) மனப்போக்கு, தகுதிகள், அடிப்படை யான தேவைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய தனிநபரின் பிரத்யேகமான பண்பு; 3) இருக்கின்ற அறிவு, தேர்ச்சி கள், பழக்கவழக்கங்களின் அளவையும் தன்மையையும் உள்ளடக்கிய அனுபவம்; 4) வெவ்வேறு உளவியல் நிகழ்வுப் போக்குகளின் தனிப்பட்ட குணாம்சங்கள்.

அந்த ஆளுமையின் உட்கூறுகள் அனைத்தும் உலகக் கண்ணோட்டத்தை அதிகமாக அல்லது குறைவாகச் சார்ந்திருக்கின்றன; பிந்தியது அக்கட்டமைப்பின் கருவாக இருக்கிறது. ஆளுமையின் சாராம்சத்தை வெளிப்படுத்து வது என்றால் அதன் உலகக் கண்ணோட்டத்தின் தன்மையைப் பகுப்பாய்வு செய்வது என்று பொருள் படும். சமூகப் பிறவி மற்றும் சிந்திக்கக் கூடிய பிறவி என்ற முறையில் ஒவ்வொரு நபரினுடைய தனி உரிமையாக உலகக் கண்ணோட்டம் இருக்கிறது. உலகக் கண்ணோட்டம் இல்லாதவன், அதாவது உலகத்தைப் பற்றிய எண்ணங்கள் அல்லது கருத்துக்கள், உலகத்தில் மனிதன் வகிக்கின்ற இடம், மனித வாழ்க்கையின்

பொருள் ஆகியவற்றைப் பற்றி சிந்திக்காத மனிதன் கிடையாது.

உலகக் கண்ணோட்டம் என்பது சுற்றுப்புற உலகத்தை — இயற்கை நிகழ்வுகள், சமூகம் மற்றும் மனிதனைப் பற்றிய அணுகுமுறைகள், உலகத்தைப் பற்றிய இப்பொதுச் சித்திரத்திலிருந்து பிறக்கின்ற நம்பிக்கைகள், சமூக-அரசியல், அறவியல் மற்றும் அழகியல் இலட்சியங்கள், பொருளாயத மற்றும் ஆன்மீக நிகழ்வுகளை அறிகின்ற மற்றும் மதிப்பிடுகின்ற கோட்பாடுகளை இறுதிநிலையாகப் பொதுமைப்படுத்துவது மற்றும் முறைப்படுத்துவது எனலாம்.

ஒவ்வொரு ஆளுமையும் சமூக வாழ்க்கையின் மதிப்புகளைத் தனக்கே உரிய முறையில், வெவ்வேறு அளவுக்கு சுவீகரிக்கிறது. பிரத்யேகமான, வரலாற்று ரீதியான சமூக உறவுகளை ஆளுமை எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக சுவீகரிக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு அது முக்கியத்துவம் அடைகிறது; அது எவ்வளவு வளமாக இருக்கிறதோ அந்த அளவுக்கு சமூக உறவுகளின் சாராம்சத்தை முழுமையாக வெளிப்படுத்துகிறது.

### ஆளுமையின்
### வரலாற்று ரீதியான ரகங்கள்

மாற்றமில்லாத மனித இயல்பு என்பது கிடையாது என்று வரலாற்றுப் பொருள்முதல்வாதம் கூறுகிறது; மனிதன் அவனுடைய காலத்தின் விளைவாக இருக்கிறான், வர்க்க சமூகத்தில் ஒரு திட்டவட்டமான வர்க்கத்தின் பிரதிநிதியாக இருக்கிறான். சமூக வர்க்க வேற்றுமைகள்தான் ஆளுமையின் பல்வேறு வரலாற்று ரகங்களை நிர்ணயிக்கின்றன. முதலாளித்துவ சமூகத்தில்

இரண்டு ஆளுமை ரகங்கள் — முதலாளி மற்றும் தொழி லாளியின் ஆளுமை — குறியடையாளமாக இருக்கின்றன. முதலாளி, முதலாவதாகவும் முதன்மையாகவும் உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளராக இருக்கிறார். தொழி லாளியிடம் உற்பத்திச் சாதனங்களுக்கு உடைமை இல்லை. தொழிலாளியின் ஆளுமை சக தொழிலாளர் களுடனான இடையுறவிலும் முதலாளிகளுக்கு எதிரான கூட்டுப் போராட்டத்திலும் உருவாக்கப்படுகிறது.

சமூகம் வர்க்கங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது, ஆளுமை வர்க்க மூலங்களைக் கொண்டிருக்கிறது என்ற போதிலும் ஒரு வரலாற்று யுகத்தில் வசிக்கின்ற அனைத்து மக்களும் தேசிய இனப் பண்பு மற்றும் கலாசாரம், அன்றாடப் பழக்கங்கள், மரபுகள் இதரவற்றைப் போன்ற சில கூறுகளைப் பகிர்ந்து கொள்கின்றனர். இவை ஒரே சமூக வாழ்க்கை, பொதுவான உற்பத்தி உறவுகள், தொடர்புகள் மற்றும் பரஸ்பரத் தாக்கங்களினால் நிர்ணயிக்கப்படுகின்றன. அவற்றின் இடையுறவும் பரஸ் பரத் தாக்கமும், வாழ்க்கையின் பொதுவான நிலைமை களும் மக்களுடைய சமூக நிலைகளிலும் கண்ணோட்டங் களிலும் சில மாற்றங்களை ஏற்படுத்த முடியும். உதாரணமாக, சீர்குலைந்து விட்ட விவசாயி (அல்லது வேலையில்லாதிருக்கின்ற அறிவுஜீவி) சாதாரணத் தொழிலாளியாக மாறும் பொழுது அவனுடைய சமூக அந்தஸ்து மாறுகிறது, அவனுடைய அணுகுமுறைகளும் அதற்கேற்றவாறு படிப்படியாக மாற்றமடைகின்றன, சாராம்சத்தில் மற்ற தொழிலாளர்களுடைய அணுகு முறைகளை ஒத்திருக்கின்றன. அது போல, ஒரு விவசாயி பணக்காரனாகின்ற பொழுது அல்லது ஒரு தொழிலாளி யின் மகன் படித்துப் பட்டம் பெற்று, நல்ல பதவியில் சேர்ந்து காலப் போக்கில் கம்பெனியின் மேலாளராக

அல்லது உடைமையாளர்களில் ஒருவராக வளர்ச்சி அடைகின்ற பொழுது அவர் முதலாளி வர்க்கத்தில் சேர்ந்துவிடுவதும் பூர்ஷ்வா உளவியல் மற்றும் சித்தாந் தத்தைப் பெறுவதும் உறுதி.

### சோஷலிஸ்ட் ரக ஆளுமை

புதிய சமூக-பொருளாதார அமைப்பின் முதல் கட்டத்தின் போது சோஷலிஸ்ட் ஆளுமை தோன்றும், மனித சமூகத் தின் மொத்த வரலாற்றையும் போல, உழைப்பினாலும் அன்றைக்கிருக்கின்ற சமூக (பொருளாயத மற்றும் ஆன்மீக) உற்பத்தி அமைப்பினாலும் அது தோற்றுவிக்கப் படும் என்று விஞ்ஞான கம்யூனிச மூலவர்கள் கருதினார் கள்.

ருஷ்யாவில் 1917இல் வெற்றிபெற்ற மாபெரும் அக் டோபர் சோஷலிஸ்ட் புரட்சியின், சோவியத் மக்களின் மனப் பூர்வமான உழைப்பு மற்றும் போராட்டத்தின், சோஷலிஸ்ட் உலக அமைப்பு நிறுவப்பட்டதன் விளை வாகப் புதிய, சோஷலிஸ்ட் மனிதன் தோன்றினான்.

புதிய, சோஷலிஸ்ட் ரகத்தைச் சேர்ந்த மக்களின் நடத்தையும் தனிப்பட்ட குண நலன்களும் சாராம்சத்தில் புதிய சமூக உறவுகளின் அமைப்பு மற்றும் புதிய சமூகச் சூழலினால் நிர்ணயிக்கப்படுகின்றன. சோவியத் சமூகம் மனிதனை மனிதன் சுரண்டுவதை ஒழித்துவிட்டது, பொருளாயத மற்றும் ஆன்மீக செல்வங்கள் அனைத் தும் உழைப்பாளிக்குப் பயன்படுகின்றன, உழைப்பானது வாழ்க்கை நடத்துவதற்குரிய சாதனமாக மட்டுமல்லாமல் சமூகத்துக்குச் சேவை செய்வதற்குரிய வழியாகவும் இருக்கிறது, மக்களுக்கு இடையிலுள்ள உறவுகளில் சமூக ஓரினத்தன்மை, ஒத்திசைவு, கூட்டுமனப்பாங்கு மற்றும்

சகோதர ஒத்துழைப்பு ஆகியவை வளர்ச்சியடைந்திருக்கும்; இவையெல்லாம் சோவியத் யூனியனில் ஏற்பட்டிருக்கின்ற சமூக மாற்றங்களின் உள்ளடக்கம்.

உள்ளடக்கம் மட்டுமின்றி மனிதனுடைய உணர்வு மற்றும் நடத்தை மீது சமூகச் சூழ்நிலை தாக்கம் செலுத்துகின்ற முறையும் மாற்றமடைந்திருக்கிறது. சமூகம் ஆளுமை மீது செலுத்துகின்ற தாக்கத்தில் சோஷலிசம் மனிதநேயம், சமுதாய செல்வாக்கின் வீச்சு ஆகிய புதிய கூறுகளை அறிமுகம் செய்திருக்கிறது.

புதிய, சோஷலிஸ்ட் ஆளுமை ரகத்தின் குறியடையாளமான குண நலன்களின் நான்கு தொகுதிகளை சுட்டிக் காட்ட முடியும்:

முதல் தொகுதி சோஷலிஸ்ட் சமூகம் முழுவதையும் பற்றிய ஆளுமையின் அணுகுமுறையுடன் சம்பந்தமுடையது.

சோஷலிஸ்ட் ரக ஆளுமை சிந்தாந்த முனைப்புக் கொண்ட ஆளுமை; அது கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தின் இலட்சியங்களையும் கோட்பாடுகளையும் ஏற்றுக் கொண்டு, சமூகத்தின் நலன்களை மற்ற எல்லாவற்றைக் காட்டிலும் முதன்மையாகக் கருதுகிறது. நாடு, அதன் வளங்கள் மீதான சோஷலிஸ்ட் ஆளுமையின் மிகவும் அதிகமான பொறுப்புணர்ச்சி, உழைப்பாளியின் சுய கௌரவ உணர்ச்சி, நம்பிக்கை, ஒருமுனைப்பாடு, எதிர்கால நம்பிக்கை, அரசியல் பங்கெடுப்பு உணர்ச்சி, உழைப்பில் உற்சாகம் இதரவற்றுக்கு இது காரணமாகும். இக்குண நலன்கள் வெவ்வேறு மக்களிடம் வெவ்வேறு அளவில் காணப்படுவது இயற்கையே.

இரண்டாவது தொகுதி உழைப்பின் பாலான தனிநபருடைய அணுகுமுறையுடன் சம்பந்தப்பட்டது. சோஷலிசத்தில் உழைப்பு கூடுதலான உள்ளடக்கத்தைப் பெறுகிறது.



15-791

வாழ்க்கை நடத்துவதற்குரிய வழியாக இருப்பதோடு கூட இதுதான் மனிதனின் சமூக செல்வாக்கிற்கான முக்கிய அளவுகோல், இவனுடைய புனிதக் கடமை, தனிநபருடைய கம்யூனிச வளர்ப்பின் அடிப்படை. ஒரு தொழிலாளி, விவசாயி அல்லது அலுவலக ஊழியரின் அன்றாட வேலை தனிப்பட்ட விவகாரம் என்ற நிலை மாறி பொதுப் பணி என்ற தன்மையைப் பெறுகிறது. அந்த நபர் அதில் தன்னுடைய திறமைகளையும் சமூக-அரசியல் சுறுசுறுப்பையும் காட்டுகிறார்.

ஆகவே ஒருவருடைய உழைப்பின் சாரத்திலும் விளைவுகளிலும் பேரளவான அக்கறை ஏற்படுகிறது. மக்கள் பணம் சம்பாதிப்பதற்காக மட்டும் பாடுபட வில்லை, அவர்கள் உற்பத்தியின் பொதுவான அம்சங்கள், அந்த அங்காடி, நிறுவனம் அல்லது அலுவலகம் திருப்தி கரமாக இயங்குதல் ஆகியவை குறித்தும் அக்கறை கொண்டிருக்கிறார்கள். முதலாளித்துவம் இதற்கு மாறாக உற்பத்தித் துறையை குடும்ப மற்றும் தனிப்பட்ட வாழ்க்கைக்கு எதிர்நிலையாக்குகிறது; ஆகவே ஒரு நபருடைய குண நலன்களை இரண்டு தனிப்பட்ட தொகுதிகளாக—"தொழில்முறை" அல்லது "தொழில் நுட்பக்" குண நலன்கள் மற்றும் தனிப்பட்ட குண நலன்கள்—பிரிக்கிறது. சோஷலிசம் தனிப்பட்ட குண நலன்களுக்கும் தொழில்முறை குண நலன்களுக்கும் இடை யிலிருக்கின்ற இடைவெளியை ஒன்று சேர்க்கிறது; சோஷலிசத்தில் தொழில்முறை குண நலன்களும் திறமை களும் கௌரவமடைந்து, தனிப்பட்ட முக்கியத்துவத் தைப் பெறுகின்றன. "அவன் வேலை செய்யாமல் இருக்கின்ற பொழுதுதான் மகிழ்ச்சியாக இருக்கிறான்"*

* Karl Marx, "Economic and Philosophic Manuscripts of 1844", in: Karl Marx and Frederick Engels, *Collected Works,* Vol. 3, p. 278.

என்று மார்க்ஸ் முதலாளித்துவ சமூகத்திலுள்ள தொழிலாளியைப் பற்றி எழுதினார். சோஷலிஸ்ட் சமூகத்தைச் சேர்ந்த தொழிலாளி வேலை செய்கின்ற பொழுதுதான் மகிழ்ச்சியாக இருக்கிறான் என்று நாம் கூறினால் அது நியாயமான கருத்தாகும். சோஷலிஸ்ட் நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலாளி வேலை செய்கின்ற பொழுது பூரணமான வாழ்க்கையை நடத்துகிறான்.

சோஷலிஸ்ட் சமூகத்தின் நன்மைக்காக உழைப்பது மக்கள் நன்மைக்குப் பாடுபடுவதாகவும் வாழ்க்கையின் சாராம்சமாகவும் கருதப்படுகிறது. இது சோஷலிஸ்ட் ஆளுமையின் மற்றொரு முக்கியமான குணாம்சமாகும்.

உழைப்பாளியின் வேலை குறித்த அணுகுமுறை மாறிய பொழுது கலாசாரத்தையும் கல்வியையும் பற்றி அவனுடைய அணுகுமுறையும் மாறியது. அவன் அறிவை, விஞ்ஞானத்தை, விஞ்ஞானிகளை, கல்விச் சிறப்புடைய பெரியோர்களை மிக உயர்வாக மதிக்கிறான். கல்வி மற்றும் அறிவு அவசியமென்று உழைப்பாளர்கள் உணர்கிறார்கள். தீவிரமான ஆன்மீக வாழ்க்கை மற்றும் அறிவு வேட்கையும் கலாசார முயற்சிகளும் சோவியத் எதார்த்தத்தில் உள்ளுறையாக இருக்கின்றன, விரிவான அறிவுத் துறைத் தேவைகள் புதிய, சோஷலிஸ்ட் ஆளுமையில் உள்ளுறையாக இருக்கின்றன என்பது உண்மையே.

மூன்றாவது தொகுதி மற்ற தனிநபர்கள் குறித்து சோஷலிஸ்ட் ஆளுமையின் அணுகுமுறை பற்றியதாகும். மக்களின் இலட்சியங்களுக்கும் அவர்களுடைய நடத்தையின் அளவுகோல்களுக்கும் இடையிலுள்ள பிணைப்புக்கள் இந்த ஆளுமைத் திசையமைவைச் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றன. முதலாளித்துவ சமூகத்தில் அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கின்ற இலட்சியங்களும்

அந்த சமூக உறுப்பினர்கள் பின்பற்றுகின்ற நடத்தை அளவுகோல்களும் தொடர்ச்சியாகவும் கடக்க முடியாத படியும் மோதிக் கொண்டிருக்கின்றன. முதலாளித்துவ சுவீகரிப்பின் சமூகத் தன்மையும் வர்க்க அல்லது குழு நலன்களுக்கு இடையிலுள்ள முரணியல்பும் பல்வேறு வர்க்கங்கள் அல்லது சமூகப் பிரிவுகள் தம்முடைய நலன் களைக் காத்துக் கொள்ள வேண்டும் என்று உணர்கின்ற அவசியமும் அதை விசிறி விடுகின்றன. அதன் காரண மாகத்தான் வர்க்கங்களுக்கும் தேசிய இனங்களுக்கும் இடையில், பிரகடனம் செய்யப்பட்டிருக்கின்ற இலட் சியங்களுக்கும் கடைப்பிடிக்கப்படுகின்ற நடத்தை அளவு கோல்களுக்கும் இடையில் தொடர்ச்சியான மோதல் ஏற்படுகிறது.

சோஷலிஸ்ட் சமூகம் மொத்தத்தில் பொதுவான இலட்சியங்களையும் கோட்பாடுகளையும் கொண்டிருக் கிறது. பொது நலன்கள் என்ற அடிப்படை மீது அந்த ஒற்றுமை எழுந்திருக்கிறது. ஏனென்றால் சோஷலிஸ்ட் சமூகத்தின் கோட்பாடுகளாகிய ஜனநாயகம், கூட்டுமனப் பாங்கு, சர்வதேசியவாதம் ஆகியவை குடிமக்கள் அனை வருக்கும் பொதுமக்கள் அமைப்புக்கள் எல்லாவற்றுக்கும் நடைமுறையாக இருக்கின்றன. ஜாரிஸ்ட் ருஷ்யாவிலிருந்த சுரண்டல் மற்றும் முரணியல்புக்குப் பதிலாக இன்றுள்ள வர்க்கங்கள் மற்றும் சமூகப் பிரிவுகளின் ஜீவாதாரமான நலன்களின் ஒற்றுமை, சோவியத் மக்களினங்களுக்கு இடையிலுள்ள நட்புறவு மற்றும் பரஸ்பர உதவி அரசியல் மற்றும் சித்தாந்த ஒற்றுமை, சகோதர ஒத்துழைப்பு, கூட்டுமனப்பாங்கு, சர்வதேசியவாதம் ஆகியவற்றில் வெளிப்படுகின்றன. ஒரு நபருடைய பிறப்பு அல்லது அவருடைய தேசிய இனம் எப்படி இருந்த போதிலும் அவருக்கு உரிய மதிப்பளிப்பது சோஷலிஸ்ட் சமூகத்தில்

உள்ளுறையாக இருக்கிறது. பொது நல உணர்ச்சி, உழைப்பு, அறிவு, நேர்மை ஆகியவை சோஷலிஸ்ட் ஆளுமையின் வரையளவுகளாக இருக்கின்றன.

கம்யூனிஸ்ட் சமூகத்தின் இலட்சியம் "சமூகத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் முழுமையான நலம் மற்றும் சுதந்திரமான, சர்வாம்ச வளர்ச்சி"* என்று லெனின் எழுதினார். ஒத்திசைவான வளர்ச்சியடைந்த தனிநபரே கம்யூனிச இலட்சியம். "...மக்களுக்குப் போதனையளித்து, கல்வியறிவூட்டி வளர்த்திடவும், யாவற்றையும் செய்யும் திறன் பெறும்படி அவர்களுக்கு முழுநிறைவான வளர்ச்சியும் முழுநிறைவான பயிற்சியும் அளித்திடவும் கம்யூனிசம்... முன்னேறிக் கொண்டிருக்கிறது, முன்னேறவும் வேண்டும், கட்டாயம் அதை வந்தடையவும் செய்யும்"** என்று "இடதுசாரி" கம்யூனிசம் — இளம் பருவக் கோளாறு என்னும் நூலில் லெனின் குறிப்பிட்டார்.

---

* V. I. Lenin, "Notes on Plekhanov's Second Draft Programme", *Collected Works,* Vol. 6, p. 52.

** வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி *10, 1981,* பக்கம் *232.*

## அத்தியாயம் எட்டு

# சமூகத்தில் மனித நடவடிக்கை என்ற முறையில் மனிதகுலத்தின் வரலாறு. வரலாற்றின் புறநிலை விதிகள்

### வரலாற்றின் புறநிலைத் தர்க்கவியலும் மக்களுடைய நடவடிக்கையும்

மனிதகுல வரலாறு எனப்படுவது தலைமுறைகள், கலாசாரங்கள், நாகரிகங்கள் மற்றும் யுகங்களின் சங்கிலித் தொடராகும். நிகழ்காலத்துக்கு அடிப்படை கடந்த காலத்தில் அமைக்கப்பட்டது, எதிர்காலத்துக்கு அடிப்படை நிகழ்காலத்தில் அமைக்கப்படுகிறது. நம் காலத்தில் ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்காவில் முன்பு காலனிகளாக இருந்தவை அரசுரிமை கொண்ட புதிய அரசுகளாக மாறியிருக்கின்றன. புதிதாகச் சுதந்திரமடைந்த அரசுகளின் நிகழ்காலம், அவற்றின் அரசியல், பொருளாதார, கலாசார வளர்ச்சி ஆகியவை மகிழ்ச்சி நிறைந்த எதிர்காலத்துக்கு அடிப்படையை அமைக்கின்றன.

வரலாறு அதற்குரிய **புறநிலைத்** தர்க்கவியலை, அதாவது மனிதனுடைய விருப்பத்துக்கு அல்லது உணர்வுக்குச் சம்பந்தமில்லாத முறையில் மாபெரும் நிகழ்ச்சிகளையும் யுகங்

களையும் இணைத்தலைக் கொண்டிருக்கிறது; அது மனிதனுடைய உணர்விலிருந்து சுதந்திரமாக இருக்கின்ற வரலாற்றுத் திசையமைவு. ஆனால் வரலாற்று வளர்ச்சி இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளால் அல்லது உயிரியல் சம்பந்தப்பட்ட விதிகளால் நிர்ணயிக்கப்படவில்லை, ஏதோவொரு ஆன்மீக சக்தி, அக உணர்ச்சிக் கூற்றினால் நிர்ணயிக்கப்படவில்லை என்பது நிச்சயம். பொருளாயத மற்றும் பொருளாதார நிலைமைகளில் ஏற்படுகின்ற மாற்றங்கள், உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி சமூக உறவுகளில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன, வாழ்க்கையின் சமூக-அரசியல் மற்றும் சித்தாந்த வடிவங்களில் அபிவிருத்திகள் பொருளாதார அடித்தளம் மற்றும் அதை வெளியிடுகின்ற சமூக வர்க்கக் கட்டமைப்பினால் நிர்ணயிக்கப்படுகின்றன என்னும் உண்மையிலிருந்து வரலாற்றின் புறநிலைத் தர்க்கம் முன்னேறுகிறது. வரலாற்றின் புறநிலைத் தர்க்கம் என்பது சமூக-பொருளாதார அமைப்புகளில் (பொருளாதாரக் கட்டமைப்புகள் உள்பட), சமூகத்தின் வாழ்க்கை ரகத்திலும் சமூகங்களின் வரலாற்று வடிவங்களிலும் (குலச் சமுதாயம் அல்லது இனச் சமுதாயத்திலிருந்து தேசிய இனங்கள் மற்றும் சர்வதேச சமூகங்களுக்கு) ஏற்படுகின்ற அவசியமான மாற்றங்களாகும். வரலாற்றின் தர்க்கம் என்பது பொருளாதார உறவுகளின் வளர்ச்சியுடன் பொருந்திய அரசியல் நிறுவனங்களில் குண ரீதியான மாற்றங்களும் சித்தாந்த மதிப்புகளை மறு மதிப்பீடு செய்வதுமாகும். அதனால்தான் சமூக வளர்ச்சி என்பது ஒரு இயற்கை வரலாற்று நிகழ்வுப் போக்கு அல்லது இயற்கையில் நடைபெறுகின்ற மாற்றங்களைப் போன்ற புறநிலையான நிகழ்வுப் போக்கு என்று மார்க்சியம் வரையறுக்கிறது.

முந்திய சமூகத்திலிருந்து பெருமளவுக்கு மரபுரிமை

யாகப் பெற்ற பொருளாயத நிலைமைகளுக்குச் சம்பந்த மின்றி, தம்முடைய விருப்பம் அல்லது செயலை முற்றி லும் அடிப்படையாக வைத்து வாழ்க்கை முறையைத் தேர்ந்தெடுத்துக் கொள்கின்ற தலைமுறைகள் அல்லது மக்களினங்கள் எக்காலத்திலும் இருக்கவில்லை என்பது சமூக விஞ்ஞானத்தில் **புறநிலை** என்பதற்குப் பொரு ளாகும். ஒவ்வொரு தலைமுறையும் தனக்கு முன்பிருந்த தலைமுறையைத் தாண்டிக் குதித்து முன்னேறுகிறது என்று நாம் கூறலாம். வாழ்க்கையை உறுதியாகப் பிடித்துக் கொள்வதற்கு மக்கள் உழைப்பு மற்றும் உற்பத்தியின் இருக்கின்ற மட்டத்தை, அதற்கு முந்திய தலைமுறை யினர் அமைத்த அடிப்படையை — இருக்கின்ற சமூக உறவுகளையும் பொருளாயத, தொழில்நுட்ப மற்றும் ஆன்மீக வளத்தையும் சேர்த்து — தவிர்க்க முடியாதபடி உபயோகிக்கிறார்கள். இது அப்போதிருக்கின்ற தலைமுறை யின் பொருளாதார மற்றும் இதர நடவடிக்கைகளின் குணாம்சம், திசையமைவு, வடிவங்கள் ஆகியவற்றைக் கணிசமான அளவுக்கு நிர்ணயிக்கிறது, மக்களுக்கிடையில் பொருத்தமான இணைப்புகளை உருவாக்குகிறது. மறு பக்கத்தில் ஒவ்வொரு தனிநபரும் பல்வித நடவடிக்கை ரகங்களில் ஈடுபடுகிறார் அல்லது உணர்வு பூர்வமாக மற்ற தனிநபர்களுடன் உறவுகளில் ஈடுபடுகிறார்: உதாரணமாக, ஒவ்வொரு தனிநபரும் பொருளாயத சரக்குகளையும் ஆன்மீக மதிப்புகளையும் பரிவர்த்தனை செய்கிறார், ஸ்தல அமைப்புக்களின் நிர்வாகத்தில் பங் கெடுக்கிறார், இதரவை. ஆனால் நிகழ்ச்சிகளின் சங்கிலித் தொடரும், பொதுவான உறவுகளும் உருவாகின்ற வளர்ச்சிப் போக்குகளும் தனிநபர்களின் நோக்கங்களைப் பொறுத்தவை அல்ல, அவை மக்களால் ஒருபோதும் முழுமையாகப் புரிந்து கொள்ளப்படுவதில்லை என்பது

இன்னும் முக்கியமாகும். இந்த நிகழ்வுப் போக்குகள் ஏராளமான மக்களுடைய நடவடிக்கைகளின், முடிவில்லாத அளவுக்கு வேறுபட்டிருக்கின்ற சித்தங்கள், விருப்பார்வங்கள் ஆகியவற்றின் மொத்த விளைவு ஆகும்.

மார்க்சிய விஞ்ஞானம் வரலாற்றை சிறிதும் ஒரு தலைச் சார்பாக அணுகுவதில்லை, வரலாற்று நிகழ்வுப் போக்கை புறநிலையான ஏதாவதொரு மாயாவாத சக்தியுடன் இனங்காணுவதில்லை. வரலாற்று நடவடிக்கையில் உணர்வு பூர்வமான சித்தத்தின் பாத்திரத்தை நிறுவுவதும் தனிநபர்கள், வர்க்கங்கள் மற்றும் தேசிய இனங்களின் சமூக வரலாற்று நடவடிக்கையின் மூல காரணங்களைக் கண்டுபிடிப்பதும் விஞ்ஞானத்தின் கடமை.

## வரலாற்றின் புறநிலை விதிகள்

வரலாற்றின் புறநிலைத் தர்க்கம் வரலாற்றின் புறநிலையான விதிகளில் வெளிப்படுகிறது. கார்ல் மார்க்ஸ் இவ்விதிகளைக் கண்டுபிடித்தார். ''உணர்வு பூர்வமான ஒரு நோக்கம் இல்லாமல், நினைத்துக்கொண்ட குறிக்கோள் இல்லாமல், ...எதுவும் நிகழ்வது இல்லை. வரலாற்று ஆராய்ச்சிக்கு... இந்த வேறுபாடு எவ்வளவுதான் முக்கியமாய் இருந்தாலும் வரலாற்றின் உள் இயங்கும் பொது விதிகளே வரலாற்றுப் போக்கின் மீது செல்வாக்குச் செலுத்துகின்றன என்னும் உண்மையை இது மாற்றுவதில்லை''* என்று எங்கெல்ஸ் எழுதினார். சமூக-வரலாற்று நிகழ்வுப் போக்கு புறநிலையான குணாம்

* பி. எங்கெல்ஸ், லுட்விக் ஃபாயர்பாகும் மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானத்தின் முடிவும், பக்கங்கள் 71 – 72.

சத்தைக் கொண்டிருக்கிறது என்கின்ற அடிப்படை மார்க்சிய முடிவை லெனின் முரணில்லாமல் ஆதரித்தார். சமூகத்தின் எல்லா இயக்கங்களும் "மனித சித்தம், உணர்வு மற்றும் உத்தேசங்களிலிருந்து சுதந்திரமாக இருக்கின்ற—ஆனால் மறுபக்கத்தில், மனிதர்களுடைய சித்தம், உணர்வு மற்றும் உத்தேசங்களை நிர்ணயிக்கின்ற" * விதிகளால் ஒழுங்குபடுத்தப்படுகின்றன என்று லெனின் வலியுறுத்தினார்.

சமூக நிகழ்வுகளை நிர்ணயிக்கின்ற விதிகள் அந்த நிகழ்வுகளின் **சாராம்சமாகிய பொதுவான கூறு**, நிகழ்வுகளின் இயக்கம் மற்றும் வளர்ச்சியின் அடிச்சரடாக அவை இருக்கின்றன. விஞ்ஞானம் அவற்றைத் தத்துவஞான ரீதியில் வரையறுப்புக்களாகவும் கருத்துக்களாகவும் வகுத்துரைக்கிறது. வரலாற்று எதார்த்தத்தின் விதிகள், வரலாற்று நடவடிக்கை மற்றும் சமூக உறவுகளின் உள்ளீடான புறநிலைப் பகுதியான நிகழ்வுகள், அவற்றின் உட்கூறுகள், போக்குகள் இதரவற்றின் சர்வாம்சமான (எல்லா சமூக நிகழ்வுகளின் சாரம்சத்தையும் பற்றிய), முக்கியமான, அவசியமான, அடிக்கடி வருகின்ற இணைப்புக்களாக வரையறுக்கப்படுகின்றன.

சமூக வாழ்க்கையின் விதிகள் அனைத்துக்கும் பொதுவாக அவற்றின் புறநிலைத் தன்மை இருக்கிறது. மக்கள் வரலாற்று விதிகளைக் கற்றுக் கொள்ள முடியும், அவற்றைப் பற்றித் தம்முடைய அறிவை மாற்றிக் கொள்ள முடியும். ஆனால் நாம் அவற்றைக் கற்றுக் கொண்டோமா, இல்லையா என்பதற்குச் சம்பந்தமின்றி அவை செயல்படுகின்றன. மார்க்சியம் தோன்றுவதற்கு முன்னர்

---

* V. I. Lenin, "What the 'Friends of the People' Are and How They Fight the Social—Democrats", *Collected Works*, Vol. 1, p. 166.

விஞ்ஞான ரீதியான புரட்சித் தத்துவம் எதுவும் கிடையாது; ஆனால் சமூகப் புரட்சிகள் நடைபெற்றன. சமூக வாழ்க்கையை நிர்வகிக்கின்ற விதிகள் தனிநபர்கள், வர்க்கங்கள், தேசிய இனங்கள் அல்லது கட்சிகளால் உருவாக்கப்படுவதில்லை, அழிக்கப்படுவதும் இல்லை. தனிநபர்கள், கட்சிகள், வர்க்கங்கள் அல்லது தேசிய இனங்களுக்கு அவை சாதகமா அல்லது பாதகமா என்பதைப் பற்றி சம்பந்தமில்லாமல் அவை செயல்படுகின்றன. ஆளும் வர்க்கங்கள் தம்முடைய ஆதிக்கத்துக்கு அடிப்படையாக இருக்கின்ற சமூக உறவுகளை நிலைநாட்டுவதற்கும் பாதுகாப்பதற்கும் பாடுபடுகின்றன என்பதைக் குறிப்பிடுவது அவசியமல்ல (உதாரணமாக, முதலாளி வர்க்கம் உற்பத்திச் சாதனங்களின் தனியுடைமையை அடிப்படையாகக் கொண்ட உறவுகளை ஆதரித்துப் போராடுகிறது). எனினும் இது வரலாற்று விதிகளின் புறநிலையான தன்மையை மாற்றுவதில்லை.

முடிவாகப் பார்க்கும் பொழுது, விதிகள் சமூக வாழ்க்கையின் பொருளாயத நிலைமைகளிலிருந்து, பொருளாயத உற்பத்தியிலிருந்து தோன்றுகின்றன; ஒரு சமூகம் அல்லது சமூக-பொருளாதார அமைப்பு உருவாகும் விதத்தில் அவை தோன்றுகின்றன, அவற்றைப் படைத்த சமூக-பொருளாதார நிலைமைகள் மறைந்தவுடன் அவையும் முடிகின்றன.

மனித சமூக வரலாற்று விதிகள் இயற்கை விதிகளிலிருந்து வேறுபட்ட முறையில் மனிதர்களுடைய சமூக நடவடிக்கை மற்றும் சமூக உறவுகளை நிர்வகிக்கின்றன. ஆகவே அவை வரலாறு மற்றும் சமூக வாழ்க்கைக்கு முன்னரோ அல்லது அவற்றுக்கு வெளியிலோ இருக்க முடியாது, செயல்பட முடியாது. விஞ்ஞானம் புறநிலையான விதிகள் என்று வரையறுக்கின்ற பொது

மற்றும் அவசியமான உட்கூறுகள், பொருத்தமான மற்றும் அடிக்கடி ஏற்படுகின்ற இணைப்புக்கள் பெருந் திரளான மக்களின் சமூக நடவடிக்கையில், பொருளா தார வாழ்க்கையில், வர்க்கப் போராட்டத்தில், அரசி யலில் அல்லது கலாசார வளர்ச்சியில் காணப்படுகின்றன. இந்த விதிகளின் இயக்கம் சமூக வாழ்க்கையின் மூலவேர் களிலிருந்தே ஏற்படுகிறது, இந்த நிகழ்வுப் போக்கு ஒரு சமூக அமைப்பு அல்லது அதன் உட்கூறுகளின் (பொருளா தாரம், சமூகத் துறை, அரசியல் வாழ்க்கை இதரவை) வாடிக்கையான இயக்கத்தை நிர்ணயிக்கிறது என்பதை வரலாற்று நிகழ்வுப் போக்குதான் மக்களுக்கு எடுத்துக் காட்டுகிறது.

சமூக அமைப்புகள் சர்வாம்ச வரலாற்று, பொது மற்றும் விசேஷ விதிகளால் நிர்வகிக்கப்படுகின்றன. சர்வாம்ச வரலாற்று விதிகள் மனித சமூகத்தின் மொத்த வரலாற்றையும் நிர்வகிக்கின்றன; பொது விதிகள் பல அமைப்புகளை நிர்வகிக்கின்றன; விசேஷ விதிகள் தனிப் பட்ட சமூகங்கள் அல்லது சமூக வாழ்க்கையின் சிற்சில துறைகளின் செயல்முறையை நிர்வகிக்கின்றன. சர்வாம்ச வரலாற்று, பொது மற்றும் விசேஷ இடையுறவு கொண் டுள்ள விதிகள் முதலாளித்துவ சமூகமோ, சோஷலிச சமூக மோ, எல்லா சமூகங்களின் வளர்ச்சியையும் நிர்வகிக்கின்றன; ஏனென்றால் ஒவ்வொரு சமூகமும் பொது, விசேஷ மற்றும் தனித்துவ அம்சங்களின் இயக்கவியல் ரீதியான ஒற்றுமை யைக் கொண்டிருக்கிறது. புறநிலையான விதிகளின் இயக்கத்தினால் தோற்றுவிக்கப்படுகின்ற வரலாற்று நிகழ்வுப் போக்குகள் விதிப்படியானவை அல்லது முறைப் படியானவை என்று கூறப்படுகின்றன.

## புறநிலையான விதிகளும் மனிதனுடைய உணர்வு பூர்வமான நடவடிக்கையும். அவசியம், சுதந்திரம் மற்றும் வரலாற்றுப் பொறுப்பு

வரலாறு புறநிலையான விதிகளால் நிர்வகிக்கப்படுகிறது என்பதை அங்கீகரிக்கின்ற ஒருவர் மனிதனுடைய உணர்வு பூர்வமான (சுதந்திரமான) நடவடிக்கையையும் அங்கீகரிக்க முடியுமா? மனித உணர்வினால் நிகழ்ச்சிகளின் தொடர்வரிசை முழுவதையும் உள்ளடக்க முடியாது. வரலாற்று அவசியத்தையும் மனித சுதந்திரத்தையும் இணைக்க முடியுமா?

மார்க்சியத்தின் எதிரிகள் ''முடியாது'' என்று உறுதியாக பதிலளிக்கிறார்கள். புறநிலையான விதிகள் இருக்கின்றன அல்லது உணர்வு பூர்வமான நடவடிக்கை இருக்கிறது; வரலாற்று அவசியம் இருக்கிறது அல்லது சுதந்திரம் இருக்கிறது என்று அவர்கள் கூறுகிறார்கள். முந்தியது பிந்தியதை நிராகரிக்கிறது, அதைப் போல பிந்தியது முந்தியதை நிராகரிக்கிறது என்று அவர்கள் கூறுகிறார்கள். வரலாற்றுப் பொருள்முதல்வாதம் வரலாற்றின் புறநிலையான விதிகளை அங்கீகரிக்கின்ற படியால் அது வர்க்கங்கள், கட்சிகள் மற்றும் தனிநபர்களின் உணர்வு பூர்வமான நடவடிக்கை வகிக்கின்ற பாத்திரத்தைப் புறக்கணிக்கிறது என்று அதை விமர்சிப்பவர்கள் வாதிடுகிறார்கள். ஆனால் அவ்வாறு சொல்வது சரியல்ல.

அவசியத்தை தவிர்க்க முடியாமையுடன் குழப்பிக் கொள்ளக் கூடாது. வரலாற்றின் புறநிலையான விதிகள் மனித நடவடிக்கையை நிர்வகிக்கின்ற விதிகள் என்பதை நாம் ஏற்கெனவே குறிப்பிட்டோம். பெருந்திரளான மக்கள், சமூக வர்க்கங்களின் நடவடிக்கைக்கு வெளியில்

அவை செயலாற்ற முடியாது. அதே சமயம் வரலாற்று விதிகளை அறிந்து கொள்வதில் மக்கள் வழிகாட்டி களைப் பெற்றால் அவர்கள் உணர்வு பூர்வமாகவும் சுதந்திரமாகவும் வரலாற்றைப் படைக்க முடியும்.

சமூக விதிகள் வெற்றிகரமான வளர்ச்சிக்குத் தேவை யான நிலைமைகளையும் புலப்படத்தக்க வாய்ப்புக் களையும் உருவாக்குகின்றன. இந்த நிலைமைகளையும் வாய்ப்புக்களையும் கண்டுபிடித்து அவற்றை செய்முறை நடவடிக்கையின் மூலம் நிறைவேற்றுதல் சமூகத்தின் கடமை. இக்கடமையை நிறைவேற்றுகின்ற சமூகம் முன்னேற்றம் அடையும்; இக்கடமையை நிறைவேற்றாத சமூகம் தேங்கி விடும் அல்லது பின்னே போகும். சமூக விதிகளைப் பற்றிய அறிவும் அதற்குரிய நடவடிக் கையும் வரலாற்று ரீதியான வெற்றியை உறுதிப்படுத்தும்.

முதலாளித்துவ வளர்ச்சி தவிர்க்க முடியாத விதத்தில் புரட்சிக்கு இட்டுச் செல்கிறது. ஆனால் புரட்சி தானாக வெடிப்பதில்லை. ருஷ்யாவிலும், ஐரோப்பாவிலும் ஆசியா விலும் பல நாடுகளிலும், கியூபா, நிக்கராகுவா, அங் கோலா மற்றும் எத்தியோப்பியாவிலும் பெருந்திரளான மக்கள் புரட்சியில் வெற்றிபெறுவதற்கும் சோஷலிசத்தை அமைப்பதற்கும் மாபெரும் முயற்சிகளைக் கொண்ட மொத்த வரலாற்றுக் காலகட்டம் அவசியமாக இருந்தது.

1917இல் புரட்சிகரமான நிலைமை ருஷ்யாவில் மட்டுமின்றி, ஜெர்மனி, ஹங்கேரியிலும் மற்ற நாடு களிலும் ஏற்பட்டிருந்தது என்று வரலாறு நமக்குத் தெரிவிக்கிறது. அந்த நாடுகளில் புரட்சிகரமான எழுச்சி கள் கூட ஏற்பட்டன. எனினும் 1945 வரை ஒரு பக் கத்தில் சோவியத் யூனியனும், மறு பக்கத்தில் ஜெர் மனியும் ஹங்கேரியும் முற்றிலும் எதிர்த்திசைகளில் வளர்ச்சியடைந்தன. ருஷ்யாவில் புரட்சி வெற்றியடைந்து

சோஷலிசம் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்த பொழுது, ஜெர்மனியிலும் ஹங்கேரியிலும் புரட்சிகர எழுச்சிகள் இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டன, மிகவும் பிற்போக்கான, பாசிஸ்ட் சக்திகள் அதிகாரத்தைக் கைப்பற்றின. நாஜிசம் முறியடிக்கப்படுகின்ற வரை ஹங்கேரியும் கிழக்கு ஜெர்மனியும் சோஷலிஸ்ட் புரட்சிப் பாதைக்குத் திரும்பவில்லை; இன்று அவை சோஷலிஸ்ட் சமூகத்தை நிர்மாணித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் அதற்கு எத்தகைய மாபெரும் முயற்சி தேவைப்பட்டது! சுதந்திரப் போராட்டக்காரர்கள் புரட்சிகர ஸ்தாபனம், கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைமை, அழிக்க முடியாத உறுதி ஆகியவற்றின் உதவியின் மூலமாகவே எதிரியை முறியடித்தார்கள், சுரண்டலை ஒழித்தார்கள்.

கியூபாவிலிருந்த சுரண்டல்காரர்களின் மக்கள் விரோதச் சர்வாதிகாரத்தை ஒழித்து சோஷலிசத்துக்குப் பாதை அமைப்பதற்கு அந்த நாட்டு மக்கள் எந்த அளவுக்குச் சுயநலமின்றிப் பாடுபட வேண்டியிருந்தது என்பதை நாம் அறிவோம்.

ஆகவே புறநிலையான விதிகள் முன்கூட்டி நிர்ணயிக்கப்பட்ட முறையில் செயல்படுவதில்லை. அவற்றைச் செயல்படுத்துவதற்கு சமூக சக்திகளின் நடவடிக்கை அவசியம். அதனால்தான் ஒரு நாட்டில் முன்னேற்றத்தின் விதிக்கு மக்கள் மற்றும் அவர்களுடைய முன்னணிப் படை வரலாற்றுப் பொறுப்புக் கொண்டிருக்கின்றனர் என்கிறோம். புரட்சிகரமான மாற்றம் புறநிலையில் அவசியமானது என்று உணர்ந்து அதற்காக — மகத்தான முயற்சி, தியாகம் ஆகியவற்றைக் கூடச் செய்து — பாடுபடுபவர்களை வரலாறு போற்றுகிறது. பழைய அமைப்பின் கோட்டைகள் அழிக்கப்பட முடியாதவை என்று

தோன்றிய பொழுது மக்களின் சுதந்திரத்துக்காக அவற்றை எதிர்த்துத் தன்னலமின்றிப் போராடியவர் களில் பலரை வரலாறு போற்றுகிறது.

புறவய நிலைமைகள் அநேகமாக முதிர்ச்சியுற் றிருக்கும் பொழுது உறுதியாகப் போராடாமல் தன் னியல்பில் நம்பிக்கை வைத்து, சுதந்திரக் கனி தங்கள் மடியில் விழ வேண்டும் என்று காத்திருப்பவர்களை, பிற்போக்கு சக்திகளுடன் பேரம் பேசி புரட்சிகர இலட் சியங்களுக்குத் துரோகம் செய்பவர்களை வரலாறு மதிக்காது. அதைப் போலவே புறவய நிலைமைகளையும் ஒழுங்கு முறைகளையும் புறக்கணித்து உரிய காலத்துக்கு முன்பே போராட்ட வேள்வியைத் தூண்டி அதில் ஆயிரமாயிரம் சுதந்திரப் போராட்ட வீரர்களைப் பலியிட்டு சுதந்திரத்தைப் பல வருடங்கள் தாமதப்படுத்து கின்றவர்களையும் வரலாறு மதிப்பதில்லை.

வரலாற்று நடவடிக்கை **தன்னியல்பானதாக** அல்லது **உணர்வு பூர்வமானதாக** இருக்கும். ஆகவே விதிகள் தன்னியல்பான முறையில் செயல்படுகின்றன அல்லது சமூகம் அவற்றை உணர்வு பூர்வமான முறையில் செயல் படுத்துகிறது.

தன்னியல்பான நடவடிக்கை மிகவும் சமீபத்திலுள்ள நோக்கங்கள் மற்றும் நலன்களை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது, அது நீண்ட கால மற்றும் இறுதி நோக்கங்களையும் விளைவுகளையும் ஒதுக்குகிறது. இங்கே சமூக விதிகளின் வரலாற்று நடவடிக்கை எதிர்சக்தி களுக்கு இடையில் போராட்டத்தின் விளைவாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. இயற்கைச் சக்தி களைப் போல சமூக சக்திகளும் குருட்டுத் தனமானவை, வன்முறையானவை, அழிக்கக் கூடியவை. முதலாளித்துவ சமூகத்தில் போட்டி விதியின் செயலை வரலாற்றுத்

தன்னியல்புக்கு உதாரணமாகக் கூறலாம்.

உணர்வு பூர்வமான நடவடிக்கை என்பது சமூகம் முழுமைக்காக அல்லது ஒரு வர்க்கத்தின் நலன்களுக்காக சமூக அளவில் திட்டமிடப்பட்டு ஒன்றிணைக்கப்பட்ட, ஒன்றுபட்ட சமூக சக்திகளின் நடவடிக்கையாகும். உணர்வு பூர்வமான நடவடிக்கை முடிவான நோக்கங்களையும் விளைவுகளையும் கணக்கிலெடுத்துக் கொண்டு அவற்றைச் சாதிக்கிறது. ஒரு சோஷலிஸ்ட் அரசில் நடைபெறுகின்ற முறைப்படியான பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார நடவடிக்கை உணர்வு பூர்வமான நடவடிக்கையின் மூலமாக எடுத்துக் காட்டப்படுகின்ற புறநிலை விதிகளின் பிரத்யேகமான வெளியீடு.

மக்கள் அனைவரும் பகுத்தறிவு உடையவர்கள் என்றாலும் அவர்கள் வரலாற்றை உணர்வு பூர்வமாக உருவாக்குகிறார்கள் என்று சொல்ல முடியாது. உணர்வு பூர்வமான வரலாற்று நடவடிக்கை என்று கூறும் பொழுது மக்களின், அரசியல் கட்சிகளின் விதிகளைப் பற்றிய அறிவையும் சமூக வளர்ச்சியைப் பற்றிய தொலைவுப் பார்வைகளையும் அவை இந்த விதிகளின் ஈடேற்றத்துக்காகத் தம்முடைய நடவடிக்கையை உணர்வு பூர்வமாகக் கீழ்ப்படுத்திக் கொள்வதையும் நாம் குறிப்பிடுகிறோம். நாம் புறநிலைச் சக்திகளைப் புரிந்து கொண்டு விட்டால், "...அவற்றின் செயலையும் திசை வழியையும் பலன்களையும் மனத்தால் பற்றிக் கொண்டு விட்டோமானால் பிறகு அவற்றை மேலும் மேலும் நமது சித்தத்துக்குக் கீழ்ப்படியச் செய்து, அவற்றைக் கொண்டு நமது நோக்கங்களை ஈடேற்றிக் கொள்வது முற்றிலும் நம்மையே பொறுத்ததாகும்"* என்று எங்கெல்ஸ் எழுதினார்.

* பி. எங்கெல்ஸ், டூரிங்குக்கு மறுப்பு, பக்கம் 489.

உணர்வு பூர்வமான வரலாற்று நடவடிக்கை என்பது வரலாற்றுச் சுதந்திரமாகும். எனவே சுதந்திரம் வரலாற்று ஒழுங்குமுறைகளை எதிர்த்து இயங்குவதில்லை என்பது பெறப்படும், அதற்கு மாறாக, அவற்றைப் புரிந்து கொண்டு கைவரப் பெறுவதின் மூலம் சுதந்திரத்தை அடைகிறோம். வரலாற்று ரீதியில் சமூக சுதந்திரம் என்பது எதார்த்தத்தின் விதிகளைப் பற்றிய அறிவை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை மற்றும் நட வடிக்கை என்பதைத் தவிர வேறு எதுவுமில்லை. வாழ் வதற்கு, செயல்படுவதற்கு, சிந்திப்பதற்கு, முடிவுகளைச் செய்வதற்கான சுதந்திரம் சமூகத்தையும் இயற்கையையும் ஆள்கின்ற புறநிலை ஒழுங்குமுறைகளை அடிப்படையாகக் கொண்டு எழுகிறது. மனிதகுலம் மிகவும் வளர்ச்சியடைந்த தொழில்நுட்பவியலை உருவாக்க முடிந்திருக்கிறது, பேரள வில் உற்பத்தியை அமைத்துக் கொள்ள முடிந்திருக் கிறது என்றால், உற்பத்தியை ஆள்கின்ற விதிகளைப் புரிந்து கொண்டிருப்பதே அதற்குக் காரணம். மனிதர் கள் மரணத்தை ஏற்படுத்துகின்ற நோய்களை ஒழிக்கக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்றால், அவர்கள் நோய் களின் சாராம்சத்தை அறிந்து கொண்டிருப்பதே அதற்குக் காரணம். நாகரிகத்தின் முன்னேற்றம் சுதந்திரத்தின் முன்னேற்றத்தைக் குறிக்கிறது.

வரலாற்றுத் தன்னியல்பு உற்பத்திச் சாதனங்களின் தனியுடைமையினாலும் எதிரான வர்க்க நலன்களாலும் ஏற்படுகிறது. அதற்கு மாறாக, உணர்வு பூர்வமான வரலாற்று நடவடிக்கை உற்பத்திச் சாதனங்களின் சமூக உடைமை மற்றும் சமூக ஒற்றுமை உறவுகளை அடிப்படையாகக் கொண்டு தன்னை வலியுறுத்துகிறது.

சோஷலிஸ்ட் நிர்மாணம் என்பது மொத்தத்தில் உணர்வு பூர்வமாக நடத்தப்படுகின்ற நிகழ்வுப் போக்

காகும்; ஆனால் இதை அதிக எளிமையாகப் புரிந்து கொள்ளக் கூடாது. சோஷலிசத்திலும் தன்னியல்பான நிகழ்வுப் போக்குகள் (தனிப்பட்ட பொருளாதார முடிவு களின் எதிர்பாராத விளைவுகள், வெளியிலுள்ள நிலைமை களினால் ஏற்படுகின்ற விளைவுகள் மற்றும் இதரவை) உண்டு. புதிய சமூகம் இன்னும் உறுதியாக வேரூன்றாத பொழுது, பழைய வர்க்கக் கட்டமைப்பின் எச்சங் கள் இன்னும் நீடிக்கின்ற பொழுது, புதிய சமூகத்தின் பொருளாயத மற்றும் தொழில்நுட்ப அடிப்படை, கலாசாரம் குறைவான வளர்ச்சியடைந்திருக்கும் பொழுது இது இன்னும் அதிகமாகவே இருக்கிறது. புதிய சமூகத் தின் வளர்ச்சி எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ அந்த அளவுக்கு தன்னியல்புத் துறை குறுக்கப்படுகிறது. சோஷலிசத்தின் கீழ் புதிய சமூகத்தை ஆள்கின்ற விதிகளை ஆழமான முறையில் ஆராய்வதும் சமூக நிகழ்வுப் போக்குகளின் நிர்வாகத்தை விஞ்ஞான ரீதியில் அமைப்பதும் சுதந்திர வாழ்க்கைக்குள் ''தாவிக் குதிப்பதற்கு'' அவசியமான நிபந்தனையாக இருக்கின்றன. இன்று சோஷலிஸ்ட் நாடுகளிலுள்ள கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் சமூக நிர்வாகத்தை விஞ் ஞான ரீதியில் நிறுவ வேண்டும் என்னும் அடிப்படையான கோரிக்கையை முன்வைத்துள்ளன.

## வரலாற்றில் புறவய நிலைமைகளும் அகவயக் காரணியும்

வரலாற்றின் **புறவய நிலைமைகள்** மற்றும் **அகவயக் காரணி** என்னும் கருத்தமைப்புகள் ஒரு பக்கத்தில் வரலாற்றின் புறவயத் தர்க்கம் மற்றும் அதன் விதிகளுக் கும், மறு பக்கத்தில் மனிதனுடைய உணர்வு பூர்வமான

நடவடிக்கைக்கும் இடையிலான உறவுப் பொருத்தத்தைப் பிரதிபலிக்கின்றன. இக்கருத்தமைப்புகளை ஆராய்வது புரட்சிகர மாற்றம் மற்றும் சோஷலிஸ்ட் நிர்மாண நிகழ்வுப் போக்குகளைப் புரிந்து கொள்வதற்கு முக்கியமாகும்.

புறவய நிலைமைகள் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் வரலாற்றைப் படைக்கின்ற தனிநபர்கள், வர்க்கங்கள் அல்லது கட்சிகளின் சித்தம் மற்றும் உணர்விலிருந்து சுதந்திரமான வரலாற்று நடவடிக்கை நிலைமைகளை உள்ளடக்கியிருக்கின்றன. வரலாற்றுக் கடமைகளை நிறைவேற்றுகின்ற பொழுது காட்டுகின்ற அமைப்பு, விழிப்பு, ஒரே நோக்கம் மற்றும் சித்தம் அகவயக் காரணியாக அமைகின்றன.

சமூகச் சூழ்நிலை மற்றும் இயற்கைச் சூழ்நிலை, உள்முக மற்றும் வெளிப்புற சந்தர்ப்பங்களின் மொத்தம் புறவய நிலைமைகள் எனப்படும். பிரதானமாக, பொருளாயத மற்றும் பொருளாதார நிலைமைகள் (உற்பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளின் வளர்ச்சி மட்டம்), சமூகக் கட்டமைப்பு, வர்க்க மற்றும் தேசிய இன உறவுகள் சமூக வளர்ச்சியின் புறவய நிலைமைகளாக இருக்கின்றன. உதாரணமாக, ஒரு நாட்டுக்குள் உருவாக்கமடைகின்ற வர்க்க சக்திகளின் அணிச் சேர்க்கை புரட்சியின் முன்னேற்றத்தில் மாபெரும் முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டத்தில் மக்களின் சித்தத்திற்கு சம்பந்தமில்லாத இதர புறவய நிலைமைகளும் இருக்கின்றன: அரசியல் உறவுகளின் நிலைமை, கலாசார வளர்ச்சி நிலை இதரவை.

சமூக நிகழ்வுகளைப் பற்றிய, வரலாற்று விதிகளைப் பற்றிய விஞ்ஞான ரீதியான அறிவும் சமூக வாழ்க்கை

நிலைமைகளின் மீது மனிதன் தாக்கம் செலுத்துகின்ற உணர்வு பூர்வமான எல்லா வடிவங்களும் அகவயக் காரணியாகும். கடந்த காலத்தில் உழைப்பாளர்கள் வரலாற்று விதிகளைப் பற்றி அறிவைக் கொண்டிருக்க வில்லை என்ற போதிலும் அவர்களில் பெரும்பான்மை யானவர்கள் புரட்சிகரமான போராட்டத்தில் உணர்வு பூர்வமாக ஈடுபட்டார்கள், ஆட்சி புரிகின்ற சுரண்டல் வர்க்கத்தைத் தூக்கியெறிய வேண்டும் என்கின்ற அனுபவ ரீதியான அறிவு அவர்களிடமிருந்தது.

சோஷலிசத்தை நிர்மாணிக்கின்ற பொழுது அகவயக் காரணி முதலாவதாக, மார்க்சிய-லெனினியத்தினால் வழி காட்டப்படுகின்ற கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையை, மக்களின் சமூக-அரசியல் விழிப்பை, தக்க அமைப்பை, கட்சியினால் முன்வைக்கப்படுகின்ற கடமைகளை நிறை வேற்றுவதற்கு மக்களின் முன்னணிப் படை மற்றும் மக்களின் திறமையை, சமூகத்தின் அறவியலை, விஞ்ஞான ரீதியான சாதனைகள் இதரவற்றை உள்ளடக்கியதாகும்.

புறவய நிலைமைகளுக்கும் அகவயக் காரணிக்கும் இடையிலுள்ள உறவுப் பொருத்தம் என்ன? வரலாற்றுப் பொருள்முதல்வாதம் இரண்டையும் குறைத்து மதிப்பிடு வதை எதிர்க்கிறது. புறவயக் காரணி சமூக வளர்ச்சியில் நிர்ணயிக்கின்ற பாத்திரத்தை வகிக்கிறது. அது 1) வளர்ச்சி யின் அவசியத்தையும் வளர்ச்சி வாய்ப்புக்களின் பல் வேறு முறைகளையும் வடிவங்களையும் தீர்மானிக்கிறது; 2) நடவடிக்கையின் கடமைகள், நோக்கங்கள், இயக்கு சக்திகளை நிர்ணயிக்கிறது. அன்றைக்கிருக்கின்ற நிலைமை களில் தன்னால் நிறைவேற்றக் கூடிய கடமைகளையே மனிதகுலம் தனக்கு விதித்துக் கொள்கிறது; 3) இக் கடமைகளை நிறைவேற்றத் தேவையான சாதனங்களின் தொகுதியைத் தீர்மானிக்கிறது.

நடவடிக்கையின் தன்மை மற்றும் விளைவுகளைப் பெரும்பாலும் புறவய நிலைமைகளே உருவாக்குகின்றன. நாம் முன்பே சுட்டிக் காட்டியதைப் போல மொத்தமாக சமூகத்தின் அளவில் உணர்வு பூர்வமான நடவடிக்கை சில சமூக-பொருளாதார நிலைமைகளின் கீழ், அதாவது முரணியல்பான வர்க்கங்கள் இல்லாதிருக்கும் பொழுது மட்டுமே சாத்தியம்.

புறவய நிலைமைகள் தீர்மானகரமான பாத்திரத்தை வகிக்கின்ற பொழுது, அகநிலைக் காரணி தன் பங்காக, புறவய நிலைமைகள் மீது எதிர்த்தாக்கத்தை செலுத்துகிறது. அது இல்லாவிட்டால் முன்னேற்றம் கிடையாது. புறவய அவசியம் தானாகவே நிறைவேறுவதில்லை, வர்க்கங்கள், தேசிய இனங்கள் மற்றும் அரசுகள் தம் சொந்த நலன்களுக்கும் நோக்கங்களுக்கும் நடத்துகின்ற போராட்டத்தின் மூலமாகவே அது நிறைவேறுகிறது. அகநிலைக் காரணியைப் புறக்கணிப்பது கொச்சையான (ஒரு தரப்பான, விஞ்ஞானக் கேடான) பொருள்முதல்வாதத்தின் குணாம்சமாகும்.

சில நிலைமைகளில் அகநிலைக் காரணி தீர்மானகரமான பாத்திரத்தையும் கூட வகிக்கக் கூடும். உதாரணமாக, புரட்சி வெற்றியடைவதற்கு அவசியமான புறவய நிலைமைகள் ஏற்கெனவே தோன்றியிருக்கின்ற பொழுது அகவயக் காரணி (புரட்சிகரமான கட்சி, புரட்சிகர உணர்வு, மக்களின் சிறப்பான அமைப்பு) தீர்மானகரமாக இருக்கிறது.

தன் விருப்பம், தன்னியல்பை வழிபடுதல் நிகழ்ச்சிகள் முன்கூட்டி முடிவு செய்யப்பட்டவை என்னும் நம்பிக்கை ஆகியவற்றை எதிர்த்துப் போராடுகின்ற புரட்சியாளர்களுக்கு வரலாற்றில் புறவய நிலைமைகளுக்கும் அகவயக் காரணிக்கும் இடையிலுள்ள பொருத்தத்தைப் பற்றிய

மார்க்சிய-லெனினியக் கருத்து நம்பிக்கையான வழிகாட்டும் விளக்காகும். உழைப்பாளர்களும் தங்கள் முன்னணி படையும் சமூக வளர்ச்சியின் விதிகளைப் புரிந்து கொண்டிருந்தால், தம்முடைய நாட்டிலுள்ள பிரத்யேகமான நிலைமைகளுக்கு அவற்றைக் கையாளுவதற்கு அறிந்திருந்தால், அவர்கள் சோஷலிசத்துக்குப் போராடுகின்ற ஒருமித்த இராணுவமாக அமைக்கப்பட்டிருந்தால் புதிய சமூகத்தை அமைக்கின்ற போராட்டத்தில் வெற்றி பெற முடியும் என்பதைக் கடந்த கால அனுபவம் எடுத்துக் காட்டுகிறது.

# அத்தியாயம் ஒன்பது

# வரலாற்று வளர்ச்சியின் இயக்கு சக்திகள்

## வரலாற்று வளர்ச்சியை இயக்குகின்ற சக்திகள் எவை?

மனித குலத்தின் வரலாறு என்பது மக்களுடைய நடவடிக்கை என்று வரையறுத்த பின்னர் வரலாற்றுப் பொருள்முதல்வாதம் மற்றொரு பிரச்சினையை, சமூக-வரலாற்று வளர்ச்சிக்குப் பின்னாலுள்ள **இயக்கு சக்திகள்** எவை என்ற பிரச்சினையை எடுத்துக் கொண்டு அதற்குத் தீர்வு காண்கிறது.

பொருளாதாரம், சமூக அரசியல் கட்டமைப்புகள் மற்றும் ஆன்மீக நிகழ்வுகளின் வளர்ச்சி உள் முரண்பாடுகளின் மோதலின் மூலமாக நடைபெறுகிறது, முதலாவதாகவும் முதன்மையாகவும் உற்பத்தி முறையில், அதாவது உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் மற்றும் சமூகத்துக்கும் இயற்கைக்கும், சமூகத்தின் அடித்தளத்துக்கும் அதன் மேற்கட்டுமானத்துக்கும், புறவய நிலைமைகளுக்கும் அகவயக் காரணிக்கும் இதர முரண்பாடுகளின் மூலமாக நடை

பெறுகிறது என்று முந்திய அத்தியாயங்களில் குறிப் பிட்டோம்.

புறநிலை முரண்பாடுகள் வளர்ச்சியின் தோற்று வாயாக இருந்தாலும் அவை பெருந்திரளான மக்களின், வர்க்கங்களின், தேசிய இனங்களின், சிறந்த தலை வர்களால் தலைமை தாங்கப்படுகின்ற கட்சிகளின் முயற்சிகள் இல்லாமல் தன்னியல்பான முறையில் தீர் வடைவதில்லை. வரலாற்றின் புறநிலைப் போக்கில் முன்வைக்கப்படுகின்ற பிரச்சினைகளையும் கடமைகளை யும் தீர்க்கப் பாடுபடுகின்ற சமூக சக்திகளே வரலாற்று வளர்ச்சியின் **இயக்கு சக்திகள்**. இயக்கு சக்திகள் என்ற கருத்தமைப்பு பெருந்திரளான மக்களை, வர்க்கங்களை மற்றும் கட்சிகளை வரலாற்று நடவடிக்கையில் ஈடுபடும் படிச் செய்கின்ற காரணங்கள், தூண்டுதல்கள் மற்றும் நோக்கங்களின் மொத்தத்தையும் உள்ளடக்கியதாகும். அவை சமூக அவசியங்கள், நலன்கள், குறிக்கோள்கள், இலட்சியங்களை உள்ளடக்கியிருக்கின்றன. ''வரலாற்றின் உண்மையான இயக்கு சக்திகள்'', இயக்கும் காரணங் கள்'' என்னவென்றால், ''மாபெரும் மக்கள் திரளினரை, முழுமையான மக்களினங்களை, ஒவ்வொரு மக்களினத் தைச் சேர்ந்த முழுமையான வர்க்கங்களை இயங்கச் செய்யும் நோக்கங்களைப் பற்றியும், அதுவும், சுடர் விட்டெரிந்து விரைவிலே அணைந்து போகும் வைக் கோல் தீபோல் ஏதோ ஒரு வினாடி இயக்கம் போலன்றி, ஒரு மகத்தான வரலாற்று மாற்றத்தில் முடிகிற, நெடிய பயனுள்ள செயலில் ஈடுபடுத்திவிடுகிற நோக்கங் களைப் பற்றிய பிரச்சினையாகத்தான் இது உள்ளது''*

---

* பி. எங்கெல்ஸ், லுட்விக் ஃபாயர்பாகும் மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானத்தின் முடிவும், பக்கம் 75.

என்று எங்கெல்ஸ் எழுதினார். நவீன வரலாற்றின் இயக்கு சக்திகள் வர்க்கங்களின் போராட்டமும் நலன்களின் மோதலும் என்று எங்கெல்ஸ் வரையறுத்தார்.*

ஆகவே வரலாற்றின் இயக்கு சக்திகள் என்னும் கருத்தமைப்பு வரலாற்று நடவடிக்கையின் உறுப்பினர்களையும் மக்களுடைய நடவடிக்கைகள், தங்கள் சமூக சுறுசுறுப்பை ஊக்குவிக்கும் காரணிகளையும் உள்ளடக்கியிருக்கிறது.

வரலாற்றுப் பொருள்முதல்வாதம் பூர்ஷ்வா சமூகவியலிலிருந்து வேறுபட்டிருக்கிறது, அது வரலாற்றின் இயக்கு சக்திகளை, பொருளாயதப் பொருளாதார வாழ்க்கை முதன்மையானது, ஆன்மீக நிகழ்வுகள் இரண்டாம் நிலை உடையவை என்கின்ற தன்னுடைய அடிப்படையான கோட்பாட்டு நிலையிலிருந்து இனங்காணுகிறது. ''கருத்துக்களின் வளர்ச்சி'', ''வரலாற்று ஆன்மாவின் சக்தி'', ''விஞ்ஞான முன்னேற்றம்'' மற்றும் இதர ஆன்மீக நிகழ்வுகளே வரலாற்றை இயக்குகின்ற சக்திகள் என்று கருதுகின்ற கருத்துமுதல்வாதச் சிந்தனையாளர்களின் கருத்துக்களை வரலாற்றுப் பொருள்முதல்வாதம் நிராகரிக்கிறது. ஒவ்வொரு சமூகத்துக்கும் பொருளாயத நலன்களை உற்பத்தி செய்கின்ற முறை அடிப்படையாக இருப்பதால் சமூகத்தின் முக்கியமான உற்பத்திச் சக்தி என்கின்ற முறையில் பெருந்திரளான மக்களும் அவர்களுடைய நடவடிக்கையும் வரலாற்றின் முக்கியமான இயக்கு சக்தியாக இருக்கின்றனர்.

பெருந்திரளான மக்கள், வர்க்கங்கள் மற்றும் தேசிய இனங்களின் பொருளாயதத் தேவைகளும்

---

* அதே நூல், பக்கம் 75.

நலன்களும் வரலாற்றின் புறநிலை விதிகளின் கோரிக்கைகளுக்குப் பின்னால் உள்ள முக்கிய சமூக காரணங்களாக இருக்கின்றன. தேவைகளும் நலன்களும் சமூகம் வளர்ச்சியடைந்திருக்கின்ற மட்டம், இருக்கின்ற சமூக உறவுகளின் அமைப்பு ஆகியவற்றினால் உருவாக்கப்படுகின்றன. மனிதர்களின் முக்கியமான நலன்கள் பொருளாதார உறவுகளின் தன்மையைப் பிரதிபலிக்கின்றன. பொருளாதார உறவுகள் தம்மை வெளிப்படுத்துகின்ற வடிவமே பொருளாயத நலன்கள். உற்பத்திச் சாதனங்களின் தனியுடைமையை அடிப்படையாகக் கொண்டிருக்கின்ற சமூகத்தில் நலன்கள் முரண்படுவது தவிர்க்க முடியாதது. சுரண்டுகின்ற வர்க்கங்கள் ஒழிக்கப்பட்டு உற்பத்திச் சாதனங்களின் பொது உடைமை நிறுவப்படும் பொழுது வெவ்வேறு சமூகக் குழுக்களின் நலன்களுக்கு இடையில் ஒற்றுமை ஏற்படுகிறது.

மக்கள் எதைச் செய்தாலும் அது தங்களுடைய தேவைகளையும் நலன்களையும் திருப்தி செய்வதற்கே. இந்த சமூக நடவடிக்கை சமூகத் தேவைகளாலும் சமூக நலன்களாலும் தூண்டப்படுகிறது. சமூகத் தேவை மனிதனுடைய வாழ்க்கையைப் பற்றிய திட்டவட்டமான பொருளாயத அல்லது இதர நிலைமைகளில் சமூகத்தில் வாழ்கின்ற நபரின் தேவையை வெளியிடுகிறது: உதாரணமாக, சிறப்பான உழைப்பு நிலைமைகள், உழைப்பின் விளைவுகளைக் கூட்டாக சுவீகரித்தல், தொழில் நிறுவனங்களின் நிர்வாகத்தில் பங்கெடுத்தல் இதரவை. ஆன்மீகத் தேவைகளின் முக்கியத்துவம் இக்கால சமூகத்தில் வளர்ந்து கொண்டிருக்கிறது. மனிதன் ரொட்டியினால் மட்டும் வாழ்வதில்லை என்பது முதுரை.

வெவ்வேறான சமூக மற்றும் தனிப்பட்ட தேவைகள் ஒன்றுக்கொன்று தனியாக இருப்பவை அல்ல. அவை

உள்ளிணைப்புக் கொண்டு ஒற்றை, இயற்கை அமைப்பாக இருக்கின்றன. சமூகத்தின் வளர்ச்சி மட்டம் எவ்வளவு அதிகமாக இருக்கின்றதோ அந்த அளவிற்கு மனித னுடைய தேவைகளும் வெவ்வேறாக இருக்கின்றன. மனிதனுடைய தேவைகள் அதிகரிப்பது வளர்ச்சியின் சர்வாம்ச வரலாற்று விதியாகும். மனிதனை மனிதன் சுரண்டுவது ஒழிக்கப்படுகின்ற பொழுது இவ்விதி ஆக முழுமையான அளவில் செயல்படுகிறது.

சோஷலிஸ்ட் சமூகம் சமூக ரீதியான தேவைகளின் சுற்றெல்லையை விரிவுபடுத்துகிறது, ஆளுமையின் படைப்புக் கூற்றை அமுக்குகின்ற, அதன் உடலியல் மற்றும் ஆன்மீக வளர்ச்சியைத் தடுக்கின்ற விவேகமற்ற தேவைகள் கட்டுப்படுத் தப்படுகின்றன.

மக்களின் பொருளாயத மற்றும் ஆன்மீக தேவைகள் — எல்லாவற்றையும் காட்டிலும் படைப்பு நடவடிக்கையில் — தொடர்ச்சியாக வளர்ச்சியடைதல், இத்தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய அவசியம் ஆகியவை பொரு ளாதார மற்றும் கலாசார வளர்ச்சிக்கு சக்தி மிக்க தூண்டுதலாக இருக்கின்றன.

தேவைகள் நலன்களுடன் பிரிக்க முடியாதபடி இணைக்கப்பட்டிருக்கின்றன; பிந்தியவை குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற துறையில் நடவடிக் கையின் திசையமைவை எடுத்துக் காட்டுகின்றன. நலன் என்பது உணர்வின் கலப்பற்ற நடவடிக்கை அல்ல, அதற்குப் புறநிலையான பகுதியும் உண்டு. ஒரு பொது நலன், உதாரணமாக, சமூக உறுப்பினர்களின் உணர்வில் மட்டும் இருப்பதில்லை, அது ''எல்லாவற்றுக்கும் மேலாக, உழைப்பு பகிர்ந்து கொள்ளப்படுகின்ற தனிநபர்களின் பரஸ்பர இடைச்சார்பு என்ற முறையில், எதார்த்தத்

தில்''* இருக்கிறது. பொது நலன் கோடிக்கணக்கான மக்களின் வெவ்வேறு விருப்பங்கள், செயல்கள் என்ற முடிவில்லாத திரளை ஒன்று சேர்க்கிறது, பொது இலட்சியங்கள், கடமைகள், நோக்கங்களுக்கு அடிப் படையாக இருக்கிறது. வர்க்க சமூகத்தில் சுரண்டல் காரர்களின், பணக்காரர்களின் பொது நலன்கள் சுரண்டப்படுகின்றவர்களின், ஏழைகளின் பொது நலன் களை எதிர்க்கின்றன. ஆளும் வர்க்கத்தினர் தம்முடைய சொந்த நலன்களை நாடு முழுமைக்கும் உரிய நலன்கள் என்று காட்ட முயற்சிப்பது வழக்கம். இதிலிருந்து இக்கால முதலாளித்துவ அரசு ஒரு ''மக்கள் நல அரசு'' என்று பூர்ஷ்வா சித்தாந்திகள் முடிவு செய்கிறார்கள்.

உழைப்பாளர்கள் சுரண்டல்காரர்களை எதிர்த்துப் போராடுகின்ற பொழுது தம்முடைய சொந்த நலன்களை மேன்மேலும் அதிகமாக உணருகிறார்கள், தங்களுடைய நலன்கள் உலகத்தின் பணக்காரர்களின் நலன்களுடன் பொருந்த முடியாது என்பதை மேன்மேலும் அதிகமாகப் புரிந்து கொள்கிறார்கள். வர்க்க சுய கல்வி என்னும் இந்த நிகழ்வுப் போக்கு முதலாளித்துவப் பிரச்சாரம் உழைப்பாளர்கள் மீது திணிக்கப் பாடுபடுகின்ற பூர்ஷ்வா மனோபாவங்களையும் அணுகுமுறைகளையும் எதிர்த்துப் போராடுகின்ற சிக்கலான நிலைமைகளில் நடை பெறுகிறது.

சமூக, குழு மற்றும் தனிப்பட்ட நலன்கள் பின்னிப் பிணைந்திருப்பது சோஷலிச அமைப்பில்தான் சாத்தியம்; அதில் நலன்களின் முரணியல்பு படிப்படியாக மறைகிறது. சமூகத்தின் மெய்யான ஒற்றுமை அதில் உருவெடுத்து

---

* Karl Marx and Frederick Engels, "The German Ideology", in: Karl Marx, Frederick Engels, *Collected Works,* Vol. 5, p. 46.

வலுப்படுத்தப்படுகிறது. எனினும் புதிய சமூகத்தின் அரசை இலட்சிய வடிவமாகச் சித்திரிக்கக் கூடாது. சோஷலிஸ்ட் புரட்சியை நிறைவேற்றிய மக்கள் சமூகத்தின் செல்வங்கள் அனைத்துக்கும் தாமே தனி உடைமையாளராக இருப்பதற்குக் கற்றுக் கொள்வதற்கு, இதைப் பொருளாதார ரீதியிலும் அரசியல் மற்றும் உளவியல் ரீதியிலும் கற்றுக் கொள்வதற்கு, கூட்டுவாத உணர்வையும் நடத்தையையும் வளர்த்துக் கொள்வதற்கு நெடுங்காலமாகிறது என்பதைக் கடந்த கால அனுபவம் எடுத்துக் காட்டுகிறது. சோஷலிச சொத்துடைமைக்கு வளம் மிக்க உள்ளடக்கம் உண்டு, இதில் உற்பத்திச் சாதனங்கள் மற்றும் விளை பயன்களைப் பயன்படுத்துவது சம்பந்தமாக பல்வேறு மக்கள், உழைப்புக் கூட்டுகள், துறைகள், நாட்டு பிரதேசங்களுக்கு இடையிலான உறவுகளின் பன்முக முறை அடங்கியுள்ளது, பல்வேறு பொருளாதார நலன்கள் இருக்கின்றன. இந்த சிக்கலான உறவுகளின் தொகுப்பிற்குக் குறிப்பிட்ட இணைப்பு தேவைப்படுகிறது, இவற்றை இடையறாது ஒழுங்கமைக்க வேண்டும், சோஷலிச சொத்தின்பால் உண்மையான பொறுப்புணர்வை உண்டாக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சோஷலிச சொத்துடைமை உறவுகளை ஒழுங்கமைப்பதானது, பிரதேசங்கள், துறைகளின் நலன்களை விட பொதுமக்களின் நலன்கள் நிச்சயமாக மேலோங்கி நிற்குமாறு செய்வதை நோக்கமாகக் கொண்டது. இது உழைப்பாளிகளிடையே பொதுச் சொத்தின் உண்மையான எஜமானர்கள் என்ற உணர்வை ஏற்படுத்துவதையும், தேசிய செல்வத்தைப் பயன்படுத்துவதிலும் பெருக்குவதிலும் உள்ள அக்கறையை அதிகப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டது. அதனால்தான் சோஷலிஸ்ட் உற்பத்தி உறவுகள் நிறுவப்

பட்ட பிறகும் கூட சிலர் தனிநபர்வாத முறைகளை, மற்றவர்களுடைய செலவில், சமூகத்தினுடைய செலவில் தான் மட்டும் நல்வாழ்க்கை நடத்த வேண்டும் என்னும் விருப்பத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள், அவற்றை வளர்க்கவும் செய்கிறார்கள். எனினும் ஒரு சாராம் சமான கூறு தெளிவாகும்: சோஷலிசத்தின் கீழ் சமூக நலன்கள் நாடு முழுமைக்கும் பொதுவாக வைக்கப்பட்டிருக் கின்றன. அவை பொருளாதார, சமூக, ஆன்மீக வளர்ச்சிக்கு வன்மைமிக்க இயக்கு சக்தியாக இருக் கின்றன.

''மனிதர்களை இயங்கச் செய்யும் ஒவ்வொன்றும் அவர்களுடைய மனத்தினூடே சென்று தீர வேண்டும். ஆனால் அது மனத்தில் என்ன வடிவம் எடுத்துக் கொள் ளும் என்பது பெரிதும் சூழ்நிலைமைகளையே பொருத் திருக்கும்''* என்று எங்கெல்ஸ் எழுதினார். வரலாற்று வளர்ச்சியில் ஆன்மீக இயக்கு சக்திகளின் பாத்திரத்தைப் புரிந்து கொள்வதற்கு இச்சொற்கள் உதவி செய்கின்றன. சமூக உறவுகள், தேவைகள் மற்றும் நலன்கள் சித்தாந்த மதிப்புக்களின் வடிவத்தில், அதாவது கருத்துக்கள், இலட்சியங்கள், கோட்பாடுகள், நோக்கங்கள் என்ற முறையில் ஈடேற்றமடைகின்றன. பெருந்திரளான மக்கள் புரட்சிகர சித்தாந்தத்தைத் தன்வயப்படுத்திக் கொள்ளும் பொழுது அது பொருளாயத சக்தியாக மாறுகிறது, புரட்சிகர நடவடிக்கைக்கு வன்மையான தூண்டுதலாக இருக்கிறது. சோஷலிஸ்ட் சமூகத்தை நிர்மாணிப்பதற்கு ஆன்மீக அடிப்படையைத் தருகின்ற மார்க்சிய-லெனி னிய சித்தாந்தத்தின் பாத்திரம் இதற்கு ஒரு உதார

---

* பி. எங்கெல்ஸ், லுட்விக் ஃபாயர்பாகும் மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானத்தின் முடிவும், பக்கங்கள் 75 – 76.

ணம். புரட்சிகர சித்தாந்தத்தினால் உருவாக்கப்பட்ட மக்களுடைய சித்தாந்த ஒற்றுமை இது வரை கேட்டிராத சக்தியைக் கொண்ட இயக்கு சக்தியாகும்.

### பெருந்திரளான மக்கள் வரலாற்றில் வகிக்கின்ற தீர்மானகரமான பாத்திரம்

பெருந்திரளான மக்கள் வரலாற்றில் தீர்மானகரமான பாத்திரத்தை வகிப்பதை அங்கீகரித்தல் வரலாற்றுப் பொருள்முதல்வாத நோக்கிலிருந்து நேரடியாக ஏற்படு கிறது. பெருந்திரளான மக்கள் சமூகத்தின் முக்கியமான உற்பத்திச் சக்தி என்பது மார்க்சியத்தின் மிக முக் கியமான முடிவுகளில் ஒன்று ஆகும். மார்க்சுக்கு முன் பிருந்த சித்தாந்திகள் அனைவரும் — முதலாளித்துவ நாடுகளில் இன்றுள்ள தத்துவாசிரியர்களையும் அரசியல் வாதிகளையும் போல — சமூக வளர்ச்சியின் முக்கியமான இயக்கு சக்தி என்ற முறையில் பெருந்திரளான மக்களின் பாத்திரத்தை நிராகரிக்கின்றனர். பூர்ஷ்வா சித்தாந்திகள் மக்களை இகழ்ச்சியாகக் குறிப்பிடுவதற்கு ஏராளமான சொற்களைக் கூடத் தயாரித்திருக்கிறார்கள் (உதாரண மாக, ''முகமில்லாத பெருங்கூட்டம்'', ''இழிந்த கும்பல்'', ''வரலாற்றின் கட்டுப்பாடில்லாத கொடுங்கோலன்'', ''நாகரிகத்தை அழிப்போர்'' இதரவை). அரசியல், தொழில்நுட்பவியல், விஞ்ஞான ரீதியில் தகுதி மிக்க சிலர் (அதாவது பொறுக்கியெடுக்கப்பட்ட சிலர்) என்ற கருத்தும் பரப்பப்படுகிறது; வீராதிவீரர்கள் மட்டும் வரலாற்றைப் படைக்கிறார்கள் என்னும் பழைய பிற் போக்குவாதத் தத்துவம் புதிய உறையில் சுற்றி விற்பனை செய்யப்படுகிறது.

பெருந்திரளான மக்கள் வரலாற்றில் வகிக்கின்ற பாத்திரத்தைப் பற்றிய இத்தகைய மற்றும் இவை போன்ற விஞ்ஞானத்துக்குப் புறம்பான கருத்துக்கள் வரலாற்று எதார்த்தங்களை மறுக்க முடியாது. நம் யுகத்தின் அடிப்படைச் சாரமாகிய உலகப் புரட்சி கர நிகழ்வுப் போக்கு ''தகுதி மிக்க சிலரால்'' அல்லது ''வீராதிவீரர்களால்'' இயக்கப்படவில்லை; அதை இயக்குபவர்கள் பெருந்திரளான மக்கள்; ஏனென்றால் அவர்களுடைய நலன்கள்தான் வரலாற்று விதிகளின் புறநிலையான தேவைகளைப் பிரதிபலிக் கின்றன.

பெருந்திரளான மக்கள் என்பது வரலாற்றுப் பொருள் முதல்வாதத்தில் திட்டவட்டமான கருத்தமைப்பாகும். வர்க்கம் என்ற கருத்துடன் அது இணைந்ததல்ல, அதற்கு எதிரானதுமல்ல. சமூகத்தில் தம்முடைய புறநிலையான அந்தஸ்து காரணமாக வரலாற்று வளர்ச்சியை நிறை வேற்றுவதில் அக்கறை கொண்டுள்ள வர்க்கங்கள், தேசிய இனப் பிரிவுகள் உள்ளிட்ட சமூகப் பிரிவுகள் மற்றும் அடுக்கு நிலையினருடைய மொத்தத்தைப் பெருந்திரளான மக்கள் என்கிறோம்.

பெருந்திரளான மக்களைப் பற்றி லெனின் கொடுத் திருக்கின்ற வரையறுப்பு அவர்களுடைய வர்க்கக் கட்டமைப்பைப் புரிந்து கொள்வதற்கு உதவுகிறது. ''வெகுஜனங்கள் வர்க்கங்களாய்ப் பிரிக்கப்பட்டிருக் கிறார்கள்; பொதுவாக மிகப் பெருவாரியானோரை, சமுதாயப் பொருளுற்பத்தி அமைப்பில் வகிக்கும் நிலைக்கு ஏற்றவாறு அவர்கள் பிரிக்கப்பட்டிருப்பதை கருதாமலே, சமுதாயப் பொருளுற்பத்தி அமைப்பில் குறிப்பிட்ட நிலையினை வகிக்கும் வகையினங்களுடன் ஒப்பிட்டு வேறுபடுத்துவதன் மூலமே வெகுஜனங்களை வர்க்கங்



17-791

களுடன் ஒப்பிட்டு வேறுபடுத்த முடியும்.'' *

பெருந்திரளான மக்களில் முதன்மையான இடத்தை பெறுபவர்கள் உழைப்பாளர்கள்; ஏனென்றால் அவர்கள் வாழ்க்கையின் அடிப்படையான துறையுடன், பொருளா யத உற்பத்தியுடன் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். வரலாற்று வளர்ச்சியின் சிற்சில கட்டங்களில் உழைப்பாளர் அல்லாத இதர மக்கட் பகுதியினரும் உழைப்பாளர்களுடன் சேர்ந்து கொள்கிறார்கள். உதாரணமாக, தேசிய முதலாளி வர்க்கம் மற்றும் அறிவுஜீவிகளின் பரந்த பகுதியினர் தேசிய விடுதலைப் போராட்டத்தில் உழைப்பாளர் களுடன் சேர்ந்து ஈடுபடுகிறார்கள். எல்லோரும் சேர்ந்து பெருந்திரளான மக்கள் என்னும் ஒற்றை முன்னணியை உருவாக்குகிறார்கள்; அது தேசிய விடுதலைக்கும் முன் னேற்றத்துக்கும் போராடுகிறது.

சமூக வாழ்க்கையின் அடிப்படையான எல்லாத் துறைகளிலும் பெருந்திரளான மக்களின் தீர்மான கரமான பாத்திரத்தைப் பார்க்க முடியும். முக்கியமான உற்பத்திச் சக்தி என்ற முறையில் பெருந்திரளான மக்கள் பொருளாயத மதிப்புகள் மற்றும் தொழில்நுட்ப முன் னேற்றம் அனைத்தையும் படைக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணியும் இலட்சக்கணக்கான உழைப் பாளர்கள் உழைப்புச் செயல்களை மாற்றி அவற்றில் அபிவிருத்திகளைச் செய்கிறார்கள்; பழைய உற்பத்திக் கருவிகள் கைவிடப்பட்டுப் புதிய உற்பத்திக் கருவிகள் உபயோகிக்கப்படுகின்றன. ஆகவே தலைசிறந்த ஆய் வாளர்களும் விஞ்ஞானிகளும் கண்டுபிடிக்கின்ற மாபெரும் தொழில்நுட்ப புதுமைகளைப் பயன்படுத்துவதற்கு அவர்

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 10, 1982, பக்கம் 217.

கள் அடித்தளம் அமைக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் சாதாரண உழைப்பாளர்கள் செய்து கொண்டிருப்பது, பல வருடங்களாக, நூற்றாண்டுகளாக அவர்கள் திரட்டி யுள்ள அனுபவமே புதுமைகளுக்கும் கண்டுபிடிப்புகளுக்கும் மூலமாகும்.

பெருந்திரளான மக்கள் பொருளாயத மதிப்புக் களைப் படைக்கின்ற படியால் ஆன்மீக கலாசாரத்தின் வளர்ச்சிக்குரிய பொருளாயத முன்நிபந்தனைகள் வளர்ச்சி அடைவதற்கு வழியமைக்கிறார்கள், ஏனென்றால் பிழைப்புச் சாதனங்கள் இல்லையென்றால் சமூகம் விஞ்ஞானம், கலை, தத்துவஞானம் இதரவற்றை வளர்க்க முடியாது அல்லது வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், ஆன்மீக உற்பத்தியில் ஈடுபட முடியாது.

ஆன்மீக கலாசாரத் துறையில் பெருந்திரளான மக்களின் நடவடிக்கை சமூக வாழ்க்கையின் பொருளாயத நிலைமைகளைப் படைப்பதுடன் நின்று விடவில்லை. பெருந்திரளான மக்கள் ஆன்மீக வாழ்க்கையில் நேரடி யாகப் பங்கெடுக்கிறார்கள். எண்ணற்ற தலைமுறை களின் முயற்சிகள் சிந்தனைக் கருவி என்ற முறையில் மொழியைப் படைத்தன. மனித குலத்தின் ஆன்மீக அனுபவம் தர்க்கவியல் விதிகளில் பொதிந்திருக்கிறது. பெருந்திரளான பொதுமக்கள் நாட்டுப்புறக் கலைகளைப் படைத்தனர்; அவை கலைத் துறைகளில் தலைசிறந்த வர்களுக்குக் கருத்துக்களை வாரி வழங்குகின்ற வற்றாத ஊற்றாக எப்பொழுதுமே இருந்திருக்கின்றன, எதிர் காலத்திலும் இருக்கும்.

பெருந்திரளான பொதுமக்களின் நடவடிக்கை இல்லா மல் சமூக உறவுகள் இருத்தலும் அவற்றில் மாற்றங் கள் ஏற்படுவதும் சாத்தியமல்ல. ஒடுக்கப்பட்ட மக்களின் இடைவிடாத போராட்டம் அடிமை முறையையும் பண்

ணையடிமை முறையையும் ஒழித்தது; தேசிய விடு தலைப் போராட்டம் காலனியாதிக்க முறை வீழ்ச்சி யடைகின்ற நிலையை ஏற்படுத்தியது; முதலாளித்துவம் எவ்வளவு பலத்தைக் கொண்டிருந்தாலும் உழைக்கும் திரளினரோடு சேர்ந்து தொழிலாளி வர்க்கம் நடத் தும் புரட்சிகர போராட்டம் அதை அரித்தழித்து வரு கிறது. புதிய, சோஷலிஸ்ட் அமைப்பு கம்யூனிஸ்ட் கட்சிகளால் நெறிப்படுத்தப்படுகின்ற பெருந்திரளான மக்களின் உணர்வு பூர்வமான முயற்சிகளின் விளை வாகும்.

பெருந்திரளான மக்களுடைய முயற்சியின் வரையறை கள் மற்றும் சாத்தியங்கள், சுற்றெல்லை மற்றும் ஆழத்தைப் பொறுத்தமட்டில் அவை வெவ்வேறு வரலாற்று நிலைமைகளில் வெவ்வேறு விதமாக இருக் கின்றன. பெருந்திரளான மக்கள் இயக்கு சக்தி என்ற முறையில் தம்முடைய பாத்திரத்தை நிறைவேற்றுவது பின்வரும் நிலைமைகளைப் பொறுத்திருக்கிறது: 1) பொரு ளாதார மற்றும் சமூக-அரசியல் அமைப்பின் தன்மை மற்றும் அதனால் நிர்ணயிக்கப்படுகின்ற உழைப்பாளர் களின் சமூக நிலை; 2) சமூகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற மாற்றங்களின் தன்மை; 3) பெருந் திரளான மக்களின் சமூக உணர்வு மற்றும் ஒழுங் கமைப்பின் மட்டம்.

இன்றைய முதலாளித்துவ சமூகம் பெருந்திரளான பொதுமக்களின் நடவடிக்கையை முற்றிலும் நிறுத்தி விட முடியாது என்பதில் சந்தேகமில்லை. முதலாளித் துவ நாடுகளில் ஏகபோகங்களுக்கும் மிகப் பெரும்பாலான மக்களுக்கும் இடையிலான பகை முரண்பாடு ஆழமாகி வருகிறது. ஏகபோகங்களின் நிர்ப்பந்தங்கள், ஆளும் வர்க்கங்களின் பிற்போக்குக் கொள்கை ஆகியவற்

றிற்கு எதிரான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத் தினரோடு சேர்ந்து அறிவுத்துறையினர், உத்தியோகஸ் தர்கள், பண்ணை விவசாயிகள், நகர குட்டி பூர்ஷ்வாக் கள், தேசிய இன சிறுபான்மையினர், பெண்கள், இளை ஞர்கள், மாணவர்கள் ஆகியோரும் மேன்மேலும் தீவிர மாக இறங்குகின்றனர். சமுதாயத்தை இராணுவ மயப்படுத்துவதற்கும் ஆக்கிரமிப்பு மற்றும் யுத்தக் கொள்கைக்கும் முடிவு கட்டுமாறும், இன மற்றும் தேசிய பாகுபாட்டையும் பெண்ணுரிமைகளுக்குப் பங் கமேற்படுத்துவதையும் கைவிடுமாறும், இளைய தலை முறையின் நிலை சீர்கேடடைவதை நிறுத்துமாறும், ஊழலுக்கு சமாதி கட்டுமாறும், இயற்கை மூல ஊற்று களைப் பயன்படுத்துவதிலும் சுற்றுப்புறச் சூழலின் விஷ யத்திலும் ஏகபோகங்களின் கொள்ளையடிக்கும் அணுகு முறையை மாற்றுமாறும் பல்வேறு அரசியல் போக்கு களையும் சேர்ந்த மக்கள் கோருகின்றனர். இந்த இயக்கங் கள் புறவய ரீதியாக பிற்போக்கு வட்டங்கள் மற்றும் ஏகாதிபத்தியத்தின் கொள்கைகளுக்கு எதிரானவை, இவை சமாதானம் மற்றும் சமூக முன்னேற்றத்திற்கான பொதுப் போராட்டத்தில் ஒன்றிணைகின்றன. ஆளும் வர்க்கத்தினருடைய முயற்சிகள் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் உள்ள தொழிலாளி வர்க் கத்தில் பெரும் பகுதியும் அரசியல் மற்றும் சமூக ரீதியில் செயலற்றவர்களாக இருக்கும்படி செய்கின்றன.

இன்றைய சோஷலிசம் சுரண்டலை ஒழித்து அதன் மூலம் உழைப்பாளர்களின் நடவடிக்கையைக் கட்டுப் படுத்துகின்ற எல்லா வர்க்கக் காரணங்களையும் வேரோடு அகற்றி விட்டது. பெருந்திரளான மக்களின் வரலாற்று நடவடிக்கையை ஊக்குவிப்பதில் சோஷலிசத் தின் சாதனைகள் உலகம் முழுவதிலும் பிரபலமடைந்

திருக்கின்றன. உழைப்பாளர்களது நடவடிக்கையின் வேகத்திலும் அளவிலும் நிரந்தரமான வளர்ச்சி புதிய சமூக அமைப்பின் பொருளாதார, சமூக-அரசியல் மற்றும் சித்தாந்த அடிப்படைகள் உறுதியடைந்து முன் னேற்றமடைவதுடன் நேரடியாக சம்பந்தப்பட்டிருக்கிறது. சோவியத் சோஷலிச சமுதாயத்தின் சமூக-பொருளாதார வளர்ச்சி துரிதப்படுத்தப்படும் சூழ்நிலைகளில் எந்த ஒரு காரியத்தின் வெற்றியும் இதில் மக்கள் திரளினர் எந்த அளவிற்கு தீவிரமாக, உணர்வு பூர்வமாகப் பங்கேற்கின்றனர் என்பதைப் பொறுத்திருக்கும். ஒவ் வொருவரின் கட்டுப்பாடும் ஒழுங்கமைப்பும், கொடுக்கப் பட்ட வேலைக்காக, இதன் முடிவுகளுக்காக உள்ள பொறுப்புணர்வும் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமோ அவ்வளவுக்கவ்வளவு முன்னோக்கிய இயக்கத்தின் வேகம் அதிகமாயிருக்கும்.

சோஷலிச சமுதாயத்தில் — அதுவும் இன்றைய சூழ் நிலைகளில் — நிர்வாகம் என்பது முழுநேரமும் இதில் ஈடுபடக் கூடிய குறுகிய வட்டத்தினரின் சலுகையல்ல. மக்களே உண்மையாக தம் காரியங்களை நிர்வகிக் கின்றனர், கோடிக்கணக்கான மக்கள் அரசியல் வாழ்வில் பங்கேற்கின்றனர். இதுதான் லெனினியப் பொருளில் உழைப்பாளிகளின் சுயநிர்வாகம், இதுதான் சோவியத் ஆட்சியின் சாரம். கம்யூனிஸ்டுக் கட்சி, மக்கள் பிரதிநிதி களின் சோவியத்துகள், தொழிற்சங்கங்கள், கம்சமோல், உழைப்புக் கூட்டுகள் போன்றவை இந்த மக்கள் சுயநிர் வாக முறையின் முக்கிய அங்கங்களாகும்.

வரலாற்றில் பெருந்திரளான மக்களின் பாத்திரம் வளர்ச்சியடைவதைப் பற்றிய விதியை மார்க்சும் எங்கெல்சும் பின்வருமாறு வகுத்தளித்தார்கள்: ‘‘வர லாற்று நடவடிக்கையின் நிறை முழுமையான தன்மை

யுடன் சேர்ந்து அந்த நடவடிக்கையில் இறங்குகின்ற பெருந்திரளினரின் அளவு அதிகரிக்கும்.''* லெனின் பின்வருமாறு எழுதினார்: ''...வரலாற்று நிகழ்ச்சி களின் வீச்சும் விரிவும் எந்த அளவுக்கு அதிகமாக இருக்கின்றனவோ அந்த அளவுக்கு அவற்றில் பங்குபெ றும் மக்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும். இதற்கு நேர்மாறாக நாம் கொண்டுவர விரும்பும் மாறுதல் எந்த அளவுக்கு அதிக ஆழமாக இருக்க வேண்டுமோ அந்த அளவுக்கு நாம் அதன்பாலான அக்கறையையும் அறிவார்ந்த போக்கையும் அதிகமாக ஊக்குவித்து அது அவசியம் என்பதை மேலும் லட்சக்கணக்கான, கோடிக் கணக்கான மக்கள் திடமாக நம்பும்படி செய்ய வேண்டும்.''**

பெருந்திரளான மக்கள் சமூக வளர்ச்சியில் தீவிர மாகப் பங்கெடுப்பார்கள் என்ற பொதுவான சமூகவியல் விதியை நம் யுகம் சிறப்பான முறையில் நிரூபிக்கிறது. உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கும் சோஷலிஸ்ட் மற்றும் கம்யூனிஸ்ட் நிர்மாணமும் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளால் வழிநடத்தப்படுகின்ற உழைப் பாளர்களின் புரட்சிகர நடவடிக்கையின் விளைவு என்பது மெய்யே. ஆகவே சமூகத்தில் புரட்சிகர மாற்றத் தின் வேகமும் அளவும் பெருந்திரளான மக்களுடைய சுறுசுறுப்பு மற்றும் முன்னேற்றத்துக்கு அவர்களுடைய கடப்பாட்டின் அளவினால் பெருமளவுக்கு நிர்ணயிக்கப் படுகின்றன.

---

* Karl Marx and Frederick Engels, "The Holy Family", in: Karl Marx, Frederick Engels, *Collected Works,* Vol. 4, p. 82.

** வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்**, பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி *11, 1982,* பக்கம் *151.*

வரலாற்றுப் பொருள்முதல்வாதம் பெருந்திரளான மக்களை வரலாற்றின் முக்கிய இயக்கு சக்தியாக அங்கீகரிக்கின்ற பொழுது தலைசிறந்த நபர்கள் வகிக்கின்ற பாத்திரத்தை மறுக்கவில்லை. அவர்களுடைய நடவடிக்கை பெருந்திரளான மக்கள் அல்லது வர்க்கங்களின் நடவடிக்கைக்கு எதிர்நிலையானதல்ல. அது பிந்தியதுடன் நேரடியாக இணைந்திருப்பதாக, அதாவது பெருந்திரளான மக்கள் முன்னேற்றத்தை அடைவதற்கு நடத்துகின்ற மொத்தப் போராட்டத்தின் ஒரு பகுதியாகக் கருதப்படுகிறது.

பிரத்யேகமான தலைசிறந்த நபர் தோன்றுவது எந்த நாட்டின் வரலாற்றிலும் ஒரு சம்பவம் என்பதைக் காட்டிலும் கூடுதலான முக்கியத்துவம் உடையதல்ல. அந்த நபருடைய இடத்தை வேறொரு தலைசிறந்த நபரும் வகிக்க முடியும். ஆனால் வரலாறு தலைசிறந்த நபர்களைப் படைக்கிறது என்பது முக்கியமாகும். வரலாற்றைப் படைக்கின்ற நபர்கள் வெவ்வேறு விதமான திறமைகளைக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வெவ்வேறு நிலைமைகளில் இயங்குகிறார்கள், வெவ்வேறு சமூகப் பிரிவுகளைப் பிரதிநிதித்துவம் செய்கிறார்கள். ஆகவே அவர்கள் பொது வரலாற்று இலட்சியத்துக்கு வெவ்வேறு வகைப்பட்ட பங்காற்றுகிறார்கள். மக்களினத்துக்கு அல்லது நாட்டுக்கு அல்லது மனிதகுலத்தின் மொத்த முன்னேற்றத்துக்கு ஆகச் சிறந்த பங்களித்தவர்களே தலைசிறந்த நபர்கள்.

தலைசிறந்த நபர்கள் வேண்டும் என்ற கோரிக்கை மக்கள் அல்லது வர்க்க நடவடிக்கையின் தர்க்கத்தினால் உருவாக்கப்படுகிறது. அந்த நடவடிக்கை ஒரு இயக்

கத்தின் பொது இலட்சியங்களுக்கும் நலன்களுக்கும் தகுந்தபடி அமைக்கப்பட்டு நெறிப்படுத்தப்பட்டால் அது வெற்றியடைகிறது. ஒரு வர்க்கம் தன்னுடைய சொந்த அரசியல் தலைவர்களை, ஒரு சமூக இயக்கத்தை அமைப்பதற்கும் தலைமை தாங்குவதற்கும் தகுதியுடைய சொந்த முற்போக்கு தலைவர்களைப் படைத்துக் கொள்ளா விட்டால் அது அரசியல் தலைமையை வென்றெடுக்க முடியாது என்பதை வரலாறு எடுத்துக் காட்டியிருக்கிறது.

வர்க்கத் தலைவர்கள் சமூக இயக்கங்களுக்குத் தலைமை தாங்கிப் பின்வரும் பொதுவான செயல்களைப் புரிகிறார்கள்: அவர்கள் அந்த இயக்கத்தின் செயல்திட்டத்தைத் தயாரித்து, அதை அமுல் நடத்துவதற்குரிய மிகச் சிறந்த வழிகளையும் முறைகளையும் தேர்ந்தெடுத்து, அச்செயல்திட்ட நோக்கங்களுக்குப் போராடுவதற்குப் பெருந்திரளான மக்களை அமைப்பு ரீதியாகத் திரட்டுகிறார்கள். நம் காலத்தில், ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் நோக்கிலிருந்து அதிகமான அனுபவமும் திறமையும் கொண்ட தனிநபர்களால் வழி நடத்தப்படுகின்ற அரசியல் கட்சிகள் இக்கடமைகளை நிறைவேற்றுகின்றன.

''மேலாண்மை கொண்ட தலைவர்கள் கூடாது'' என்ற போலியான புரட்சிக் கருத்தைப் பற்றி லெனினுடைய விமர்சனம் எவ்வளவு சரியானது என்பதை சோஷலிசத்துக்கான போராட்டத்தின் வரலாறு நிரூபித்திருக்கிறது. பாட்டாளி வர்க்கத்துக்கு ''சிந்தனை மிகுந்த, அனுபவம் வாய்ந்த, அறிவு சார்ந்த... அரசியல் தலைவர்கள்'' * வேண்டும். சுரண்டல் மற்றும் ஒடுக்குமுறையை

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி *10*, *1981*, பக்கம் *235*.

எதிர்த்துப் பன்முறை போராட்டங்களை நடத்தியவர்களின் பழுத்த அனுபவமும், பல புரட்சிகரப் போராட்டங்களில் பங் கெடுத்து புரட்சிகர மரபுகளையும் பரந்த அரசியல் கண்ணோட்டத்தையும் கற்றுக் கொண்டவர்கள் இளம் தொழிலாளர்களுக்கு அவசியம் என்ற பொருளில் பாட் டாளி வர்க்கத்துக்கு அதிகாரமும் அவசியம். லெனின் மார்க்சையும் அவருடைய தத்துவத்தையும் புரட்சிகர அனுபவத்தையும் அத்தகைய அதிகாரமாகக் கண்டார். இருபதாம் நூற்றாண்டு உலகக் கம்யூனிஸ்ட் இயக்கம், சோஷலிசத்துக்கான பாட்டாளி வர்க்கப் போராட்டக் காரர்களுக்கு லெனினைப் போன்ற தலைவரைத் தந்துள்ளது. வரலாற்றில் லெனினுடைய வீச்சை கம்யூனிஸ்ட் அல்லாதவர்களும் அங்கீகரிக்கிறார்கள். உலகம் முழுவதிலுமுள்ள முற்போக்காளர்களுக்கு அவ ருடைய பெயர் இருபதாம் நூற்றாண்டில் உலகத்தை மாற்றிய சம்பவங்களிலிருந்து பிரிக்க முடியாததாக இருக்கிறது.

ஒவ்வொரு நாட்டிலும் புரட்சிகர இயக்கம் தலை சிறந்த போராட்டக்காரர்களை, பெருந்திரளான மக் களுடைய தலைவர்களை உருவாக்கியிருக்கிறது: கியூபா வில் ஹோஸெ மார்ட்டி, ஃபிடெல் காஸ்ட்ரோ, வியட் நாமில் ஹோ-சி-மின், அங்கோலாவில் அகஸ்தினோ நேடோ, ஜெர்மனியில் எர்னஸ்ட் தேல்மான், இத்தாலி யில் அன்டோனியோ கிராம்ஷி, பால்மிரோ டல்யாட்டி, பிரான்சில் மாரிஸ் தொரேஸ் மற்றும் இதரர்கள்.

தலைசிறந்த நபர்கள் குறிப்பிட்ட வரலாற்று வளர்ச்சி களினால் — குறிப்பாக பழைய சமூக அமைப்பு தகர்ந்து புதிய அமைப்பு உருவாகி மேலே வந்து கொண்டிருக் கின்ற பொழுது — உருவாக்கப்படுகிறார்கள். புதியவை இன்னும் முழு வளர்ச்சி பெறாமல் முளை விட்டுக்

கொண்டிருக்கின்ற சமயத்தில் அதன் சாத்தியங்களையும் சாதிப்பதற்குரிய வழிகளையும் எடுத்துக் காட்டுவதற்கு மாபெரும் முயற்சி அவசியமாக இருக்கிறது. அதை அங்கீகரிப்பதற்கு, அதைப் புரிந்து கொள்வதற்கு, மற்ற வர்கள் அதைப் பார்க்க உதவி செய்வதற்கு ஒரு முன் னோடியின் தனித் திறமை அவசியமாக இருக்கிறது. பழமையின் விலங்குகளை நொறுக்கி, காலாவதியான வற்றை நிராகரித்து, வளர்ச்சியடைந்த வர்க்கங்களின் நலன்களுக்குத் தகுந்த புதியனவும் முற்போக்கானவையும் பிறப்பதற்கு உதவி செய்து, புதுமை வெற்றியடைவதற்குப் போராடும்படி அந்த வர்க்கங்களைத் திரட்டுகின்ற பன்முகமான வரலாற்றுக் கடமையை நிறைவேற்று வதற்குத் தலைசிறந்த நபர்கள் அவசியமாக இருக் கிறார்கள்.

தங்கள் காலத்தின் மாபெரும் சமூகக் கடமைகளை நிறைவேற்றுகின்ற பணியை ஊக்குவிக்கின்ற திறமை தலைசிறந்த நபர்களிடம் இருக்கிறது. ஒரு சமூக இயக் கத்தைத் தொடங்குகின்ற தகுதி அவர்களிடம் இருப் பதால், மற்றவர்களைக் காட்டிலும் தொலை நோக் குடன் அவர்கள் பார்க்க முடியும் என்பதால், இருக்கின்ற அமைப்பை மாற்ற விரும்புவதால் அவர்கள் உலக வரலாற்றில் தலைசிறந்த பாத்திரத்தை வகிக்கிறார்கள்.

வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் நோக்கில் தலைசிறந்த நபருடைய நடவடிக்கை ஒரு முற்போக் கான வர்க்கத்தின் நலன்களை எப்பொழுதும் வெளியிடு கிறது. இந்த நபர் வகிக்கின்ற பாத்திரம் அவருடைய வர்க்கத்தினால், சமூக இயக்கத்தில் அந்த வர்க்கத்தின் இடத்தினால் நிர்ணயிக்கப்படுகிறது. அந்த வர்க்கத்தின் முற்போக்குத் தன்மை எவ்வளவு அதிகமோ அவ்வளவு அதிகச் சிறப்புடையவராக அந்த வர்க்கத்தின் தலை

வரும் இருப்பார். அதே சமயத்தில் இந்த நபர்கள் தம் முடைய சொந்த வர்க்கத்தின் நலன்களுக்கு, அவசரமான சமூக இலட்சியங்களுக்குப் பாடுபடுகின்ற அளவுக்கு மட்டுமே அவர்கள் வரலாற்று வளர்ச்சியின் மீது வன் மையான தாக்கத்தைச் செலுத்துவார்கள். தொழிலாளி வர்க்கம் சோஷலிசத்துக்காகப் போராடிய வரலாற்றில் புரட்சிகரமான போராட்டக்காரர்களாக இருந்த வரை முக்கியமான பாத்திரத்தை வகித்து, மக்கள் மத்தியில் அதிகமான செல்வாக்குக் கொண்டிருந்து விட்டு, புரட்சி கர அணிகளிலிருந்து விலகியதும் செல்வாக்கை இழந்த பலரைப் பார்க்க முடியும்.

மார்க்சிய-லெனினியம் தலைசிறந்த நபர்களின் முக் கியமான பாத்திரத்தை அங்கீகரிக்கிறது, ஆனால் எவ் விதமான வீர வழிபாட்டையும், தனிநபர் வழிபாட்டின் எந்த வடிவத்தையும் நிராகரிக்கிறது. அது ஒருபோதும் ஒரு தனிநபரைப் பெருந்திரளான மக்களுக்கு, வர்க்கங் களுக்கு அல்லது கட்சிகளுக்கு எதிராக நிறுத்தாது. தனிநபர் வழிபாடு புரட்சி விஞ்ஞானத்துக்கும் இன்றைய சோஷலிசத்தின் நடைமுறைகளுக்கும் புறம்பானதாகும். சில தற்காலிகக் காரணங்களுக்காக அத்தகைய உதா ரணங்கள் எங்கே, எப்பொழுது தோன்றினாலும் அவை புரட்சிகர இயக்கத்துக்கும் சோஷலிச நிர்மாணத்துக்கும் தீமை செய்கின்றன.

அத்தியாயம் பத்து

# வரலாற்று வளர்ச்சியின் வடிவம் என்னும் முறையில் சமூகப் புரட்சி

வரலாற்றின் புறநிலைத் தர்க்கம் மற்றும் மக்களின் உணர்வு பூர்வமான நடவடிக்கையின் ஒற்றுமை சமூகப் புரட்சிகளில் தன்னை வெளிப்படுத்துகிறது. சமூகப் புரட்சிகள் ஒரு சமூக அமைப்பிலிருந்து மற்றொரு சமூக அமைப்புக்கு நடைபெறுகின்ற மாற்றத்தின் பொதுவான புறவய விதியை வெளியிடுகின்றன. அவை ஒடுக்கப்படுபவர்கள் ஒடுக்குபவர்களை எதிர்த்து நடத்துகின்ற வர்க்கப் போராட்டத்தின் சிகரமாகவும் பெருந்திரளான மக்களின் உணர்வு பூர்வமான வரலாற்றுப் படைப்புத் திறனின் ஆக உயர்ந்த வடிவமாகவும் இருக்கின்றன.

சமூகப் புரட்சிகளைப் பற்றிய மார்க்சிய-லெனினியக் கோட்பாடு ''விவகாரங்களின் புறவய நிலைமையையும் பரிணாமத்தின் (வரலாற்றின் — ஆசிரியர்) புறநிலையான போக்கையும் புரட்சிகர சக்தி, புரட்சிகரமான

படைப்பாற்றல் மற்றும் பெருந்திரளான மக்களின் புரட்சிகரமான முன்முயற்சி ஆகியவற்றின் முக்கியத்துவத்துடன் மற்றும் ஏதாவதொரு வர்க்கத்தைக் கண்டுபிடிப்பதிலும் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதிலும் வெற்றியடைந்த தனிநபர்கள், குழுக்கள், அமைப்புக்கள் மற்றும் கட்சிகளின்''* பகுப்பாய்வை ஒன்று சேர்க்கிறது.

பொதுவாக புரட்சியைப் பற்றிய, குறிப்பாக சோஷலிஸ்ட் புரட்சியைப் பற்றிய தத்துவம் கம்யூனிஸ்ட் கட்சிகளின் செயல்திட்டம் மற்றும் போர்த்தந்திரத்தின் விஞ்ஞான சித்தாந்தக் கருவாக இருக்கிறது. இத்தத்துவத்தை ஏற்றுக் கொள்வதும் ஏற்றுக் கொள்ளாதிருப்பதும் உண்மையான மார்க்சிஸ்ட் புரட்சிகரக் கட்சிகளுக்கும் இன்றைய தொழிலாளர் இயக்கத்தில் உள்ள சீர்திருத்தவாதப் போக்குகளுக்கும் இடையில் பிரிவினைக் கோடாக இருக்கிறது.

எனவே சுரண்டலை உண்மையாகவே எதிர்த்துப் போராடுகின்ற ஒவ்வொருவரும் சமூகப் புரட்சித் தத்துவத்தின் இயக்கவியல் பொருள்முதல்வாத அடிப்படையைத் தன்வயப்படுத்திக் கொள்வது அவசியம்.

### சமூகப் புரட்சிகளின் சாராம்சமும் வரலாற்று அவசியமும்

**சமூகப் புரட்சி என்பது சமூக உறவுகளின் அமைப்பில் ஏற்படுகின்ற தீவிரமான மாற்றம், அதன் விளைவாக ஒரு சமூக-பொருளாதார அமைப்பிலிருந்து மற்றொரு சமூக-பொருளாதார அமைப்புக்கு மாற்றம் ஏற்படுகிறது.**

சமூகப் புரட்சியை சமூகத்தின் தனிப்பட்ட துறை

* V. I. Lenin, "Against Boycott", *Collected Works,* Vol. 13, p. 36.

களில் ஏற்படுகின்ற புரட்சிகளிலிருந்தும் (தொழிற் புரட்சி, விஞ்ஞான, தொழில்நுட்ப புரட்சி இதரவை) ஒவ்வொரு சமூகத்திலும் ஏற்படுகின்ற குண ரீதியான பரிணாம மாற்றங்களிலிருந்தும் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும். கடைசியாக, அதை யுத்தத்திலிருந்தும் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் வளர்ச்சியடைந்திருக்கின்ற பெரிய சமூக-அரசியல் மற்றும் சமூக-பொருளாதார வர்க்க முரண்பாடுகளைத் தீர்க்கின்ற நிகழ்வுப் போக்கு சமூகப் பரட்சி எனப்படுகிறது. பல பத்தாண்டுகளாக, நூற்றாண்டுகளாகக் கூட வளர்ச்சியடைந்திருக்கின்ற முரண்பாடுகள் புரட்சியின் போக்கில் மேற்பரப்புக்கு வரு கின்றன. உதாரணமாக, கியூபாவின் புரட்சிகர நிகழ்வுப் போக்கு பல முரண்பாடுகளைத் தீர்த்தது: கியூபாவுக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும், அமெரிக்க ஏகபோக முதலாளி வர்க்கத்தின் ஆதரவுடன் ஆட்சி செய்த தேசிய சிலராட்சிக்கும் கியூபாவின் சமூகத்தில் நகர்ப்புறக் குட்டி முதலாளி வர்க்கத்தினர் உட்பட மற்ற பகுதி யினருக்கும், ஒரு பக்கத்தில் முதலாளி வர்க்கம், நிலக் கிழார்கள், பணக்காரர்கள், வட்டிக் கடைக்காரர்கள், வங்கியதிபர்களுக்கும் மறு பக்கத்தில் உழைப்பாளர் களுக்கும், தேசியப் பொருளாதாரத்தின் தேவைகளுக்கும் ஆதிக்கம் வகிக்கின்ற பிற்போக்கான மேற்கட்டுமானத்துக் கும், கியூபாவின் தேசியக் கலாசாரத்துக்கும் வடக்கு அமெரிக்காவின் ஏகாதிபத்திய சித்தாந்தத்துக்கும் இடை யிலுள்ள முரண்பாடுகளைத் தீர்த்தது இத்தியாதி.

சமூகப் புரட்சிகள் புறநிலை அவசியத்தினால் ஏற் படுகின்றன. உற்பத்திச் சக்திகளுக்கும் (அவற்றின் வளர்ச்சி யின் தேவைகளுக்கும்) பொருளாதார முன்னேற்றத்தைத் தடுக்கின்ற காலாவதியான உற்பத்தி உறவுகளுக்

கும் இடையில் மோதல் ஏற்படுவது சமூகப் புரட்சிக்கு முக்கியமான காரணமாகும். அத்தகைய உற்பத்தி உறவுகள் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியின் சமூக வடிவம் என்ற நிலை முடிந்து அவை உற்பத்திச் சக்தி களின் வளர்ச்சியைத் தடுக்கின்ற தளைகளாக மாறு வதற்குத் தொடங்குகின்றன. ஆகவே சமூகப் புரட்சி முடிவில் பொருளாதார உறவுகளின் அமைப்பில், குறிப் பாக உடைமை உறவுகளின் அமைப்பில் மாற்றங்களுக்கு வழிவகுக்கிறது.

சமூகப் புரட்சிக்கு மிகவும் ஆழமான காரணம் பொருளாதார முரண்பாடுகளே, சமூக வர்க்க முரண் பாடுகளின் தொகுதி—முதலாவதாக, ஆளும் வர்க்கத்துக் கும் பெருந்திரளான ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், பிற் போக்கான மேற்கட்டுமானத்துக்கும் பழைய சமூகத்தின் கருப்பையில் முதிர்ந்திருக்கின்ற புதிய பொருளாதார உறவுகளின் மூலக் கூறுகளுக்கும் (அல்லது அமைப்புக்கும்) இடையிலுள்ள முரண்பாடுகள் உடனடியான காரணம்.

ஆளும் வர்க்கத்தையும் இருக்கின்ற பொருளாதார உறவுகளையும் பிரதானமாகத் தாங்கிக் கொண்டிருப்பது அரசு என்பதால் புரட்சி தீர்க்கின்ற முக்கியமான முரண்பாடு சுரண்டப்படுகின்ற வர்க்கங்களுக்கும் ஆளும் வர்க்கத்தின் அரசுக்கும் இடையிலுள்ள முரண்பாடே.

புரட்சியின் முதல் மற்றும் முக்கிய பிரச்சினை—கறா ரான தத்துவப் பொருள், நடைமுறை அரசியல் பொருள் ஆகிய இரண்டிலுமே—அரசு அதிகாரத்தை ஒரு வர்க்கத் திடமிருந்து மற்றொரு வர்க்கத்துக்கு மாற்றுவதாகும்.* ஆகவே ஒவ்வொரு சமூகப் புரட்சியும் அரசியல்

---

* வி. இ. லெனின், போர்த்தந்திரம் பற்றிய கடிதங்கள், முன் னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1982, பக்கம் 8 பார்க்க.

புரட்சியே (ஆனால் ஒவ்வொரு அரசியல் திடீர்மாற்றமும் சமூகப் புரட்சி என்பது இதன் அர்த்தமல்ல). சில வளர்முக நாடுகளில் திடீர்ப்புரட்சிகள் அடிக்கடி நடை பெறுகின்றன. ஆனால் அவை தீவிரமான சமூக-பொரு ளாதார மற்றும் அரசியல் மாற்றங்களை ஏற்படுத்து வதில்லை. அன்றைய அரசியல் ஆட்சியின் தனிப்பட்ட— பெரும்பாலும் அற்பமான—கூறுகள் மட்டுமே மாற்றப் படுகின்றன.

ஆகவே பொருளாதார நோக்கில் மட்டுமின்றி சமூக வர்க்க மற்றும் அரசியல் நோக்கிலும் கூட சமூகப் புரட்சி அவசியமாகும். அரசியல் மேற்கட்டுமானத்தில் தலைகீழ் மாற்றம் ஏற்படுவது (சோஷலிசத்துக்கு முந்திய புரட்சிகளில்) அடித்தளத்தில் ஏற்கெனவே படிப்படியாக வும் சாராம்சத்திலும் ஏற்படுகின்ற தலைகீழ் மாற்றத் தினால் அல்லது (சோஷலிஸ்ட் புரட்சிக்கு முந்திய காலகட்டத்தில்) அடிப்படையில் அத்தகைய தலைகீழ் மாற்றத்துக்கான முகப்புரைகளினால் நிர்ணயிக்கப் படுகிறது. அது இப்படித்தான் நிர்ணயிக்கப்படும், ஏனென்றால் ஆளும் வர்க்கத்தின் அரசியல் மேற் கட்டுமானம் புதிய நிலைமைகளுடனும் பொருளாதாரம் மற்றும் மொத்த சமூக உறவுகளின் அமைப்பின் வளர்ச்சி யின் தேவைகளுடனும் மோதுகிறது. சமூக உறவு களின் முற்போக்கான வடிவங்களை வளர்த்துச் செல் கின்ற, அவசரமான சமூக-வரலாற்றுத் தேவைகளைப் பூர்த்தி செய்து, கூடுதலான வரலாற்று வளர்ச்சிக் கடமைகளைப் நிறைவேற்றுவதை உறுதிப்படுத்துகின்ற சமூகப் பிரிவுகளின் நலன்களை அது வெளியிடுதல் முடிந்து விட்டது.

‘‘...புரட்சியின் நாசகரமான சக்தியானது விடு தலைக்கான முயற்சி எவ்வளவு பலமாக, எத்தனை

காலமாக ஒடுக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதையும் காலாவதியாகிவிட்ட ''மேற்கட்டுமானத்துக்கும்'' நம் காலத்தின் உயிர்ப்புள்ள சக்திகளுக்கும் இடையேயுள்ள முரண்பாடு எவ்வளவு ஆழமாயிருக்கிறது என்பதையும் சார்ந்திருக்கிறது''* என்று லெனின் எழுதினார். ருஷ்யாவில் நடைபெற்ற மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சி, கியூபா நாட்டு மற்றும் இதர புரட்சிகளின் அனுபவம் லெனினுடைய முடிவை நிரூபிக்கிறது. அங்கே பல நூற்றாண்டுகளாகக் குவிந்திருந்த முரண்பாடுகள், அந்த முரண்பாடுகளின் கூர்மை, உழைப்பாளர்கள் மற்றும் எல்லா முற்போக்காளர்கள் மீதும் பிற்போக்கு வர்க்கங்கள் ஏவிவிட்ட ஒடுக்குமுறை ஆகியவற்றிலிருந்து அந்தப் புரட்சிகளின் அழிவுச் சக்தி வெளிப்பட்டது.

தலைகீழ் மாற்றத்துக்குரிய நிலைமைகள் பொருளாதார மற்றும் சமூக-அரசியல் உறவுகளின் துறையில் மட்டுமே வளர்ச்சியடைவதாகச் சொல்ல முடியாது. அதன் முகப்புகள் ஆன்மீக கலாசாரத் துறையிலும் வளர்ச்சியடைகின்றன. ஆளும் வர்க்கங்களின் வாழ்க்கை முறையைப் பிரதிபலிக்கின்ற பழைய சமூகக் கருத்துக்களும் அணுகுமுறையும் சமூக உளவியலும் இனியும் முன்னேற்றத்தின் நலன்களுக்குச் சேவை செய்ய முடிவதில்லை; ஆகவே புதிய சமூக சக்திகள் அவற்றை நிராகரிக்கின்றன. அந்த சக்திகள் தமக்கே உரிய உலகக் கண்ணோட்டத்தையும் சொந்த சித்தாந்தத்தையும் படைத்துக் கொள்கின்றன. சமூக-பொருளாதார மற்றும் அரசியல் துறைகளில் மாற்றம் ஏற்படுவதற்கு முன்பாகப் பழைய கருத்துக்களை எதிர்த்தும் புதிய, முற்போக்கான சித்தாந்தத்தை

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி *3*, *1980*, பக்கம் *80*.

ஆதரித்தும் மிகவும் கூர்மையான போராட்டம் நடை பெறுவது வழக்கமாகும். புரட்சிகரமான வர்க்கங்கள் புரட்சியை நிறைவேற்றுவதற்கு முன்பு, அது ஏன் அவசியம் என்பதையும் அதை நிறைவேற்றுவதற்குரிய வழிகளையும் முறைகளையும் உணர்கிறார்கள், ஆகவே புதிய சித்தாந்தத்தை அங்கீகரிக்கிறார்கள். சித்தாந்தத் துறையில் ஏற்படுகின்ற மாற்றம் புரட்சி வெற்றியடை கின்ற பொழுது விளைகின்ற புதிய நிலைமைகள் என்னும் நிலத்தில் பூரணத்துவமடைகிறது.

நம் காலத்தைச் சேர்ந்த சுரண்டல் சமூகங்கள் பலவற்றில் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற வளர்ச்சி சமூக வாழ்க்கையின் எல்லா முக்கியமான துறைகளிலும் மாற்றத் துக்குரிய நிலைமைகள் முதிர்ச்சி அடைவதற்கு நல்ல உதாரணமாகும். அந்த சமூகங்களில் உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும் சுவீகரிப்பின் தனியார் வடிவத் துக்கும் இடையில், ஏகபோகங்களுக்கும் மக்களுக்கும் இடையில், உழைப்பாளர்களுக்கும் சுரண்டுகின்ற வர்க்கங் களுக்கும் இடையில், சமூகத்தின் முக்கிய உற்பத்திச் சக்தி என்ற முறையில் தொழிலாளி வர்க்கம் மற்றும் உழைப்பாளிகளின் இதர பகுதியினரது நிலைக்கும் அவர் களது மெய்யான சமூக அந்தஸ்துக்கும் அரசியல் உரிமைகள் இன்மைக்கும் இடையில் முரண்பாடுகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் செல்வம் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது; காலனியாதிக்கத்திலிருந்து சமீபத் தில் விடுதலை அடைந்த பல இளம் அரசுகள் வறு மையில் சிக்கித் தவிக்கின்றன. இவற்றுக்கிடையிலுள்ள இந்த இடைவெளியை இனியும் புறக்கணிக்க முடியாது. உற்பத்திச் சக்திகளின் பிரம்மாண்டமான வளர்ச்சி வள வாய்ப்புக்கும் அவற்றின் ஒரு தரப்பான, விவேக

மற்ற உபயோகம், மனித சக்தி மற்றும் இயற்கைச் செல்வங்களைக் கொள்ளைக்காரத்தனமாக உபயோகித்த லுக்கும் இடையில், விஞ்ஞான, தொழில்நுட்ப புரட்சி யின் மூலம் வரலாற்று வளர்ச்சியில் ஏற்படப் போகின்ற மகத்தான வாய்ப்புக்களுக்கும் தெர்மோ அணு யுத்தத்தின் மூலம் நாகரிகத்தை அழிப்பேன் என்னும் ஏகாதிபத் தியத்தின் அச்சுறுத்தலுக்கும் இடையில் அதிகரித்துள்ள இடைவெளி மேன்மேலும் கவலையை ஏற்படுத்துகிறது. இப்பொருளாதார, சமூக முரண்பாடுகள் அனைத்தும் கலாசாரச் சீரழிவில், தனி மனிதன் அந்நியப்படுவதில், இன்னும் முதன்மையாக, பெருந்திரளான மக்களின் நலன்களுக்கும், சுரண்டுகின்ற வர்க்கங்களின் அரசியல் மேற்கட்டுமானத்துக்கும் பூர்ஷ்வா அரசுப் பொறியமை வுக்கும் இடையில் மோதலில் வெளிப்படுகின்றன.

உலகக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் கொள்கை ஆவணங் களில் குறிப்பிடப்பட்டிருப்பதைப் போல, இன்று மொத் தத்தில் முதலாளித்துவ அமைப்பு சமூகப் புரட்சிக்கு முதிர்ந்து விட்டது. நம் கால முதலாளித்துவத்தின் எண்ணற்ற உள் முரண்பாடுகள் தீவிரமடைந்திருப்பதில் இதைப் பார்க்க முடியும்.

‘‘சுரண்டலிலிருந்தும் அநீதிகளிலிருந்தும் தம்மை விடுவித்துக் கொள்வதென்பது ஒடுக்கப்படும் மற்றும் சுரண்டப்படும் மக்களின் முழு உரிமையாகும். புரட்சிகள் ஒவ்வொரு குறிப்பிட்ட நாட்டிலும் உள்ள சமுதாய வளர்ச்சியின், வர்க்கப் போராட்டத்தின் நியதியான விளைவாகும். புரட்சியை ‘ஏற்றுமதி’ செய்வதை, இதை வெளியிலிருந்து யார் மீதாவது திணிப்பதை ஏற்புடைய தல்ல என்று கோட்பாட்டு ரீதியாக சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி கருதியது, கருதி வருகிறது. அதே நேரத்தில் எந்த ஒரு வடிவத்திலும் எதிர்ப்புரட்சியை

'ஏற்றுமதி' செய்வதும் மக்களின் சுதந்திரமான விருப்பங்களை, தம் வளர்ச்சிப் பாதையை சுயமாகத் தேர்ந்தெடுக்க மக்களுக்குள்ள உரிமையை முரட்டுத்தனமாக மீறுவதைக் குறிக்கும்.'' *

சமூகப் புரட்சி என்பது வர்க்க சுரண்டல் சமூகங்களில் வரலாற்று வளர்ச்சியின் விதியாகும். பழைய சமூகம் தன்னுடைய வளர்ச்சி வாய்ப்புக்களை முடித்துக் கொண்ட பிறகு, பெருந்திரளான மக்களின் நலன்களுக்குக் கூடுதலான முன்னேற்றம் என்னும் சமூகப் புறநிலை அவசியத்துக்கு அடிப்படையாகப் பயன்பட முடியாத பொழுது, ஆளும் வர்க்கங்களின் சீர்திருத்தங்கள் சமூகத்தை நெருக்கடியிலிருந்து வெளியே கொண்டு வர முடியாத பொழுது சமூகப் புரட்சி வெடிக்கிறது.

**புரட்சியின் வரலாற்று ரீதியான ரகங்கள். சோஷலிஸ்ட் புரட்சியும் அதன் பிரத்யேகமான கூறுகளும்**

சமூகப் புரட்சிகளை அவற்றின் தன்மை (ரகம்), இயக்கு சக்திகள், புறவய மற்றும் அகவய நிலைமைகள் ஆகியவற்றைக் கொண்டு பிரிக்க முடியும். சமூகப் புரட்சி நிறைவேற்றுகின்ற வரலாற்றுக் கடமைகளும் அதில் பங்கெடுக்கின்ற சமூக சக்திகளும் அதன் ரகத்தை நிர்ணயிக்கின்றன.

வரலாற்றில் நகர முதலாளி வர்க்கத்தின் தலைமையில் நடைபெறுகின்ற நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு (பூர்ஷ்வா) புரட்சி, ஏகாதிபத்திய எதிர்ப்புப் புரட்சி, தேசிய விடுதலைப் புரட்சி, சோஷலிஸ்ட் புரட்சி (ஏகாதிபத்திய

---

* சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் வேலைத்திட்டம், அரசியல் பதிப்பகம், மாஸ்கோ, 1986, பக்கம் 67 (ருஷ்ய மொழியில்).

சகாப்தத்தில்) ஆகியவற்றைக் காண்கிறோம். பல நாடுகளில் சோஷலிஸ்ட் புரட்சிக்கு முன்பு ஏகாதிபத்திய எதிர்ப்புப் புரட்சி, தேசிய விடுதலைப் புரட்சி அல்லது மக்கள் ஜனநாயகப் புரட்சி நடைபெறுகிறது.

உதாரணமாக, கியூபாவில் நடைபெற்ற புரட்சி முதல் கட்டத்தில் மக்கள் ஜனநாயக மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மையைக் கொண்டிருந்தது. அதில் மக்களின் (தொழிலாளி வர்க்கம் மற்றும் விவசாய வர்க்கம்) புரட்சிகர ஜனநாயக சர்வாதிகாரத்தை நிறுவுதல், தீவிரமான விவசாய சீர்திருத்தங்கள், ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் அடிப்படைகளை அகற்றுதல் மற்றும் இதர ஜனநாயக சமூக மாற்றங்கள் அடங்கியிருந்தன. கியூபாவின் புரட்சிக்குப் பின்னால் மூன்று வர்க்கங்கள் இயக்கு சக்திகளாக இருந்தன: தொழிலாளி வர்க்கம் (சுமார் பத்து இலட்சம்), உழைக்கும் விவசாயிகள் (சுமார் மூன்று இலட்சம்) மற்றும் நகரக் குட்டி முதலாளி வர்க்கம் (மாணவர்களும் அலுவலக ஊழியர்களும் இப் பகுதியைச் சேர்ந்தவர்கள்). இந்த சக்திகள் தேசிய விடுதலைப் போர், முதலாளித்துவத்துக்கு முந்திய (நிலப்பிரபுத்துவ) எச்சங்களுக்கு எதிரான போர், முதலாளித்துவத்துக்கு எதிரான போர் ஆகிய மூன்று போர்களை நடத்தின. தீவிரவாதக் குட்டி முதலாளி வர்க்கம் தலைமையைப் பெறுவதற்கு விரும்பியது. ஆனால் இந்தக் கட்டத்திலேயே தொழிலாளி வர்க்கம் புரட்சியின் உண்மையான தலைவனாகி விட்டது. புரட்சியை இயக்கிய சக்திகளின் கட்டமைப்பும் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையான பாத்திரமும் கியூபாவின் புரட்சியின் தன்மையையும் அது இடைநிறுத்தமில்லாமல் சோஷலிஸ்ட் கட்டத்துக்கு முன்னேறுவதையும் நிர்ணயித்தன.

புரட்சியின் ஆக உயர்ந்த ரகம் சோஷலிஸ்ட் புரட்சி

யாகும்; அது சோஷலிசத்துக்கு, அதாவது மனிதனை மனிதன் எல்லா வகையில் சுரண்டுவதையும் — ஆகவே சமூக வர்க்க முரணியல்புகளை — ஒழித்த சமூக அமைப்புக்கு மாறுவதை சாத்தியமாக்குகிறது. அதன் கடமைகள் பேரளவானவை, அழிவுத் தன்மையைக் காட்டிலும் ஆக்கும் தன்மை கொண்டவை.

சோஷலிஸ்ட் புரட்சி சமூகம் வர்க்கங்களாகப் பிரிந்திருப்பதைப் படிப்படியாக அகற்றுவதற்கு, அதாவது சமூக வளர்ச்சி என்பது அரசியல் புரட்சி என்னும் நிலை முடிவதற்குரிய நிலைமைகளை உருவாக்குகிறது.

மார்க்சிய-லெனினியத் தத்துவம் சோஷலிஸ்ட் புரட்சியின் பின்வரும் கூறுகளைச் சுட்டிக் காட்டுகிறது:

அ) சோஷலிஸ்ட் புரட்சி என்பது சோஷலிசத்துக்கான சமூக மாற்றத்தின் புறநிலை விதியாகும். அதன் அவசியம் முதலாளித்துவத்தின் முக்கியமான முரண்பாட்டிலிருந்து, உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும் சுவீகரிப்பின் தனியார் தன்மைக்கும் இடையிலுள்ள முரண்பாட்டிலிருந்து பிறக்கிறது. உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலான முரணியல்பு என்னும் அடிப்படையான வர்க்க முரணியல்பும் இதர உள்ளூறையான முரண்பாடுகளும் — இவை முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியை ஏற்படுத்துகின்றன — அதைப் பெற்றெடுக்கின்றன. சோஷலிஸ்ட் புரட்சியின் புறநிலை அவசியம் இன்றைய சித்தாந்தப் போராட்டத்தில் முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது.

ஆ) சோஷலிஸ்ட் புரட்சி, சுரண்டல்காரர்களை எதிர்த்துத் தொழிலாளி வர்க்கமும் அதன் நேச சக்திகளும் நடத்துகின்ற வர்க்கப் போராட்டத்தின் சிகரம். வர்க்கப் போராட்டம் பாட்டாளி வர்க்கப் புரட்சிக் கட்டத்தை எட்டினால் மட்டுமே சமூகத்தை சோஷலிஸ்ட் வழியில் தீவிரமாக மாற்றியமைக்க முடியும்.

இ) சோஷலிஸ்ட் புரட்சி ஒரே சமயத்தில் புறநிலையான நிகழ்வுப் போக்காகவும் பெருந்திரளான மக்களின் உணர்வு பூர்வமான வரலாற்று நடவடிக்கையின் விளைவாகவும் இருக்கிறது. அவர்கள் அந்த வரலாற்று நடவடிக்கையில் தமது விஞ்ஞான சித்தாந்தத்தைச் சேர்த்து முடுக்கி விடுகிறார்கள்; அதில் மார்க்சிய-லெனினியக் கட்சி அவர்களுக்கு வழிகாட்டுகிறது.

ஈ) சோஷலிஸ்ட் புரட்சி பழைய, பூர்ஷ்வா அரசுப் பொறியமைவு அழிக்கப்படுதலையும் புதிய ரகத்தைச் சேர்ந்த அரசு—தொழிலாளி வர்க்க அரசு—நிறுவப் படுதலையும் குறிக்கிறது.

உ) சோஷலிஸ்ட் புரட்சி சமூக உறவுகளின் அமைப்பை வரலாற்று ரீதியில் மாற்றுகின்ற மொத்த சகாப்தமாக, உற்பத்திச் சாதனங்களின் சமூக உடைமையை அடிப்படையாகக் கொண்ட புதிய சமூக உறவுகளை நிர்மாணிக்கின்ற சகாப்தமாக, மனிதனுடைய தேவைகளையும் அவனது சர்வாம்ச வளர்ச்சியையும் இயன்ற வரை முழுமையாகப் பூர்த்தி செய்வதைக் குறிக்கோளாகக் கொண்ட பொருளாதார மற்றும் சமூக அமைப்பை நிறுவுகின்ற சகாப்தமாக இருக்கிறது.

ஊ) சோஷலிஸ்ட் புரட்சி எந்த நாட்டிலும் உள்ளுறையான வர்க்க முரண்பாடுகளின் வளர்ச்சி மற்றும் சுரண்டல்காரர்களை எதிர்த்து நடைபெறுகின்ற போராட்டத்தினால் மட்டும் நிர்ணயிக்கப்படுவதில்லை; ஆனால் அது உலக மூலதனத்தை எதிர்த்துப் பாட்டாளி வர்க்கம் நடத்துகின்ற உலகப் போராட்டத்துடன் பின்னிப் பிணைந்திருக்கிறது. பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம் சோஷலிஸ்ட் புரட்சியின் கோட்பாடாகவும் அதன் முடிவான வெற்றிக்கு அவசியமான நிபந்தனையாகவும் இருக்கிறது.

## புரட்சிக்குரிய புறவய மற்றும் அகவய நிபந்தனைகளின் உறவுப் பொருத்தம்

எந்த சமூகப் புரட்சியும் சில விதிகளுக்கு உட்பட்ட நிகழ்வே, அது திட்டவட்டமான புறவய முன்நிபந்தனைகளின் கீழ் நடைபெறுகிறது என்று முன்பே கூறியிருக்கின்றோம். வளர்ந்து கொண்டிருக்கின்ற உற்பத்திச் சக்திகளுக்கும் காலாவதியான உற்பத்தி உறவுகளுக்கும் இடையில் தீவிரமான மோதல் ஏற்படுகிறது; அது ஆட்சி செய்கின்ற வர்க்கங்களுக்கும் ஆட்சியில் இல்லாத வர்க்கங்களுக்கும் இடையிலுள்ள முரணியல்பில் பிரதிபலிக்கப் படுகிறது. எனினும் ஒரு புரட்சிகர நிலைமை தோன்றினால்தான் புரட்சி ஏற்படுகிறது; சமூக முரண்பாடுகள் முதிர்ச்சியடைந்து, மாற்றத்துக்கு அவசியமான குறிப்பிட்ட சமூக-அரசியல் நிலைமைகள் உருப்பெறுவதை புரட்சிகர நிலைமை என்கிறோம். அது ஆளும் வர்க்கத்தின் அரசியல் அமைப்பில் நெருக்கடியை, ஒடுக்கப்படுகின்ற வர்க்கத்தினருடைய துன்பங்களும் தேவைகளும் அதிகரிப்பதை, பெருந்திரளான மக்களுடைய நடவடிக்கை கணிசமான அளவில் ஓங்குவதைக் குறிக்கிறது. அது பொருளாதார நெருக்கடி, ஆளும் வர்க்கத்தின் கொள்கைகள் படுதோல்வி அடைதல், தேசிய அல்லது இன வெறிக் கலவரங்கள், அந்நிய ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்துக்கு எதிரான போராட்டம், தேசிய சுதந்திரத்தைப் பறிகொடுக்கின்ற ஆபத்து, போரில் தோல்வி இதரவைகளை உள்ளிட்ட பல்வேறு காரணங்களினால் வளர்ச்சி அடைகிறது.

புரட்சிகர நிலைமையின் தோற்றமும் வளர்ச்சியும் ஒரு முரண்பாடான நிகழ்வுப் போக்கு. சமூக வளர்ச்சிக்கு

எதிர்ப்போக்குகளை எதிர்ப்பதை அது உள்ளடக்கியிருக்கிறது. புரட்சிகர நிலைமை வளர்ச்சி அடைகின்ற பொழுது நிலைமையை ஸ்திரப்படுத்துகின்ற போக்கு மற்றும் தம்முடைய நிலையைக் காத்துக் கொள்வதற்கு—பலப்படுத்திக் கொள்ளக் கூட—முழு அளவில் முனைகின்ற பிற்போக்கு சக்திகள் எப்பொழுதும் அதை எதிர்க்கின்றன. புரட்சிகர நிலைமையின் வளர்ச்சியை ஊக்குவிக்கின்ற கூறுகளை இந்த நிகழ்வுப் போக்கைத் தடைசெய்கின்ற கூறுகள், புரட்சிகர நிலைமையில் ஏற்கெனவே உள்ள கூறுகள் இடைச் செயல் புரியாமல் தடுக்கின்ற கூறுகள் எதிர்க்கின்றன. இக்கூறுகள் புரட்சிகர நிகழ்வுப் போக்கின் பாதைகளை ''அடைத்து விடுகின்றன'' என்று கூறலாம்.

லத்தீன் அமெரிக்காவில் 1950க்களின் முடிவிலும் 1960க்களின் ஆரம்பத்திலும் பின்வரும் கூறுகள் புரட்சிகர நிலைமை வளர்ச்சி அடைய முடியாதபடி தடுத்தன: உள்நாட்டு நிலைமையின் மீது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தாக்கம், முக்கியமான எதிர்ப்புரட்சி சக்தியாக இராணுவம் செயலாற்றுதல் மற்றும் உழைப்பாளர்கள் ஒரே சீரான தன்மையைக் கொண்டிராதது ஆகியவை. புரட்சிகரமான நிலைமை உருவெடுப்பதற்கு புரட்சிகரமான மக்களுடைய முன்னணிப் படை கொரில்லா யுத்தம் உள்பட தீவிரமான நடவடிக்கைகளை உபயோகிப்பது அவசியமாக இருந்தது. எனினும் புரட்சிகரப் போராட்டத்தின் நடைமுறை கொரில்லா யுத்தம் தானாகவே புறவயமான புரட்சிகர நிலைமையைத் தோற்றுவிக்க முடியும் என்று எடுத்துக் காட்டவில்லை.

புரட்சிகர நிலைமை முதிர்ச்சியடைவது தன்னியல்பான நிகழ்வுப் போக்கு, அதற்கு மேல் ஒன்றுமில்லை என்பது இதிலிருந்து பெறப்படும். சாராம்சத்தில் புற

நிலையான அந்த நிகழ்வுப் போக்கை அடித்தளத்திலும் மேற்கட்டுமானத்திலும் இருக்கின்ற மாற்றத்திற்குரிய நிலைமைகளின் தொகுதியிலிருந்து வளர்ச்சியடைகின்ற புரட்சிகர சக்திகள் துரிதப்படுத்த முடியும்.

புரட்சிகர நிலைமை புரட்சிக்கு முன்நிபந்தனையாக இருந்த போதிலும் புரட்சி வெற்றியடைவதற்கு அது மட்டும் போதுமானதல்ல. புரட்சி ஏற்பட வேண்டுமென் றால் அதற்குரிய புறநிலையான முன்நிபந்தனைகள் வளர்ச்சியடைந்த அகநிலைக் காரணியுடன் பொருந்த வேண்டும். பெருந்திரளான மக்கள் சித்தாந்த ரீதியில் தயாரிக்கப்பட்டு புரட்சிகரப் போராட்டத்தில் ஈடுபட வேண்டுமென்ற உறுதியுடன் இருத்தல், புரட்சிகர சக்திகள் சிறப்பான அமைப்பைக் கொண்டிருத்தல், பழைய அமைப்புக்கு எதிரான போராட்டத்தில் பெருந் திரளான மக்களுக்குத் தலைமை தாங்கக் கூடிய அமைப்பு ரீதியான புரட்சிகர முன்னணிப் படை இருத்தல் ஆகியவை அகநிலைக் காரணியின் சில கூறுகளாகும். நாடு தழுவிய புரட்சிகர நெருக்கடி, புரட்சி வெற்றி பெற வழி வகுக்கின்ற சமூக-பொருளாதார, சமூக-அரசியல், சித்தாந்த மற்றும் உளவியல் கூறுகள் ஒன்று சேர்ந்து வளர்ச்சியடைவதை ஒரு புரட்சி விதியாக லெனின் நிறுவினார்.

புரட்சிக்கு அவசியமான புறவய நிலைமைகளையும் அகவயக் காரணியையும் உருவாக்குவது மிகவும் சிக் கலான நிகழ்வுப் போக்கு; பிற்போக்கு சக்திகள் அந்த நிகழ்வுப் போக்கை சாத்தியமான எல்லா வழிகளிலும் தடுப்பதற்குப் பாடுபடுகின்றன. இந்த சக்திகளை முறி யடிக்க வேண்டும் என்று கூறும் பொழுது புரட்சிகர நிகழ்வுப் போக்கின் புறவய நிலைமைகளுக்கும் பெருந்திர ளான மக்கள் புரட்சிகர போராட்டத்துக்குத் தயாராக

இல்லாமலிருக்கின்ற நிலைமைக்கும் இடையிலுள்ள பிளவை, முன்னணிப் படைக்கும் உழைப்பாளர்களின் பெரும் பகுதிக்கும் இடையிலுள்ள பிளவை மூட வேண்டும் என்று பொருள்.

பொருளாயத முன்நிபந்தனைகளையும் அகநிலைக் காரணியையும் பழைய அமைப்பை அழிக்கக் கூடிய ஒரே சக்தியாக எப்படி இணைப்பது என்பது ஒரு புரட்சிகரக் கட்சியின் போர்திட்டத்தில் மிகவும் முக்கிய மான பிரச்சினைகளில் ஒன்று. சாராம்சத்தில் புரட்சி வெற்றியடைவது அதைப் பொறுத்திருக்கிறது. புரட்சிகர அணிகள் அந்தந்த நாட்டில் இருக்கின்ற நிலைமை களுக்குத் தகுந்தவாறு இப்பிரச்சினையை வெவ்வேறு முறைகளில் முடிவு செய்கின்றன. உதாரணமாக, கியூபா விலும் நிக்கராகுவாவிலும் கொரில்லா யுத்தம் புரட்சிகர நிகழ்வுப் போக்கின் முதல் வடிவமாக இருந்தது.

அகநிலைக் காரணியை உருவாக்குவதும் வளர்ப்பதும் பன்முகமான நிகழ்வுப் போக்கு ஆகும். மிகவும் வளர்ச்சி யடைந்த வர்க்கத்தை, முதலாகவும் முதன்மையாகவும் தொழிலாளி வர்க்கத்தை, புரட்சியின் தலைவனாக அல்லது முன்னணிப் படையாகப் பயிற்றுவிப்பதும் இதர உழைக்கும் மக்களையும் உழைப்பில் ஈடுபடாத இதர மக்கள் பகுதியினரையும் ஒன்று சேர்ப்பதற்கும் திரட்டு வதற்கும் அதன் திறமையைப் பெருக்குவதும் அதன் சாரம் எனலாம். அகநிலைக் காரணி மாற்றமடையாதது அல்ல என்பதை வரலாற்றில் நாம் பார்க்கிறோம். புரட்சி நிரந்தரமாக முன்னேறித் தாக்குவதை உறுதிப் படுத்துவதற்கு அது எப்பொழுதும் பலத்தைத் திரட்ட வேண்டும், நடவடிக்கைக்குரிய தன்னுடைய சக்தியைப் பெருக்க வேண்டும்.

சிலியில் ஏற்பட்ட புரட்சி முறியடிக்கப்பட்டதன்

வேதனையான விளைவுகளை உலகம் அறியும். பொதுஜன ஒற்றுமை அரசாங்கம் ஆட்சி செய்த மூன்று வருடங்களில் ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் சிலராட்சி எதிர்ப்புத் தன்மை கொண்ட புரட்சிகர மாற்றங்களை நிறைவேற்றியது. சிலியில் புரட்சிகரப் பாதை சமாதான (ஆயுதப் போராட்டம் இல்லாத) வழியைப் பின்பற்றியது; ஆனால் பாசிஸ்ட் இராணுவ திடீர்ப் புரட்சி அதை நொறுக்கியது. புரட்சி தற்காலிகமாகத் தோல்வியடைந்தது; தொழிலாளி வர்க்கம் தன்னுடைய தலைமையை முரணில்லாமலும் முழுமையாகவும் அமுலாக்குவதற்குத் தவறியதும் உழைப்பாளர்களின் இதர பகுதியினரை முதலாளி வர்க்கத்திலிருந்து பிரிக்கத் தவறியதும் இதற்கு முக்கியமான காரணங்கள் என்று சிலியின் கம்யூனிஸ்ட் கட்சி விளக்கியிருக்கிறது. நெருக்கடிகள் அடுத்தடுத்து ஏற்பட்ட பொழுது பொதுஜன ஒற்றுமை அரசாங்கத்தின் உள் ஒற்றுமை குலைந்தது; தலைமையின் அரசியல் தவறுகள் இதற்குக் கணிசமான காரணம்.

நாட்டில் எல்லா அதிகாரத்தையும் கைப்பற்றி புரட்சியின் அடுத்த கட்டத்துக்கு முன்னேறுவதற்குப் போதுமான அளவுக்குத் தெளிவான செயல்திட்டம் கட்சியிடம் இல்லை. எல்லா அதிகாரத்தையும் கைப்பற்ற வேண்டிய அவசியத்தைப் பெருந்திரளான மக்களும் உணரவில்லை; அதற்கு அவர்களுடைய அரைகுறையான அரசியல் அறிவும் அனுபவக் குறைவும் காரணங்கள். இதன் விளைவாக முடிவான தீர்வை உறுதிப்படுத்தக் கூடிய சுறுசுறுப்பான சக்தியின் ஆதரவுப் பலம் கம்யூனிஸ்ட் கட்சிக்கு இல்லை. புரட்சிகர சக்திகளின் பலவீனத்தைப் பிற்போக்காளர்கள் வேகமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். அவர்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இரகசிய ஆதரவுடன் சமாதான வழியைப் பின்பற்றிய

சிலியின் புரட்சியைப் படுகொலை செய்தார்கள். தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியாத புரட்சி அழிந்து விடும் என்ற பிரபலமான வாசகத்தை சிலியில் நடை பெற்ற நிகழ்ச்சிகள் மறுபடியும் நிரூபித்தன.

காலாவதியான, சுரண்டுகின்ற சமூக-அரசியல் அமைப்பை ஒழித்து ஒரு புதிய அமைப்பை நிறுவுகின்ற புரட்சிகர நிகழ்வுப் போக்கின் வடிவம்—சமாதான வழி அல்லது வேறு வழி—எப்படியிருந்தாலும் அதற்கும் பரிணாம வளர்ச்சி மற்றும் சீர்திருத்தவாதத்துக்கும் சம்பந்த மில்லை. சீர்திருத்தத்தின் மூலம் அரசியல் அமைப்பை, பொருளாதார மற்றும் சமூகக் கட்டமைப்புகளை தீவிரமான முறையில் மாற்றியமைக்க முடியாது. ஆகவே மார்க்சிய-லெனினியம் சீர்திருத்த முறைகளை முற்றிலும் நிராகரிக்கவில்லை என்றாலும் புதிய சமூகத்தை அமைப் பதற்கு சீர்திருத்தவாதம் ஒரு வழி என்ற கருத்தை நிரா கரிக்கிறது. சீர்திருத்தங்கள் இல்லாமல், சமூக வாழ்க் கையின் பல்வேறு துறைகளிலும் சில மாற்றங்கள் செய் யாமல் புரட்சி நடைபெற முடியாது. எனினும் ஒரு புரட்சிக்குத் தயாரிக்கின்ற கட்டத்திலும் அது நிறை வேற்றிப் பூர்த்தியடைகின்ற பொழுதும் சீர்திருத்தங்கள் போராட்டத்துக்குத் துணை புரிகின்ற வழி முறைகள் என்ற அளவில் மட்டுமே இருக்க முடியும். உதாரணமாக, விவசாய சீர்திருத்தங்களும் இதர பல ஜனநாயக மாற்றங்களும் மக்கள் ஜனநாயக, ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் புரட்சிகளின் போது மாபெரும் முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றன. புரட்சிகரமான சக்திகளின் கைகளில் சீர்திருத்தம் புரட்சி கரமான மாற்றத்துக்கு ஒரு வழியாக இருக்கிறது, ஆனால் பிற்போக்கான வர்க்கங்களிடம் அது பெருந் திரளான மக்களுக்குத் தரப்படுகின்ற சலுகையாக அல்லது

புரட்சிகரமான நெருக்கடியைத் தவிர்ப்பதற்குச் செய்யப் படுகின்ற தந்திரமாக அல்லது தங்களுடைய நிலைகளை பலப்படுத்திக் கொள்வதற்கு ஒரு சாதனமாக இருக்கிறது என்பது இதன் மூலம் விளங்கும்.

## சமூகப் புரட்சியில்
## பொது மற்றும் தனித் தன்மை

இது தத்துவத்திலும் அரசியல் நடைமுறையிலும் முக்கிய மான பிரச்சினையாகும். இது இக்காலத்தில், புரட்சி கர நிகழ்வுப் போக்குகள் நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, மக்கள் ஜனநாயக, தேசிய விடுதலை மற்றும் சோஷ லிஸ்ட் புரட்சிகளைக் கொண்ட வெவ்வேறு கட்டங் களை உள்ளடக்கியிருக்கின்ற நிலையில் அதிகமான பொருத்தத்தைக் கொண்டிருக்கிறது. புரட்சிகர நிகழ்வுப் போக்கின் பொதுவான மற்றும் தனித்தன்மையான கூறுகளை முறையாகக் கணக்கிலெடுத்துக் கொண் டால்தான் ஒவ்வொரு கட்டத்திலும் செயல்திட்ட மற்றும் போர்தந்திரக் கடமைகளையும் இயக்கு சக்தி களையும் சரியாக வரையறுக்க முடியும்.

தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர கட்சிகள், சமு தாய வளர்ச்சி பற்றிய விஞ்ஞான தத்துவமாகிய மார்க் சிய-லெனினியத்தைப் பின்பற்றுகின்றன, கோட்பாட்டு வழிப்பட்ட, திட்டமிட்ட கொள்கையைக் கடைப்பிடிக் கின்றன. முதலாளித்துவத்தை சோஷலிசத்தால் மாற்றுவது வரலாற்று ரீதியாகத் தவிர்க்க இயலாதது என்று இவை உறுதியாக நம்புகின்றன, சோஷலிஸ்ட் புரட்சியின் (இது சமாதான வழியிலோ, சமாதானமற்ற வழியிலோ எப்படி நடந்தாலும்) புறவய நியதிகளை தெளிவாகப் புரிந்து கொள்கின்றன, சோஷலிசத்திற்கான போராட்டத்தின்

பொதுக் கோட்பாடுகளை ஒவ்வொரு நாட்டின் திட்ட வட்டமான சூழ்நிலைகளிலும் பயன்படுத்த இவற்றிற்குத் தெரியும்.

சமூகப் புரட்சிகளிலுள்ள பொதுக் கூறு அவற்றின் அடிப்படையான உள்ளடக்கம். ஒவ்வொரு புரட்சியும் பெருந்திரளான மக்கள் பங்கெடுக்கின்ற வர்க்கப் போராட்டத்தின் சிகரம். அகநிலைக் கூறுகளுடன் பொருந்துகின்ற முதிர்ச்சியடைந்த புறவய முன்நிபந்தனைகள் இருக்கின்ற பொழுதுதான் புரட்சி ஏற்பட முடியும். புரட்சி என்பது எப்பொழுதுமே பிற்போக்கு சக்திகளின் ஆதிக்கத்தை எதிர்த்து ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள் நடத்துகின்ற உணர்வு பூர்வமான, அமைப்பு ரீதியான போராட்டமாகப் பெருமளவில் இருக்கிறது. பெருந்திரளான மக்கள் புரட்சிகர சித்தாந்தத்தைத் தன்வயப்படுத்திக் கொள்ளாமல் புரட்சி என்பது இருக்க முடியாது.

புரட்சியில் தனித் தன்மை முதலாவதாகவும் முதன்மையாகவும் சமூகத்தை மாற்ற உபயோகிக்கப் படுகின்ற வடிவங்களிலும் முறைகளிலும் வெளிப்படுகிறது.

பொதுவான மற்றும் தனித் தன்மையின் இயக்கவியல் சோஷலிஸ்ட் புரட்சிக்கு அதிகமான தத்துவ மற்றும் செய்முறை முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது. 1917இல் ருஷ்யாவில் நடைபெற்ற மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சியும் மற்ற நாடுகளில் நடைபெற்றிருக்கின்ற புரட்சிகளும் சோஷலிஸ்ட் புரட்சிகளை ஆள்கின்ற பொது விதிகளும் அவற்றின் செயல் முறை மற்றும் ஈடேற்றத்தின் பிரத்யேகத் தன்மைகளும் இருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

சோஷலிஸ்ட் புரட்சியின் பொது விதிகள் அப் புரட்சியின் சாராம்சத்தை வெளிப்படுத்துகின்றன; தனித்

தன்மையான கூறுகள் பிரத்யேகமான வரலாற்று நிலைமைகளில் அதன் தனித்தன்மையான சாரத்தையும் வடிவத்தையும் வெளிப்படுத்துகின்றன. பொது விதிகள் பரந்த உழைப்பாளர் அணிக்குத் தொழிலாளி வர்க்கம் (அதன் மூலக்கருவே மார்க்சிய-லெனினிய கட்சி) தலைமை தாங்குதல், புரட்சிகரமான மாற்றத்தை நிறைவேற்றுதல், ஏதாவதொரு வடிவத்தில் தொழிலாளி வர்க்க ஆட்சியை நிறுவுதல், தொழிலாளி வர்க்கம் உழைப்பாளர்களின் எல்லாப் பிரிவினருடனும் கூட்டணியை ஏற்படுத்தல் உற்பத்திச் சாதனங்களில் முதலாளித்துவ உடைமையை ஒழித்து சோஷலிஸ்ட் உடைமையை நிறுவுதல், விவசாயத்தில் சோஷலிஸ்ட் மாற்றம், மக்களின் நலன்களுக்கான முறைப்படியான பொருளாதார வளர்ச்சி, கலாசாரப் புரட்சியை நிறைவேற்றுதல், தேசிய இனப் பிரச்சினையைத் தீர்த்தல், மக்களினங்களுக்கு மத்தியில் சமத்துவம் மற்றும் நட்புறவை நிறுவுதல், வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு விரோதிகளுக்கு எதிராக சோஷலிசத்தைப் பாதுகாத்தல், மற்ற நாடுகளைச் சேர்ந்த உழைப்பாளர்களுடன் ஒருமைப்பாட்டை—பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதத்தை—அமைத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கின்றன.

தனித்தன்மையான கூறுகளைப் பொறுத்த வரை அவை மூன்று துறைகளில் வெளிப்படுகின்றன. இயக்கு சக்திகளின் பிரத்யேகமான கட்டமைப்பு, புரட்சிகர மாற்றத்தின் வடிவம், தொழிலாளி வர்க்கம் நிறுவியிருக்கின்ற ஆட்சியதிகாரத்தின் பிரத்யேகமான கூறுகள் மற்றும் பொருளாதாரத்திலும் கலாசாரத் துறையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற மாற்றத்தின் வடிவங்களும் முறைகளும் ஆகியவை இத்துறைகளாகும். பொது விதிகள் செயல்படுகின்ற பொழுதுதான் சோஷலிஸ்ட்

புரட்சி வெற்றி பெற முடியும். மறுபக்கத்தில், முன்னரே தயாரிக்கப்பட்ட சூத்திரத்துக்குத் தகுந்தபடி வெவ்வேறு நாடுகளில் புரட்சிகளை நடத்த முடியாது. பொது விதிகள் அல்லது தனித்தன்மையான கூறுகளின் பாத்திரத்தை மிகைப்படுத்துவது தத்துவ ரீதியில் தவறு என்பதுடன் நடைமுறை அரசியல் மட்டத்திலும் ஆபத்தாகும்.

இருபதாம் நூற்றாண்டு முதலாளித்துவத்துக்கு எதிரான புரட்சியில் பல்வேறு வடிவங்களைத் தந்திருக்கிறது. அநேகமாக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் சோஷலிஸ்ட் புரட்சிகள் (ருஷ்யாவில் 1917இல் நடைபெற்ற மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சி), ஒப்பு நோக்கில் குறைவான வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் பாசிஸ்ட் எதிர்ப்புப் புரட்சிகளிலிருந்து வளர்ச்சியடைகின்ற சோஷலிஸ்ட் புரட்சிகள் (உதாரணங்கள்: பல்கேரியா, ஹங்கேரி, போலந்து, ருமேனியா), வளர்ச்சியடையாத அல்லது குறைவான வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் ஏற்படுகின்ற சோஷலிஸ்ட் புரட்சி சோஷலிஸ்ட் நாடுகளின் உதவியுடன் தன்னை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் (உதாரணமாக, கியூபா) ஆகியவை இந்த வடிவங்களாகும். புரட்சிகர நிகழ்வுப் போக்கில் நாம் மேலே குறிப்பிட்டிருக்கின்ற ஒவ்வொரு வடிவமும் மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சியில் முதன்முறையாக வெளிப்பட்ட பொது விதிகளை நிரூபிக்கின்றன. எனினும் ஒவ்வொரு புரட்சியிலும் தனித் தன்மையான கூறுகளும் இருந்தன. சோஷலிஸ்ட் புரட்சிகள் ஏகாதிபத்திய எதிர்ப்புப் புரட்சிகள் அல்லது தேசிய விடுதலைப் புரட்சிகளிலிருந்து வளர்ச்சியடைந்தன என்பது இதற்கு முக்கிய காரணமாகும்.

ஒரு நாட்டில் சோஷலிஸ்ட் மாற்றத்தை ஏற்படுத்து கின்ற பிரத்யேகமான செயல்திட்டத்தைத் தயாரிப் பதற்கு தலைமையான கட்சிகள் புரட்சிகர நிகழ்வுப் போக்கின் தனித் தன்மையான கூறுகளைக் கணக்கி லெடுத்துக் கொள்வது அவசியம். அதே சமயத்தில் எல்லாப் புரட்சிகளையும் ஆள்கின்ற பொது விதிகள் இருக்கின்றன என்பதை அங்கீகரிக்கின்ற பொழுது ஏதாவதொரு நாட்டில் புரட்சி முதலாளித்துவ அமைப்பின் உள்ளுறையான முரண்பாடுகளினால் தூண்டப்படுகின்ற ஒற்றை, உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கின் பகுதியே என்பதையும் அங்கீகரிக்க வேண்டும்; அதைக் குறுகிய தேசியப் பின் னணியில் பார்க்கக் கூடாது. அதனால்தான் புரட்சி வெற்றியடைவதில் பாட்டாளி வர்க்க மற்றும் சோஷ லிஸ்ட் சர்வதேசியவாதம், சோஷலிசத்தை அமைத்துக் கொண்டிருக்கின்ற நாடுகள், மக்களினங்கள், கட்சிகளுக்கு இடையில் ஒருமைப்பாடு மற்றும் பரஸ்பர ஒத்துழைப்பு உறவுகள் விசேஷமான முக்கியத்துவத்தைக் கொண்டிருக் கின்றன.

உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கு முதலாளித்துவ அமைப்பினால் பிரசவிக்கப்படுகின்ற பல்வேறு புரட்சி கள் ஒன்றிணைவதை உள்ளடக்கியிருக்கிறது. அவற்றில் குணாம்ச ரீதியான வேறுபாடுகளும் மாறுபாடுகளும் இருக் கின்றன. முதலாளித்துவ ஆதிக்கத்தில் இருந்த அல்லது இன்னும் இருந்து கொண்டிருக்கின்ற நாடுகளின் அல்லது மக்களினங்களின் சமமில்லாத வளர்ச்சி இதற்குக் காரணமாகும். இன்றைய சகாப்தம் முதலாவதாகவும் முதன்மையாகவும் சோஷலிஸ்ட் புரட்சிகளின், முத லாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு உலக ரீதியான மாற்றத்தின், பல நாடுகளில் இன்றைக்கிருக்கின்ற சோஷலிசம் — அது உலக சோஷலிஸ்ட் அமைப்பாக

வளர்ந்து கொண்டிருக்கிறது — பலமடைந்து முன்னேறு கின்ற சகாப்தம். முதலாளித்துவ நாடுகளிலுள்ள கம் யூனிஸ்ட் இயக்கம் உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக் கின் முக்கியமான பகுதியாகும். இந்த இயக்கம் தொழி லாளி வர்க்கத்தின் பல்வேறு பகுதியினரையும் நகர மற்றும் விவசாய உழைப்பாளிகள், அறிவு ஜீவிகளின் அதிகமான சதவிகிதத்தினரையும் ஈர்த்துக் கொண்டு விரிவடைகிறது, தன் புரட்சிகர சக்தியை அதிகரிக்கிறது. பல நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகளின் வளர்ச்சியும் சமூக-அரசியல் எதார்த்தத்தின் மீது அக்கட்சிகளின் தாக்கம் மேன்மேலும் அதிகரிப்பதும், குறிப்பாக உழைப் பாளர்களின் உரிமைகளைக் குறைக்கின்ற முதலாளி வர்க்கத்தின் தாக்குதலை எதிர்த்து நடைபெறுகின்ற போராட்டத்தில் கம்யூனிஸ்டுகளின் மாபெரும் பங்கும் அதற்குச் சான்றுகளாகும்.

உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கில் தேசிய விடு தலைப் புரட்சிகள் திட்டவட்டமான இடத்தைப் பெற்றிருக்கின்றன. ஒரு பக்கத்தில் ஏகாதிபத்தியத்துக்கும் தனிப்பட்ட நாடுகளில் அதை ஆதரிக்கின்ற சக்திகளுக்கும், மறு பக்கத்தில் தேசிய விடுதலைக்கும் முன்னேற்றத்திற் கும் போராடுகின்ற பெருந்திரளான மக்களுக்கும் இடை யிலுள்ள முரணியல்பு அதற்கு மிகவும் ஆழமான காரண மாகும். தேசிய விடுதலைப் புரட்சிகள் தேசியப் பொரு ளாதார மற்றும் கலாசார முன்னேற்றத்தைத் தடுக்கின்ற காலாவதியான சமூக-பொருளாதார மற்றும் அரசியல் உறவுகளை அகற்றுவதை நோக்கமாகக் கொண்டிருக் கின்றன. இந்த உறவுகள் ஏகாதிபத்திய நாடுகளிலுள்ள முதலாளித்துவக் கட்டமைப்புகளுடன் பின்னிப் பிணைந் திருக்கின்ற அளவில் சார்பு நாடுகளில் நடைபெறுகின்ற புரட்சிகள் உலக முதலாளித்துவ அமைப்பைத் தாக்கு

கின்றன, அதன் மூலம் கம்யூனிஸ்ட் இயக்கத்துக்கு உதவி செய்கின்றன.

இன்றைய சோஷலிசம் மொத்த உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கின் கோட்டையாகவும் பிரதான சக்தியாகவும் இருக்கிறது. இன்று வரலாற்று ரீதியான வளர்ச்சிப் போக்கை இரண்டு—சோஷலிஸ்ட் மற்றும் முதலாளித்துவ—உலக அமைப்புகளுக்கு இடையில் நடைபெறுகின்ற போராட்டம் தீர்மானிக்கிறது. இன்றைய சோஷலிசமே சமாதானம், ஜனநாயகம் மற்றும் சுதந்திர சக்திகளுக்கு மிகவும் நம்பகமான அரண் என்பதைக் கடந்தகால அனுபவம் எடுத்துக் காட்டியிருக்கிறது. உலக சோஷலிசத்தின் பலமே புதிய விடுதலைப் புரட்சிகளின் வெற்றிக்கு உத்தரவாதமாகும்.

## சமூகப் புரட்சியைப் பற்றி பூர்ஷ்வா மற்றும் திருத்தல்வாதக் கருத்துக்கள் குறித்த விமர்சனம்

கடந்த இருபது ஆண்டுகளில் சமூகப் புரட்சியைப் பற்றிய பிரச்சினைகள் குறித்து பூர்ஷ்வா சமூகவியலாளர்கள் மேன்மேலும் அதிகமான அக்கறை காட்டியிருக்கிறார்கள். பூர்ஷ்வா சமூகவியலில் ''புரட்சியின் சமூகவியல்'' அல்லது ''புரட்சி இயல்'' என்னும் பெயர் கொண்ட விசேஷமான துறை கூடத் தோன்றி விட்டது. அது சமூகப் புரட்சியின் தத்துவ மற்றும் அரசியல் அம்சங்களிலும் சமூகப் புரட்சியைப் பற்றிய மார்க்சிய-லெனினியக் கோட்பாட்டை ''மறுத்துக் கூறுவதிலும்'' விசேஷ அக்கறை காட்டுகிறது.

சமூகப் புரட்சி என்பது தற்செயலான நிகழ்வு, அது புறநிலையான காரணங்களால் ஏற்படவில்லை, முற்றிலும் அகநிலையான கூறுகளே அதை ஏற்படுத்துகின்றன என்று

சித்திரிப்பதற்கு பூர்ஷ்வா ''புரட்சி இயலாளர்கள்'' பாடுபடு கிறார்கள். அவர்களுக்குப் புரட்சி எதிர்மறையான நிகழ்வு, அதில் பேரழிவைத் தவிர வேறு ஒன்றுமில்லை, அது சமூக முன்னேற்றத்துக்குத் தடை என்பது அவர் களுடைய கருத்தாகும். பல சமூகவியலாளர்கள் சமூகப் புரட்சியை திடீர்ப் புரட்சிகளுடனும் கலகங்களுடனும் இனங்காணுகிறார்கள். சிலர் அதை யுத்தத்துடன் இனங் காணுகின்ற அளவுக்குக் கூடப் போகிறார்கள். சமீப வருடங்களில் அவர்களில் பலர் சமூகப் புரட்சிக்குப் பதிலாக விஞ்ஞான, தொழில்நுட்ப பிரச்சினையை முன்வைக்கிறார்கள்.

சோஷலிஸ்ட் புரட்சித் தத்துவத்தை ''நிராகரிப்பதும்'', முதலாளித்துவத்தை ஒழித்துப் புதிய சமூகத்தை நிர் மாணிப்பவன் என்ற முறையில் பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுப் பாத்திரத்தை மறுப்பதும் பூர்ஷ்வா சித் தாந்திகளின் வாதத்தில் மிகவும் முக்கியமான இடத்தை வகிக்கின்றன. மார்க்சிய-லெனினிய விமர்சகர்கள் புரட்சித் தத்துவத்தை நேரடியாகவும் மறைமுகமாகவும் திரித்துக் கூறுகிறார்கள். புரட்சித் தத்துவம் என்பது இல்லை, ஒரு பக்கத்தில் மார்க்சும் எங்கெல்சும், மறுபக்கத்தில் லெனினும் முரண்பாடான தொடர் வரிசைக் கருத்துக் களைக் கூறியிருக்கிறார்கள் என்று மற்ற கருத்துக்களோடு சொல்கிறார்கள். இயற்கையான வரலாற்று நிகழ்வுப் போக்கு என்ற முறையில் புரட்சி மிகவும் வளர்ச்சி யடைந்த பொருளாதாரமும் சமூக-அரசியல் உறவுகளும் உள்ள நாடுகளில் மட்டுமே ஏற்பட முடியும் என்று மார்க்ஸ் கருதியதாகக் கம்யூனிஸ்ட் எதிர்ப்பாளர்கள் கூறுகிறார்கள். புரட்சியைப் பற்றி மார்க்சின் இந்த அணுகுமுறையை லெனின் புறக்கணித்தார்; சமூகப் புரட்சி எவ்விதமான பொருளாதார மற்றும் சமூக

நிலைமைகளிலிருந்து சுதந்திரமானது, ஆகவே அது எந்த நாட்டிலும் — மிகவும் பின்தங்கிய நாட்டில் கூட — ஏற்பட முடியும் என்று அவர் கருதினார் என்று இவர்கள் கூறுகிறார்கள். எனவே சமூகப் புரட்சி இக்கால சமூக வளர்ச்சியின் விதி அல்ல, அது சதியின் விளைவு என்று வாதிடுகிறார்கள்.

சோஷலிஸ்ட் புரட்சிக்காகச் செய்யப்படுகின்ற கடுமையான முயற்சிகளைக் கருத்தில் கொண்டு சிந்தித்தால் அதை நியாயப்படுத்த முடியாது; ஏனென்றால் அதில் தியாகம் அதிகமாகவும் பலன்கள் குறைவாகவும் இருக்கின்றன என்று பூர்ஷ்வா தத்துவாசிரியர்கள் கூறுகிறார்கள்.

அதைப் போலவே சோஷலிஸ்ட் புரட்சியைப் பற்றிய மார்க்சிய-லெனினியத் தத்துவத்தின் சர்வதேசப் பொருத்தத்தையும் பூர்ஷ்வா சமூகவியலாளர்கள் மறுக்கிறார்கள்; அது வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளுக்குப் பொருந்தவில்லை என்று அவர்கள் வாதிடுகிறார்கள்.

சோஷலிஸ்ட் புரட்சியைப் பற்றிய மார்க்சிய-லெனினியத் தத்துவத்தை வலதுசாரி சோஷலிஸ்டுகளும் தாக்குகிறார்கள். இவர்கள் ''ஜனநாயக சோஷலிசம்'' என்று சொல்லப்படுவது தங்களுடைய முடிவான இலட்சியம் என்று அறிவித்திருப்பவர்கள், வர்க்கப் போராட்டமும் புரட்சியும் இல்லாமல் சீர்திருத்தம் மூலமே அதை அடைவதற்குத் திட்டமிடுகிறார்கள், முதலாளித்துவம் தானாகவே சோஷலிசமாக மாறும் என்று கற்பனை செய்கிறார்கள். இன்றைய வரலாற்றில் தொழிலாளி வர்க்கத்துக்குத் தலைமையான பாத்திரம் கிடையாது, அறிவு ஜீவிகள் அப்பணியை நிறைவேற்றுகிறார்கள் என்று வலதுசாரி சோஷலிஸ்ட் தத்துவாசிரியர்களும் அரசியல் வாதிகளும் கூறுகிறார்கள்.

திருத்தல்வாதிகளின் அணுகுமுறைகளும் சாராம்சத்

தில் சமூக சீர்திருத்தவாதிகளின் அணுகுமுறைகளை ஒத்திருக்கின்றன. அவர்கள் தம்மை மார்க்சியவாதிகள் என்று சொல்லிக் கொண்டாலும் உண்மையில் புரட்சித் தத்துவத்தின் அடிப்படைகளை நிராகரிக்கிறார்கள். மேலும் அவர்கள் முதலாளித்துவ சமூகத்தில் தீவிரமான புரட்சிகர மாற்றங்களின் அவசியத்தை நிராகரிக்கிறார் கள். பூர்ஷ்வா அரசு இயந்திரத்தை அடியோடு அழித்து விடக் கூடாது, பூர்ஷ்வா ஜனநாயகத்துடன் சேர்த்து அதைப் புதிய நிலைமைகளுக்குப் பயன்படுத்த வேண்டும் என்று அவர்கள் கூறுகிறார்கள். முதலாளித்துவ சமூகத் தில் எந்த வலதுசாரி சோஷலிஸ்ட் அரசாங்கமோ அல்லது சோஷலிஸ்ட் கட்சியோ இது வரை இதைச் சாதிக்கவில்லை என்ற உண்மையை அவர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை.

மார்க்சிய-லெனினியத்தைத் ''திருத்த விரும்புபவர்கள்'' புரட்சியையும் சோஷலிசத்தையும் பற்றி எழுதினாலும் அவர்கள் புரட்சிகளின் அனுபவத்தையும் சோவியத் யூனியனிலும் மற்றும் பல நாடுகளிலும் இருக்கின்ற சோஷலிசத்தின் அனுபவத்தையும் புறக்கணிக்கிறார்கள். சோஷலிசத்தை அடைவதற்கு ''மூன்றாவது பாதை'' இருக்கிறது என்று அவர்கள் கூறுகிறார்கள். இது உண்மையில் சீர்திருத்தவாத பாதையே; முதலாளித்துவ சமூகம் படிப்படியாக சோஷலிஸ்ட் சமூகமாக வளர்ச்சி அடையும் என்று இது அனுமானிக்கிறது. அவர்கள் மார்க்சிய-லெனினியக் கட்சிகளின் தலைமைப் பாத் திரத்தை அங்கீகரிப்பதில்லை, புரட்சிகர இயக்கத்துக்குப் புரட்சிகரமான தத்துவம் அவசியம் என்பதை நிராகரிக் கிறார்கள்.

இந்த ரகத்தைச் சேர்ந்த தத்துவாசிரியர்களும் அரசி யல்வாதிகளும் தாங்கள் மார்க்சியத்துக்குப் ''புதிய''

பங்களிப்புச் செய்திருப்பதாகக் கருதிக் கொண்டு, இன்றுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் ''சித்தாந்தக் கட்சிகள் அல்ல'' என்கிறார்கள். அவர்கள் ''சித்தாந்தப் பன்மை வாதத்தை'', கம்யூனிஸ்ட் கட்சிகள் சித்தாந்தம், அதாவது தொழிலாளி வர்க்கத்தின் அடிப்படையான நலன்களை எடுத்துரைக்கின்ற கருத்துக்களின் அமைப்பு இல்லாமல் இருப்பதை ஆதரிக்கிறார்கள்.

உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தின் நடைமுறையும் வெற்றியடைந்த சோஷலிஸ்ட் புரட்சிகளின் அனுபவமும் இத்தகைய முடிவுகளைச் செய்வதற்கு இடமளிக்கின்றனவா என்னும் கேள்வி இங்கே எழுகின்றது. இல்லை என்பதே அதற்கு பதிலாகும். சோஷலிசத்துக்கான போராட்டத்தின் மெய்யான வரலாற்று அனுபவம் சூக்குமமான எதிர்மறை வாதத்தைக் கொண்ட போலிக் கருத்துரைகளினால் சரிபார்க்கப்படுகிறது. இந்தக் குதர்க்கத்தின்படி பார்த்தால், மார்க்சிய-லெனினியத்தால் முன்வைக்கப்பட்டு, இருக்கின்ற சோஷலிசத்தின் நடைமுறையினால் நிரூபிக்கப்படுகின்ற எதுவுமே நிராகரிக்கப்பட வேண்டும். எனினும் புரட்சிகர தத்துவத்தை நிராகரித்தால் அது விரைவாகவோ அல்லது தாமதமாகவோ அரசியலில் தடுமாற்றத்தை ஏற்படுத்தும், அது தொழிலாளி வர்க்கத்துக்கும் ஒரு குறிப்பிட்ட நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் மாபெரும் ஆபத்து என்பதைக் கடந்தகால வரலாறு எடுத்துக் காட்டுகிறது.

அத்தியாயம் பதினொன்று

# சமூக முன்னேற்றம்

## சமூக முன்னேற்றம் என்னும் கருத்து

மக்களினங்கள் மற்றும் அரசுகளின் வாழ்க்கையில் ஏற்பட்டு வருகின்ற தீவிரமான மாற்றங்களை அநேகமாகப் புறக்கணிக்க இயலாது. நம் உலகம் அடிப்படையான மாற்றத்துக்கு ஆளாகியிருப்பது வெளிப்படையாகும். இப்போது வளர்ச்சியில் எல்லாக் கண்டங்களும் பங்கெடுத்து வருகின்றன. வரலாறு இன்று வளர்ச்சியடைகின்ற வேகத்தில் ஒருபோதும் வளர்ச்சியடையவில்லை. மாற்றம் என்னும் புயற்காற்று பொருளாதாரம், பொறியியல், அரசியல், சமூக உறவுகள், ஆன்மீக கலாசாரம், வாழ்க்கை முறை ஆகிய மனித வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் வீசிக் கொண்டிருக்கிறது. இத்தகைய சூழலில் மனித சமூகத்தின் எதிர்காலத்தைப் பற்றிய பிரச்சினைகள் ஆழமான கவனத்தைப் பெறுவது இயற்கையே. ஆகவே வரலாற்று நிகழ்வுப் போக்கின் பொதுத் திசை வழி என்ன என்பது

சமூக விஞ்ஞானம் எடுத்துக் கொள்ள வேண்டிய மிகவும் அவசரமான பிரச்சினைகளில் ஒன்றாக இருக் கிறது. மனித சமூகம் எந்தத் திசையில் போய்க் கொண்டிருக்கிறது? அது சமூக வாழ்க்கையின் மேன் மேலும் முன்னேற்றமான, அறிவார்ந்த வடிவங்களை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறதா அல்லது சீரழிவை நோக்கிப் பின்னால் சரிந்து கொண்டிருக்கிறதா? எல்லோருக்கும் சுதந்திரமும் சர்வாம்ச வளர்ச்சியும் அளிக்கின்ற புதிய சமூகம் நிகழ்கால சமூகத்தில் ஏற்கெனவே உருவாகிக் கொண்டிருக்கிறதா? அல்லது சில பூர்ஷ்வா தத்துவாசிரியர்கள் கூறுவதைப் போல எதிர்காலத்தில் மனித சமூகத்துக்கு அதிர்ச்சி ஏற்பட்டு அது மாபெரும் நெருக்கடியில் சிக்கப் போகிறதா? சுருக்கமாகச் சொல்வதென்றால் வரலாறு முன்னேறிக் கொண்டிருக்கிறதா அல்லது முன்னேற்றம் என்பது இயற்கைக்குப் புறம்பானதா? சமூக முன்னேற்றம் என்றால் என்ன?

இக்கேள்விகள் எல்லாவற்றுக்கும் சரியான பதில்களை வரலாற்றுப் பொருள்முதல்வாத அணுகுமுறையின் மூல மாக மட்டுமே அடைய முடியும். வரலாற்று வளர்ச் சியைப் பற்றி எல்லா ரகங்களையும் சேர்ந்த பூர்ஷ்வா பிற்போக்கான கற்பனாவாதக் கருத்துகளுக்கு எதிராக சமூக முன்னேற்றத்தின் புறநிலையான, முறைப்படியான தன்மையைப் பற்றி விஞ்ஞான ரீதியில் நிரூபிக்கப்பட்ட முடிவை மார்க்சிய-லெனினியம் முன்வைக்கிறது. உலக ரீதியாக முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு நடைபெறுகின்ற புரட்சிகரமான மாற்றத்தில்தான் நம் காலத்திய சமூக முன்னேற்றத்தின் சாரம் அடங்கி யிருக்கிறது என்பதை மெய்யான வரலாற்று அனுபவத்தின் மூலம் வரலாற்றுப் பொருள்முதல்வாதம் நிரூபிக்கிறது.

மார்க்சியம் தோன்றுவதற்கு நெடுங்காலத்துக்கு முன்பே மனித இயற்கை மற்றும் சமூகத்தை மேம்படுத்துகின்ற கருத்து வெளியிடப்பட்டிருக்கிறது. மறுமலர்ச்சி யுகத்தைச் சேர்ந்த முக்கியமான சிந்தனையாளர்கள் மனித குலத்தின் ஒளிமயமான எதிர்காலத்தைப் பற்றி எழுதியதுடன் மரணத்துக்குப் பின்னர் இருக்கின்ற சொர்க்கத்தைப் பற்றிய சமயக் கற்பனைகளை உறுதியாக எதிர்த்தார்கள். 17வது மற்றும் 18வது நூற்றாண்டுகளைச் சேர்ந்த அறிவியக்கவாதிகள் எடுத்துரைத்த முன்னேற்றம், பகுத்தறிவில் நம்பிக்கை, எதிர்காலத்தில் ஏற்படப் போகின்ற நீதியான சமூகம் ஆகிய கருத்துக்கள் இன்னும் உறுதியாக, நம்பக் கூடியவையாக இருந்தன. அன்றைய முற்போக்கான முதலாளி வர்க்கத்தின் நலன்களை எடுத்துரைத்த இத்தத்துவஞானிகள் முன்னேற்றம் என்ற கருத்தை நிறுவ முயற்சி செய்தார்கள். அவர்களுடைய கருத்துக்கள் அன்று வளர்ச்சியடைந்து கொண்டிருந்த முதலாளி வர்க்கத்தினருடைய நம்பிக்கை, சமூகத்தின் நிலப்பிரபுத்துவத் தூண்களை அகற்ற வேண்டும் என்னும் ஆர்வம், சுதந்திரம், சமத்துவம், நீதி வெற்றியடையும் என்னும் நம்பிக்கை ஆகியவற்றைப் பிரதிபலித்தன.

பிரெஞ்சு சிந்தனையாளரான ருஸ்ஸோ சமூக முன்னேற்றத்துக்குரிய வாய்ப்பையும் அவசியத்தையும் மனித இயற்கையில் உள்ளுறையாக இருக்கின்ற, தன்னை அபிவிருத்தி செய்துகொள்கின்ற மனிதனுடைய திறமையுடன் இணைத்தார். இத்திறமை அநேகமாக எல்லையற்றது; அது மனிதனுடைய முதிர்ச்சியுடன் சேர்ந்து அவனைப் பூர்விக நிலையிலிருந்து படிப்படியாக மேலே கொண்டு வருகிறது, அது அறிவையும் பிரமைகளையும், தீய பண்புகளையும் நல்ல பண்புகளையும்

தூண்டுகிறது, அது மனிதனைத் தன் விஷயத்திலும் இயற்கை மீதும் ஒரு கொடுங்கோலனாக மாற்றுகிறது என்று ருஸ்ஸோ வலியுறுத்தினார்.

அவர் மனித சமூகத்தின் முன்னேற்றத்தை மனித னுடைய பகுத்தறிவின் முன்னேற்றத்துடன் இணைத்தார். உலோகத்தைப் பண்படுத்துதல், நிலத்தில் பயிரிடுதல் என்னும் இரண்டு கலைகள் கண்டுபிடிக்கப்பட்ட பொழுது மாபெரும் மாற்றம் ஏற்பட்டது என்று அவர் கருதினார்.

மற்றொரு பிரெஞ்சு தத்துவாசிரியரான கோண் டொர்ஸே — மனிதனுடைய அறிவின் முன்னேற்றத்தைப் பற்றிய வரலாற்றுச் சித்திரத்தின் உருவரை என்னும் புத்தகத்தின் ஆசிரியர் — உலகத்தை அறிவதற்கு, அறிந்த வற்றில் அடிப்படையான, முக்கியமானவற்றை அங்கீ கரிப்பதற்கு, தக்க வைத்துக்கொள்வதற்கு, இனங் காணுவதற்கு, இணைப்பதற்கு இதரவற்றுக்கு மனித னுடைய இயற்கையான ஆற்றலின் வளர்ச்சியே முன் னேற்றம் என்று கூறினார். ருஸ்ஸோவைப் போல அவரும் சமூக முன்னேற்றத்தை மனித உணர்வு, பகுத்தறிவு மற்றும் அறியும் திறமையுடன் இணைத்தார். மனித சமூகத்தின் நிலைமையில் அபிவிருத்தியை அவர் தேசிய இனங்களுக்கு இடையில் ஏற்றத்தாழ்வான நிலையை அகற்றுவதுடனும், ஒரு நாட்டிற்குள் பல்வேறு வர்க்கங்களுக்கு இடையில் சமத்துவத்தின் முன்னேற்றத் துடனும், மனிதனுடைய மெய்யான முன்னேற்றத்துட னும் இணைத்தார்.

ஜெர்மானியத் தத்துவஞானியான ஹெகல் முன் னேற்றத்தைப் புரிந்து கொள்வதில் தனக்கு முந்தியவர் களிடமிருந்து வெகு தூரம் முன்பாக இருந்தார். ஹெகல் மனித சமூக முன்னேற்றத்தின் புறநிலையான

தன்மையை நிரூபிக்க, அதன் உள்ளடக்கத்தை நிறுவ முற்பட்டார். சமூக வளர்ச்சி பல்தொகுதியானது, முரண்பாடானது என்று அவர் வலியுறுத்தினார்; உலக வரலாறு மகிழ்ச்சியான களம் அல்ல என்றார். உலக வரலாற்றில் மகிழ்ச்சி நிறைந்த கட்டங்கள் வெற்றுப் பக்கங்களே; ஏனென்றால் அவை மனிதர்கள் இணக்கமாக வாழ்ந்த கட்டங்கள், அங்கே எதிர்நிலைகளின் போராட்டம் நடைபெறவில்லை.*

கருத்துமுதல்வாதத் தத்துவஞானியான ஹெகல் முன்னேற்றத்தை உணர்வின் மண்டலத்தில் எதிர்நிலைகளின் போராட்டத்துடன் தொடர்புபடுத்தி அது உலக ஆன்மாவின் (முடிவான நிலையில் தெய்விக ஆன்மாவின்) சுயவளர்ச்சி என்று வரையறுத்தார். ஹெகல் முன்னேற்றத்தை ஆதரித்த போதிலும் அதை சில வரலாற்று எல்லைகளுக்குள் அடைத்தார். அவர் ஜெர்மானியக் கிறிஸ்துவ உலகத்தை, பிரஷ்ய முடியாட்சியை வரலாற்று முன்னேற்றத்தின் சிகரமாகக் கருதினார்.

அப்பொழுதுதான் தோன்றி வளர்ச்சியடைந்து கொண்டிருந்த முதலாளித்துவத்தின் சித்தாந்திகள் முன்னேற்றத்தில் நம்பிக்கை வைத்து, அதற்காக அறைகூவினார்கள்; அதைப் பகுத்தறிவு, விஞ்ஞானம், கல்வி ஆகியவற்றின் முன்னேற்றத்துடன் இணைப்பதன் மூலம் அதன் அவசியத்தை நிலைநாட்ட முற்பட்டார்கள்; ஆனால் 19ம் நூற்றாண்டு மற்றும் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தைச் சேர்ந்த பூர்ஷ்வா தத்துவாசிரியர்கள் இதற்கு எதிரான கருத்தைக் கூறினார்கள். முதலாளித்துவ வளர்ச்சியின் பெரும் பகுதி அதற்குள் முடிந்துவிட்டது;

---

* G. W. F. Hegel, *Vorlesungen über die Philosophie der Geschichte*, Fr. Frommanne Verlag, Stuttgart, 1928, S. 56.

உலகம் ஏகாதிபத்தியம் மற்றும் பாட்டாளி வர்க்கப் புரட்சிகளின் சகாப்தத்திற்குள் நுழைந்தது. அது பூர்ஷ்வா சமூக அமைப்புக்கு மெய்யான ஆபத்தாக இருந்தது. சுரண்டும் வர்க்கம் உயிருடன் நீடிப்பதற்கு ஆபத்து ஏற்பட்டவுடன் அந்த வர்க்கத்தின் சித்தாந்திகள் (வரலாற்றில் பல தடவை நடைபெற்றிருப்பதைப் போல) அதை மனித நாகரிகத்தின் நெருக்கடி என்று வர்ணித்தார்கள். முன்னேற்றக் கருத்துக்களுக்குப் பதிலாக சமூக அவநம்பிக்கைவாதம் குடிபுகுந்தது. சமூக முன்னேற்றத்தின் வடிவங்களை முன்னறிவித்த நிலை மாறி வரப்போகின்ற நெருக்கடி என்று சொல்லப் பட்டதைப் பற்றி ஓலங்கள் நிறைந்தன.

அன்று வரலாற்றுக் களத்துக்குள் நுழைந்த பாட்டாளி வர்க்கம் மனிதனை மனிதன் சுரண்டுவதை எதிர்க்கும் போராட்டத்தைத் தொடங்கி, முன்னேற்றத்துக்காகப் போராடுகின்ற வரலாற்றுக் கடமையை மேற்கொண்டது. பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் தத்துவாசிரியர்கள் முன்னேற்றத்தைப் பற்றி முந்திய சிந்தனையாளர்களின் கருத்துக்களை விமர்சன ஆய்வு செய்து அவற்றைப் புதிய, விஞ்ஞான அடிப்படையில் தர்க்க ரீதியான தத்துவமாக வளர்த்தார்கள்.

சமூக முன்னேற்றத்தைப் பற்றி மார்க்சியத்துக்கு முந்திய அனைத்துத் தத்துவங்களிலும் இருக்கின்ற முக்கியமான குறை அவற்றின் சூக்குமமான கருத்துமுதல் வாதத் தன்மையாகும் என்று லெனின் கருதினார். சர்வாம்ச அங்கீகரிப்பிற்காகப் போட்டியிடும் இத்தத்துவங்களால் சமுதாய வளர்ச்சியின் திட்டவட்டமான நிகழ்ச்சிப் போக்கை விளக்க இயலவில்லை. ''மார்க்ஸ், பொதுவான சமுதாயம், பொதுவான முன்னேற்றம் பற்றிய எல்லா வாதங்களையும் ஒதுக்கி வைத்துவிட்டு,

முதலாளித்துவம் எனும் ஒரு திட்டவட்டமான சமுதாயத்தைப் பற்றிய, ஒரு திட்டவட்டமான முன்னேற்றத்தைப் பற்றிய விஞ்ஞானப் பகுப்பாய்வைத் தந்தார் என்பது தான். இந்த விஷயத்தில் மார்க்ஸ் செய்த மாபெரும் செயலாகும்.'' *

முன்னேற்றத்தைப் பற்றிய மார்க்சிய-லெனினியக் கருத்து, வரலாற்றைப் பற்றிய இயக்கவியல் பொருள் முதல்வாதக் கருத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. சமூக முன்னேற்றம் என்பது கீழ் நிலையான வடிவங்களிலிருந்து உயர்நிலையான வடிவங்களை நோக்கிய மனித சமூகத்தின் முறைப்படியான, முன்னேறிச் செல்கின்ற இயக்கமாகும். சமூக முன்னேற்றம் என்னும் கருத்து எந்த சமூக அமைப்பையும் நிரந்தரமாக்குவதற்குச் செய்யப்படுகின்ற எவ்விதமான முயற்சியையும் நிராகரிப்பதைக் கோட்பாட்டளவில் குறிக்கிறது. மனித சமூகம் மாற்றமடைந்து வளர்ச்சியடைகிறது என்ற உண்மையை இக்கருத்து அங்கீகரிக்கிறது, வரலாறு என்பது சாராம்சத்தில் சமூக வளர்ச்சியின் தகுதிநிலைப்படுத்தப்பட்ட நிகழ்வுப் போக்கு என்று கருதுகிறது.

மனிதன் சமூக வாழ்க்கையின் உயர் வடிவங்களுக்கு முன்னேறிச் செல்வதற்கு முதலாவதாக, பகுத்தறிவின் சுயாட்சியான நடவடிக்கையைக் காரணமாகக் கூற முடியாது. முன்னேற்றம் என்பது பெருந்திரளான மக்கள் பிரதானமாக பொருளாயத உற்பத்தித் துறையில் (பொருளாதாரத்தில்) மற்றும் அதை அடிப்படையாகக் கொண்டு ஆன்மீக கலாசாரத் துறையில் செய்கின்ற படைப்பு முயற்சியின் புறநிலையான, வரலாற்று

* V. I. Lenin, "What the 'Friends of the People' Are and How They Fight the Social-Democrats", *Collected Works*, Vol. 1, p. 145.

ரீதியான விளைவு ஆகும். பொருள்முதல்வாதம் மனித அறிவின் சக்தியை மறுக்கவில்லை; அறிவின் சக்தி இல்லாமல் எந்தத் துறையிலும் படைப்பு முயற்சி சாத்தியமல்ல. அறிவு என்பது வரலாற்று ரீதியான வளர்ச்சியின் விளைவு, அதன் உள்ளடக்கம் வெளியுலகத்தை, எதார்த்த உலகத்தைப் பிரதிபலிக்கிறது என்று பொருள்முதல்வாத விஞ்ஞானம் வலியுறுத்துகிறது.

சமூக முன்னேற்றத்தின் சாரம் உற்பத்தி முறையில் மாற்றத்தை, ஒரு சமூக அமைப்பிலிருந்து மற்றொன்றுக்கான மாற்றத்தை உள்ளடக்கியிருக்கிறது.

மக்கள் தங்களுடைய உற்பத்தி நடவடிக்கையில் புறச்சூழலைத் தொடர்ச்சியாக, மேன்மேலும் அதிகரிக்கின்ற அளவில் மாற்றுகிறார்கள், அதைத் தங்களுடைய தேவைகளுக்குத் தகுந்தவாறு மாற்றியமைக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய ஆர்வங்களைத் திருப்தி செய்வதற்காக புறச்சூழலை மாற்றுகிறார்கள், இயற்கையை சுவீகரித்துக் கொள்கின்ற முறைகளை அபிவிருத்தி செய்கிறார்கள், தங்களுடைய பொருளாயதக் கலாசாரத்தை வளர்க்கிறார்கள்.

மக்கள் இயற்கையை மாற்றியமைத்து, உழைப்புக் கருவிகளையும் உற்பத்திச் சாதனங்களையும் அபிவிருத்தி செய்கின்ற பொழுது தங்களை மாற்றிக் கொண்டு தம்முடைய ஆற்றல்களை வளர்க்கிறார்கள். அவர்கள் கலாசாரத்தை அபிவிருத்தி செய்து சில தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற பொழுது புதிய தேவைகள் தோன்றுவதற்குரிய, ஆகவே புதிய கலாசார மதிப்புகளை சுவீகரித்துக் கொள்வதற்குரிய பொருளாயத மற்றும் ஆன்மீக முன்நிபந்தனைகளைப் படைக்கிறார்கள். அதன் விளைவாக மனிதனுடைய தேவைகளைப் பூர்த்தி செய்தல் என்ற தொடர்ச்சியான சங்கிலி ஏற்படுகிறது;

ஆகவே கலாசார முன்னேற்றம் என்பது இயற்கையின் மீது ஆட்சி செய்கின்ற முறை எனலாம்.

சமூக முன்னேற்றம் என்பது பொருளாயத, பொருளாதாரத் துறைகளுடன் நின்று விடுவதில்லை என்பது இயற்கையே. மனித சமூகம் மேன்மேலும் சிக்கலான, மிகவும் வேகமாக வளர்ச்சியடைகின்ற சமூக மற்றும் அரசியல் கட்டமைப்புகளுக்கு, சமூக உணர்வு, மொத்தத்தில் ஆன்மீக கலாசாரத்தின் உயர்வான மற்றும் அதிக வளமுள்ள வரலாற்று ரகங்களுக்கு முன்னேறிச் செல்வது அதன் பிரிக்க முடியாத கூறுகளில் ஒன்றாகும். ''நாகரிகம்'' என்னும் பிரபலமான சொற்றொடரை உபயோகித்து, சமூக முன்னேற்றம் என்பது நாகரிகத்தின் உயர்நிலை வடிவங்களை நோக்கிய மனித சமூகத்தின் முன்னேற்றம் என்று கூறலாம். மனித சமூகம் எவ்வளவு உயர்வாக மேலே செல்கிறதோ அந்த அளவுக்கு பொருளாயத மற்றும் ஆன்மீக நடவடிக்கையின் அகப்பொருள் என்ற முறையில் மனிதனுடைய படைப்புத் திறனும் சர்வாம்சத் தன்மையும் முழுமையாக வெளிப் படுகின்றன.

பூர்விகமான கற்கருவிகளிலிருந்து கம்ப்யூட்டர்கள், விண்வெளிக் கப்பல்களுக்கு, சுற்றுப்புற உலகத்தைப் பற்றிய கட்டுக் கதைகளிலிருந்து விஞ்ஞான சிந்தனையின் சிகரத்துக்கு, இரத்த உறவுமுறை மற்றும் வாழ்க்கைப் போராட்டத்தின் உடனடியான இணைப்புகளை அடிப் ப்படையாகக் கொண்ட தொடர்பின் தொன்மையான வடிவங்களிலிருந்து தனிப்பட்ட நபர்களுக்கு இடையில், கூட்டு அமைப்புகளுக்குள், கூட்டு அமைப்புகளுக்கு இடையில், பல்விதமான வர்க்க, தேசிய, சர்வதேசிய உறவுகளுக்கு, தன்னுடைய வாழ்க்கையை நிர்ணயித்த இயற்கைச் சக்திகளின் கடலில் துளி போலவிருந்த

பூர்விக மனிதனிலிருந்து இன்றைய சர்வவல்லமையுள்ள, அறிவு மிக்க பிறவியாகிய மனிதனுக்கு — இப்படி மனித சமூகம் முன்னேறி வந்திருக்கிறது.

வரலாற்றுப் பொருள்முதல்வாதம் சமூக முன்னேற்றத்தின் ஏணிப்படிகளை சமூக-பொருளாதார அமைப்புகள் என்று இனங்காணுகிறது. விஞ்ஞானம் அடுத்தடுத்து ஏற்பட்டிருக்கின்ற அமைப்புகளைக் கொண்டு வளர்ச்சிக் கட்டங்களை முடிவு செய்கிறது. உலக வரலாற்றைத் தனித்தனிக் கட்டங்களாகப் பிரிப்பதற்குப் புறநிலையான விதிகள் அவை மட்டுமே.

வெவ்வேறு கட்டங்களில் வாழ்ந்த பல தலைமுறைகளைச் சேர்ந்த பல கோடிக்கணக்கான மக்களின் முயற்சிகள் எனப்படும் எண்ணற்ற சிறு ஆறுகள் ஒன்று சேர்ந்து உருவாக்குகின்ற வரலாறு என்னும் சக்திவாய்ந்த நதி முன்னேற்றமாகும். வேகப்படுத்தல் அதன் பொது விதியாகும்.

சில சமயங்களில் — சில சகாப்தங்கள் முழுவதிலும் கூட — சமூகம் மெதுவாக முன்னேறியது அல்லது முன்னேற்றம் அடையவில்லை என்பது நமக்குத் தெரியும். எனினும் குறிப்பிட்ட சமயத்தில் ஏற்படுகின்ற பின்னடைவு தொடர்ச்சியான முன்னேற்றம் எனப்படுகின்ற மனித சமூகத்தின் பொதுவான வரலாற்றுப் போக்கை மாற்றவில்லை. பூர்விக கூட்டு வாழ்க்கை, அடிமையுடைமை மற்றும் கணிசமான அளவுக்கு நிலப்பிரபுத்துவ சமூகங்களில் முன்னேற்றத்தின் குறைவான வளர்ச்சி விகிதம் குறியடையாளமாக இருந்தது. பல ஊழிக் காலமாக மனிதன் சக்தியின் ஒரே விதமான ஆதாரங்களை (சுமை இழுக்கும் மாடு, காற்று) நம்பியிருந்தான். முக்கியமான ஒரு கண்டுபிடிப்பு அல்லது அபிவிருத்தி கூட இல்லாமல் நூற்றாண்டுகள் கழிந்தன. முதலாளித்

துவம் வளர்ச்சி விகிதத்தை, எல்லாவற்றுக்கும் மேலாக தொழில்துறை வளர்ச்சியை மிகவும் அதிகப்படுத்தியது. தொழில்துறையின் வேகமான வளர்ச்சியை நகர மக்கள் தொகையின் பிரமிக்கவைக்கின்ற வளர்ச்சி எடுத்துக்காட்டுகிறது.

முன்னேற்றம் தற்பொழுது மிகவும் வேகமாக நடைபெறுகிறது. சோஷலிஸ்ட் மற்றும் தேசிய விடுதலைப் புரட்சிகள் குறுகிய கால அளவில் மாபெரும் சமூக மாற்றங்களை ஏற்படுத்தின. உலகம் ஒரு தலைமுறையின் வாழ்க்கைக்குள்ளாக மிகவும் மாறிவிட்டது: உலக சோஷலிஸ்ட் அமைப்பு ஏற்பட்டிருக்கிறது, காலனி யாதிக்கம் வீழ்ச்சியடைந்து விட்டது, பல நாடுகளும் மக்களினங்களும் சுதந்திரமான வளர்ச்சிப் பாதையில் முன்னேறிக் கொண்டிருக்கின்றன.

## முன்னேற்றத்தின் புறநிலை அளவுகோல்

சமூக முன்னேற்றத்தை அறிவு சார்ந்த வளர்ச்சி, ஒழுக்க வளர்ச்சி, தொழில்நுட்ப முன்னேற்றம், மக்கள் நலம், கலை வளர்ச்சி, கலாசார வளர்ச்சி போன்ற பல்வேறு கோணங்களில் முடிவு செய்ய இயலும். இக்கூறுகளில் ஒவ்வொன்றும் சமூக வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் அடைந்த முன்னேற்றத்தைக் குறிக்கிறது என்பது நிச்சயம். இவற்றில் சமூக வளர்ச்சியைப் புறநிலையாக நிர்ணயிக்கின்ற குறியீடு (அளவு கோல்) எது?

சமூக வாழ்க்கையின் அடிப்படையான, நிர்ணயிக்கின்ற துறையாகப் பொருளாயத உற்பத்தி இருக்கின்றபடியால் சமூக முன்னேற்றத்தின் புறநிலையான குறியீடு பொருளாதார வளர்ச்சியாகும். செய்யப்பட்ட பொருள்கள்

அல்ல, அவை எப்படிச் செய்யப்பட்டன என்பதே வெவ்வேறு வரலாற்று சகாப்தங்களைப் பிரித்துக் காண்பதற்கு உதவி செய்கிறது என்று மார்க்ஸ் கூறினார்.* உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியே சமூக முன்னேற்றத்தை மதிப்பிடுகின்ற உரைகல் என்று லெனின் கூறினார்.** சோஷலிஸ்ட் புரட்சியை நிறைவேற்றியுள்ள நாடுகளின் சோஷலிச நிர்மாணச் செயல்திட்டங்கள் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி வகிக்கின்ற அடிப்படையான பாத்திரத்தைப் பற்றிய தத்துவார்த்த முடிவைக் கணக்கிலெடுத்துக் கொள்கின்றன.

சமூக முன்னேற்றத்தின் பொது விதியை வரையறுக்கின்ற பொழுது உற்பத்திச் சக்திகள் குறிப்பிட்ட உற்பத்தி உறவுகளின் சுற்றுவட்டத்துக்குள் எப்பொழுதும் வளர்ச்சி அடைகின்றன, இவ்வுறவுகள் மக்களுடைய பொருளாயத நடவடிக்கையின் அவசியமான வடிவங்களாகவும் மற்ற எல்லா சமூக உறவுகளின் அடிப்படையாகவும் இருக்கின்றன என்பதைக் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும். மேலும் ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டத்தில் உற்பத்தி உறவுகளின் தன்மை முக்கியமான உற்பத்திச் சக்தியாகிய மனிதனுடைய வளர்ச்சி உள்பட உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியின் நிலை மற்றும் திசை வழியை எடுத்துக்காட்டுகிறது என்பதைக் குறித்துக் கொள்வது முக்கியம். உற்பத்திச் சக்திகள் எப்படி உபயோகிக்கப்படுகின்றன, உழைப்பு செலவிடப் படுவது யாருடைய நலன்களுக்குப் பயன்படுகிறது,

---

* Karl Marx, *Capital,* Vol. I, p. 175.

** V. I. Lenin, "Eighteenth Congress of the R. C. P. (B.), March 8—16, 1921. Summing-up Speech on the Tax in Kind, March 15", *Collected Works,* Vol. 32, p. 235.

இந்த உழைப்புச் செலவுக்கும் பெருந்திரளான மக்களுக்கும் உள்ள உறவு என்ன என்பதை உற்பத்தி உறவுகள் நிர்ணயிக்கின்றன என்பது எல்லோரும் அறிந்ததே. அதன் காரணமாகவே உற்பத்தி உறவுகளின் பிரத்யேக மான வரலாற்று வடிவங்கள் ஒரு நாட்டின் வளர்ச்சி தரத்தை மற்றொரு நாட்டின் வளர்ச்சி தரத்திலிருந்து, ஒரு வரலாற்றுச் சகாப்தத்தை மற்றொன்றிலிருந்து வேறு படுத்திப் பார்ப்பதற்கு நமக்கு உதவுகின்ற புறநிலையான அளவுகோலாக இருக்கின்றன.* ஆகவே ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் உற்பத்தி உறவுகளின் தன்மை மற்றும் நிலை வரலாற்று முன்னேற்றத்தின் புறநிலை அளவுகோலில் முக்கியத்துவமுடைய பகுதியாக இருக்கிறது.

உற்பத்திச் சக்திகளின் நிலை மற்றும் அதற்குத் தகுந்த உற்பத்தி உறவுகளின் தன்மை மனித சுதந் திரத்தின் முன்னேற்றத்தில் வெளிப்படுகிறது. பொரு ளாதார சுதந்திரம், அரசியல் சுதந்திரம், படைப்புச் சுதந்திரம், மனச்சாட்சிச் சுதந்திரம் மற்றும் இதரவை அதன் பகுதிகளாகும்.

சமூக சுதந்திரத்தின் விஸ்தரிப்பு சமூக முன்னேற்றத் தின் முக்கியமான குறியீடாகும். இயற்கை மற்றும் சமூகத்தின் தன்னியல்பான சக்திகளின் ஆதிக்கத்திலிருந்து, எல்லா விதமான சமூக ஒடுக்குமுறைகளிலிருந்தும் மனிதனுடைய முழு விடுதலையை நோக்கி சமூகம் வளர்ச்சியடைவதை அது எடுத்துக் காட்டுகிறது.

சமூக முன்னேற்றத்தின் அளவுகோல் சிக்கலான தன்மையைக் கொண்டிருப்பதை அறியலாம். அதன் நிர்ணயகரமான கூறு உற்பத்திச் சக்திகளின் நிலை

---

* V. I. Lenin, "What the 'Friends of the People' Are and How They Fight the Social-Democrats", *Collected Works*, Vol. 1, p. 140 பார்க்க.

மற்றும் அவற்றின் வளர்ச்சியின் சமூகத் திசையமைவு ஆகும். மனிதன் இயற்கையை ஆட்சி செய்வதற்கு எந்த அளவுக்குக் கற்றுக் கொண்டிருக்கிறான், தன்னுடைய படைப்புத் திறமையை எந்த அளவுக்கு வளர்த்துக் கொண்டிருக்கிறான் (உழைப்பின் உற்பத்தித் திறனின் அதிகரிப்பும் உழைப்பின் அகப்பொருள் என்ற முறையில் மனிதனுடைய சொந்த அபிவிருத்தியும் இதைப் பிரதிபலிக்கின்றன), தன்னியல்பான சமூக சக்திகளிடமிருந்து, சமூக-அரசியல் ஏற்றத்தாழ்வு மற்றும் ஆன்மீக துறையில் பின்தங்கிய நிலைமையிலிருந்து அவன் எந்த அளவுக்குத் தன்னை விடுவித்துக் கொண்டிருக்கிறான் ஆகியவை அதன் மற்ற கூறுகளாகும். உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கும் உற்பத்தித் திறன் பெருக்கத்துக்கும், எல்லா சமூக உறவுகளின் முன்னேற்றத்துக்கும் தனிநபர்களின் சுதந்திரமான வளர்ச்சிக்கும், உழைப்பாளர்களின் படைப்பு முயற்சிக்கும் தங்களுடைய பொருளாயத மற்றும் ஆன்மீக தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தம்முடைய திறமைகளைக் கையாள்வதற்கும் வாய்ப்புக்கள் அதிகரிக்கின்ற அளவுக்கு அந்த சமூகம் அதிக முற்போக்கானதாக இருக்கும்.

ஆகவே ஏதாவதொரு சமூகம் எந்த அளவுக்கு முற்போக்காக இருக்கிறது என்பதை நிர்ணயிப்பதற்கு அதன் பொருளாதார வளர்ச்சி நிலையை மட்டுமின்றி, சமூக-அரசியல் மற்றும் ஆன்மீக துறைகளில் அதன் சாதனைகளையும் கணக்கிலெடுத்துக் கொள்வது அவசியமாக இருக்கிறது. இன்று முன்னேற்றத்தின் சமூக ரீதியான அம்சங்கள் மேன்மேலும் முக்கியத்துவம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. உழைப்பின் சமூகத் திசையமைவு, உற்பத்தி வளமும் மொத்த கலாசாரமும் பெருந்திரளான மக்களின் நலன்களுக்குப் பயன்படும்படி

எந்த அளவுக்கு வளர்க்கப்பட்டு உபயோகிக்கப்படுகின்றன என்பது, பெருந்திரளான மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சமூகத்தில் அவர்களுடைய அந்தஸ்து ஆகியவை இந்த அம்சங்களாகும்.

மார்க்சிஸ்டுகள் எப்போதுமே சமூக முன்னேற்றப் பாதைகளை இவற்றின் முழு உள் சிக்கலிலும் முரண் பாட்டிலும் பார்க்கின்றனர். ஆனால் இந்த நிகழ்ச்சிப் போக்குகளின் மத்தியில் மனிதனும் இவனுடைய நலன்களும் அக்கறைகளும்தான் உள்ளன. இதுதான் கம்யூனிஸ்ட் உலகக் கண்ணோட்டத்தின் சிறப்பு அம்ச மாகும். மனித வாழ்க்கை, இதனுடைய பன்முக வளர்ச்சியின் வாய்ப்புகள்தான் மிகவும் பெரிய மதிப் பாகும், சமுதாய வளர்ச்சியின் நலன்கள்தான் எல்லா வற்றிற்கும் மேலானவை என்று வி. இ. லெனின் கோடிட்டுக் காட்டினார்.

வரலாற்று முன்னேற்றத்தின் பொது அளவுகோலை இனங்காணுதல் பல்வேறு சமூக அமைப்புக்கள் அல்லது சமூக வாழ்க்கையின் பல்வேறு துறைகளின் முன்னே செல்கின்ற இயக்கத்தின் அளவுகோல்களைப் பயன் படுத்துவதைத் தடுக்கவில்லை. சோஷலிசம் மற்றும் அதன் வரலாற்றுக் கட்டங்களின் அளவுகோலைப் பற்றிய பிரச்சினையும் முக்கியமானதே. ஆன்மீக கலாசாரத்தின் மொத்தத் துறை மற்றும் ஒழுக்கம், கலைகள், விஞ்ஞானம் ஆகிய அதன் பல்வேறு பிரிவுகளின் வளர்ச்சி அளவுகோல்களை சரியாகப் புரிந்து கொள்வது தத்துவ ரீதியாகவும் நடைமுறையிலும் முக்கியத்து வத்தைக் கொண்டிருக்கிறது.

முன்னேற்றத்தை சூக்குமமாகப் புரிந்து கொள்ளக் கூடாது. சமூக அமைப்புக்களின் வரலாற்று வளர்ச்சி யின் பிரத்யேகமான கூறுகளைக் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும். அதன்படி சமூக முன்னேற்றத்தில் மூன்று ரகங்கள் இருக்கின்றன. பூர்விக கூட்டு வாழ்க்கை உறவுகளை அடிப்படையாகக் கொண்ட வளர்ச்சி, முரணியல்பான வர்க்கங்களைக் கொண்ட சமூகத்தில் உள்ள முன்னேற்றம், சோஷலிஸ்ட் (கம்யூனிஸ்ட்) முன்னேற்றம் என்பவை இம்மூன்று ரகங்களாகும்.

வெவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட சமூகங் களில் முன்னேற்றம் அதன் வர்க்கத் திசையமைவு, ஆழம், கட்டமைப்பு மற்றும் போக்குகளில் வேறுபடு கிறது. முரணியல்பான சமூகங்களில் முன்னேற்றம் சுரண்டப்படுகின்ற உழைப்பாளர்களை நசுக்கி சுரண்டு கின்ற வர்க்கங்களுக்குச் சாதகமான முறையில் செயல்படுகிறது. அந்த முன்னேற்றம் சமமான முறையில் இருப்பதில்லை. ஏனென்றால் சில நாடுகளில் மற்ற நாடுகளைப் பாதித்து முன்னேற்றம் ஏற்படுகிறது; சமூக வளர்ச்சி வர்க்கப் போராட்டம் மற்றும் சமூகப் புரட்சிகளின் மூலம் நடைபெறுகிறது. இங்கு வளர்ச்சி யின் தன்னியல்பான வடிவம் குறியடையாளமாக இருக்கிறது.

இங்கே சுட்டிக்காட்டப்பட்ட பிரத்யேகமான தன்மை கள் சுரண்டுகின்ற சமூகங்களில் முன்னேற்றத்தின் அடிப்படையான அம்சத்தை, அதன் பகையியலான முரணியல்புத் தன்மையை ஏற்படுத்துகின்றன. அது வளர்ச்சிக் கட்டங்களையும் நசிவுக் கட்டங்களையும், சில கலாசாரங்களும் அரசுகளும் திடீரென்று மறைவதை

யும் மற்றவை சிறப்பான வளர்ச்சியடைவதையும், வேகமான வளர்ச்சிக் கட்டங்களையும் தேக்கங்களையும் பிரதிபலிக்கிறது. நாகரிகம் தோன்றிய காலத்திலிருந்து அதன் முன்னேற்றம் மூளை உழைப்புக்கும் உடல் உழைப்புக்கும், நகரத்துக்கும் நாட்டுப்புறப் பகுதிக்கும், எதிரெதிரான வர்க்கங்களுக்கும் இடையில் எதிர்ப்பு நிகழ்வுப் போக்காக வெளிப்படுகிறது. பெருந்திரளான மக்களின் உழைப்பின் விளைவுகளாகிய முன்னேற்றத் தின் பலன்களை குறைவான எண்ணிக்கையைக் கொண்ட சுரண்டல்காரர்கள் சுவீகரித்துக் கொண்டதிலும் ஒரு முரண்பாடு இருந்தது. அது சமூகங்களின் வர லாற்றில், மக்களினங்களின் வளர்ச்சியிலிருந்த குறிப்பிடத் தக்க வேறுபாடுகளின் மூலவேராக இருந்தது. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி மிகவும் சமமில்லாத நிலையில் இருந்தது என்பதை, உதாரணமாக, பல்வேறு சமூகங் களில் உள்ள சக்திவள மட்டத்திலிருந்து அறிகிறோம். இன்று உலகத்தின் மக்கள் தொகையில் உத்தேசமாக 70 சதவிகிதத்தினர் பல நூறு ஆண்டுகளுக்கு—பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கும் கூட—முன்பு தங்கள் முன்னோர்கள் வாழ்ந்த அதே முறையில் வேட்டையாடி, கனி கிழங்குகளைச் சேகரித்து அல்லது அடிப்படையில் விவசாயத்தின் மூலம் வாழ்க்கை நடத்துகிறார்கள். மனித சமூகத்தில் நான்கில் ஒரு பகுதியினர் மட்டுமே தொழில் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ மற்றும் சோஷலிஸ்ட் நாடுகளில் வாழ்கிறார்கள்.

சமூக வளர்ச்சியின் சமமற்ற தன்மை, ஒரு பக்க நிலை மற்றும் முரண்பாட்டுத் தன்மை முதலாளித்துவ சமூகங்களில் நடைபெறுகின்ற விஞ்ஞான, தொழில்நுட்ப புரட்சியின் விளைவுகளில், உலக ரீதியான பிரச்சினை களைத் தீவிரப்படுத்துவதில், புறச் சூழல் நெருக்கடி

ஏற்படக் கூடும் என்னும் அபாயத்தில், கடைசியாக, பூமியில் உயிர்கள் இருப்பதற்கு ஏகாதிபத்தியம் முன்வைக் கின்ற அச்சுறுத்தலில் மிகத் தத்ரூபமாக வெளிப்படு கின்றன.

இன்று மனிதகுலத்துக்கு முன்னால் வாழ்வதா அல்லது அழிவதா, கலாசாரத்தின் புதிய சிகரங்களை அடைவதா அல்லது அணு யுத்தப் பேரழிவில் மடிவதா என்னும் கேள்வி எழுந்திருக்கிறது. இது முன்னேற்றத்தின் முரண்பாடான தன்மையைச் சுருக்கித் தருகிறது. இந்த முரண்பாடான தன்மை அரசியல்வாதிகள் அல்லது விஞ்ஞானிகளின் தீய எண்ணங்களிலிருந்து தோன்றவில்லை. பிற்போக்காளர்கள் எல்லாப் பழிகளை யும் சோஷலிசத்தின் மீது போட்டாலும் அதுவும் இதற்குக் காரணமல்ல. மனிதகுலத்துக்கு இன்று ஏற்பட்டிருக்கின்ற பேராபத்து சுரண்டலை அடிப்படை யாகக் கொண்ட அமைப்பினால் ஏற்பட்டிருக்கிறது, நாகரிகம் முழுவதையும் அழித்தாவது வரலாற்றின் போக்கைத் தடுத்து நிறுத்துவதற்கு முற்படுகின்ற ஏகாதிபத்திய சக்திகளினால் ஏற்படுகிறது. ஆனால் மனிதகுலத்தைக் காப்பாற்ற முடியும் என்று உலக முழுவதிலுமுள்ள முற்போக்காளர்கள் உறுதியாகக் கூறுகிறார்கள். மனிதகுலத்தின் எதிர்காலம் தரம் குறைவதல்ல, அது கட்டுப்படுத்தப்பட்ட முன்னேற்றம் அல்ல அல்லது பூஜ்ய வளர்ச்சியும் அல்ல என்பதை வரலாறு ஏற்கெனவே எடுத்துக்காட்டி இருக்கிறது. மனிதகுலத்தின் எதிர்காலம் சோஷலிசத்தை, தொடர்ச்சி யாக முன்னேற்றமடைகின்ற அதன் எல்லா அம்சங் களையும் சார்ந்திருப்பதில் இருக்கிறது.

நம் காலத்தின் முன்னேற்றம் நியாயமாக சோஷலிசத் துடன் ஒப்பிடப்படுகிறது. உலக சோஷலிசம் என்பது

பலம் மிக்க சர்வதேச அமைப்பு, இது உயர் வளர்ச்சியடைந்த பொருளாதாரத்தை ஆதாரமாகக் கொண்டுள்ளது, திடமான விஞ்ஞான அடித்தளத்தைக் கொண்டுள்ளது, இதற்கு நம்பகரமான இராணுவ அரசியல் உள்ளாற்றல் இருக்கிறது. மனித குலத்தில் மூன்றில் ஒரு பங்கிற்கும் மேற்பட்டோர், பல டஜன் நாடுகளைச் சேர்ந்த மக்களினத்தவர் சோஷலிசத்தின் கீழ் வாழுகின்றனர்; மனிதர்களின், சமுதாயத்தின் அறிவு மற்றும் தார்மிகச் செல்வங்களை பன்முக ரீதியாக வெளிப்படுத்தும் பாதையில் இவர்கள் நடை போடுகின்றனர். சோஷலிச நீதியின் அடிப்படையிலான புதிய வாழ்க்கை முறை தோன்றியது. இதில் ஒடுக்கு பவர்களும் ஒடுக்கப்படுபவர்களும், சுரண்டுபவர்களும் சுரண்டப்படுபவர்களும் கிடையாது, இதில் ஆட்சி மக்களுக்குச் சொந்தமானது. கூட்டு மனப்பாங்கு, தோழமை ரீதியான பரஸ்பர உதவி, சுதந்திர லட்சியங் கள் கோலோச்சுவது, சமுதாய உறுப்பினர் ஒவ்வொரு வரின் உரிமைகளுக்கும் கடமைகளுக்கும் இடையிலான பிரிக்க முடியாத ஒற்றுமை, தனி மனித மேன்மை, உண்மையான மனிதாபிமானம் – இவையெல்லாம் இதன் சிறப்பு அம்சங்களாகும். சோஷலிசம் என்பது மனிதகுலம் முழுவதன் முன்னும் தோன்றியுள்ள உண்மையான வாய்ப்பாகும், இது எதிர்காலத்தை நோக்கிய உதாரணம்.

சோஷலிசம் பிறந்து வளர்ந்த நாடுகளின் பொருளா தார, சமூக மட்டங்கள் அன்று மிக உயர்வானவையாக இருக்கவில்லை, இவற்றின் அமைப்புகளும், வரலாற்று, தேசிய பாரம்பரியங்களும் ஒன்றிலிருந்து ஒன்று மாறு பட்டன. இந்நாடுகள் ஒவ்வொன்றும் தத்தம் வழியில் புதிய அமைப்பை நோக்கி வந்தன. இதன் மூலம், ஒரே அடித்தளம் அதன் திட்டவட்டமான வெளிப்பாடு

களில் முடிவற்ற வகைகளில், வழிகளில் முன்நிற்கும் என்ற மார்க்சின் கூற்று ஊர்ஜிதப்படுத்தப்படுகிறது.

இப்பாதைகள் மிருதுவானவையாகவோ எளிமை யானவையாகவோ இருக்கவில்லை. பின்தங்கிய, சிதறுண்டு கிடந்த பொருளாதாரத்தை உயர்த்துவது, கோடிக் கணக்கான மக்களுக்கு எழுதப் படிக்கச் சொல்லித் தருவது, இவர்களுக்கு வீடு, உணவு, இலவச மருத்துவ உதவி அளிப்பது ஆகியவை மிகக் கடினமானவையாக இருந்தன. சமுதாயக் கடமைகளின் புது தன்மை, ஏகாதிபத்தியத்தின் இடையறா இராணுவ, பொருளா தார, அரசியல், மனநிலை நிர்ப்பந்தம், தற்காப் பிற்காகப் பெரும் முயற்சிகளைச் செலவிட வேண்டிய அவசியம் — இவையெல்லாம் சம்பவங்களின் போக்கு, தன்மை, சமூக-பொருளாதார செயல்திட்டங்கள், மாற்றங் களின் நிறைவேற்றத்தின் மீது தாக்கம் செலுத்தின. கொள்கையில் ஒரு சில தவறுகள் ஏற்படத்தான் செய்தன, பல்வேறு அகவய விலகல்கள் இருந்தன.

ஆனால் இன்னொன்று பெரிதும் முக்கியமானது. சமூக பிரச்சினைகளைப் பயன்மிகு வகையில் தீர்க்க முடியும் என்று சோஷலிசம் காட்டியது, நாடுகளை உயர்வான வளர்ச்சி மட்டங்களுக்கு இட்டுச் சென்றது, உழைக்கும் மக்களுக்கு உரிய, உறுதியான வாழ்க்கையை அளித்தது.

சோஷலிசம் இடையறாது சமூக உறவுகளை மேம்படுத்துகிறது, அடையப்பட்டவற்றைச் செயல்முனைப் போடு பேணிக்காத்து வளர்க்கிறது, தன் உதாரணத்தின் பலத்தையும் உறுதியையும் பெருக்குகிறது, வாழ்க்கை முறை முழுவதன் உண்மையான மனிதாபிமானத் தன்மையை வெளிப்படுத்துகிறது. இதன் மூலம் இது யுத்த, இராணுவ வெறி சித்தாந்தம் மற்றும் கொள்கை,

பிற்போக்கு, வன்முறை, மனித விரோதத்தின் சகலவித வடிவங்கள் ஆகியவற்றிற்கு எதிராக மேன்மேலும் உறுதியான தடைச் சுவரை எழுப்புகிறது, சமூக முன்னேற்றத்திற்கு சுறுசுறுப்பாக உதவுகிறது. இது மகத்தான தார்மிக, பொருளாயத சக்தியாக மாறியுள் ளது, நவீன நாகரிகத்தின் முன் எத்தகைய வாய்ப்புகள் நிற்கின்றன என்று காட்டியுள்ளது.

### நம் காலத்திய சமூக முன்னேற்றத்தைப் பற்றி முதலாளித்துவத் தத்துவாசிரியர்களின் கருத்துக்கள்

நம் கால முன்னேற்றத்தைப் பற்றிய மார்க்சியப் பார்வையை முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்த எதிர்கால ஊகக்காரர்களின் (futurologists) கருத்துக்கள் எதிர்க் கின்றன. எதிர்கால ஊகத்தைப் பற்றிய கருத்துக் கதம்பத்தில் முன்னேற்றத்தைப் பற்றி இரண்டு விதமான அணுகுமுறைகளைப் பிரித்தெடுக்க முடியும். சில சமூக வியலாளர்கள் சில விதிவிலக்குகளுடன் முன்னேற்றத்தை அங்கீகரிக்கிறார்கள், ஆனால் அதன் முக்கியமான அளவுகோலைத் திரித்துக் கூறுகிறார்கள். அவர்கள் கருத்தின்படி சமூக வளர்ச்சியின் முக்கியமான குறியீடு தொழில்நுட்பமும் தொழில்நுட்பவியல் முன்னேற்ற மும்மே; அவை எல்லா சமூகப் பிரச்சினைகளையும் வர்க்க முரண்பாடுகளையும் தீர்க்கின்றன என்று அவர்கள் கருதுகிறார்கள். நவீனத் தொழில்நுட்பம், குறிப்பாக மின்னணுக் கருவிகள் மேன்மேலும் சமூக மாற்றத்தின் முக்கியமான தீர்வுப் பொருளாக மாறிக் கொண்டிருக் கின்றன; அவை சமூகத்தின் மூலப்பண்புகளை, சமூகக் கட்டமைப்பை, மதிப்புக்களை, உலகம் முழுவதையும்

மாற்றுகின்றன என்று அமெரிக்க சமூகவியலாளரான பிஷெஸின்ஸ்கி கூறுகிறார்.* மனிதன் மீது, சமூகத்தின் மீது விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் தாக்கம் சமூக மாற்றத்துக்கு முக்கியமான தோற்றுவாய் என்பது அவருடைய கருத்தாகும். இப்படிப்பட்ட ஆசிரியர்கள் எதிர்காலத்தில் ஏற்படப் போகின்ற வளமான சமூகத்தின் மாதிரிப் படிவங்களை வர்ணிக்கின்ற பொழுது "தொழில்துறைக்குப் பிற்பட்ட" (post-industrial), "தொழில்நுட்ப மின்னியக்க" (techno-tronic), "உயர் தொழில்துறை" (super-industrial) நாகரிகம் மற்றும் இதர சொற்றொடர்களைப் பயன்படுத்துகிறார்கள். உதாரணமாக, அமெரிக்க சமூகவியலாளரான அல்வின் டோஃப்ளெர் இன்றைய சமூகத்தைக் காப்பாற்ற வேண்டுமென்றால் நலிவுற்ற முதலாளித்துவ சமூகத்திலிருந்து உயர் தொழில்துறை நாகரிகத்துக்கு மாறுவது அவசியம் என்று கருதுகிறார்.

எதிர்கால "வளச் சமூகத்தை" ஆதரிக்கின்ற அனைவரும் இன்றைய முதலாளித்துவ அமைப்பை நவீனப்படுத்த முடியும் என்பதைத் தத்துவ ரீதியில் நிரூபிக்க விரும்புகிறார்கள்; இது அவர்களுடைய கருத்துக்களில் குறியடையாளமான கூறு ஆகும். உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலுள்ள முரண்பாட்டைத் தீர்க்க முடியும் அல்லது குறைந்த பட்சமாக அதை மாற்றியமைக்க முடியும் என்று அவர்கள் விசேஷமாக வலியுறுத்துகிறார்கள். இன்று தொழில் முனைவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலான உறவுகளில் காலாவதியான தொழில்கள், நீடித்த

---

* Z. Brzezinski, *Between Two Ages*, The Viking Press, New York, 1970, p. XIV.

வேலைக்கு உத்தரவாதங்கள், விடுப்பு முறைகள், ஓய்வு நேர வசதிகள், லாபத்தில் பங்கு, மனோ ரீதியான நல்வாழ்க்கை மற்றும் இதரவை சம்பந்தப்பட்ட பிரச்சினைகளே தலைமையாக இருக்கின்றன என்று நிரூபிப்பதற்கு பிஷெஸின்ஸ்கி முயல்கிறார். இன்றைய முதலாளித்துவ சமூகங்களில் பெருந்திரளான மக்களுக்கு ஏற்படுகின்ற எல்லாத் துன்பங்களும் தொழில் வளர்ச்சியடைந்த சமூகத்தின் நெருக்கடியிலிருந்து தோன்றுபவை என்று கூறுகிறார் அல்வின் டோஃப்ளெர். ஆகவே அதற்குப் பிதிலாக "உயர் தொழில்துறை நாகரிகம்" வேண்டும் என்று அவர் வற்புறுத்துகிறார்.

தொழில்நுட்ப முன்னேற்றமே முதலாளித்துவத்தைக் காப்பாற்றக் கூடிய சக்தி என்று வற்புறுத்துகின்ற கருத்துக்களில்* ஒரு பிரத்யேகமான அம்சம் இருக்கிறது. சோஷலிசத்தை முதலாளித்துவத்துக்குப் பின்னால் இருக்கின்ற தொழில்வளர்ச்சியடைந்த சமூகம் என்று வர்ணிக்க முயல்வது அந்த அம்சமாகும்; முதலாளித்துவ சமூகம், குறிப்பாக அமெரிக்கா நவீன முன்னேற்றத்தின் முன்னணிப் படை என்று வர்ணிக்கப்படுகிறது.

இக்கருத்துக்களை நுணுக்கமாக ஆராய்வோம். முதலாவதாக, அவை தொழில்நுட்பத்தின் பாத்திரத்தை மிகைப்படுத்துகின்றன, ஆனால் சமூக-பொருளாதார உறவுகளின் முக்கியத்துவத்தைப் புறக்கணிக்கின்றன. இரண்டாவதாக, அவை முதலாளித்துவத்துக்குப் பல்லாண்டு பாடுகின்றன, ஆனால் சோஷலிசத்துக்கு அதன் எதிர்நிலையைப் புறக்கணிக்கின்றன.

வரலாற்றுப் பொருள்முதல்வாதம், விஞ்ஞான மற்றும்

---

* இக்கருத்துக்களை மார்க்சிய வெளியீடுகள் "தொழில்நுட்ப புனைவுகள்" என்று குறிப்பிடுகின்றன.

தொழில்நுட்ப வளர்ச்சிக்கு மாபெரும் முக்கியத்துவம் அளிப்பதை நாம் அறிவோம். மேலும் விஞ்ஞான, தொழில்நுட்பக் கூறு சமூக-பொருளாதார உறவுகளின் அமைப்பின் மூலமாக மட்டுமே நிறைவேற்றப்படுகிறது என்பதையும் அது நிரூபிக்கிறது. அதனால்தான் சமூகங்களுக்கு இடையில் வேறுபாட்டைக் காண்கிறோம். தொழில்நுட்ப வளர்ச்சியை மட்டுமே எடுத்துக் கொண்டு முடிவு செய்வதென்றால் சமூக-பொருளாதார அமைப்புக் களின் தன்மையில் வேறுபாடுகளை நிர்ணயிக்க அநேகமாக முடியாது. உற்பத்தியின் தொழில்நுட்ப அம்சத்தை மட்டுமே எடுத்துக் கொள்வதென்றால் காங்கோவிலுள்ள சமூகத்துக் கும் ஜாயிர் சமூகத்துக்கும் இடையில் வேறுபாட்டைக் காண்பது கடினமே, அநேகமாக முடியாது. அவற்றின் தொழில்நுட்ப வளர்ச்சி அநேகமாக ஒரே அளவாகத் தான் இருக்கும். இரண்டு சமூகங்களுக்கும் இடையில் உள்ள வேறுபாடு அவற்றின் சமூக-பொருளாதார உறவுகளில் அடங்கியிருக்கிறது; காங்கோ சோஷலிசத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறது, ஜாயிர் முதலாளித்துவத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறது.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில், முதன் மையாக அமெரிக்காவில் சமூக வர்க்க மற்றும் இதர முரணியல்புகள் மறைந்து விட்டன அல்லது மறைந்து கொண்டிருக்கின்றன என்று நாம் நம்ப வேண்டும் என்று ‘‘தொழில்நுட்ப புனைவுகளின்’’ ஆதரவாளர்கள் விரும்புகிறார்கள். இது உண்மையல்ல. அங்கே வர்க்கப் போராட்டம் ஓங்கிக் கொண்டிருக்கிறது, இன வெறி முன்னெப்போதுமில்லாத கூர்மையான பிரச்சினைகளை எழுப்புகிறது, முதலாளித்துவ சமூக அமைப்பின் பொது நெருக்கடி ஆழமடைந்து வருகிறது.

முதலாளித்துவ சமூகத்தின் தன்மையும் சோஷலிஸ்ட்

சமூகத்தின் தன்மையும் ஒரே மாதிரியாக இருப்பதாகக் கருதுவதற்கு எவ்வித வலுவான ஆதாரங்களும் இல்லை. இரண்டு சமூக அமைப்புகளும் நவீன தொழில் நுட்பத்தைக் கொண்டிருக்கின்றன; ஆனால் இது உறவுக்கு அடையாளமல்ல. தொழில்நுட்ப அடித்தளம் வர்க்க அல்லது தேசிய இன உறவுகள், அரசியல் அல்லது சித்தாந்தம், தார்மிக மதிப்புகள் அல்லது கலைகள் ஆகியவற்றை நேரடியாக நிர்ணயிக்க முடியாது. பொருளாதார அடித்தளம், அதாவது அந்த சமூகத்தில் இருக்கின்ற உற்பத்தி உறவுகளின் அமைப்பு சமூக உறவுகள், அரசியல் மற்றும் ஆன்மீக மதிப்புகளின் பொருளாயத அடிப்படையாக இருக்கிறது. அது தொழில்நுட்பத்தின் சமூக செயல்பாட்டை, அதாவது இருக்கின்ற தொழில்நுட்ப அடித்தளம் யாருடைய நலன்களுக்காக உபயோகிக்கப் படுகிறது, அது எந்த முறையில் தொழிலாளர்களின் உழைப்பு மற்றும் வாழ்க்கை நிலைமைகளின் மீது தாக்கம் செலுத்துகிறது என்பதை நிர்ணயிக்கிறது. வானொலியும் தொலைக்காட்சியும் ஏகாதிபத்திய ஏக போகங்களின் நலன்களுக்காக உபயோகிக்கப்படுகின்றன; அதற்குக் காரணம் அவற்றின் தொழில்நுட்ப தரம் அல்ல, அவை ஏகபோகங்களின் உடைமை என்பதே காரணம்.

தொழில்நுட்பவியலின் வளர்ச்சி மூலம் சமூக முன் னேற்றம் ஏற்படும் என்ற கருத்தை ஆதரிப்பவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டிருக்கிறது. அந்தப் போலியான நம்பிக்கை குறைகின்ற அளவுக்கு முதலாளித் துவத்தின் கீழ் விஞ்ஞான, தொழில்நுட்ப புரட்சியின் மோசமான எதிர்மறை விளைவுகள் அதிகமாக வெளிப் படுகின்றன.

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்தின்

விளைவுகளைப் பற்றிய ஏமாற்றம், உலகத்தில் வளம் நிறைந்த சமூகம் (அதற்கு எந்தப் பெயரைச் சூட்டினாலும்) ஏற்படும் என்ற நம்பிக்கை பொய்த்திருப்பது ஆகியவை சமூக-வரலாற்று அவநம்பிக்கைக்குப் புத்துயிர் கொடுத்திருக்கின்றன. நவீன பழமைவாதம் இதைப் பிரதிநிதித்துவம் செய்கிறது. இது பழமைவாதத்தின் புதிய பதிப்பு; இது சமூக முன்னேற்றத்தை நிராகரிக்கிறது, மரபுவழிப்பட்டவற்றையும் காலாவதியானவற்றையும் பாதுகாக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறது. தொழில்நுட்ப நம்பிக்கையிலிருந்து நவீன பழமைவாதத்துக்கான மாற்றம் சில ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவிலும் 1970க்களில் நடைபெற்றது. இன்றைய சமூகத்தில் சமூக விஞ்ஞானமும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றமும் வகிக்கின்ற ஆக்கபூர்வமான பாத்திரத்தை இச்சித்தாந்தப் போக்கு முற்றிலும் மறுக்கிறது; அதன் மூலம் தன்னுடைய பிற்போக்கான தன்மையை வெளிக்காட்டுகிறது. நவீன பழமைவாதிகள் சமூக விஞ்ஞானம் ஒரு புது ரகமான கற்பனை உலகம், அதாவது கற்பனையான சமூக வளர்ச்சி நிகழ்வுகளையும் முறைகளையும் கொண்டது என்று கூறுகிறார்கள். விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றம் தான்தோன்றித்தனத்தின் (அறிவிலும் தொழில்நுட்பத்திலும் ஏற்படுகின்ற அர்த்தமில்லாத மாற்றங்கள்) விளைவு என்பது அவர்களுடைய கருத்து. சமூக விஞ்ஞானம் முன்னேற்றம் என்ற மேல்பூச்சுக்கு மட்டும் வழியைக் காட்டுகிறது; ஆனால் அதன் மூலம் சமூகத்தில் மாற்ற முடியாத அளவுக்கு ஆழமான, ஆபத்தான விளைவுகள் ஏற்படுகின்றன என்று கூறப்படுகிறது. நாகரிகம் அதன் பயன் தன்மையை இழந்து வருகிறது. இதைத் தடுப்பதற்கு என்ன செய்ய வேண்டும்? முன்னேற்றத்தின் தீய

விளைவுகள் என்ற முறையில் சமூக விஞ்ஞானத்தையும் கற்பனை உலகத்தையும் ஒழிப்பதன் மூலம் இதைத் தடுக்க முடியும் என்று நவீன பழமைவாதிகள் கூறுகிறார் கள். முன்னேற்றம் என்பது இக்காலத்தின் மிகவும் ''பிற்போக்குத்தனமான'' கற்பனை. அதை நிராகரிக்க வேண்டும், பகுத்தறிவின் கோரிக்கைகளைச் சமாளிக்க வேண்டும் என்று அவர்கள் கூறுகிறார்கள். வெறும் அறிவு வேட்கை, அதாவது ஒரு தலையான விஞ்ஞான வளர்ச்சியினால் இயற்கை அளவுக்கு மீறிப் பயன் படுத்தப்பட்டு இன்று புறச்சூழல் நெருக்கடி ஏற்பட் டிருக்கிறது; நகரமயமாக்கம் அதிகரித்திருப்பதற்கும் அதன் எதிர்மறையான விளைவுகளுக்கும் அதுவே காரணம்.

புறச்சூழல் நெருக்கடியை மிகைப்படுத்திப் பேசுதல் நவீன பழமைவாதிகள் உள்பட சமூக-வரலாற்று அவநம்பிக்கைவாதத்தை ஆதரிப்பவர்கள் அதிகமாகப் பின்பற்றுகின்ற தந்திரமாகும். நவீன முன்னேற்றம் மேற்கத்திய நாகரிகம் (ஆகவே பொதுவாக நாகரிகம்) நீடிப்பதற்கு ஆபத்தேற்படுத்துகிறது என்பது அவர் களுடைய இறுதி முடிவாகும்.

நவீன பழமைவாதிகள் விஞ்ஞானம், பகுத்தறிவு மற்றும் முன்னேற்றத்தைத் தாக்குகின்ற பொழுது அவர்கள் முன்னேற்றத்தின் சாரம் எனக் கருதுகின்ற மார்க்சியத்தையும் கம்யூனிசத்தையும் தாக்குகிறார்கள். அதனால்தான் அவர்களுடைய ஒரே கொள்கை மார்க்சிய எதிர்ப்பு மற்றும் கம்யூனிச எதிர்ப்பாக இருக்கிறது.

அவர்கள் சமூக முன்னேற்றத்தின் மீது குறை கண்டுபிடிப்பதற்கு, அதைத் தடுப்பதற்கு எவ்வளவுதான் கடுமையாக முயற்சி செய்தாலும் அவர்களால் வரலாற்

றின் முன்னேற்றத்தைத் தடுக்க முடியாது. பிற்போக்காளர்கள் அணு யுத்தத்தை ஏற்படுத்துவோம் என்று மனித குலத்தை பயமுறுத்துகிறார்கள். பைத்தியக்காரர்களின் யுத்தவெறியைப் பகுத்தறிவு முறியடிக்கும் என்று உலக முழுவதிலுமுள்ள நேர்மையாளர்கள் உறுதியாக நம்புகிறார்கள். பகுத்தறிவு, வரலாற்றின் புறநிலையான விதிகளுக்குப் பொருந்தியிருக்கிறது. சோஷலிசத்தின் முன்னேற்றமும் மக்களினங்கள் சுதந்திரத்துக்கும் சமாதானத்துக்கும் நடத்துகின்ற போராட்டங்களும் அதை நிரூபிக்கின்றன.

# சொற்றொடர் விளக்கம்

**அகநிலைவாதம்:** சுற்றுப்புற உலகத்தின் புறநிலையான விதிகளைப் புறக்கணிக்கும் அறிவு முறை அல்லது செய்முறை; சமூக வாழ்க்கையில் அகப்பொருள் மற்றும் அகநிலையான நடவடிக்கையை தனி முதலாகச் செய்வதில் அதன் கரு உள்ளது; அரசியலில் அகநிலைவாதம் தான்தோன்றித்தனத்தில் (புறநிலை யான நிலைமைகளுக்கு மாறாக அகப்பொருளின் சித்தம்) வெளிப்படுகிறது.

**அடித்தளம்:** பிரத்யேகமான, வரலாற்று ரீதியான உற்பத்தி உறவுகளின் மொத்தம், சமூகத்தின் ஒரு குறிப்பிட்ட பொருளாதார அமைப்பு.

**அரசியல்:** அரசு அதிகாரத்தைக் கைப்பற்றி வைத்திருப் பதற்கு மற்றும் உபயோகிப்பதற்கு, அரசு நிர்வாகத்தில் பங்கெடுப்பதற்கு, அரசு அதிகாரத்தின் வடிவங்கள், கடமைகள் மற்றும் உள்ளடக்கத்தை முடிவு செய் வதற்கு வர்க்கங்கள், தேசிய இனங்கள் மற்றும் இதர சமூகக் குழுக்கள் தம்மிடையே மேற்கொள்ளும் நடவடிக்கை.

**அரசியல் அமைப்பு:** திட்டவட்டமான அரசியல் செயல்களை நிறைவேற்றுகின்ற அரசு மற்றும் அரசு பற்றில்லாத சமூக ஸ்தாபனங்களைக் கொண்ட அமைப்பு. அரசு, கட்சிகள், தொழிற்சங்கங்கள், திருச்சபை மற்றும் அரசியல் நோக்கங்களைப் பின்பற்றுகின்ற இதர ஸ்தாபனங்களை உள்ளடக்கியது.

**அரசியல் உணர்வு:** வர்க்கங்கள் மற்றும் சமூகக் குழுக்களின் நடவடிக்கையில் வெளிப்படுகின்ற கருத்துக்கள், உணர்ச்சிகள், நோக்கங்கள் மற்றும் கடமைகளின் அமைப்பு.

**அரசு:** வர்க்க சமூகத்தின் அரசியல் அமைப்பில் தலைமையான ஸ்தாபனம், சமூக நிர்வாகம் மற்றும் பொருளாதார, சமூக அமைப்பைப் பாதுகாத்தல் ஆகிய செயல்களைப் புரிகிறது; முரணியல்பான வர்க்க சமூகங்களில் பொருளாதார சக்தியை வைத்திருக்கின்ற வர்க்கத்தின் பிடியில் இருப்பது, அந்த வர்க்கம் தன்னுடைய சமூக எதிரிகளை ஒடுக்குவதற்கு அதை உபயோகிக்கிறது.

**அழகியல்:** கலையைப் படைக்கின்ற முறைகள், கலை மரபுகள் மற்றும் வடிவங்களைப் பற்றிய ஆராய்ச்சி.

**அறவியல்:** நன்னடத்தை பற்றிய தத்துவஞானத் துறை.

**இயக்கவியல்:** யதார்த்தப் புலப்பாடுகளை அவற்றின் வளர்ச்சியிலும் சுய இயக்கத்திலும் அறியும் முறை, தத்துவம்; இயற்கை, சமுதாயம், சிந்தனை ஆகியவற்றின் மிகப் பொதுவான விதிகளைப் பற்றிய விஞ்ஞானம்.

**இன்றைய சோஷலிசம்:** முதலாளித்துவம் அகற்றப்பட்ட பிறகு ஏற்பட்டிருக்கின்ற சமூக அமைப்பு; கம்யூனிசத்தின் கீழ்க் கட்டம்; ஐரோப்பா, ஆசியா மற்றும் லத்தீன் அமெரிக்காவில் மக்கள் ஜனநாயக அல்லது பாட்டாளி வர்க்கப் புரட்சிகளின் மூலம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது; உற்பத்திச் சக்திகளின் சமூக உடைமை மற்றும் பொருளாதாரத்தின் முறைப்படியான, சர்வாம்ச வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது; எல்லா சமூக உறவுகளையும் பொதுமைவாத அடிப்படையில் மாற்றியமைப்பதற்கும் சமூகச் செல்வம் தொடர்ச்சியாக அதிகரிப்பதற்கும் தனிநபர் சுதந்திரத்துக்கும் வகை செய்கிறது.

**உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கு:** உலக முதலாளித்துவ அமைப்பினால் ஏற்பட்டுள்ள எண்ணற்ற புரட்சிகர இயக்கங்கள் ஒன்றிணைவதால் ஏற்படுகின்ற, முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கான மாற்ற நிகழ்வுப் போக்கு; முதலாவதாகவும் முதன்மையாகவும் பாட்டாளி வர்க்கப் புரட்சி வெற்றி பெற்ற நாடுகளில் சோஷலிசத்தை நிர்மாணித்தல், முதலாளித்துவ நாடுகளின் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் இயக்கங்கள் மற்றும் தேசிய விடுதலைப் புரட்சிகள்.

**உழைப்பு:** மனிதன் கருவிகளைக் கொண்டு இயற்கை மீது செயல்பட்டு, தன்னுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற பொருள்களைப் படைக்கும் நிகழ்வுப் போக்கு.

**உற்பத்தி உறவுகள்:** சமூக உற்பத்தியிலும் சமூக உற்பத்திப் பொருள் உற்பத்தியாளனிடமிருந்து நுகர்வோனுக்கு மாற்றித் தரப்படுகின்ற நிகழ்வுப் போக்கிலும்

மக்களுக்கு இடையில் ஏற்படுகின்ற பொருளாயத பொருளாதார உறவுகளின் மொத்தம்.

**உற்பத்திச் சக்திகள்:** அகப்பொருள் (மனிதன்) மற்றும் பொருளாயத (உற்பத்திச் சாதனங்களின்) சக்திகளின் மொத்தம், இயற்கையின் மீதுள்ள மனிதனின் சுறுசுறுப்பான உறவை வெளியிடுகிறது.

**எதிர்கால ஊகம்:** எதிர்காலத்தில் மனிதகுலத்தின் வளர்ச்சியைப் பற்றிய கருத்துக்களின் மொத்தம்; மார்க்சிய-லெனினியத் தத்துவத்தில் எதிர்காலத்தைப் பற்றிய கருத்து சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் பற்றிய தத்துவத்தின் ஒரு பகுதி; பூர்ஷ்வா சமூகவியலில் ''எதிர்காலத்தைப் பற்றிய தத்துவஞானம்'' அல்லது ''எதிர்காலத்தைப் பற்றிய ஆராய்ச்சி'' என்னும் பெயரில் இது கருத்துமுதல்வாத உலகக் கண்ணோட்டத்தையும் கற்பனாவாதக் கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு தனித் துறை.

**ஒழுக்கம்:** சமூக உணர்வின் குறிப்பிட்ட வடிவம்; சமூகத்தில் மனிதனுடைய நடத்தையை ஒழுங்குபடுத்துகின்ற சமூக உறவுகளின் ரகம்.

**கருத்துமுதல்வாதம்:** ஆன்மா, சுய உணர்வு, மனநிலை ரீதியான அம்சம்தான் முதன்மையானது, பருப்பொருள், இயற்கை, பௌதீக ரீதியான அம்சம் இரண்டாம் பட்சமானது என்று கூறும் தத்துவஞான போதனைகளை குறிக்கும் பொதுச் சொல்.

**கலாசாரம்:** மனிதகுலம் அதன் சமூக-வரலாற்று வாழ்க்கையில் படைத்திருக்கின்ற பொருளாயத மற்றும் ஆன்மீக மதிப்புகளின் மொத்தம்.



22–791

**கலை:** எதார்த்தத்தைக் கலாரூபங்களின் மூலம் சித்திரித்தல்.

**குடிமரபுக் குழு:** பொதுவான மூதாதையரிடமிருந்து தோன்றி இரத்த உறவு முறையை அடிப்படையாகக் கொண்ட மக்கள் குழு, பொதுவான பெயரைக் கொண்டிருக்கும்.

**குலம்:** நெருங்கிய குடிமரபுக் குழுக்களின் தொகுதி.

**சட்ட உணர்வு:** முறையானவை மற்றும் முறையில்லாதவை பற்றி மக்களுடைய கருத்துக்கள் மற்றும் உணர்ச்சிகள்.

**சட்டம்:** அரசு அதிகாரத்தினால் நிறுவப்பட்டு அல்லது அங்கீகரிக்கப்பட்டு எல்லோரும் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டிய நடத்தையைப் பற்றிய விதிகளின் (அளவுகோல்களின்) மொத்தம்.

**சந்தர்ப்பவாதம், தொழிலாளர் இயக்கத்தில்:** முதலாளி வர்க்கத்துடன் சமரசம் செய்து கொள்கின்ற தத்துவமும் நடைமுறையும்; தொழிலாளர் இயக்கம் முதலாளி வர்க்கத்தின் நலன்களுக்குப் பாடுபடும் படியும் அதன் நிலைகளைப் பாதுகாப்பதற்கும் வலுப்படுத்துவதற்கும் உதவும்படியும் செய்தல்.

**சமூக அவசியம்:** சமூக உறுப்பினன் என்ற முறையில் மனிதன் சுற்றுப்புற உலகத்துடன் வைத்திருக்கின்ற உறவு, அது நடவடிக்கையின் சில நிலைமைகளில் அவனுடைய தேவையைப் பிரதிபலிக்கிறது.

**சமூக இலட்சியம்:** எதிர்காலத்தின் கருத்தியலான பிம்பம்; தனிநபர்கள், வர்க்கங்கள் மற்றும் சமூகத்தின் நடவடிக்கைகளின் முடிவான இலட்சியம்.

**சமூக உணர்வு:** ஆன்மீக மட்டத்தில் வரலாற்று நிகழ்வுப் போக்கு; வெவ்வேறு வரலாற்று வடிவங்களில் வெளிப்படுகின்ற சமூக வாழ்நிலையின் பிரதிபலிப்பு.

**சமூக உளவியல்:** மக்களுடைய வாழ்க்கை மற்றும் உழைப்பு நிலைமைகளை அவர்களுடைய உணர்வு நேரடியாகப் பிரதிபலிப்பதனால் ஏற்படும் கருத்துக்கள் மற்றும் எண்ணங்கள்.

**சமூகப் புரட்சி:** காலாவதியான சமூக-பொருளாதார அமைப்பிலிருந்து புதிய அமைப்புக்கு மாறுவதைப் பற்றிய புறநிலையான விதி; சமூக உறவுகளின் அமைப்பில் தீவிரமான மாற்றம்; அவசரமான சமூக-அரசியல் மற்றும் சமூக-பொருளாதார முரண் பாடுகளைத் தீர்க்கிறது.

**சமூக-பொருளாதார அமைப்பு:** வரலாற்று ரீதியான வளர்ச்சியில் சமூகத்தின் ஒரு திட்டவட்டமான கட்டம்; சமூகத்தின் பிரத்யேகமான வரலாற்று ரகம்.

**சமூக முன்னேற்றம்:** சமூகம் கீழ்நிலையான கட்டங் களிலிருந்து உயர்நிலையான கட்டங்களுக்கு விதி முறையில் முன்னேறுதல், காலாவதியான சமூக-பொருளாதார அமைப்பிலிருந்து புதிய அமைப்புக்கு முன்னேறுதல்.

**சமூக வாழ்நிலை:** மக்களுக்கு இடையிலும் மக்களுக்கும் இயற்கைக்கும் இடையிலும் நிலவுகின்ற பொருளாயத இடையுறவுகள், மனித சமூகம் தோன்றும் பொழுது ஏற்படுகிறது.

**சமூக விதிகள்:** சமூக வாழ்க்கை நிகழ்வுகளுக்கு இடையில்

புற நிலையான, திரும்பத் திரும்ப நடைபெறுகின்ற, அவசியமான இணைப்புகள், இவை சமூகத்தின் முன்னேற்ற இயக்கத்தை வெளியிடுகின்றன.

**சர்வதேசியவாதம்:** பொதுவான இலட்சியங்களுக்கான போராட்டத்தில் எல்லா நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர்கள் மற்றும் கம்யூனிஸ்டுகளின் சர்வதேச ஒருமைப்பாடு, தேசிய விடுதலைக்கும் சமூக முன் னேற்றத்துக்கும் போராடுகின்ற மக்களினங்களுடன் அவர்களுடைய ஒருமைப்பாடு; மக்களினம் ஒவ்வொன் றின் சமத்துவத்தையும் சுதந்திரத்தையும் கண்டிப் பாகப் பின்பற்றுவதை அடிப்படையாகக் கொண் டிருப்பது.

**சித்தாந்தம்:** ஒரு வர்க்கம் அல்லது சமூகக் குழுவின் கருத்துக்கள் மற்றும் எண்ணங்களின் அமைப்பு.

**சுரண்டல்:** உற்பத்தியாளர்களால் தயாரிக்கப்படுகின்ற பொருள்களை சிலர் சுவீகரித்துக் கொள்ளுதல்; முரணியல்பான எல்லா வர்க்க சமூகங்களிலும் உள்ளுறையாக இருப்பது.

**சோஷலிஸ்ட் புரட்சி:** சமூகப் புரட்சியின் மிக உயர்ந்த ரகம்; சோஷலிசத்துக்கு சமூகத்தின் விதி முறைப் படியான மாற்றம்; ஒரு பக்கத்தில் தொழிலாளர்கள் மற்றும் இதர உழைக்கும் மக்களுக்கும் மறு பக் கத்தில் முதலாளி வர்க்கத்துக்கும் இடையில் வர்க்க முரணியல்பு அதன் உள்ளுறையான புறநிலைக் கூறு ஆகும்.

**தார்மிக உணர்வு:** மனிதர்கள் தமக்குள்ளாகவும் சமூக வாழ்க்கையிலும் கடைப்பிடிக்க வேண்டிய கடமைகள்,

அணுகுமுறைகளை நிர்ணயிக்கின்ற நடத்தையின் அளவுகோல்கள், கோட்பாடுகள் மற்றும் விதிகளைப் பற்றிய உணர்வு.

**திருத்தல்வாதம்:** மார்க்சிய-லெனினியக் கருதுகோள்களை விஞ்ஞானத்துக்குப் புறம்பான முறையில் திருத்துதல்.

**தேசிய இனம்:** பொதுவான பிரதேசம், பொருளாதார வாழ்க்கை, மொழி, கலாசாரப் பண்புகள் மற்றும் தேசிய குணாம்சத்தின் சில கூறுகளை அடிப்படையாகக் கொண்ட வரலாற்று ரீதியான மக்கள் சமூகம்; இது முதலாளித்துவ சகாப்தத்தில் வேரூன்று கின்ற நிலையான பொருளாதாரப் பிணைப்புகளின் மூலம் மக்கள் இனத்திலிருந்து வேறுபடுகிறது.

**புறச் சூழல் இயல்:** தாவரங்கள் மற்றும் பிராணி களுக்கு இடையிலான, உயிரிகளின் தொகுதிகளுக்கும் புறச் சூழலுக்கும் இடையிலான உறவுகளைப் பற்றிய விஞ்ஞானம்.

**புறநிலையான வரலாற்று நிலைமைகள்:** சமூகத்தின் வாழ்க்கையிலும் வரலாற்று ரீதியான வளர்ச்சியிலும் தனிநபர்கள், வர்க்கங்கள் அல்லது கட்சிகளின் சித்தத்திலிருந்து சுதந்திரமாக இருக்கின்ற நிலைமை கள். பொருளாயத மற்றும் பொருளாதார நிலை மைகள் (உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி நிலை, தன்மை மற்றும் அவற்றுடன் பொருந்துகின்ற உற்பத்தி உறவுகள்) வரலாற்று வளர்ச்சியில் அடிப் படையானவை.

**பெருந்திரளான மக்கள்:** சமூகத்தில் தம்முடைய புறவகை நிலை காரணமாகப் பல்வேறு துறைகளிலும்

முற்போக்கான மாற்றங்களை நிறைவேற்றக் கூடிய உழைப்பாளர்கள் மற்றும் இதர சமூகப் பிரிவுகள்.

**பொருளாதார பொருள்முதல்வாதம்:** வரலாற்றில் பொருள் முதல்வாதக் கருத்தைப் பற்றிய ஒருதரப்பான, எளிய தெளிவு; பொருளாதாரம் ஒன்று மட்டுமே சுறுசுறுப்பான காரணி, சமூகத்தில் நடைபெறுகின்ற மற்ற எல்லா நிகழ்வுகளும் வளர்ச்சி போக்குகளும் உற்பத்திச் சக்திகள் மற்றும் அவற்றுக்குப் பொருத் தமான உற்பத்தி உறவுகளின் விளைவு என்று அது கருதுகிறது; அகநிலைக் காரணியின் சுறுசுறுப் பான பாத்திரத்தையும் ஆன்மீக நிகழ்வுகள் சமூக வாழ்நிலையின் மீது செலுத்துகின்ற மறுதலையான தாக்கத்தையும் அங்கீகரிக்கத் தவறுகிறது.

**பொருளாயத நலன்களின் உற்பத்தி முறை:** பொருளாயத நலன்களை உற்பத்தி செய்கின்ற வரலாற்று ரீதியில் நிர்ணயிக்கப்பட்ட முறை, உற்பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளின் தனிவகையான ஒற்றுமையைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

**பொருள்முதல்வாதம்:** உலகம் பொருளாயத ரீதியானது, இது புறவய ரீதியாக, சுய உணர்விற்கு வெளியில், இதைச் சாராமல் இருக்கிறது, பருப்பொருள் முதன்மையானது, இது யாராலும் படைக்கப் படவில்லை, நிரந்தரமாக நிலவுகிறது, உணர்வும் சிந்தனையும் பருப்பொருளின் பண்புகள், உலகையும் இதன் விதிகளையும் அறிய முடியும் என்று கூறும் தத்துவஞானப் போக்கு.

**போர்:** அரசுகள் (அரசுகளின் தொகுதிகள்), வர்க்கங்கள்

அல்லது தேசிய இனங்கள் (மக்களினங்கள்) இடையில் அமைப்பு ரீதியான ஆயுதமேந்திய போராட்டம்; வர்க்கக் கொள்கையைப் பலாத்கார வழிகளின் மூலம் நீடிப்பது.

**மக்கள் இனம்:** பொதுவான மொழி, பிரதேசம், பொருளாதாரம், கலாசாரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வரலாற்று ரீதியில் வளர்ச்சியடைந்திருக்கின்ற மக்கள் சமூகம்; குலச் சமூகத்துக்குப் பின்னரும் தேசிய இனம் அமைவதற்கு முன்னரும் தோன்றுவது.

**மக்கள் தொகையியல்:** மக்கள் தொகையை ஆள்கின்ற சமூக ரீதியில் தகவமைக்கப்பட்ட விதிகளைப் பற்றிய விஞ்ஞானம்.

**முதலாளி வர்க்கம்:** முதலாளித்துவ சமூகத்தில் கூலியுழைப்பைச் சுரண்டுகின்ற, உற்பத்திச் சாதனங்களை உடைமையாகக் கொண்ட ஆளும் வர்க்கம்.

**முதலாளித்துவ ஏகபோகங்கள்:** பொருளாயத மற்றும் நிதி வளங்களைக் குவிப்பதன் மூலம் சந்தைகளின் மீது ஆதிக்கம் செலுத்துகின்ற பொருளாதார அமைப்புகள், ஏகபோக லாபத்தைப் பெறுவது அவற்றின் நோக்கம்.

**முரணியல்பு:** எதிர் நிலையான சக்திகள் அல்லது போக்குகளின் கூர்மையான, சமரசப்படுத்த முடியாத மோதலை அடிப்படையாகக் கொண்ட முரண்பாட்டின் வடிவம்.

**மேற்கட்டுமானம்:** சித்தாந்த உறவுகள், கருத்துக்கள் (அரசியல், சட்டம் இதரவை) மற்றும் அவற்றுடன்

பொருந்துகின்ற ஸ்தாபனங்களின் (அரசு, அரசியல் கட்சிகள் இதரவை) அமைப்பு.

**வரலாற்று அவசியம்:** சமூகத்தின் முக்கியமான கூறுகளாலும் சட்டங்களாலும் நிர்ணயிக்கப்பட்ட நிகழ்வுப் போக்குகளும் நிகழ்வுகளும்.

**வரலாற்று வளர்ச்சியின் இயக்கு சக்திகள்:** வரலாறு முன்வைக்கின்ற கடமைகளை நிறைவேற்றக் கூடிய சமூக சக்திகளும் (பெருந்திரளான மக்கள், வர்க்கங்கள், கட்சிகள்), இச்சக்திகளைச் செயல்படுமாறு தூண்டுகின்ற காரணங்களும், முதலாவதாகவும் முதன்மையாகவும் சமூக தேவைகள், நலன்கள், நோக்கங்கள், இலட்சியங்கள்.

**வர்க்கங்கள்:** ''வரலாற்று ரீதியில் நிர்ணயிக்கப்பட்ட சமூக உற்பத்தி முறையில் தாங்கள் வகிக்கின்ற இடத்தினாலும், உற்பத்திச் சாதனங்களுடன் தங்களுடைய உறவுகளினாலும் (பெரும்பாலும் சட்டத்தின்படி நிர்ணயிக்கப்பட்டு வகுத்துரைக்கப்படுவது), உழைப்பின் சமூக அமைப்பில் தங்களுடைய பாத்திரத்தினாலும், ஆகவே சமூக செல்வத்தில் தாங்கள் செலவிடுகின்ற பங்கின் அளவினாலும் அதைப் பெறுகின்ற முறையினாலும் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்ற மக்களின் பெருந் தொகுதிகள்'' (வி. இ. லெனின்).

**வர்க்கப் போராட்டம்:** ஒன்றுக்கொன்று பொருந்தாத அல்லது முரண்பாடான நலன்களைக் கொண்ட வர்க்கங்களுக்கு இடையில் நடைபெறுகின்ற போராட்டம்; முரணியல்பான எல்லா வர்க்க சமூகங்

களின் அடிப்படையான உள்ளடக்கம், அவற்றின் வளர்ச்சியின் இயக்கு சக்தி.

**விஞ்ஞான, தொழில்நுட்ப புரட்சி:** விஞ்ஞானம் நேரடியான உற்பத்திச் சக்தியாக மாறுகின்ற பொழுது உற்பத்திச் சக்திகளில் ஏற்படுகின்ற தீவிரமான குணாம்ச ரீதியான மாற்றம்.

வாசகர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்த மாகத் தங்கள் ஆலோசனைகளை வரவேற்கவும் முன்னேற்றப் பதிப்ப கம் மகிழ்வுடன் காத்திருக்கிறது.

கடிதங்களைத் தயை செய்து "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப் புங்கள்.

## விற்பனையாளர்கள்

## நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

### தலைமை அலுவலகம்

41 — பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
சென்னை — 600098

### ஷோ-ரூம்

136, அண்ணாசாலை, சென்னை — 600002

### கிளைகள்

80, மேலக் கோபுர வீதி, மதுரை — 625001
3—4, நேரு ஸ்டேடியம், கோயம்பத்தூர் — 641018
42/7, சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி — 620008
செர்ரி ரோடு, சேலம் — 636001

### விற்பனை நிலையங்கள்

3—22—75—D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன் — 627001
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்
சேரிங் கிராஸ், உதகமண்டலம் — 643001
நகராட்சி அலுவலகம் எதிரில், திண்டுக்கல் — 624001

நூல் வரிசையின் பதிப்பாசிரியர் குழு:
எஃப். எம். வோல்கவ் (தலைமைப் பதிப்பாசிரியர்),
ஈ. எஃப். குப்ஸ்கி (துணைப் பதிப்பாசிரியர்),
எஃப். எம். புர்லாட்ஸ்கி, வி.டி. ஸோதவ்,
வி.வி. கிரபிவின், யூ. என். பொபோவ்,
வி.வி. ஸோபலெவ், எஃப். என். யூர்லொவ்

## முன்னேற்றப் பதிப்பகத்தில் வெளிவரும்

### சமூக அரசியல் ஆரம்ப நூல் வரிசை

## எஸ். இல்யீன், அ. மொத்திலோவ்

### அரசியல் பொருளாதாரம் என்றால் என்ன?

பொருளாதார வாழ்க்கையின் சிக்கலான, பன்முகப் போக்குகளும் ஒவ்வொரு மனிதனும் அன்றாட வாழ்க்கையில் சந்திக்கும் அடிப்படைக் கருத்துகளும் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. இந்நூல் மார்க்சை ஒரு விஞ்ஞானியாக, புரட்சிவீரராக, தொழிலாளி வர்க்கத்தின் சித்தாந்த ஆயுதத்தைத் தோற்றுவித்தவராக சித்தரிக்கிறது. இந்த சித்தாந்த ஆயுதத்தைப் பயன்படுத்தித்தான் தொழிலாளி வர்க்கம் சமூக விடுதலைக்காக, நீதியான சமுதாய நிர்மாணிப்பிற்காகப் போராடுகிறது.

பொதுவில் விஞ்ஞானங்களின் மத்தியிலும் குறிப்பாக சமூக விஞ்ஞானங்களின் மத்தியிலும் அரசியல் பொருளாதாரம் எந்த இடத்தில் உள்ளது? பல்வேறு பிரச்சினைகளை ஆராய இது என்ன முறைகளைப் பயன்படுத்துகிறது? மனித நடவடிக்கையில், இவர்களின் வரலாற்று நடைமுறையில் இதன் முக்கியத்துவம் என்ன? இவற்றைப் பற்றியெல்லாம் இந்நூல் எளிய, புரியக் கூடிய வகையில் விளக்குகிறது.

இந்நூல் பரவலான வாசகர்களுக்கானது.

## முன்னேற்றப் பதிப்பகத்தில் வெளிவரும்

### சமூக அரசியல் ஆரம்ப நூல் வரிசை

க. கிரிலேன்கோ, லீ. கோர்ஷுனவா

### தத்துவஞானம் என்றால் என்ன?

தத்துவஞானம் என்றால் என்ன? அது எப்போது தோன்றியது, எதை ஆராய்கிறது? இயற்கையும் சமுதாயமும் எந்த விதிகளின்படி வளர்ச்சியடைகின்றன? மனிதன் தன்னைச் சுற்றியுள்ள உலகை எப்படி அறிகிறான்? தத்துவஞானம் என்பது மெய்ஞானமா நம்பிக்கையா? இக்கேள்விகளுக்கும் இன்ன பிற தத்துவஞான கேள்விகளுக்கும் இந்நூலாசிரியர்கள் பதில் தருகின்றனர்.

இயக்கவியல் மற்றும் பொருள்முதல்வாத தத்துவஞானத்தின் விதிகளும் கருத்தினங்களும் இந்நூலில் எளிய, புரியக் கூடிய விதத்தில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன, அறிதல் தத்துவம், தர்க்கவியல் தத்துவம் ஆகியவற்றின் வளர்ச்சியும் ஒரு விஞ்ஞானம் என்ற வகையில் தத்துவஞானத்தின் வர்க்கத் தன்மையும் விளக்கப்பட்டுள்ளன.

தத்துவஞானப் பிரச்சினைகள் மீது அக்கறையுள்ள அனைவருக்கும் இந்நூல் பயன்படக் கூடியது.

## முன்னேற்றப் பதிப்பகத்தில் வெளிவரும்

### சமூக அரசியல் ஆரம்ப நூல் வரிசை

வி. கிரபிவின்

### இயக்கவியல் பொருள்முதல்வாதம் என்றால் என்ன?

இந்நூலில் இயக்கவியல் பொருள்முதல்வாதத்தின் உள்ளடக்கம் — தத்துவஞானத்தின் சாரம், ஆராய்ச்சிப் பொருள், உலகின் பொருளாயதத் தன்மையைப் பற்றிய போதனை, உலக வளர்ச்சியின் இயக்கவியல் — விஞ்ஞான ரீதியாக, எளிய முறையில் விளக்கப்பட்டுள்ளது. இதில் மார்க்சிய-லெனினியத் தத்துவஞானத்தின் முக்கிய விதிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன, இதன் முக்கிய கருத்து கள் விளக்கப்பட்டுள்ளன.

திட்டவட்டமான விவரங்கள், பல்வேறு விஞ்ஞான தகவல்களின் அடிப்படையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

இந்நூல் பரவலான வாசகர்களுக்கானது.